


# மூதாதையர், நியாயாதிபதிகள் அரசர்கள்

பெர்னர்ட் ஆர். இயங்மன்

திருமறைக்கு ஒரு பின்னணி !





கருங்கடல்
மேட்டு நிலங்கள்
சிமிர்ணா
எபேசு
சின்ன ஆசியா
ஏத்தியர்
காஸ்பியன் கடல்
தைகிரிஸ் நதி
காரான்
நினிவே
அசீரியா
மெசொப்பொத்தாமியா
சீப்புரு
மத்தியதரைக் கடல்
அராம்
சீரியா
தமஸ்கு
கலிலேயாக் கடல்
அம்மோன்
சமாரியா
எருசலேம்
உப்புக் கடல்
யூப்ரடீஸ் நதி
பாபிலோன்
பாபிலோனியா
மேதியா
கோசேன்
மோவாப்
அரேபியப் பாலைவனம்
கல்தேயா
ஊர்
சுமர்
மெம்பிஸ்
ஏதோம்
எசியோன் - கேபர்
சீனாய்
எகிப்து
மிதியான்
பாரசீகம்
பாரசீக வளைகுடா
நீல நதி
செங்கடல்
ஆப்பிரிக்கா
திருமறை நாடுகள்
= செழும் பிறை பகுதி
கிலோமீட்டர்
0 200 400 600 800

# மூதாதையர், நியாயாதிபதிகள், அரசர்கள்

புத்தகம் ஒன்று

## திருமறைக்கு ஒரு பின்னணி

ஆங்கில மூலம்:
பெர்னர்ட் ஆர். இயங்மன்

தமிழ்த் திருச்சபைகள் சமயக் கல்விக் குழு
(T. I. C. C. R. E.)

அத்தியாயம் 1

# ஆபிரகாம்

*(ஆதி. 11:31,32; 12:1–9; 13:3–18; 17:1–8; 18)*

திருமறையில் வரும் இடங்களைக் காட்டும் முன் அட்டையிலுள்ள நிலப் படத்தைப் பாருங்கள். இஸ்ரவேல் மக்களின் மூதாதையர் வாழ்ந்த காலத்திலிருந்த நாடுகளைக் காண்பிக்கிறது இது. இதில் 'செழும் பிறை' (Fertile Crescent) என்றொரு முக்கியப் பகுதி உண்டு. பாரசீக வளைகுடா தொடங்கி, ஐப்பிராத்து, தைகிரிஸ் என்ற ஆறுகளின் முகப்பின் வழியாக உங்கள் விரலை வடமேற்காக இழுங்கள். அங்கிருந்து மத்தியதரைக் கடலுக்கும் அரேபியப் பாலை நிலத்திற்கும் இடையே உள்ள ஒடிசலான சமவெளி வழியாகத் தெற்கு நோக்கிக் கொண்டுவந்து, எகிப்தில் உள்ள நீலநதியின் முகப்பில் முடிப்பீர்களானால் அக்கோடு நன்கு வளைந்து ஒரு பிறை வடிவத்தில் அமைவதைக் காண்பீர்கள்.

பலஸ்தீனா மிகச் சிறிய நாடு. அது ஏறத்தாழ இருநூற்றைம்பது கிலோமீட்டர் நீளமானது. அதன் மிக அகலமான பகுதி எண்பத்தெட்டு கிலோமீட்டர் கொண்டது. எகிப்தையும் மெசொப்பொத்தாமியா நாட்டையும் ஒரு பாலம்போல் இணைத்து நிற்கும் நிலப் பகுதி இது. இதன் அண்டை நாடுகள், தங்கள் வாணிகத்திற்கும் ஆட்சி வலிமைக்கும் இந்நாடு மிகவும் பயனுள்ளதாயிருக்கும் என எண்ணி இதனை விழுங்குவதற்கான ஒரு வாய்ப்பை எப்போதும் எதிர்பார்த்திருப்பதுண்டு. இந்நாடுகளின் போர்க்களமாகப் பலஸ்தீனா இருந்துவந்திருக்கிறது. நூலின் பின் அட்டை உள் பக்கத்தில் உள்ள நிலப்படத்தில் முக்கியமான வணிகப் பாதைகள் காண்பிக்கப்பட்டுள்ளன. அவற்றை நன்றாகக் கவனியுங்கள். ஒட்டகங்கள் கூட்டங்கூட்டமாகச் செழும் பிறை பகுதி நாடுகள் வழியே செல்வதைக் கற்பனைசெய்து பாருங்கள். அவ்வணிக வழிகள் எகிப்திலும் ஆப்பிரிக்காவிலுமிருந்து வடக்காகச் சென்று பாரசீக வளைகுடாவிலிருந்து வரும் பாதை



ஊர் என்னும் கல்தேயப் பட்டணம்

க்ளேச் சந்திக்கும். அவை மெசொப்பொத்தாமியாவிலுள்ள காரான் நகரத்திலும் அசீரியாவிலுள்ள நினிவேயிலும் வடக்கிலிருந்து வரும் வேறு வழிகளுக்குக் குறுக்கே செல்லும். கிழக்குத் திசையாக அதிக நடமாட்டம் இல்லாததன் காரணம் படத்தைப் பார்த்தால் தெரியும். பெரிய அரேபியப் பாலைவனம் அங்குதான் உள்ளது. அது பல கிலோமீட்டர் தொலைவுக்கு ஒரே மணல் பரப்பானது. இன்றுகூட இப்பகுதியில் பயங்கரக் கொள்ளைக்கூட்டத்தினரும், போரிட்டுக் கொண்டே இடம்விட்டு இடம் செல்லும் நாடோடி இன மக்களும் வாழ்ந்துவருகின்றனர்.

'பெரிய ஆறுகளின்' முகப்பருகில் சுமர் நாடு இருந்தது. பிற்காலத்தில் இது கல்தேயா எனப்படலாயிற்று. இங்கு நதிகளால் அடித்துவரப்பட்ட வண்டல்மண் சமவெளி ஒன்று இருந்தது. அச்சமவெளிக்கு நீர் பாய்ச்ச பயன்பட்ட கிளைப் பின்னலமைப்பை இன்றுகூட கூர்ந்து கவனித்தால் காணலாம். ஏனென்றால், நீர் இல்லாமையினால் அப்பகுதியும் அதன் ஓரத்தில் உள்ள பாலைநிலம்போல் மாறியிருக்கலாம்.



சுமேரிய இளவரசி

### ஊர் என்னும் கல்தேயப் பட்டணம்


ஆபிரகாம் சுமர் நாட்டைச் சேர்ந்தவர். ஊர் என்ற இடத்தில் பிறந்து வளர்ந்தார். அவர் வாழ்ந்த திட்டமான காலம் ஐயத்திற்கிடமானதாயுள்ளது. சில ஆராய்ச்சியாளர்கள் கி.மு. 1700ல் அவர் பிறந்தார் என்கிறார்கள். வேறு சிலர் ஏறத்தாழ கி.மு. 2100 போல் இருக்கவேண்டும் என்கிறார்கள். ஊர் என்ற கல்தேயப் பட்டணம் புராண காலத்தைச் சேர்ந்த புகழ்பெற்றதும் பழைமையானதுமான பட்டணம். பாபிலோனியர்களுடைய காலத்தில் ஆற்று முகப்புக்கு அருகில் இருந்தது. பிறகு அவ்விடத்தில் வண்டல் மண் படிந்துவிடவே பாரசீக வளைகுடாவிலிருந்து இருநூற்று இருபது கிலோமீட்டருக்கு அப்பால் இது இருந்ததாகக் கூறப்படுகிறது. ஆபிரகாமின் காலத்துக்குப் பல ஆண்டுகளுக்கு முன் இப்பகுதியிலுள்ள கிராமங்களில் மண் வீடுகளில் ஆதி மனிதர்கள் வாழ்ந்து வந்தனர் என்றும், பிறகு சுமேரியர்கள் இப்பகுதியைக் கீழ்ப்படுத்தி ஊர் பட்டணத்தை மீண்டும் கட்டினர் என்றும், அவர்களே அங்கு புதிய கைத்தொழில்களையும், கலைகளையும், நாகரிகத்தையும் கொண்டுவந்தனர் என்றும் புதைபொருள் ஆராய்ச்சிகள் வெளிப்படுத்தியுள்ளன. அங்கு உற்பத்தி செய்யப்பட்ட பல பொருட்கள், தெய்வங்களின் உருவங்கள், கோவில்கள், கடைத்தெருக்கள் இருந்த இடங்கள் ஆகியவை கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. இவற்றிலிருந்து அக்காலத்தில் அங்கு வாழ்ந்த மக்களின் இறை வழிபாட்டு முறைகள், வாழ்க்கை முறை, வியாபாரம் பற்றி நமக்குத் தெரிய வருகிறது. ஆபிரகாம் ஒரு பெரிய பட்டணத்தில் குடியிருந்தவர். அருமையான பழங்கால நாகரிகத்தின் வழிவந்தவர்.

ஆபிரகாமின் தந்தை தேராகு ஒரு பெரிய சீமான். சிறந்த தலைவராக, அதாவது 'ஷேக்' காக வாழ்ந்திருந்தார். மந்தை மந்தையாக ஏராளமான ஆடுமாடுகள், ஒட்டகங்கள், அடிமைகள் உடையவராய் இருந்தார். இத்தகைய வசதிகளோடு வாழ்ந்தவர் ஊர் என்ற இடத்தைவிட்டு வடக்கேயுள்ள காரானுக்குப் போகத் தீர்மானித்தது ஏன்?

### வழிபாடும் தெய்வங்களின் சிலைகளும்

மேற்கூறிய கேள்விக்கான விடை அக்கால பாபிலோனிய மக்களின் தெய்வ வழிபாட்டோடு தொடர்புடையதாய் இருப்பதை நாம் காணலாம். 'சின்' என்ற நிலவுத் தெய்வ வணக்கத்திற்கு ஊர் பட்டணம் முக்கியமான இடமாயிருந்தது. 'சிக்குராத்' என்ற பிரமாண்டமான மேட்டின்மேல் இந்த நிலவுத் தெய்வத்தின் ஆலயம் இருந்தது. நூற்றுக்கணக்கான கல் படிகளை ஏறித்

தான் அங்கு செல்ல முடியும். ஊர் என்ற பட்டணத்தில் இருந்த சிக்குராத் இப்போது தோண்டி எடுக்கப்பட்டுள்ளது. அந்த மேடு எவ்வளவு பெரியதாயிருந்தது என்பதைப் படங்களிலிருந்து நீங்கள் அறிந்து கொள்ளலாம். 'பேரொளி இல்லம்' என்றழைக்கப்பட்ட அந்த ஆலயத்தில் மக்கள் கூடித் தொழுதனர். நரபலி கொடுக்கும்



ஊர் என்னும் இடத்திலிருந்த "சிக்குராத்" (Ziggurat) என்ற மேடு.

வழக்கமிருந்தது. பொதுவாக முதற் பிள்ளையாகப் பிறக்கும் ஆண் மகவு அங்ஙனம் பலியாக்கப்பட்டது. சில சமயங்களில் மிருகத்தனமான சமயச் சடங்கு நடைபெறும். ஆட்சி செய்துகொண்டிருந்த ஓர் அரசர் இறந்து போனால் ஏராளமான பேர் நரபலியாக்கப்பட்டனர். அவரோடு அவர் படைவீரர்களும், அரச அவையினரும், மனைவிமாரும், வேலைக்காரரும் கொலை செய்யப்பட்டு மொத்தமாக அடக்கம் செய்யப்பட்டனர்.

தேராகுவும் நிலவுத் தெய்வத்தையே வழிபட்டு வந்தார். ஹம்முரபி (இவர் ஆதி. 14:1ல் சொல்லப்பட்டுள்ள ஷிநெயாரை ஆண்ட அம்ராப்பேலாக இருக்கலாம்) என்ற அரசர் ஊர் பட்டணத்தைப் பிடித்து அங்கே சூரிய வழிபாட்டைத் தொடங்கி வைத்தார். தம் அரசியல் விதிகளையெல்லாம் அவர் இச்சூரிய தெய்வத்திடமிருந்தே பெற்றதாகக் கூறினர். இந்த சூரிய வழிபாடு தேராகுவுக்குப் பிடிக்கவில்லை. எனவே, காரானுக்குச் சென்றுவிட்டார். அங்கு இருந்த நிலவுத் தெய்வத்தின் சிக்குராத் 'இன்பங்களின் இல்லம்' எனப்பட்டது. தேராகு தம்முடைய உடைமைகளோடு ஐப்பிராத்து ஆற்றுப் படுகையில் பயணம் செய்தார். பகலெல்லாம் பயணம் செய்து இரவில் கூடாரம் போட்டுத் தங்கினர்.

### ஆபிரகாமின் கடவுள்

நிலவு, சூரியன் என்ற இரு தெய்வங்களைப் பற்றி இதுவரை நாம் கண்டோம். உணவு, பயிர், காலநிலை ஆகியவற்றோடு தொடர்புடையனவான வேறு பல தெய்வங்களும் வணங்கப்பட்டு வந்தன. கீழே ஏத்தியர்களின் இரண்டு வான தெய்வங்களின் படம் உள்ளது. ஏத்தியர்கள் பலஸ்தீனவுக்குச் சென்றபோது இத்தெய்வ வணக்கத்தை ஒருவேளை அங்கு கொண்டுசென்றிருக்கலாம் (பின்னல் இதுபற்றி நாம் படிக்கவிருக்கிறோம்). இத்தெய்வங்களையெல்லாம் விட அருமையானவரும், ஆற்றல் படைத்தவருமான ஒரு கடவுள் இருக்க வேண்டுமெனச் சிலர் கருதினர்கள். அவரே சூரியனையும் நிலவையும் படைத்திருக்கலாம் என்றும், காற்றையும் மின்னலையும் இடியையும்கூட அடக்குகிறவராய் இருக்கலாம் என்றும் கருதினர்கள். இது துணிச்சலான கருத்து. ஏனென்றால், யாரென்றே தெரியாத ஒரு கடவுளைக் கற்பனை செய்து பார்ப்பது மிகவும் கடினம். மற்ற தெய்வங்களைப் பார்ப்பது போல் அவரை எந்த ஓர் உருவத்திலும், வடிவத்திலும் பார்க்க முடியாது. ஆனல் அவரைப்பற்றி நினைத்தவர்களுக்கு அவர் மெய்யானவராயிருந்தார். இக்கடவுளைப் பற்றி சிந்தித்தவர்களில் ஆபிரகாமும் ஒருவர். அப்படிச் சிந்திக்கச் சிந்திக்க, அவருக்குச் சிறப்பான பலிகளையிட்டு, அவரையே



ஏத்தியரின் வான தெய்வங்கள்

வழிபட வேண்டுமென்று திட்டமாய் உணர்ந்தார். இந்தக் கடவுள் ஆற்றல் மிக்கவராய் இருந்ததனால், எப்பாடுபட்டாவது அவரைத் திருப்திப்படுத்தி, அவர் தம் பக்கமே இருக்கிறார் என்கிற நிச்சயம் உள்ளவராயிருக்க ஆபிரகாம் துடித்தார். நம்முடைய திருமறையில் சில இடங்களில் இக்கடவுளை யெகோவா *[யாத். 6:6,8; சங். 83:17* (A.V.); *83:18* (R.V.)*]* என்று குறிப்பிட்டிருக்கிறது. சரியான மொழிபெயர்ப்பு யாவே என்பதாகும். திருமறையின் சில புதிய மொழிபெயர்ப்புகளில் கடவுளுக்கு இப்பெயரையே உபயோகித்திருக்கிறார்கள். ஆகையால் இப்புத்தகங்களிலும் அப்பெயரை உபயோகிப்போம். ஆபிரகாமின் வழித்தோன்றல்கள் அப்பெயரையே அவருக்கு வழங்கினர். திருமறையில் அவரைக் கர்த்தர் என்று குறிப்பிடுவது யாவே என்பதற்கான எபிரேயச் சொல்லின் மொழிபெயர்ப்பாகும். பின் நூற்றாண்டுகளில் அவர் எல்லாவற்றையும் படைத்தவர் என்றும், தங்களில் அன்புகூருபவர் என்றும் அறிந்துகொண்டார்கள்.

இதனைப் படிப்படியாகவே அவர்கள் அறிந்துகொண்டார்கள். இயேசு கொண்டு வந்த அற்புத செய்திக்கு உரிய வழியை இது சரிப்படுத்திற்று. அச்செய்தி யாவே சகல ஆற்றலும் பொருந்திய கடவுள் மட்டுமல்ல, அவர் தந்தையும் ஆனவர்; அவர் 'சர்வ வல்லமையும் உள்ள தந்தை' என்பதேயாகும்.

தேராகு இறந்த பிறகுதான் ஆபிரகாம் தம்முடைய புதிய தெய்வமான யாவேயின் அழைப்பை உறுதியாக உணரத்தொடங்கினார். அந்த அழைப்பு காரானை விட்டுவெளியேறி, தெற்காகப் பயணம் செய்து கானான் நாட்டிற்குப் போகவேண்டும் என்பதாகும். தம் இல்லாள் சாராளோடும், அண்ணன் மகன் லோத்தோடும் புறப்பட்டார். ஆடுமாடுகளையும், மற்றுமுள்ள விலை மிகுந்த பொருட்களையும், தங்களையும் கொள்ளைக்கூட்டத்தினரிடமிருந்தும், கொடு விலங்குகளிடமிருந்தும் பாதுகாத்துக் கொள்வதற்காக ஆயுதங்களையும் கூடவே எடுத்துக்கொண்டு தெற்குமுகமாகப் பயணம் செய்தார்கள். அவருக்கும் அவரைச் சேர்ந்தவர்களுக்கும் எபிரேயர் என்ற பெயர் வழங்கலாயிற்று. எபிரேயர் என்றால் 'ஆற்றைக் கடந்துவந்தவர்கள்' என்று பொருள். அவர் பயணம் அமைதி வாய்ந்ததாகவே இருந்தது. ஒருவேளை பயணத்தின்போது அவர் சந்தித்தவர்கள் தேராகுவுக்கு முன்னதாகவே பாபிலோனியாவிலிருந்து கானானுக்கு இடம் மாறிச் சென்றிருக்கலாம்.

## நீண்ட பயணம்

பாலை நில ஓரத்தின் வழியாகவே அந்தப் பயணக்கூட்டம் சென்று கொண்டிருந்தது. ஆடு மாடுகளுக்குத் தண்ணீர் காட்டுவதற்காகவும் களைப்பாறிக் கொள்வதற்காகவும் பாலைப் பசுந்திடல் உள்ள இடங்களில் சற்று தங்கித் தங்கிப் போனார்கள். சில நேரங்களில் வறண்ட காட்டாறுகள் காய்ந்து சேறாக இருக்கும். அங்கு தண்ணீரே அகப்படாது. ஆபிரகாமை அவர் நீண்ட தாடியினாலும் ஷேக் உடையினாலும் எளிதில் அடையாளம் கண்டுகொள்ளலாம். 35ம் பக்கத்தில் உள்ள படத்தில் இருக்கும் நேர்த்தியான ஷேக் மாதிரி அவர் தோற்றமளித்திருக்கலாம். அவர் பருத்தி நூலால் நெய்யப்பட்ட நீளமான சட்டை அணிந்து அதற்குமேல் இடுப்பில் பட்டைபோல் அகன்றதும் வண்ணமுள்ளதுமான ஒரு கச்சையையும் கட்டியிருக்கலாம். நேர்க்கோடுகள் போட்ட ஒரு மேலாடை அணிந்திருக்கலாம். அது ஒட்டக மயிராலோ அல்லது கறுத்த வெள்ளாட்டின் உரோமத்தாலோ தயாரிக்கப்பட்டதாக இருக்கக்கூடும். பெரிய கைக்குட்டை அளவில் பட்டுத் துண்டு தலையில் போட்டு அதை ஐந்து சென்டிமீட்டர் அகலமுள்ள




வனாந்தர ஷேக்

ஆட்டுமயிர் அல்லது ஒட்டக மயிரினால் ஆன கயிற்றினால் தலையில் இறுகக் கட்டியிருப்பார். காலில் ஜோடுகள் மாட்டியிருப்பார். அவற்றின் அடித்தோல் உறுதியானதாயிருக்கும். ஜோடுகளின் வார் கணுக்காலுக்கும் குதிகாலுக்கும் ஊடே பாதத்தின் மேல் பாகத்துக்குக் கொண்டுவரப்பட்டு, பின் பெருவிரலுக்கும் அடுத்த விரலுக்கும் நடுவாக அடிப்பகுதியில் ஒரு தோல் பொத்தானால் பொருத்தப்பட்டிருக்கும் (இரவு நேரங்களில் படுக்கும்போது பகலில் போட்ட உடையோடு இடைக்கச்சையைத் தளர்த்திவிட்டுப் படுத்துக்கொள்வார். ஜோடுகளைக் கழற்றி வைத்துவிடுவார்). கையில் நல்ல தடி வைத்திருப்பார். அது ஏதாவது ஒருவகை மரத்திலிருந்து வெட்டப்பட்ட கம்பாகத்தான் இருக்கும். ஆனால் இதற்கு ஓர் அரசரின் செங்கோலுக்கொத்த மதிப்பு உண்டு.

சாராளும் பருத்தி நூலால் நெய்யப்பட்ட ஒரு நீல நிற ஆடை அணிந்திருந்திருக்கலாம். மாதுளைப் பழத்தோலிலிருந்து எடுக்கப்பட்ட சாயத்தில் அது தோய்க்கப்பட்டிருக்கும். அதே நிறத் துணியைத் தலையிலும் கட்டியிருந்திருப்பார். அவர் அணிந்திருந்த ஆடையின் கைப்பகுதி ஒரு மீட்டர் நீளமானது. இதில்தான் அவர் தம்முடைய செல்வங்களையெல்லாம் முடிந்து வைத்திருப்பார். வேலைகள் செய்யும்போது அவர் தம் ஆடையின் கைகளைக் கழுத்துப்புறம் சேர்த்துக் கட்டிவிடுவார். எளிதாக அங்கும் இங்கும் நடப்பதற்காக, தொங்கும் ஆடையை இடுப்பில் கட்டியிருக்கும் கச்சைக்குள் செருகிக்கொள்வார். ஆபிரகாம் சவாரி செய்த ஒட்டகம் சேணத்தோடு வண்ண வனப்புடையதாய் இருந்திருக்கும். அதில் அவர் ஏறிக்கொண்டு வரிசையாகப் பயணம் செய்துவந்த ஒட்டகங்கள், மற்ற மிருகங்கள், மக்கள் இவர்கள் நலனை அறியவும், பொருட்கள் பத்திரமாய் இருக்கின்றனவா என்று பார்த்துக்கொள்ளவும் முன்னும் பின்னும் சென்றிருப்பார்.

அவர்கள் குறுகிய பெனிக்கேயா சமவெளி வழியாகச் சென்றனர். அவர்களின் வலப்பக்கம் மத்தியதரைக் கடலும், இடப்பக்கம் லீபனோன் மலைத்தொடர்களும், கலிலேயாக் குன்றுகளும் இருந்தன. கர்மேல் மலை வழியாகச் செல்லாமல் இருப்பதற்காகச் செழிப்பான எஸ்டிரேலோன் சமவெளியைக் கடந்து சென்றார்கள் (இங்கே பிற்காலத்தில் இஸ்ரவேல் கோத்திர மக்களுக்கும் அவர்களுடைய பகைவர்களுக்குமிடையே பல சண்டைகள் நடந்தன). பின்னர் சமாரியாவின் மலைகள் எதிர்ப்பட்டன. கிழக்கே தூரத்தில் கணவாய் போன்ற சுண்ணும்புக்கல் கரைகளுக்கு ஊடாக யோர்தான் நதி பெரிய பாம்புபோல் வளைந்து நெளிந்து ஓடிக்கொண்டிருந்தது. தெற்கே சில கிலோமீட்டர்களுக்கு அப்பால் சமுத்திர மட்டத்திற்கு நானூறு மீட்டர் கீழே அது அகன்று உப்புக்கடல் ஆகிறது. சவக்கடல் என்ற வேறு பெயர் இக்கடலுக்கு வெகு பொருத்தமானது. ஏனெனில் இதில் மீன் போன்ற எந்த உயிரினமும் கிடையாது. கடல் நீர் ஒரே உப்பாயிருப்பதால் யாரும் அமிழக்கூட முடியாது!

தொடர்ந்து பயணம் செய்து சீகேமில் மோரேயின் கருவாலி மரங்களுக்கடியில் ஆபிரகாம் தம் கூடாரத்தை அமைத்தார். கானானியர்களின் தெய்வங்களில் ஒன்றுக்குப் புனிதமான இடம் இது. இக்கருவாலி மரங்களிலிருந்து மணமுள்ள ஒரு வகைப் பிசின் வடியும்; இவை அருமையான நிழல் தரும் மரங்கள். ஆபிரகாம் அங்கிருந்து புறப்பட்டு பேதேலுக்குச் சென்று, பின் தெற்காக நெகேபின் வழியாகச் சென்றார். நெகேப் என்ற பதத்திற்கு 'வறண்ட நாடு' அல்லது 'தென்னாடு' என்று




ஆபிரகாமின் பயணம்



பெடோயீக்களின் கூடாரம். படத்திலுள்ளவர்கள் என்னென்ன செய்துகொண்டிருக்கிறார்கள்?

பொருள். இது எப்ரோனுக்கும் பரந்துகிடந்த பாலைவனத்திற்கும் இடையிலுள்ள பகுதி. இப்பகுதியில் மழை குறைந்துகொண்டே போகும் என்பதும் இப்போதும்கூட சில பகுதிகள் பாலைவனமாகவும், கிட்டத்தட்ட பாலைவனம் போன்றதாகவும் இருக்கின்றன என்பதும் கவனிக்கத்தக்கது. இப்பகுதிகளே 'வனாந்தரமான" இடம் எனப்பட்டன. மே மாதம் முதல் அக்டோபர் வரை இங்கு தண்ணீர் கிடைக்காது. சரியான வறட்சிக் காலம். எனவே ஆபிரகாம் எகிப்துக்குப் போகவேண்டிய நிலை ஏற்பட்டது.

ஏராளமான மந்தைகளோடு திரும்பும் வழியில் லோத்தினுடைய பணியாட்களுக்கும் ஆபிரகாமின் பணியாட்களுக்கும் தண்ணீருக்காகச் சண்டை வந்துவிட்டது. தமக்கு வேண்டிய இடத்தைத் தெரிந்தெடுத்துக் கொள்ளும் வாய்ப்பு கிட்டியபோது லோத்து மேற்கே இருந்த யூதேயாவின் வறண்ட மலைகளைப் பார்த்தார். பின் கிழக்கே திரும்பி வெகுநேரம் பார்த்தார். யோர்தான் சமவெளி பச்சைப் பசேலென்றிருந்தது. அங்கே சென்றால் தமக்கும் தம் பணியாட்களுக்கும் வாழ்க்கை எளிதாயிருக்கும் என்று எண்ணி லோத்து சோதோமை நோக்கிச் சென்றார். ஆபிரகாம் எப்ரோனுக்குச் சென்றார். எப்ரோன் உயர்ந்த இரண்டு மலைகளுக்கு ஊடாக அமைந்திருந்த ஒரு வளமான பள்ளத்தாக்கில் இருந்தது.

## ஆபிரகாமின் கூடாரம்

ஆபிரகாம் இங்கு கூடாரம் போட்டு நிரந்தரமாகத் தங்கிவிட்டார். இனி அவர் நாடோடி அல்ல; இப்புதிய இடத்தில் தாமாகவே தலைவராகக் குடியேறத் தீர்மானித்தார். அந்நாட்களில் குடும்ப ஆட்சி தலைவருக்குரியதாயிருந்தது. அதாவது குடும்பங்களில் பல தலைமுறையானவர்கள் ஒன்றாக வாழ்ந்து வந்தனர். பொதுவாக ஒரே கூடாரத்தில் தான் வாழ்ந்தனர். வயதில் மூத்தவர் சொல்லுவதை எல்லோரும் கேட்டுக் கீழ்ப்படிந்து வந்தார்கள். ஆடு மாடுகளை மேய்ப்பதிலும் சிறு அளவில் வேளாண்மை செய்வதிலும் எல்லோரும் பங்கெடுத்தனர். கூடாரத்தைச் சுற்றி உள்ள நிலத்தில் தங்கள் தேவைக்கான தானியங்களை விளைவித்துக் கொண்டார்கள். ஆபிரகாமுடைய கூடாரம் நாற்பது மீட்டர் நீளமாயிருந்திருக்கலாம். அது பெரியதாக இருந்தபடியால் எல்லா கூடாரங்களுக்கும் நடுவில் போடப்பட்டு இருந்தது. அதன் வாசலில் இருந்துகொண்டே வெளியார், பார்க்க வருபவர்கள், வியாபாரிகள் ஆகியோர் வருவதைப் பார்க்கக்கூடியவாறு அது அமைந்திருந்தது. சில கூடாரங்களே ஒன்று சேர்ந்திருந்தால் அவை வட்ட வடிவத்தில் இருந்திருக்கவேண்டும். ஆனால் ஆபிரகாமின் கூடாரங்கள் பரந்தகன்று வரிசை வரிசையாகச் சதுரவடிவில் அமைக்கப்பட்டிருந்

திருக்கலாம். ஒவ்வொரு கூடாரம் அல்லது 'உரோமத்தால் அமைக்கப்பட்ட வீடு' கருப்பு வெள்ளாட்டு உரோமத்தால் ஆனது. பெண்கள் கருப்பு வெள்ளாட்டு மயிரை முரட்டுக் கம்பளித் துணியாக நெய்வார்கள். அது நீரும் உஷ்ணமும் புக வழியளிக்காததாயும் இருக்கும். ஒவ்வொரு கூடாரமும் இணைவக வடிவத்தில் அமைந்திருக்கும். கூடாரத்தைத் தாங்க மும்மூன்று கழிகளை மூன்று வரிசையாக நட்டுவிடுவார்கள். மத்தியில் உள்ள கழி எல்லாவற்றையும்விட உயரமாக நிற்கும். இது இரண்டரை மீட்டர் உயரம் வரை இருக்கும். முளைகள் அடித்துக் கட்டி, கூடாரம் ஆடாமல் அசையாமல் இருக்கப் பார்த்துக் கொள்வார்கள் (ஏசா. 54:2 பாருங்கள்). சில வேளைகளில் இம் முளை முக்கால் அல்லது ஒரு மீட்டர் நீளமிருக்கும். இவற்றைப் பெரிய சம்மட்டி கொண்டு அடித்துத் தரையில் ஊன்றுவார்கள். சில சமயம் சம்மட்டியின் தலைப்பாகம் ஒரு மீட்டர் நீளமும், அரை மீட்டர் சுற்றளவும் உள்ளதாய் இருக்கும்.

கூடாரத்தின் உள்ளே இரு அறைகள் உண்டு. வலப்பக்கம் உள்ள அறையில் ஆண்கள் இருப்பார்கள். அங்குதான் வாசல் உண்டு. இடப்பக்கம் பெண்களுக்கு உரியது; இடையே ஒரு திரை போடப்பட்டிருக்கும். பக்கவாட்டாகச் சுற்றி வந்து வேறொரு திரை போடப்பட்டிருக்கும். ஆண்கள் இருக்கும் இடத்தில்தான் விருந்தினர்கள் உபசரிக்கப் படுவார்கள் அங்கு உட்கார்ந்து அவர்கள் சாப்பிடுவார்கள். பெண்களுக்குரிய இடத்தில் உணவு தயாரிக்கப்படும். தாம் ஒரு மகனுக்குத் தாயாகப்போவதாக அன்னியர் ஒருவர் அறிவித்ததைத் தம் பகுதியில் இருந்தபடியே சாராள் எளிதாக ஒட்டுக்கேட்க முடிந்தது. இப்பகுதியில்தான் சமைக்கும் பாண்டங்கள், தண்ணீர் ஜாடிகள், தோல் துருத்திகள், விளக்குகள், திரிகைகள், படுக்கும் பாய்கள், நூற்கும் இராட்டைகள் எல்லாம் வைக்கப்பட்டிருக்கும். சாதாரணமாக அவர்கள் மா உருண்டைகளை வெள்ளாட்டுத் தயிரில் தோய்த்துச் சாப்பிடுவார்கள் அல்லது அவரையினச் செடியின் காய்களைக் கொண்டு வடிசாறு இறக்கிச் சாப்பிடுவார்கள். கூடாரத்திற்கு அருகே உள்ள நிலத்தை எளிதாக உழுது அங்கு பயிரிடுவார்கள் (11ம் அத்தியாயத்தைக் காண்க). அதில் விளைந்த தானியங்களில் இருந்து மாவு தயாரிப்பார்கள்.

இயற்கையான ஊற்றுகள்—'ஜீவ தண்ணீர்' இருந்ததாகத் தெரிந்த இடங்களிலெல்லாம் ஆபிரகாம் கிணறுகளைத் தோண்டவேண்டியதாயிற்று. கிணற்றைச் சுற்றிப் பாதுகாப்பாகக் கற்கள் வைக்கப்பட்டிருக்கும். தோல் வாளிகளால் அல்லது துருத்திகளால் தண்ணீர் இறைத்து, பக்கத்திலுள்ள தொட்டிகளில் ஊற்றுவார்கள். இன்றுகூட இம்முறையில்தான் தண்ணீர் இறைக்கிறார்கள். ஆனால் தோல் வாளிகளுக்குப் பதிலாகப் பெட்ரோல் தகரங்களைப் பயன்படுத்துகிறார்கள்! பெண்கள்தாம் தண்ணீர் இறைப்பார்கள்; சாதாரணமாகப் பெண்களுக்கு உதவி செய்யும் வகையில்கூட இதை ஆண்கள் செய்யமாட்டார்கள்.

## பெடோயீ உபசாரம்

இந்நாளிலும் விருந்தினரை உபசரிப்பதை பெடோயீக்கள் ஒரு புனித கடமையாகக் கருதுகிறார்கள். எல்லா விருந்தினர்களையும் அன்புடனும் அருளுடனும் உபசரிப்பார்கள். இன்றுகூட ஒரு ஷேக் சிறந்த இடத்தையே தம் விருந்தினருக்குக் கொடுப்பார். ஒரு முழு வெள்ளாட்டை அப்படியே அதன் கொழுப்பிலேயே பொரித்து அதைச் சோறு, ஒட்டகத்தயிர் இவற்றோடு சாப்பிடக் கொடுப்பார். இன்று வரவேற்று வணக்கம் தெரிவிக்கும் அதே முறையில் ஆபிரகாமும் விருந்தினர்களை வரவேற்று வணக்கம் தெரிவித்தார். தலையை நேராக வைத்துக் கொண்டு சிறிது முன்னால் சாய்ந்தபடி வலக் கையை உயர்த்தி, முதலில் நெற்றியையும், பிறகு உதடுகளையும், பின் நெஞ்சையும் தொட்டு வணங்கினார். படங்கள் இதை விளக்குகின்றன. விருந்தினர்கள் வந்தவுடன் பயணத்தில் படிந்த தூசியைக் கழுவி நீக்கவும், ஜோடுகள் அணிந்து சூடேறிய கால்களைக் களைப்பாற்றிக் கொள்ளவும் தண்ணீரும் துடைக்கத் துண்டும் கொடுப்பது அவர்கள் வழக்கம். திடீரென்று விருந்தினர் வந்தாலும் சீக்கிரத்தில் உணவு தயாராகி விடும். ஆபிரகாமின் விருந்தினர்கள் சரியான வெயில் நேரத்தில் வந்தார்கள். உடனே ஆபிரகாம் சாராளையும் வேலையாட்களையும் உணவுக்காகக் கன்று, தயிர், பால் எல்லாம் ஆயத்தம் செய்யச் சொன்னார். உணவைப் பகிர்ந்துகொள்வது நட்புக்கான அடையாளம். சாப்பிடுமுன் விருந்தினரின் பெயரைக் கேட்டுக்கொள்வதில்லை. ஏனெனில், விருந்தினர் எதிரிகள் கூட்டத்தைச் சேர்ந்தவராயிருந்தால் உபசரிக்க முடியாமற் போய்விடுமே! ஆபிரகாம் ஒரு கூட்டத்தின் தலைவராக இருந்தபோதிலும் விருந்தினருக்கு உணவு பரிமாறி உபசரித்தார். நிதானமாகச் சாப்பிடுவதுபோல் உரையாடுதலும் நிதானமாகவே இருக்கும்.



வணக்கம் தெரிவிக்கும் முறை. படத்திலுள்ளவர்கள் வெவ்வேறு விதமான உடை அணிந்திருக்கிறார்கள்.

## விளக்கப் பயிற்சி

1. முன் அட்டையிலுள்ள நிலப் படத்தைப் போல் ஒரு படத்தை வரைந்து கொள்ளுங்கள். அதில் செழும் பிறையையும் முக்கிய நதிகளையும் மலைகளையும் ஆபிரகாம் பயணம் செய்த பாதையையும் குறிப்பிடுங்கள்.

2. தீப்பெட்டிகளைச் சேகரித்து சிக்குராத் ஒன்றை அமையுங்கள். பாலைப் பசுந்திடல் மாதிரி ஒன்று.

   அல்லது

   ஒரு கிணறும் அதன் அருகில் தொட்டிகளும் இருப்பதுபோல் மாதிரி ஒன்று செய்யுங்கள்.

   அல்லது

   பெடோயீக்களுடைய கூடாரம், அதில் உள்ள வீட்டுப்பொருட்களின் மாதிரிகள் செய்யுங்கள்.

3. யாவேபற்றி ஆபிரகாம் எப்படி அறியலானார்? கடவுளைப்பற்றிய ஆபிரகாமின் கருத்துக்கும் நம்முடைய இன்றைய கருத்துக்கும் உள்ள வேறுபாடுகளைச் சொல்லுங்கள்.

4. பெடோயீக்கள் விருந்தினரை உபசரிப்பதுபற்றி விவாதியுங்கள்.

5. நீங்கள் 'சிக்குராத்' படங்களைப் பார்த்து அதைப்பற்றி அறிந்துகொண்டு, பார்க்கப் படங்கள் இல்லாத ஒருவருக்குத் தெளிவாக விளங்கும்படி அது எப்படியிருக்குமென்று விளக்கிச் சொல்லுங்கள்.

6. சோதோம் பட்டணத்தைப்பற்றிய நிகழ்ச்சியில் நிலக்கீல் கேணிகள்பற்றிச் சொல்லப்பட்டுள்ளது (ஆதி. 14:10). இவைகளை விளக்குங்கள். இந்த நகரத்திற்கு என்ன நேர்ந்தது என்று உங்களால் ஊகிக்க முடிகிறதா? இந்தப் பட்டணத்தின் அழிவுக்கு யாவேதான் பொறுப்பு என்று கூறக் காரணம் என்ன?

7. அராபியர்களுடைய கொள்கை பின்வருமாறு இருக்கும்:

   'என் கூடாரமே என் அரண்மனை
   என் தலைத்துணியே என் கிரீடம்
   என் வாள்தான் என் படை
   எனக்குக் கதை சொல்பவரே என் பள்ளிக்கூடம்.'

   இதுபற்றி உங்கள் கருத்தென்ன? வகுப்பில் விவாதம் நடத்துங்கள் அல்லது இதை விளக்கி எழுதுங்கள்.

8. சாலொமோனின் உன்னதப்பாட்டு 2:11, 12,13 வசனங்களை மனப்பாடம் செய்யுங்கள்.

அத்தியாயம் 2

# ஆபிரகாமும் ஈசாக்கும்

*(ஆதி. 21:1–21; 22:1–14; 23; 24)*

**சா**ராள் ஈசாக்கைப் பெற்றெடுத்தார். ஈசாக்கு என்ற சொல்லுக்கு 'சிரிப்பு' என்பது பொருள். ஈசாக்குக்குச் சொத்துரிமை இல்லாமற் போய்விடுமோ என்று அஞ்சி ஆபிரகாமின் அடிமைப் பெண்ணுயிருந்து பின் மனைவியான ஆகாரின் மேலும், அவர் மகன் இஸ்மவேல் மேலும் சாராள் இன்னும் அதிக மாகப் பொருமைப்படத் தொடங்கினர். அடிமைகள் தாமே! இவர்களை வெளியே அனுப்பிவைத்தால் என்ன? என்று அவருக் குத் தோன்றிற்று. இக்கருத்துக்கு எப்படியோ ஆபிரகாமை இணங்க வைத்து அவர்களை விரட்டியடித்து விட்டார். ஆகாரும் அவர் மகனும் பெயேர்ஷெபாவுக்கு ஓடவேண்டிய தாயிற்று. அவர்கள் நடந்த வழி கல்லும் முள்ளும் புதர்ச்செடிகளும் பாறைகளும் நிறைந்த ஒரு காட்டு வழி. கொடிய விலங்கு கள் நிறைந்த தண்ணீரற்ற வனந்தரம். ஆகாரும் அவர் மகனும் தாகத்தாலும் பசி யாலும் தவித்து நம்பிக்கை இழந்திருந்த நிலை யில் ஆகாருக்கு ஒரு கிணறு தென்பட்டது. அன்புள்ளம் படைத்த சில மக்கள் அவர் களுக்கு உதவி செய்தனர். சில ஆண்டுகளுக் குப் பிறகு இந்த நாடோடி மக்களுக்கு இஸ்ம வேல் தலைவருமாகிவிட்டார். இவர்கள் வில்லையும் அம்பையும் படைக்கலமாக உபயோகித்தவர்கள். இவர்கள் பாரான் வனந்தரத்தில் சுற்றித் திரிந்த வில்லாளர் களான பாலை நில மக்கள். இஸ்மவேலின் வழித்தோன்றல்கள்தாம் இன்று கலப்பற்ற அராபிய இனமாக இருக்கிருர்கள். இவர் கள் பெடோயீ வகுப்பைச் சேர்ந்த பாலை நில மக்கள். 'காட்டுக் கழுதை மக்கள்' என்றும் சொல்லப்படுகிருர்கள் (ஆதி. 16:11,12). ஈசாக்கின் வழிவந்தவர்களே யூதர்கள். இவர் தாய்க்குச் செல்ல மகனுய் வளர்ந்து வந்தார். கானனியர் தெய்வங்களுக்குக் குழந்தைகளைப் பலி கொடுப்பதைக் கண்ட ஆபிரகாம் தாமும் தம் மகனுகிய ஈசாக்கை யாவேக்குப் பலியிட வேண்டியதாகும் என அஞ்சினுர். கேசேர் என்னுமிடத்தில் புதைபொருளா ராய்ச்சியாளர் தோண்டியெடுத்த கோர மான பொருட்களில் ஒன்று கரடுமுரடான சுண்ணும்புப் பாறையில் வெட்டியெடுக்கப் பட்ட சிறு பலிபீடமாகும். அதன்மேல் எட்டு நாள் குழந்தையின் எலும்புக் கூடொன்று இருந்தது! கி.மு. ஆறும் நூற்ருண் டிலும் கூட மக்களிடையே இருந்த இது போன்ற தீய பழக்கங்களை எரேமியா தீர்க்கர் கண்டித்துப் பேசி வந்திருக்கிருர்.



புதரில் மாட்டியிருக்கும் ஆட்டுக்கடா. ஊர் என்னும் இடத்தில் தோண்டியெடுக்கப்பட்ட பொன் சிலை.

ஆபிரகாமும் ஈசாக்கும் தம் ஊரைவிட்டு மூன்று நாள் பயணம் செய்து எண்பது கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள மோரியா மலைக்கு வந்து சேர்ந்தனர். இது சாலேமில் உள்ள ஒரு மலையாக இருக்கலாம். சாலேம் பிற்காலத்தில் எருசலேம் எனப்பட்டது. ஈசாக்கு பலியாக அளிக்கப்பட்டதாக வழி வழியாகச் சொல்லப்படும் கல் இன்றும் இருக்கிறது. ஆனால் சரியான பலிபீடம் எது என்று எவருக்கும் தெரியாது. ஆபிரகாமும் ஈசாக்கும் பலியிடுவதற்குத் தேவையான கட்டைகளையும் நெருப்பையும் எடுத்துச்சென்றனர். அந்த நாட்களில் எபிரேய மக்கள் எவ்விதம் நெருப்பை உண்டாக்கினார்கள் என்று தெரியவில்லை. ஒருவேளை குச்சிகளை உராய்ந்து அவர்கள் நெருப்பு மூட்டியிருக்கலாம். சுமை சுமக்கப் பொதுவாகக் கழுதையைப் பயன்படுத்தி வந்தனர். அது பெண் கழுதையாயிருந்தால் பயணத்துக்குத் தேவைப்படும் பாலையும் அதனிடமிருந்து பெற்றுக்கொள்வார்கள். முட்புதரில் சிக்கியிருக்கும் ஆட்டின் சிலையின் படத்தைக் கவனியுங்கள். இது ஊர் என்ற இடத்தில் தோண்டி எடுக்கப்பட்டுள்ளது. இதன் காலம் கி.மு. 3500 ஆக இருக்கலாம். இது ஆபிரகாமின் காலத்திற்கும் மிகவும் முற்பட்ட காலம். எனவே ஒருவேளை நமக்குத் தெரியாத பழைமையான கதையொன்று பிற்காலத்தில் ஆபிரகாமோடு தொடர்புபடுத்திப் பேசப்பட்டு வந்திருக்கலாம். இந்த இடத்திற்கு ஆபிரகாம் 'யெகோவாயீரே' என்று பெயரிட்டார். இதற்கு 'யாவே பார்த்துக் கொள்வார்' என்பது பொருள் (ஆதி. 22:14; மீகா 6:7,8 பாருங்கள்).

ஒரு மக்கள் கூட்டத்திற்குத் தலைவராக ஆபிரகாம் இருந்தபோதிலும், தமக்குச் சொந்தமாக எந்த நிலமும் வைத்துக்கொள்ளவில்லை; பெயேர்ஷெபாவிலே கூடாரம் போட்டே தங்கியிருந்தார். எனவே சாராளை அடக்கம்பண்ணுவதற்கு அவர் ஒரு நிலத்தை விலைகொடுத்து வாங்கவேண்டியதாயிற்று. அவர் 'எப்ரோனின் ஊர் வாசலு'க்குச் சென்றார். 'ஊர் வாசலில்'தான் வியாபாரம், பேரம் பேசுதல், வாய்ச்சண்டை போடுதல், குற்றச்சாட்டுகளுக்கு முடிவு காணுதல் போன்ற அலுவல்கள் எல்லாம் நடைபெறும் ('ஊர் வாசலில்'தான் பிற்காலத்தில் நியாயாதிபதிகள் தங்கள் நியாய விசாரணைகளை நடத்திவந்தார்கள்). ஆபிரகாம் ஏத்தியனாகிய எப்ரோனிடத்தில் மக்பேலாவின் குகையை நானூறு ஷெக்கல் வெள்ளிக்கு விலை தீர்த்து வாங்கினார். ஒரு ஷெக்கல் எடை வெள்ளியின் விலை பஞ்சகாலத்திற்கும் செழிப்பான காலத்திற்கும் ஏற்றபடி மாறியபடியால் நம்முடைய கணக்கில் என்ன மதிப்புடையது



ஏத்தியப் போர்வீரர்

என்று நாம் குத்து மதிப்பாகக்கூடச் சொல்ல முடியாது. எவ்வளவு இணக்க வணக்கமாக இருவரும் விலை பேசினார்கள் என்பதைக் கவனியுங்கள். 'அந்த நிலத்தை உமக்குத் தருகிறேன்' என்று தொடங்குகிறார் எப்ரோன். இதுதான் ஆரம்பம். பிறகு பேரம் பேசிக்கொண்டே போயிருப்பார்கள். இந்தக் குகை இன்று முகமதியர்கள் கையில் இருக்கிறது. இவர்களும் ஆபிரகாமை 'விசுவாசிகளின் தந்தை' என்று கருதுகின்றனர்.

## யூதர்களும் அராபியர்களும்

எப்ரோன் போன்ற ஏத்தியர்கள் சின்ன ஆசியாவிலிருந்து வந்தவர்கள் (முன் அட்டையிலுள்ள நிலப்படத்தைப் பாருங்கள்). இவர்கள் நீண்ட காலம் எகிப்தியருக்கு வெல்லமுடியாத எதிரிகளாயிருந்தனர். கி.மு. 1500 முதல் 1300 வரை இவர்கள் இரும்பை உருக்கும் தொழில் செய்து வந்தார்கள். எகிப்தில் இரண்டாம் இராம்சேஸ் என்ற அரசர் இருந்தார் (இஸ்ரவேலர் எகிப்திலிருந்து பயணம் செய்ததைப்பற்றிப் படிக்கும்

போது இவரைப்பற்றிப் படிக்கவிருக்கிறோம்). இவர் ஏத்திய நாட்டு அரசருக்கு உருக்கின இரும்பு தேவை என்று கடிதம் எழுதினர். அருகில் உள்ள ஏற்றுமதித் துறைமுகம் எதிலும் உருக்கின இரும்பு இல்லை என்று அவர் வருந்திப் பதில் எழுதிவிட்டார் ஏத்தியர்கள் யூதர்களைப்போன்ற உடலமைப்புக் கொண்டவர்கள்: அகன்ற தோள்கள், மொத்தையான முகம், வளைந்த மூக்கு உடையவர்கள். அராபியர்களின் தோற்றம் இதற்கு முற்றிலும் வித்தியாசமானது. அவர்கள் ஒல்லியானவர்கள்; நீண்ட நேரான மூக்கும் கடைந்தெடுத்தது போன்ற முகமும் உள்ளவர்கள்.

ஆபிரகாம் முதுமை அடையவே யாவேயின் வாக்கு பலிக்க வேண்டுமென்றால் ஈசாக்கு திருமணம் செய்து பிள்ளைகளைப் பெற வேண்டும் என்று உணர்ந்தார். எனவே, எலியேசர் என்ற பொறுப்பான வேலையாளை அழைத்து அவர் செய்ய வேண்டியவைகளைத் தெளிவாக விளக்கினர். தங்கள் பிள்ளைகளுக்குத் தெரியாமலேயே அவர்களுடைய திருமணம்பற்றிப் பெற்றோர் பேசி முடிவு செய்து விடுவது இன்றுகூட அநேக இனத்தவரின் பழக்கமாயிருக்கிறது. ஆபிரகாமின் உறவின் முறையாரிடமே எலியேசர் பெண்தேடிப் போனதில் வியப்பொன்றுமில்லை. கானனியப் பெண் வேண்டாம் என்று ஆபிரகாம் கண்டிப்பாகச் சொல்லிவிட்டார். 'அன்னியப் பெண்ணை', முக்கியமாகச் சிலைகளை வணங்கிய ஒருத்தியைத் தம் மகன் மணம் செய்ய அவர் விரும்பவில்லை. எப்படியானாலும், தம் உறவினரிலேயே ஒருத்தியை, கூடுமானால் தம் முறைப் பெண்ணையே மணப்பது ஈசாக்கின் கடமையாகும். பெண்ணுக்குப் பரிசம் போட வேண்டும். எனவே, எலியேசர் பத்து ஒட்டகங்களில் பரிசப் பொருட்களை ஏற்றிக் கொண்டு காரானுக்குப் புறப்பட்டார். பல ஆண்டுகளுக்குமுன் ஆபிரகாம் விட்டுச் சென்றபோது நாகோரும் மற்ற உறவினரும் இங்குதான் குடியேறியிருந்தனர்.

## ரெபெக்காளை எலியேசர் கண்டுபிடித்த விதம்

யோர்தானைக் கடந்து வடகிழக்காகத் தம் சொந்த ஊரான தமஸ்குவின் திசையில் எலியேசர் சென்றிருக்கலாம். அங்கு ஓர் இரவு தங்கிவிட்டு மறுநாள் காரானுக்குப் புறப்பட்டுச் சென்றார். ஒட்டகங்களுக்குத் தண்ணீர் தேவையாயிருந்தபடியால் காரானின் மதிற்சுவர்களுக்கு வெளியே உள்ள ஒரு கிணற்றருகில் வந்து தங்கினர். மேலும், யாரையாவது சந்தித்து உதவிபெறவும் அது தான் சரியான இடம். மந்தைகளுக்குத் தண்ணீர் காட்ட வசதியாக இருக்கும் என்று கிணறுகளை எப்போதுமே ஊருக்கு வெளியே வெட்டியிருந்தார்கள். பெண்களே தண்ணீர் கொண்டுவரச் செல்வார்கள். கூலிக்குத் தண்ணீர் சுமக்கும் சில ஆண்கள் இருந்தார்கள். ஆனல், அத்தொழில் இழிவானதாகக் கருதப்பட்டது.

கதிரவன் மறையும் நேரம். அந்தக் குளுமையான மாலை நேரத்தில் பெண்கள் குடங்களை எடுத்துக்கொண்டு தண்ணீர் எடுக்க வந்தனர். சிலர் வெகு தொலைவிலிருந்து வந்தனர். வழிப்போக்கர்களுக்குத் தண்ணீர் இறைத்துக் கொடுப்பது கிழக்கத்திய மரியாதைப் பழக்கமாகும். எலியேசர் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு தம் பேச்சைத் தொடங்கிவிட்டார். ரெபெக்காள் எலியேசரின் ஒட்டகங்களுக்கும் தண்ணீர் இறைத்து ஊற்ற முன் வந்தது அவர் அருட் குணத்தை வெளிப்படுத்துகிறது. அவருக்கு உதவி செய்ய ஏன் எலியேசர் முன் வரவில்லை என்று நீங்கள் திகைக்கலாம். ஆனல் இது பெண்களே செய்யும் வேலையாதலால் அவருக்கு அந்த எண்ணம் தோன்றவில்லை. மற்ற பெண்கள் தலையிலும் தோளிலும் பெரிய குடங்களைத் தூக்கிக்கொண்டு கிளம்பியவுடன் எலியேசர் தாம் கொண்டு வந்திருந்த பரிசப் பொருட்களான இரு



ஆபரணங்கள் அணிந்துள்ள மணப்பெண்



எலியேசர் ரெபெக்காளைச் சந்திக்கிறார்.

பொன் வளையல்களையும் வளையத்தையும் எடுத்தார். வளையம் மூக்கில் அணிந்து கொள்வதும் உயர்வாக மதிக்கப்பட்டதுமான அணிகலன். மூக்கில் துளையிட்டு அதில் நுழைத்து அதிலுள்ள மணிக்கற்கள் கன்னத்தின்மீது பதிந்திருக்கத் தக்கதாகப் போட்டுக் கொள்வார்கள் (எசே. 16:12 காண்க). இவைகள் நிச்சயதார்த்தப் பரிசுகளென்று ரெபெக்காள் உணர்ந்து, எலியேசர் வந்திருப்பதைக் குறித்து தம் வீட்டாரிடம் அறிவிக்க வீட்டுக்குள் ஓடினார்.


மீண்டும் கிழக்கத்திய உபசாரம் நடைபெறுகிறது! எலியேசர் வெளியிடத்திலிருந்து வந்தவர். அவருக்கு உணவும், தங்க இடமும் வேண்டும். அவர் யார், எங்கிருந்து வந்தவர் என்று கேட்காமலேயே அவருக்கு எல்லா வசதிகளையும் செய்தளிக்கிறார்கள். ஒட்டகங்களுக்கும் இரவில் தொழுவத்தில் தங்க வசதி செய்து கொடுக்கப்படுகிறது; அவற்றிற்கு வைக்கோல் கூளமும் பார்லியும் கொடுக்கப்பட்டன. இக்காலத்திலும் வைக்கோல் கூளமே மிருகங்களின் உணவாகும். வைக்கோலைப் போரடிக்கும் எருதுகள் மிதித்துத் துவைப்பதாலும், அவை இழுத்துச் செல்லும் கட்டை நசுக்குவதாலும் அது கூளமாகிறது (ஏசா. 41:15,16). போரடித்தலைக் காட்டும் படம் அடுத்த பக்கத்தில் உள்ளது.

## எலியேசர் வீடு திரும்புகிறார்

விருந்து சாப்பிடு முன் தாம் வந்த வேலை பற்றிச் சொல்ல வேண்டுமென்று எலியேசர் திட்டமாகக் கூறுகிறார். அதேபோல் காலையில் புறப்பட்டுவிட வேண்டுமென்றும் கண்டிப்பாகக் கூறிவிடுகிறார். பரிசமாக அனுப்பப்பட்டிருந்த நகைகள், வெள்ளி, தங்கம், ஆபரணங்கள், உடைகள் ஆகியவை லாபானை வெகுவாய்க் கவர்ந்துவிட்டன. இது யாவேயினால் ஆனது என்று அவர் கண்டு கொண்டார். ரெபெக்காள் மறுத்துப் பேசுவதாக இருந்திருந்தாலும் அவர் கண்டிப்பாய்ப் போக வேண்டியதிருக்கும். திருமணம் என்பது இணைப்பதாகும். ஒரு நல்ல இடத்திலிருந்து அவரைப் பெண் கேட்டு வந்திருக்கிறார்கள். ஆகையால் தம்முடைய வீட்டாரை விட்டு வெகு தொலைவு சென்று தம்மைவிட வயதில் மிக மூத்தவராயிருந்தவரை மணந்துகொள்ள வேண்டியதாயிருந்தாலும் தம் தாதியான தெபோராளைக்

கூட்டிக்கொண்டு மன மகிழ்வோடு கிளம்பி விட்டார்!

இதற்குள் ஆபிரகாம் இறந்துவிட்டார். ஈசாக்கு தமக்கு வரப்போகும் பெண்ணின் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். கூடாரத்தைவிட்டு வெளியே நடந்துசென்ற போது ஒட்டகங்கள் தூரத்தில் வருவதைப் பார்த்தார். அவைகள் எழுப்பிய தூசியும் அவர் கண்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும். அவர்களைச் சந்திக்கப் புறப்பட்டு விட்டார். தொலைவில் வந்துகொண்டிருந்தவர் அவரை மணம் செய்யப்போகும் மாப்பிள்ளை என்று எலியேசர் கூறியவுடன் ரெபெக்காள் முக்காட்டை இழுத்து முகத்தை மூடிக்கொண்டார். இந்த முக்காட்டை மண நாள் அன்று மணச் சடங்கு நடைபெறும் போதுதான் எடுப்பார். திருமணம் மிக எளிய முறையில் நடந்தது. சாட்சிகள் பார்த்து நிற்க, மணமகளைத் தம் கூடாரத்துக்குள் ஈசாக்கு அழைத்துச் செல்லவேண்டும். அவரை அவர் அழைத்துச் சென்றார். பின் பல நாட்கள்வரை விருந்துகளும் கொண்டாட்டங்களும் நடைபெறுவதுண்டு. ஆனால், ஈசாக்கு தம் தாயும் தந்தையும் இல்லாக் குறையை இன்னும் உணர்ந்து வந்தமையால் இவை சில நாட்களே நடந்திருக்கலாம். ரெபெக்காள் சாராளின் கூடாரத்தில் தங்கி, வழக்கப்படி குடும்பப் பொறுப்புகளை ஏற்றுக்கொண்டார்.



போரடித்தல்

## விளக்கப் பயிற்சி

1. மோரியா மலையில் ஆபிரகாம் புதரில் சிக்கிய ஆட்டைக் கண்டதைப் படம் வரைந்து காட்டுங்கள்.
2. எப்ரோனிடம் ஆபிரகாம் நிலத்தை வாங்க 'பேரம் பேசிய'தை நடித்துக் காண்பியுங்கள்.
3. பயணத்தை முடித்துத் திரும்பியபோது எலியேசர் ஈசாக்கிடம் நடந்தவற்றைக் கூறுவதுபோல் கூறுங்கள். யாவேயின் மேல் அவருக்கு இருந்த நம்பிக்கையைத் தெளிவாக்குங்கள்.
4. எலியேசரைக் கிணற்றண்டை சந்தித்தது முதல் அவர்கூட ரெபெக்காள் பயணம் சென்றது வரை உள்ள அத்தனை காட்சிகளையும் ஒலிபரப்பு நாடகமாகத் தயாரியுங்கள்.

5. இந்நிகழ்ச்சியில் வரும் பல பழக்கவழக்கங்களை வரிசைப்படுத்தி அவற்றைப்பற்றி விவாதியுங்கள். எந்தெந்த விதங்களில் அவை நம் பழக்கவழக்கங்களைப்போல் இருக்கின்றன?

6. கிணற்றையும் முக்கிய கதாபாத்திரங்களையும் பொம்மைகளாகச் செய்து காண்பியுங்கள்.

அல்லது

நிகழ்ச்சியின் பின்னணியையும் அதில் வரும் பாத்திரங்களையும் கம்பளிப் பல கைப்படங்களால் விளக்க, அட்டைகளில் இந்த உருவங்களை வெட்டி எடுத்து, படங்களின் பின்னால் கம்பளித் துணி அல்லது கதர்த் துணியை ஒட்டுங்கள்.

7. எப்ரோன்பற்றிய எல்லா விவரங்களையும் சேகரியுங்கள்.

8. எலியேசர் சென்ற பாதையை நிலப் படத்தில் குறியுங்கள்.


9. மீகா 6:7,8ஐயும்; நீதிமொழிகள் 3:5,6 ஐயும் மனப்பாடம் செய்யுங்கள். இவை ஆபிரகாம் காலத்தில் எழுதப்படவில்லை. இவை அக்காலத்தில் எழுதப்பட்டிருந்தால் இவற்றில் சொல்லப்பட்டுள்ள கருத்துக்கள் எந்த இருவருக்கு உதவியாக இருந்திருக்கும்? எப்படி?

10. சுவரில் மாட்டுவதற்காக மேற்கூறிய வசனங்களில் உங்களுக்குப் பிரியமான இரு வசனங்களைத் தெரிந்தெடுத்து எழுதுங்கள்.

11. எல்லா நிகழ்ச்சிகளையும் ஒரு தொடர் நிகழ்ச்சிபோல் சொல்லுங்கள். வகுப்பில் ஒருவர் முதலில் ஆரம்பிக்கட்டும், மற்றவர்கள் தொடர்ந்து வரிசையாகச் சொல்லி முடிக்கவேண்டும். திருமறையில் உள்ள விவரங்களை இஷ்டம்போல் கூட்டிக் குறைத்துப் பேசவிடாமல் பார்த்துக்கொள்ளுங்கள்.

12. பெண்கள்: ரெபெக்காளாகக் கற்பனை செய்துகொண்டு உங்கள் தாய்க்கும் மாமாவுக்கும் கடிதம் எழுதுங்கள்.

பையன்கள்: ஈசாக்காகக் கற்பனை செய்துகொண்டு ரெபெக்காளிடம் உங்கள் குழந்தைப் பருவத்தையும் பிள்ளைப் பருவத்தையும்பற்றிச் சொல்லுங்கள்.



தண்ணீர் விற்கும் ஆண்கள். தோல் துருத்திகள் விசித்திரமான உருவங்களில் இருப்பது ஏன்?

அத்தியாயம் 3

# ஏசாவும் யாக்கோபும்

*(ஆதி. 25:27–34; 27; 28:10–22; 29:1–20)*

ஏசாவும் யாக்கோபும் வெவ்வேறு இயல்புடையவர்கள். ஏசா பலமுடையவர்; ஆற்றல் மிகுந்தவர்; சிறந்த வேடர். யாக்கோபு அடக்கமானவர்; சிந்தனையாளர்; சிந்தித்து செயல்பட நேரம் இருந்த ஓர் ஆயர். இருவரும் இரட்டைப்பிள்ளைகள். ஏசா மூத்தவர். எனவே தந்தையிடமிருந்து தம் பிறப்புரிமையையும் ஆசீர்வாதத்தையும் ஒருநாள் பெற எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். அது அக்காலத்து மக்கள் வாழ்க்கையில் ஒரு முக்கியமான நிகழ்ச்சியாகும். யாக்கோபு இதைப்பற்றி நினைத்துப் பார்த்தபோது அவர் ஏசாவையும் தம் தந்தையையும் தந்திரமாக ஏமாற்றத் திட்டமிட்டு அதற்கான சமயம் வரும் வரை காத்துக்கொண்டிருந்தார்.

ஒருநாள் அதற்கான நல்ல வாய்ப்பு அவருக்குக் கிடைத்தது. காட்டிற்கு வேட்டையாடச் சென்றிருந்தார் ஏசா. பேர்–லகாய்–ரோயீயின் கிணற்றைச் சுற்றி சிங்கம், சிறுத்தைப்புலி, ஓநாய், கழுதைப் புலி, குள்ளநரி, காட்டுமான் போன்ற வன விலங்குகள் ஏராளமாக உண்டு. 'வனம்' என்ற சொல் திறந்த வெளியைக் குறிக்கிறது. பதுங்கி வேட்டையாடியும், காட்டு மிருகங்கள் பாய்ந்துவிடாதபடி இடையறா விழிப்புடன் இருந்தும், மலைப்பாறைகளில் தொற்றி ஏறியும், கீழேயுள்ள வறண்ட காட்டாறுகளில் இறங்கியும் அண்ணன் அன்று கடினமாக உழைத்திருப்பார் என்று யாக்கோபுக்குத் தெரியும். அவர் கடும் பசியுடன் திரும்பி வருவார் என்றும் யாக்கோபு அறிந்திருந்தார். அவர் சுள்ளியால் (யாத். 22:6; சங். 58:9; ஏசா. 27:4) அல்லது காய்ந்த ஒட்டகச் சாணத்தால் தீ மூட்டி, அதன்மேல் ஒரு பானையைத் தொங்கவிட்டுக் கூழ் காய்ச்சினார். கொதித்துக்கொண்டிருந்த ருசி மிக்க கெட்டியான இந்தச் சிவப்புப் பயற்றங் கூழ் 'கம கம' என்று மணம் பரப்பிக்கொண்டிருந்தது. களைத்துப் பசியோடு வந்த ஏசாவுக்கு இந்த மணம் அருமையாக இருந்தது. எனவே அந்தச் சிவந்த கூழுக்காக விலைமதிக்க முடியாத பிறப்புரிமையை விற்கத் துணிந்துவிட்டார். யாக்கோபு விளையாட்டாக அல்லாமல் மெய்யார்வத்துடன் அதைக் கேட்டார் என்பது அப்போது ஏசாவுக்குத் தெரியாமல் இருந்திருக்கலாம்; காலங்கடந்தே அவர் அதைத் தெரிந்துகொண்டார்! (திருமறையில் இந்நிகழ்ச்சி விவரிக்கப்படும்போது மூத்தவர் இளையவருக்குப் பணி செய்பவரானது, அதாவது ஏசாவின் ஏதோம் நாடு யாக்கோபுடைய நாடான இஸ்ரவேலுக்கு அடிமையானதற்கு இதுவே காரணம் என்று கூறப்பட்டுள்ளது.)

ஈசாக்கு ஏசாவை வனத்துக்குப் போய் ருசிமிக்க காட்டு மிருகத்தின் இறைச்சியைக் கொண்டுவரச்சொல்லி, அதை உண்ட பிறகு அவரை ஆசீர்வதிக்கப் போவதாகக் கூறியபோது அவருக்கு ஏசா தம் பிறப்புரிமையை விற்றுவிட்டது தெரியாமல் இருந்திருக்கலாம். ரெபெக்காளுக்கு இது தெரியும். அவர் இப்போது ஈசாக்கை ஏமாற்ற நினைத்தார். யாக்கோபுடைய கைகளை ஆட்டுக்குட்டியின் தோலால் மூடி, அவர்தான் ஏசா என்று ஈசாக்கை நம்ப வைத்துவிட்டார். ஆட்டுக்குட்டி பெருமதிப்பு வாய்ந்ததானபடியால் மிக முக்கியமான சமயங்களில்தான் ஆட்டுக்குட்டியை அடித்துச் சமைப்பார்கள். இது ரெபெக்காளுக்கும் யாக்கோபுக்கும் மிக முக்கியமான சமயமாயிருந்தது.

ஈசாக்கு இரண்டு பேரை ஆசீர்வதித்தபோதும் 'வானத்துப் பனி'யைப்பற்றிப் பேசுகிறார். இது ஒருவிதமான மூடுபனி. மழையே இல்லாத கோடை காலத்தில், மாலை வேளைகளில் மத்தியதரைக் கடலிலிருந்து கிளம்பிவரும். மாலையில் வரும் இந்த மூடுபனிதான் பயிர்களும் செடி கொடிகளும் செழித்து வளர உதவுவதோடு மனிதர்கள் சுவாசிக்கும் காற்றிற்கு ஓர் இனிய மணத்தையும் கொடுக்கும் (ஓசே. 6:4 பாருங்கள்). ஒருவேளை இது உள்நாட்டிலிருந்த ஏசாவின் நாடான ஏதோம் வரை எட்டி


வராமலிருந்திருக்கலாம். இன்று கூட நாடோடிகள் ஒரு மரத்தை நட்டு அதன் அடிப்பாகத்தைச் சுற்றிலும் கூழாங்கற்களைக் குவித்து வைத்து விடுகிறார்கள். பனி இவற்றின்மேல் படிந்து இந்தக் குவியலின் இடைவெளி வழியாக மண்ணுக்குச் சென்று மரத்திற்கு நீராகப் பயன்படும். இந்த மேடு 'பனிமேடு' எனப்படும்.

#### யாக்கோபின் பயணம்

காரானில் இருந்த தம் மாமா வீட்டிற்கு யாக்கோபு ஓடிப்போனார். லாபானைப்பற்றி அடிக்கடி அவர் அம்மா சொல்லக் கேட்டிருந்தார். ஏசா கோபவெறிகொண்டு, தம்மை வஞ்சித்து, தம் உரிமைகளையெல்லாம் பிடுங்கிக்கொண்ட யாக்கோபைக் கொலை செய்து விடுவதாகப் பயமுறுத்தினார். பல ஆண்டுகளுக்குப்பின் இந்த பயமுறுத்தலை யாக்கோபு நினைவுபடுத்திக் கொள்வதை நாம் பார்க்கிறோம்.

யாக்கோபுக்கு நல்ல உள்ளம் உண்டு. கடினமான பாடம் ஒன்றை அவர் இனிதான் படிக்கப்போகிறார். யாவே கனவில் தோன்றி மீண்டும் வலியுறுத்தியிருந்த வாக்கைக் கேட்டிருந்தார். பேரம் பேசும் தன்மை இன்னும் அவரை விட்டு அகலவில்லை. உடைமைகள் யாவிலும் பத்தில் ஒரு பாகத்தை யாவேக்குக் கொடுத்துவிடுவதாக வாக்களித்தார். வழியில் தாம் படுத்திருந்த இடத்துக்கு பேதேல் அதாவது 'இறைவனின் வீடு' என்று பெயரிட்டார். அதன் புனிதத் தன்மையைக்குறிப்பிடுவதற்கு அங்கு ஒரு பெரிய கற்றூணை நட்டுவிட்டார். இப்படிக் கற்றூண்களை நம் நாட்டிலும் பல இடங்களில் நிறுத்தி வந்ததால் இது அந்நாட்களில் உள்ள ஒரு பழக்கம் என்று தெரிகிறது.

பத்தான்—அராமில் உள்ள கிணற்றண்டை யாக்கோபு வந்தார். அங்கு ராகேல் நின்றுகொண்டிருந்ததைக் கண்டார். அவளுக்கு அப்போது பத்து அல்லது பதினொரு வயதுதான் இருக்கும். ஏனெனில் பெரிய பெண்கள் வேறு பெண்கள் துணையோடுதான் வருவார்கள். ஆனால் இவள் தனியாக வந்திருந்தாள். பொதுவாக இந்த வயதில் பெண்களுக்குத் திருமண நிச்சய விழா முடிந்துவிடும் என்பதை நாம் கவனத்தில் வைக்கவேண்டும். யாக்கோபு பண்புடைய ஆண் மகனாக நடந்துகொண்டார். எலியேசரைப்போல் அல்லாமல் இவரே கிணற்றின் மேலிருந்த கல்லைப் புரட்டினதுமல்லாமல் ராகேலுடைய ஆடுகளுக்கும் தண்ணீர் காட்டினார். இதற்குக் காரணங்கள் உண்டு. ஒன்று ராகேல் அக்கல்லைப் புரட்டக்கூடிய அளவு வலிமை வாய்ந்தவளல்லள்; மற்றொன்று அவர் அதற்குள்ளாக ராகேலை நேசித்தார்; அதுமட்டுமல்லாமல் அவரும்



3000 ஆண்டுகளுக்கு முற்பட்ட 'பனிமேடுகள்.' மரங்கள் அழிந்துவிட்டன.

ஆயராயிருந்ததால் ஆடுகளின் தேவையை அறிந்திருந்தார்.

லாபான் யாக்கோபை முத்தமிட்டு வரவேற்ருர். ஒரே நிலையிலுள்ள இருவர் வாழ்த்துச் சொல்லும் முறை இது. அவர் வலக்கையை யாக்கோபின் இடத்தோள் மேல் போட்டுக்கொண்டு வலக்கன்னத்தில் முத்தமிட்டார். பிறகு இவ்வண்ணமே இடது கையை வலது தோள்மேல் போட்டுக் கொண்டு இடது கன்னத்தில் முத்தமிட்டார். யாக்கோபும் பதிலுக்கு முத்தம் கொடுத் தார். ஆண்கள் மட்டுமே இப்படி ஒருவரை யொருவர் வாழ்த்துவார்கள். இதுவரை ராகேல் ஆடுகளைக் கவனித்து வந்தாள். ஒரு சின்னப்பெண்ணுக்கு இது கடினமான, ஆபத் தான வேலை. இனி யாக்கோபு லாபானுக்குத் தாம் பயனுள்ள உதவியாள் என்று மெய்ப் பிக்க இருக்கிருர்.



லாபான் யாக்கோபை இவ்விதம் வரவேற்று வாழ்த்துச் சொல்லியிருப்பார்.

### ஆயரின் வாழ்க்கை

தினமும் அவர் தம் ஆடுகளை மேடு பள்ளங் கள் நிறைந்த பாலைவனச் சமவெளிகளின் வழியாகவும், குன்றுகள் வழியாகவும் மேய்ச் சலுக்கான புல்லும் தண்ணீரும், குட்டை யான செடிகளின் நிழலும் தேடி ஓட்டிச்



இருவிதப் புல்லாங்குழல்களை வாசிக்கும் ஆயர்கள்.

செல்வார். சில சமயங்களில் இரண்டு நாணல் குழல்களை வெட்டிச் சேர்த்து, அவற் றில் துவாரமிட்டுக் குழல் செய்து மகிழ்ச்சி யான இசையையும் சோக இசையையும் அதில் வாசிப்பார். அந்தி நேரத்தில் அவர் ஆடுகளை ஓட்டிக்கொண்டுபோய் கற்களா லான பட்டியில் அவற்றை அடைத்து விடு வார். சாந்தாவது களிமண்ணாவது பூசாமல் கற்களை ஒன்றன்மேல் ஒன்ருக அடுக்கி, இப் பட்டி அமைக்கப்பட்டிருக்கும். இது அடியில் ஒரு மீட்டர் அகலம் உள்ளதாய் இருக்கும். உயரப் போகப் போக சுவரின் அகலம் குறைந்துகொண்டே போய் முப்பது சென்டி மீட்டராகக் குறைந்துவிடும். அடைக்கப்படும் ஆடுகளுக்குத் தக்கதாக இதன் அளவு இருக் கும். இதற்குக் கதவு கிடையாது. குறுக லான வாசல் மட்டும் உண்டு. ஆயரே அதில் காவல் காப்பவர். அவரே வாசல். தாம் போதித்ததைக் கேட்டுக் கொண்டிருந்தவர் கள் யாவரும் விளங்கிக்கொள்ளும்படி அவர் கள் நன்கறிந்திருந்த எடுத்துக்காட்டையே இயேசு உபயோகித்து 'நானே வாசல், என் வழியாய் ஒருவன் உட்சென்ருல் இரட்சிப்படைவான். அவன் உள்ளும் புறம் பும் சென்று மேய்ச்சலைக் கண்டடைவான்' என்று சொன்னுர் (யோ. 10:9). யாக்கோபு கவண் ஒன்றை அநேகமாக வைத்திருந்திருப் பார். அவர் ஒரு கருவாலி மரக்குறுந்தடி ஒன்றையும் கண்டிப்பாக வைத்திருப்பார். இது ஏறத்தாழ முக்கால் மீட்டர் நீளமான தாகவும் உருண்டையான நுனி உள்ளதாக வும் இருக்கும். இதன் நுனியில் ஆணி அல்லது கூர்மையான துண்டுக் கற்கள் இருக் கும். கையில் கோலை எடுத்துச்செல்ல வசதி யாய் இருக்குமாறு குறுந்தடியை இடுப்பில் உள்ள வாரில் மாட்டியிருப்பார். ஆனுல், படுத்திருக்கும்போது அதைத் தம் கையில் வைத்துக்கொள்வார். பாதுகாப்புக்காக அதன் முனையிலுள்ள கயிறு அவர் மணிக் கட்டில் சுற்றப்பட்டிருக்கும் (சங். 23). இவ் விதமாகத் தம் மந்தையைப் பத்திரமாய்ப் பார்த்துக்கொள்ளக் கூடிய இவர் 'நல்ல


ஆயரே'; 'தம் ஆடுகளுக்காய் உயிரையும் கொடுக்கத் துணியும் நல்ல ஆயர்' (யோ. 10:11,15,17 காண்க). ஆயரின் கருவிகளின் படங்களை நன்றாகப் பாருங்கள்.

யாக்கோபுக்கு உடைமைப் பொருளாக ஒன்றும் இல்லை. ஆகையால் அவர் மிக ஏழ்மையான நிலையில் இருந்த ஒரு ஆயரைப்போலவே உடை உடுத்தியிருந்தார். முழங்கால் வரை நீண்டிருந்த பருத்தித் துணியினாலான சட்டை மாட்டியிருந்தார்; அதற்குமேல் ஆட்டுத்தோலாலான சின்ன சட்டை போட்டிருந்தார் (எபி. 11:37 பாருங்கள்). அவர் தம் ஆடுகளைக் காடுகளிலும் பாலை நிலங்களிலும் உள்ள மேய்ச்சல் நிலங்களுக்கு ஓட்டிச் சென்றார். அங்கு பதுங்கியிருக்கும் கொள்ளைக்காரர்களினாலும் காட்டு மிருகங்களினாலும் அதிகமான ஆபத்து உண்டு. அவ்விதத் தாக்குதல் ஏதும் ஏற்படாதவாறு பார்த்துக்கொள்ள யாக்கோபு எப்போதும் விழிப்புள்ளவராயிருந்தார்.

ஆடுகள் வளர்ப்பு, இனப்பெருக்கம்பற்றி யாக்கோபுக்குப் பழம் பாணியான நல்ல அறிவு இருந்ததுபோல் தெரிகிறது. இந்த அறிவில் பெரும் பகுதியை யாக்கோபு யாருக்கும் வெளிப்படுத்தவில்லை; ஆடு மாடுகளில் பெரும் பகுதியையும் தமக்கென்று சேர்த்துக் கொண்டார். அவற்றைப் பலம் வாய்ந்த நல்ல உடற்கட்டுள்ள ஆடுகளாக விருத்தி செய்து கொண்டார். சில காலத்திற்குப் பின்தான் இப்படிச் செய்ய முடிந்தது. ராகேலுக்குப் பரிசம் போட முடியாத நிலையில் இருந்த போது அவரை மணந்து கொள்வதற்காக, ஏழு ஆண்டுகள் கூலி பெறாமல் லாபானுக்கு உழைக்க முன்வந்தார்.



**ஆயர்—இவர் உடையையும், இவர் வைத்திருக்கும் பொருட்களையும் கவனித்துப் பாருங்கள்.**



**ஆடுகளை அடைக்கும் பட்டி.**

## விளக்கப் பயிற்சி

1. ரெபெக்காளும் யாக்கோபும் உரையாடுவதை எழுதி நடியுங்கள்.
2. வாழ்க்கை முறையிலும் குணவியல்புகளிலும் ஏசாவுக்கும் யாக்கோபுக்கும் இருந்த வேறுபாடுகள் எவை?
3. நீங்கள் ஏசாவுடன் வேட்டைக்குச் சென்றதாகக் கற்பனை செய்துகொண்டு உங்கள் அனுபவங்களைப்பற்றிக் கூறுங்கள்.
4. ஆதியாகமம் 26:24ல் ஈசாக்குக்குக் கடவுள் அளித்த வாக்கை அழகான எழுத்துக்களில் எழுதுங்கள்.
5. ஓர் ஆயரையும் அவர் ஆடுகளை அடைக்கும் பட்டியையும் வண்ணப்படமாக வரைந்து அல்லது மாதிரி செய்து காண்பியுங்கள்.
6. 'யாக்கோபு ஏசாவின் பிறப்புரிமையைத் திருடிக்கொண்டார். இது ஏசாவுக்குத் தகும்' என்று ஒரு சிறுவன் எழுதினான். இதைக் குறித்து விவாதியுங்கள்.
7. யாக்கோபு கண்ட கனவைப் படம் வரைந்து வர்ணம் தீட்டுங்கள். அதன் கீழ் கடவுள் அவருக்களித்த வாக்கை எழுதுங்கள்.
8. பரிசம் என்றால் என்ன? கீழ்த்திசை நாடுகளில் நடைபெறும் விவாகங்களில் இது எவ்வளவு முக்கியம் வாய்ந்தது?
9. லாபானை யாக்கோபு எங்ஙனம் ஏமாற்றினார்?
10. ஆதியாகமம் 27:28,29 வசனங்களில் கூறப்பட்டுள்ள ஈசாக்கு அளித்த ஆசீர்வாதத்தை மனப்பாடம் செய்யுங்கள்.
11. தொடர் படங்கள் வரைந்து ஏசா பிறப்புரிமையை இழந்த நிகழ்ச்சியை அல்லது யாக்கோபு காரானுக்கு வந்து சேர்ந்ததை விளக்குங்கள்.
12. யாக்கோபு தம் தந்தைக்கு ஏதாவது சந்தர்ப்பத்தில் கடிதம் எழுதுவதாக வைத்துக்கொண்டு அதை எழுதுங்கள்.



ஆயரின் கோல்



தடி



கவண்

அத்தியாயம் 4

# யாக்கோபும் லாபானும்

*(ஆதி. 29:21–30; 31; 32; 33:1–17)*


யாக்கோபு ராகேலுக்காக இரவு பகலாக ஏழு ஆண்டுகள் உழைத்த உழைப்பு ஏமாற்றத்தில் முடிந்தது. அவருக்குத் திருமணச் சடங்குகள் வெறுப்பூட்டுபவையாயிருந்திருக்கும். முகத்திரையை எடுத்து மாப்பிள்ளை தம் தோளில் போட்டுக்கொள்ளும் அந்த முக்கிய கட்டம் வந்தது. அப்பெண்ணைத் தம் ஆயுள் முழுவதும் காப்பாற்றப் போவதான பெரிய உறுதிமொழி அச்சடங்கில் அடங்கியிருந்தது. யாக்கோபுக்குச் சரியான ஏமாற்றம்! அந்த மணப்பெண் தாம் உயிருக்குயிராய் நேசித்த ராகேல் அல்லள். ஆனல் அவர் தமக்கை லேயாள்! வழக்கப்படி முதற் பிறந்த பெண்ணுக்குத்தான் முதலில் திருமணம் நடத்தவேண்டும். இந்தப் பரம்பரை வழக்கத்திற்கு யாக்கோபு மறுப்புச் சொல்லக்கூடாதென்று லாபான் வற்புறுத்தினர். யாக்கோபு லேயாளை வெறுத்ததாகத் தெரிகிறது. அவர் பார்வைக்குக் கவர்ச்சியான தோற்றமுடையவரல்லர். 'பூனைக்கண்' பார்வையுடையவர். கிழக்கத்தியப் பெண்கள் கண்ணழகுக்குப் பெயர் போனவர்கள். லேயாளின் கண்களில் அந்த அழகு இல்லை. கண் பார்வைகூட அவருக்குக் கொஞ்சம் குறைவாக இருந்திருக்குமோ என்னவோ! ராகேலுக்காக யாக்கோபு இன்னும் ஏழு ஆண்டு உழைக்கவேண்டும் என்று நிபந்தனை போட்டுப் பேசினர் லாபான். இங்கு யாக்கோபுடைய பண்புச் சிறப்பை நம்மால் காணமுடிகிறது. ராகேலின்மேல் கொண்டிருந்த அன்பினல் நிபந்தனையை அவர் ஏற்றுக்கொண்டார். ஆனலும் யாக்கோபு கெட்டிக்காரர்! லாபானுக்காக மேய்ப்பராக உழைத்தபோது தொடர்ந்து லாபானைச் சரியாக ஏமாற்றிவிட்டார். இந்த ஏழு ஆண்டுகளுக்கான கூலியைக் கணக்குப் பார்த்தால் பரிசப் பணம் பொதுவாகக் கொடுக்கப்படும் தொகையைவிட எத்தனையோ மடங்கு அதிகமாகிவிடுவதை நாம் காணலாம்.

### பன்னிரண்டு இனப்பிரிவுகள்

யாக்கோபுக்கு நிறையக் குழந்தைகள். இவர் குடும்பத்தின் மூலமாகவே எபிரேய மக்கள் குடும்பமாக இருந்த நிலைமாறி எண்ணிக்கையில் பெருகி, கோத்திரம் அல்லது இனப்பிரிவு என்று பெயர் பெற்ருர்கள். ஓர் இனப்பிரிவு மட்டுமன்று, பல இனப்பிரிவுகளாகி விட்டார்கள். யாக்கோபு, லேயாளின் மக்கள் ரூபன், லேவி, சிமியோன், யூதா, இசக்கார், செபுலோன் ஆகியவர்கள் அனைவரும் இனப்பிரிவுகளின் தலைவர்கள் ஆகிவிட்டனர். ராகேலின் பிள்ளைகளான யோசேப்பும் பென்யமீனும் அங்ஙனமே தலைவர்கள் ஆகிவிட்டனர். எப்பிராயீம், மனசே என்பவர்கள் யோசேப்பின் மக்கள். பிற்காலத்தில் இவர்கள் தலைவர்களாகி விட்டனர். அடிமைகளாயிருந்து யாக்கோபுடைய மனைவிகளானவர்கள் பிள்ளைகள் காத், ஆசேர், தாண், நப்தலி என்பவர்கள். இவர்களும் தனித் தனி இனப்பிரிவுகளை உண்டாக்கவே மொத்தம் பன்னிரண்டு இனப்பிரிவுகள் ஆயின. 61ம் பக்கத்திலுள்ள படத்தில் இவர்கள் இருந்த பகுதிகளைக் கண்டுபிடியுங்கள். இவர்கள் வாக்குப்பண்ணப்பட்ட கானுன் நாட்டை எங்ஙனம் பரம்பரை உடைமை ஆக்கிக்கொண்டார்கள் என்று பிறகு பார்க்கும்போது இந்த இனப்பிரிவுகளைப்பற்றி விரிவாகக் காணப்போகிறோம்.

### லாபானை யாக்கோபு ஏய்த்து விடுகிறார்

யாக்கோபு மிகச் சிறந்த ஆடுகளை எல்லாம் தம் உடைமையாக்கி, தம் இழப்பைச் சரிக்கட்டிக்கொண்டார். ஒருமுறை லாபான் பல நாட்கள் வெளியூர் சென்றிருந்தார். இச்சமயத்தைப் பயன்படுத்திக்கொண்டு யாக்கோபு மூட்டை முடிச்சுகளைக்கட்டி தம் உடைமைகளை எடுத்துக்கொண்டு தம் இரு





யாக்கோபின் பயணம்

மனேவிகளோடு தெற்கு நோக்கிப் புறப்பட்டு விட்டார். யோர்தானின் கீழ்க்கரை வழியாக அவர் இப்போது சென்ருர். அநேகமாகத் தமஸ்கு வழியாகவும், யோர்தானுக்கு அப்பாலிருந்த மலேகளின் கிழக்கு அடிவாரக் குன்றுகள் வழியாகவும் சென்ற முக்கிய பாதையில் சென்றிருக்கலாம்.

இச்செய்தி கேள்விப்பட்டவுடன் லாபான் பின்தொடர்ந்து ஓடி கிலியாத் மலேயில் யாக்கோபைச் சந்தித்தார். தம்மிடம் சொல்லிக் கொள்ளாமல் தந்திரமாகப் புறப்பட்டு வந்ததற்காக யாக்கோபைக் கோபித்துக் கொண்டார்; அன்றியும் தம் வீட்டிலிருந்து பூஜைக்குரிய தெய்வ உருவங்களே எடுத்து வந்ததற்காகக் குறைப்பட்டுக்கொண்டார். இவை செழுமைக்கான தேவதை அஸ்தரோத்தின் சுட்டமண்ணுலான சிறு உருவங்கள். இத்தேவதை பயிர்களேப் பாதுகாத்து செழித்து வளர உதவுவதாக மக்கள் நம்பியிருந்தனர். லாபான் இவற்றின்மேல் போலிப் பற்றே கொண்டிருந்து, யோகம் கொண்டு வரும் பொருட்களாக இவற்றை வைத்திருந்திருக்கலாம். இதைத் தெய்வம் என்று நம்பி எமோரியரும் கானுனியரும் வழக்கமாகத் தங்கள் வீடுகளில் வைத்திருந்தனர். இதை உடைமையாகக் கொண்டவர்கள் சிறப்பான உரிமைகள் பெறுவார்கள் என்றும் நம்பினுர்கள். ராகேல் இம்மூட நம்பிக்கையை மரபுரிமையாகப் பெற்றிருந்தார். எனவே தான் அந்தப் பலவர்ண ஒட்டகச் சேணத்திற்கடியில் அவற்றை ஒளித்து வைத்திருந்தார். அச்சேணத்தின் மீதமர்ந்து கொண்டு அவர் பயணம் செய்து வந்தார். அச்சேணங்களேக் கூடாரங்களில் இருக்கைகளாகப் பயன்படுத்துவதுண்டு.

இப்போது யாக்கோபு லாபானிடம் சினந்து பேசத்தொடங்கினுர். இருபது ஆண்டுகளாக லாபான் தம்மை ஏமாற்றி வந்ததைச் சுட்டிக் காண்பித்தார். இறுதியில், நடந்தவைகளே மறந்துவிடவேண்டும் என்று இருவரும் முடிவு செய்தனர். மிஸ்பாவில் ஒரு நட்புறவு ஒப்பந்தம் செய்துகொண்டனர். அதற்கடையாளமாக ஒரு கற்குவியல் நினேவுச் சின்னத்தை அங்கே அமைத்தார்கள். காற்றும் மழையும் அடித்து நாளாவட்டத்தில் இக்குவியல் மறைந்துபோயிருக்கவேண்டும். ஏனெனில், இன்று யோர்தானின் மேட்டு வெளியில் இது இருந்ததற்கான அடையாளத்தைக்கூடக் காணேும்.

லாபான் காரானுக்குத் திரும்பினுர். யாக்கோபு தம் தந்தையின் சொந்த ஊரான பெயேர்ஷெபாவுக்குப் பயணமானுர். ஆனுல் தாம் நடந்து சென்றுகொண்டிருந்த பூமி தம் அண்ணன் ஏசாவுக்குச் சொந்தம் என்ற உணர்வு வந்தது. உப்புக் கடலுக்குத்தெற்கே



அஸ்தரோத்தின் உருவங்கள்

உள்ள இப்பகுதிக்கு ஏதோம் நாடு என்று பெயர். ஏதோம் என்ற சொல்லுக்குச் 'சிவப்பு' என்பது பொருள். ஏசாவின் சிவந்த தலைமயிரைக் குறிப்பதாகவோ அல்லது அந்த சிவப்பான கூழைக் குறிப்பதாகவோ இது இருக்கலாம். ஒருவேளை அங்குள்ள செங்குத்தான சிவப்புப் பாறைகளைக் குறிப்பதாகவும் இருந்திருக்கலாம். ஏசாவின் வழித்தோன்றல்கள் இருக்கும் பகுதிக்குச் சேயீர் என்று பெயர். சேயீர் என்ற சொல்லுக்கு 'தலைமயிர்' என்றே பொருள். இதுவும் ஏசாவைக் குறிப்பதாக இருக்கலாம். ஏசா முன்பு தம்மை பயமுறுத்தியதை யாக்கோபு நினைவு கூர்ந்தார். அவர் மூலமாகத் தமக்கு ஆபத்து வரலாம் என அவர் அறிந்திருந்தார். ஏராளமான தம்முடைய ஒட்டகங்களையும் உடைமைகளையும் ஏசா தாக்கலாம் என ஊகித்தார். எனவே, அவற்றை இரண்டு பகுதிகளாக்கினர். ஒன்றை யோர்தானின் கிளை நதியான யாபோக்குக்கு அப்பால் அனுப்பி விட்டார் (இது வறட்சியான காலத்தில் சாதாரண ஓடையாயிருக்கும். ஆனல் மழை காலத்தில் இது உடைப்பெடுத்து ஓடும்). இந்த ஏற்பாட்டால், ஒரு பகுதி தாக்கப்பட்டால் மற்றதாவது பிழைக்கும் என்று யாக்கோபு எண்ணினர்.

### கடவுளின் நடத்துதலை ஏற்றுக்கொள்கிறர்

ஏசாவைத் திருப்தி செய்ய யாக்கோபு திட்டங்கள் தீட்டினலும் யாவேயின் உதவியையும் அதிகமாக நாடினர். அவர் செய்த வேண்டுதலைப் பாருங்கள். பழைய ஏற்பாட்டில் நாம் காணும் முதல் ஜெபம் இது (ஆதி. 32:9–12). எவ்வளவு தாழ்மையோடு நன்றி செலுத்தி, கடவுளின் பாதுகாப்பைத் தேடுகிறர் பாருங்கள். பழங்காலத்தில் நடந்துவிட்ட தவறுதலை எண்ணி அவர் மனம் வருந்தியதாகவே தெரியவில்லை. அப்படி ஒன்றும் இங்கு சொல்லப்படவில்லை. தன்னிறைவு படைத்த யாக்கோபாகவே அவர் இருக்கிறர். பெனீயேலில் அவர் பெற்ற அந்த அனுபவம் நமக்கு இன்னும் புதிராகவே உள்ளது. அது யாக்கோபை மையமாகக்கொண்டு அமைக்கப்பட்ட எபிரேய நாடோடிக் கதையாக இருக்கலாம். இரவில் ஆற்றைக் கடக்கத் துணிகிறவர்களோடு ஆற்றின் ஆவி பொழுது விடியும் வரை போராடுவதாகப் பழங்காலக் கதை ஒன்று இருந்திருக்கலாம். நம்முடைய நிகழ்ச்சியில் வரும் ஆற்றின் பெயர் யாபோக்கு. ஓர் ஆவியைத் தன் பெயரைச் சொல்லும்படி கட்டாயப்படுத்துவது மந்திர வித்தைகளில் முக்கியமானது. அதுபோல அதன் பெயர் தெரிந்தவுடன் யாக்கோபுக்கு அந்த ஆவியின்மேல் அதிகாரம் கிடைத்துவிட்டது. ஆனல், யாக்கோபு நொண்டியாகி விட்டார். தமக்கு வேண்டியதைக் கடவுளைக் கட்டாயப்படுத்தியாவது ஏமாற்றியாவது பெற்றுக்கொள்ள முடியாது என்பதை இது நினைவில் வைத்துக்கொள்ளச் செய்தது. இதுவரை அவருடைய முழு வாழ்க்கையும் ஏய்ப்பு வேலையினல் கெட்டுவிட்டது. கடைசியாக அவர் உண்மையாய் இருக்கவேண்டும் என்று கற்றுக்கொண்டார். இந்த அனுபவம் அவர் வாழ்க்கையில் ஒரு முக்கிய 'திருப்பமாக' அமைந்துவிட்டது. பெனீயேலில் கடவுளிடமிருந்து ஓர் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்வதற்காக அவரோடு போராடினர். பெனீயேல் என்றல் 'கடவுளின் முகம்' என்பது பொருள். இனிமேல் அவர் யாக்கோபு என்ற மோசம் போக்குகிறவர் அல்லர்; அவர் இஸ்ரவேல், அதாவது கடவுளோடு பாதுகாத்துப் பேணுபவர்.

ஏசாவுக்குப் பரிசுப் பொருட்களைக் காட்டி யாக்கோபு அவரைச் சரிப்படுத்த முயன்றதைப்பற்றித் திருமறை சொல்லுகிறது. தம் ஆட்டு மந்தைகளையும் ஒட்டகங்களையும் அவர் ஏசாவுக்குக் கொடுக்க முனைந்தார். ஏசா பெருந்தன்மையோடு யாக்கோபை மன்னித்து விட்டார். ஒருவேளை பல ஆண்டுகளுக்குமுன் பார்த்த அந்த யாக்கோபைவிட இந்த யாக்கோபு ஒரு சிறந்த மனிதராக ஏசாவுக்குத் தென்பட்டிருக்கலாம். சிறிது காலத்துக்குப்பின் ஈசாக்கின் ஈமச்சடங்குகள் நடைபெற்ற நாளில் இந்த ஒற்றுமை இன்னும் பலங்கொண்டது.

### இந்நிகழ்ச்சிகளின் கருத்து என்ன?

ஆதி காலத்தில், பொதுவாகத் திருமறையில் கூறப்பட்டுள்ள நாடுகளிலும், முக்கியமாகக் கானனிலும், மக்கள் கூட்டங் கூட்டமாகவும் இனம் இனமாகவும் அலைந்து திரிந்ததை அறிந்துகொள்ள திருமறையில் வரும் ஏசா, யாக்கோபுபற்றிய நிகழ்ச்சிகள் நமக்கு நன்கு பயன்படுகின்றன. ஏசா ஏதோம் இனத்தின்பிரதிநிதி. இந்த ஏதோம் இனம் யாக்கோபின் இனத்தோடு சண்டையிட்டுக் கொண்டிருந்தது. அது வடக்கு நோக்கிப் பயணமாகி, காரானுக்குள் நுழைந்தது; இங்கு இவை அரமேயக் குடும்பங்களாக ஒன்றுபட்டுத் தழைத்தன. பிறகு பிரிவினை ஏற்பட்டது. யாக்கோபின் இனங்கள் தெற்காகச் சென்று கானனுக்குள் நுழைந்தன. காரானில் தங்கிவிட்ட குடும்பத்தினரே சீரியு நாட்டு மக்களாயினர்.

இவர்கள் பிற்காலத்தில் இஸ்ரவேலுக்குப் பகைவர்கள் ஆகிவிட்டனர். இதற்குள்ளாக ஆதி செமிட்டிக் குடியைச் சேர்ந்த ஏதோமியர்கள் தெற்குப் பகுதிகளிலெல்லாம் வந்து நிறைந்துவிட்டனர். இதன் விளைவாக யாக்கோபின் இனப்பிரிவுகள் தெற்கு நோக்கிச் செல்வதற்கு பலத்த எதிர்ப்பு ஏற்பட்டது. போர்க்கோலம் பூண்டு, படைகள் வந்து இவர்களை எதிர்த்தனர். இவர்கள் பரிசுப் பொருட்களைக் கொடுத்து அவர்களை ஓரளவு சமாளித்து வந்தார்கள். யாக்கோபின் சந்ததியார் ஏதோமை விட்டுத் தள்ளி வந்து சில காலம் யோர்தானுக்குக் கிழக்கே தங்கினார்கள். பிறகு நதியைக் கடந்து பேதேலுக்கும் சீகேமுக்கும் வந்தார்கள்.

## விளக்கப் பயிற்சி

1. யாக்கோபின்பின் சந்ததியார் எவ்விதம் பன்னிரண்டு இனப்பிரிவுகளானார்கள் என்பதைப் படம் வரைந்து விளக்கவும்.

2. லேயாள், ராகேல், யாக்கோபு, லாபான் ஆகியோர் பங்கெடுக்கும் காட்சி ஒன்றை நடித்துக்காட்டுங்கள்.

3. யாக்கோபு ஏன் லாபானோடு அவ்வளவு காலம் தங்கியிருந்தார்?

4. மிஸ்பாவிலே யாக்கோபும் லாபானும் சந்தித்ததுபற்றி வானொலி வருணனை ஒன்று தயாரித்துப் பேசுங்கள்.

5. ராகேல் மூடப்பழக்கம் உள்ளவரென்று நமக்கு எப்படித் தெரிய வருகிறது? அவர் காலத்து மக்கள் அவரைப்போல் இருந்தார்களா? நீங்கள் இதை எப்படித் தெரிந்துகொண்டீர்கள்? தெய்வ உருவங்களின் மாதிரிகளைத் தயார் செய்யுங்கள்.

6. யாவேயைப்பற்றி ஆபிரகாம் அறிந்திருந்ததைவிட யாக்கோபு எவ்விதம் அதிகமாக அறிந்தார்?

7. பெனீயேலில் என்னென்ன நடந்தது? யாக்கோபு எப்படி ஒரு புதிய மனிதராக மாறினார்? யாக்கோபு என்ற பெயரின் பொருள் என்ன? இஸ்ரவேல் என்ற புதிய பெயருக்கு என்ன அர்த்தம்?

8. யாக்கோபு ஏசாவோடு எப்படி மீண்டும் சமாதானமானார்?

9. இவர்கள் சந்தித்த காட்சியை நடித்துக் காண்பியுங்கள். தம் தம்பி மாறியிருந்தது குறித்து ஏசா வியப்படைந்திருப்பார் என்பது நினைவிருக்கட்டும்.

10. 'யாவே என் தேவனாயிருப்பார், நான் அவரை சேவிப்பேன்' என்ற யாக்கோபின் வாக்குறுதியை அழகிய எழுத்துக்களில் எழுதிவையுங்கள்.

11. யாக்கோபின் வரலாற்றைத் தொடர் சித்திரமாகத் தீட்டுங்கள்.

12. யாக்கோபின் வரலாறு நமக்குப் புகட்டும் பாடங்கள் எவை? நமக்கும் யாக்கோபுக்கும் பொருத்தமான இயேசுவின் கூற்றுகளைக் கண்டுபிடித்துச் சொல்லுங்கள்.



பெடோயீப் பெண். சிறப்பு நிகழ்ச்சிகளின் போது லேயாளும் ராகேலும் இவ்வித உடைகள் அணிந்திருப்பார்கள்.

அத்தியாயம் 5

# யோசேப்பு

*(ஆதி. 37)*


யோசேப்பைப்பற்றிய நிகழ்ச்சிகளைப் புரிந்துகொள்ள வேண்டுமென்றால், முதல் அத்தியாயத்தில் சொல்லப்பட்டுள்ள நாடுகளில் சிறந்த ஒரு நாடான எகிப்தைப்பற்றி நாம் நன்கறிந்து கொள்ளவேண்டும். முன் அட்டையிலுள்ள நிலப்படத்தில் நீல நதியைக் கண்டுபிடியுங்கள். அதன் முகப்பு வரை நீங்கள் பார்த்துக்கொண்டே வந்தால் அது பலஸ்தீனாவின் தென் பகுதிக்கு எவ்வளவு அண்மையில் இருக்கிறது என்பதை உங்களால் கண்டுகொள்ள முடியும். எகிப்து நாடு வளம் பெற நீல நதியைத்தான் நம்பிக் கிடக்கிறது. மத்திய ஆப்பிரிக்காவில் அது உற்பத்தியாகும் இடத்தில் பெய்யும் இளவேனிற் காலத்துப் பெருமழையால் உண்டாகும் வெள்ளம் அது ஓடும் பள்ளத்தாக்கெங்கும் பரவி, நாட்டில் வேளாண்மை சிறக்க உதவுகிறது. முக்கியமாக உணவு தானிய விளைச்சல் இங்கு அதிகம். பெருகும் வெள்ளம் அடித்துக் கொண்டு வந்து, வடியும்பொழுது விட்டுச் செல்லும் வண்டல் மண் படிவங்களில் இந்த விளைச்சல் அதிகமாக இருக்கிறது. இன்று மழைகாலத்தில் அணைகளில் நீரைத் தேக்கி, கால்வாய்கள் வழியாகத் தேவையான அளவு நீரைப் பாய்ச்சி பயிர் விளைவிக்கிறார்கள். கிறிஸ்து பிறப்பதற்குப் பல நூற்றாண்டுகளுக்குமுன்பே தண்ணீரில்லாத பகுதிகளுக்கு இப்படிக் கால்வாய்கள் வழியாக நீரைக் கொண்டுவந்து, பயிர்களுக்குப் பாய்ச்ச கவனமாகத் திட்டமிடப்பட்ட பழம்பாணியான நீர்ப்பாசன முறைகள் எகிப்தில் இருந்தன. இன்றுகூட இவற்றில் சில முறைகள் பயன்படுத்தப்படுகின்றன.

எகிப்தைப்பற்றி நாம் நன்கறிவோம். பிரிட்டன் என்ற இங்கிலாந்து காடாக, யாரும் அறியாத நாடாகக் கிடந்த நாட்களில் எகிப்து உயர்ந்த பண்பாடு, சிறந்த நாகரிகம், பெரிய நகரங்கள், அரண்மனைகள், கோவில்களுள்ள ஒரு சிறந்த நாடாகத் திகழ்ந்து வந்தது. யோசேப்பு வாழ்ந்த காலத்திலேயே எகிப்திய கூர்ங்கோபுரங்கள் பழைமையானவையாகக் கருதப்பட்டனவென்றால் அவர்கள் பழங் காலத்திலேயே எவ்வளவு நாகரிகம் படைத்தவர்களாய் இருந்திருப்பார்கள் என்று பார்த்துக்கொள்ளுங்கள். எகிப்தின் புதை பொருள் கண்டுபிடிப்புகள்பற்றிய புதிய செய்திகளைக் கேள்விப்பட்ட வண்ணமிருக்கின்றோம். அவற்றில் ஒன்று கி.மு. 2700ல் இருந்த மூன்றாவது அரசர் குலத்தைச் சேர்ந்த ஒரு பார்வோனின் கல்லறையைக் கண்டுபிடித்ததாகும். யோசேப்பு வாழ்ந்த காலம் கி.மு. 1700–1600 ஆக இருக்கலாம் என்று நம்பப்படுகிறது. அகழ்ந்தெடுக்கப்பட்ட



பதனம் செய்யப்பட்ட ஒரு பார்வோனின் தங்க முகமூடி. தாடிப் பாகம் உடைபட்டுள்ளது. காதணி அணிய காது குத்தப்பட்டிருக்கிறது. நெற்றியில் தீங்குகளைத் தடுக்க நல்ல பாம்பின் உருவம் பொறிக்கப்பட்டுள்ளது. கழுத்தணியைக் கவனித்துப் பார்க்கவும்.

கோவில்களிலும் கல்லறைகளிலும் வாசனைப் பொருட்களில் பொதியப்பட்ட உடல்கள் (இவற்றிற்கு 'மம்மி'கள் என்று பெயர்), தட்டுமுட்டுப் பொருட்கள், ஆபரணங்கள், மலர்க் குவளைகள், ஜாடிகள், வீட்டுப்பொருட்கள், உணவுப் பொருட்கள் ஆகியவை கண்டு பிடித்திருக்கின்றனர். பாலைவனத்தின் மண்ணை அப்புறப்படுத்தி புதையுண்டு கிடந்த அரண்மனைகளின் இடிபாடுகளை வெளிப் படுத்தியிருக்கின்றனர். 'ஸ்பிங்ஸ்' எனப்படும் பிரமாண்டமான சிலைகளைப்பற்றி யாவரும் அறிவோம். அவை பதுங்கி நிற்கும் சிங்க உடலையும், மனிதத் தலையையும், விளக்கமற்ற விநோதமான முக அமைப்பையும் கொண்டவை.




எகிப்திய கூர்ங்கோபுரமும் ஸ்பிங்சும்

கல்லறைக் கோபுரங்கள் என்ற கூர்ங் கோபுரங்களும் காணக்கிடக்கின்றன. கேசேர் என்னும் இடத்தில் புதைக்கப்பட்டிருக்கும் ஒவ்வொரு பார்வோனுக்கும் ஒரு கூர்ங் கோபுரமாக மூன்று கூர்ங்கோபுரங்கள் இருக்கின்றன. பார்வோன் என்றால் 'பெரிய குலம்' என்பது பொருள். அந்நாட்களில் புகழ் பெற்ற அரசர் தெய்வமேயாவார். அதாவது அரசர் 'சூரியன்களின் ஒரு மகன்' என்று மக்கள் கொண்டிருந்த நம்பிக்கையினால் அப் பெயர் கொடுக்கப்பட்டிருந்தது. நாம் வரலாற்றில் மௌரிய வம்சம், சாளுக்கிய வம்சம் என்று குறிப்பிடுவதுபோல் எகிப்தில் இவர்களை எண்ணிக்கைப்படி குறிப்பிடுவார்கள். எடுத்துக்காட்டாக கீயாப்ஸ் அரசர் கீழ் நான்காவது குலம் என்று கணக்கிடுவார்கள்.

ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட இரண்டு 'சூரியப் படகுகள்' சிறிது காலத்துக்குமுன் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவை ஊசியிலைமரத்தால் செய்யப்பட்டவை. லீபனோன் நாட்டிலிருந்து இம்மரம் கொண்டு வரப்பட்டிருக்கலாம். படகுகளின் முகப்பு பாப்பைரஸால் வளைவாக்கப்பட்டிருக்கிறது. படகுகளின் நீளம் முப்பது மீட்டர் இருக்கும். பத்து மீட்டர் நீளமுள்ள துடுப்புகளை வலித்து இதை ஓட்டிக்கொண்டு போவார்கள். உலகைச் சுற்றிவரும் சூரிய தெய்வத்தின் முடிவற்ற பயணத்தில்அவருக்குத் துணை இருக்க இந்தப் படகுகள் கீயாப்ஸ் அரசரின் ஆன்மாவை இந்த உலகத்திலிருந்து நித்தியத்துக்கு எடுத்துச்செல்ல பயன்பட்டதாகக் கருதப்படுகிறது. பகல் நேரத்தில் மேற்காகச் செல்ல ஒரு படகு பயன்பட்டதென்றும், இரண்டாம் படகு இரவில் கிழக்காகச்சென்று திரும்பிவரப் பயன்பட்டதென்றும் அக்கால மக்கள் நினைத்தார்கள்.

## எகிப்து நாட்டு வரலாறு

எகிப்தியரின் யுத்தங்கள், வெற்றிகள் முதலியவைபற்றிய வரலாற்றுச் செய்திகள்



சூரியப் படகு


படகின் முன் பக்கம் வரையப்பட்டிருக்கும் கண்ணைக் கவனிக்கவும். படகு போகிற இடத்தை அறிந்து கொள்ள அது உதவியாயிருக்கும் என்று நம்பினர்

கோபுரங்களின் சுவர்களிலும் சதுரத் தூபி களிலும் தனித்தன்மை வாய்ந்த அவர்கள் எழுத்துருவிலும் பட உருவிலும் பதிவு செய்யப்பட்டுள்ளன. சில சமயங்களில் களிமண் துண்டுகளிலும் அவை எழுதி வைக் கப்பட்டன. இவற்றைச் சுட்டு, நூல் நிலையங் களில் நூல்களைப் பத்திரமாக அடுக்கி வைத் திருப்பதுபோல மாடங்களில் அடுக்கிவைத் திருந்தனர். ஆராய்ச்சியாளர்கள் இவற்றை ஆராய்ந்து எகிப்தியர் நடத்திய போர்கள்; அவர்கள் தொழில், வாழ்க்கை ஆகியவை பற்றிய செய்திகளை நமக்கு அளித்துள்ளனர். கர்ணக் என்னும் இடத்தில் உள்ள அம்மோன் கோவிலுக்கு வெளியே இரண்டாம் இராம் சேஸ் என்ற பார்வோனின் மிகப் பெரிய சிலை ஒன்று இருக்கிறது. இச்சிலையின் அடிப் பகுதியிலிருந்து இரண்டு மீட்டர் நீளமும் ஒரு மீட்டர் அகலமுமான சுண்ணாம்புக்கல் பாளம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதில் எகிப்தியர் ஆசியாவிலுள்ள பிரபுக்க ளோடும் குஷிய அல்லது நுபிய அரசர்க ளோடும் போரிட்டு, ஒரு புதிய அரசை ஏற்படுத்தியதைப்பற்றிய செய்திகள் எழுதப் பட்டுள்ளன.

நதிப் பள்ளத்தாக்கில் நுழைந்து நாட்டைப் பற்றிக்கொண்டார்கள். இவர்கள் ஹிக்சாஸ் என்ற ஆயர் குல அரசர்கள். இது ஒருவேளை அவர்கள் பெயரினுடைய தவறான மொழி பெயர்ப்பாக இருக்கலாம். ஆனால் வழி வழியாக எகிப்தியர்கள் எல்லா மேய்ப்பர்களை யும் வெறுத்து வந்ததற்கு இது தக்க காரண மாகிவிட்டது (ஆதி. 46:34 பாருங்கள்). இந்த ஹிக்சாஸ் இன அரசர் ஒருவர்தான் யோசேப்புக்கு ஆதரவு அளித்தார். யோசேப் பும் தம்மைப்போல் நாடோடி இனத்தைச் சேர்ந்தவர் என்பது அதற்கொரு காரணமா யிருக்கலாம். ஆவாரிஸ் (சோவான், தானிஸ் என இதற்கு வேறு பெயர்களுமுண்டு). என்ற இடத்தில் இந்தப் பார்வோன்கள் கட்டியிருந்த புது தலைநகரில் யோசேப்பு அவருடைய முக்கிய ஆளுநராக அல்லது உணவு அதிகாரியாகப் பதவி ஏற்றார்.

### யோசேப்புக்கு என்ன நேரிட்டது?

பல ஆண்டுகளுக்குப்பின் இஸ்ரவேல் அரசு இரண்டாகப் பிரிக்கப்பட்டது. பிரிவுபட்ட இரு அரசுகளின் வாய்மொழி மரபு விவரங் களிலிருந்து யோசேப்பு விற்கப்பட்டதைக் குறித்து இரண்டு வேறுபட்ட வரலாறுகள்




'ஹைரோகிளிபிக்ஸ்' எனப்படும் எகிப்தியப் பட எழுத்துக்கள்.

பல நூற்றாண்டுகளுக்குப்பின் உள் நாட்டுக் கலகம் ஏற்பட்டதாக அறிகிறோம். மக்கள் ஒருவரோடு ஒருவர் போரிட்டு மடிந்தார்கள். இவர்கள் பலக் குறைவைச் சிறந்த வாய்ப்பு எனக் கருதி ஆற்றல் மிகுந்த சில நாடோடி இன மக்கள் முதல்தரமான குதிரைகள் மேலும் இரதங்கள் மேலும் ஏறிவந்து நீல

இருப்பது தெரியவருகிறது என்று சில ஆராய்ச்சியாளர்கள் கருதுகிறார்கள். முதல் வரலாறு தென் அரசில் இருந்து வந்துள்ளது. மற்றது வட அரசில் இருந்து வந்துள்ளது (புத்தகம் 2, அத்தியாயங்கள் 5,11 பார்க்கவும்). இரண்டும் தெளிவான விவரங் கள் அடங்கியவை; இரண்டும் யூதருடைய

வரலாறுகள். ஆகவே, அவற்றைத் தொகுத்து எழுதியவர் இரண்டில் ஒன்றை விட்டு விடாமல் இரண்டையும் கலந்தே எழுதியுள்ளார். பலமுறை இவ்விதம் செய்துள்ளார். ஆனால் சில சமயங்களில் ஒன்றை மற்றதிலிருந்து பிரித்து எடுப்பது எளிதாயிருப்பதில்லை. இதோ, அந்த வரலாற்றின் பகுதிகள். ஒரே நிகழ்ச்சி ஆதி. 37ம் அதிகாரத்தில் இருவிதமாகக் கூறப்பட்டிருப்பதை நீங்களே படித்துத் தெரிந்துகொள்ளலாம்:

தென் அரசிலிருந்து வந்துள்ளது: *2ஆ, 4,12–17, 23–27, 28ஆ, 31–35; 39:1.*

வட அரசிலிருந்து வந்துள்ளது: *5–11, 18–22, 28அ, 29,30,36.*

*('அ' வசனத்தின் முதற்பாகம்; 'ஆ' வசனத்தின் இரண்டாம் பாகம்.)*

முதல் வரலாற்றில் வரும் பாத்திரங்களிலிருந்தும் மக்களிலிருந்தும் இரண்டாம் வரலாற்றில் வருபவர்கள் சற்று வேறுபடுவதை நீங்கள் காணலாம்:

முதல் வரலாற்றில்: இஸ்ரவேல், கோள் சொல்பவர், சீகேம், யூதா, இஸ்மவேலர்.

இரண்டாம் வரலாற்றில்: யாக்கோபு, சொப்பனக்காரர், தோத்தான், ரூபன், மிதியானியர்கள்.

இரு வரலாறுகளிலும் யோசேப்பின் உடன்பிறந்தவர்கள் அவர்மேல் கடும் பொறாமை கொள்வதைப் பார்க்கிறோம். ஏதோ ஓர் அழகான சட்டையைத் தந்தை கொடுத்துவிட்டதனால் மட்டும் இந்தப் பொறாமை எழவில்லை. திருமறையின் பழைய மொழிபெயர்ப்பில் ஆதி. 37:3 பார்த்தால் 'பல வருணமான அங்கி' என்ற தொடரைக் காண்பீர்கள். இதிலிருந்து பலர் இதைப் பல வண்ண அங்கி என்று நினைக்கிறார்கள். ஆனால் திருத்திய மொழிபெயர்ப்பில் 'நிலையங்கி' என்று சொல்லப்பட்டிருக்கிறது. இன்று திருமறை ஆராய்ச்சியாளர் எபிரேயச் சொற்களைச் சரியாக மொழிபெயர்த்தால் இது நீண்ட கைகள் வைத்துத் தைத்த அங்கி என்று தெரிய வருகிறது என்கிறார்கள். அநேகமாக இது வெள்ளை நிறமானதாக இருந்திருக்கலாம் (படம் பார்க்கவும்). யோசேப்பின் காலத்தில் இரண்டு பேர்தான் இதுபோன்ற ஆடை அணிவார்கள். ஒருவர் ஷேக்; இன்னொருவர் அவர் வாரிசு அல்லது ஷேக் பட்டத்திற்கு வருபவர். யோசேப்பின் மேல் அவர் உடன்பிறந்தவர்களுக்கு ஏன்



யோசேப்பின் அங்கி

கோபம் வந்தது என்பது இப்போது புரிகிறதா? அவர்கள் செய்துவந்த தொழிலை யோசேப்பு செய்யமாட்டார் என்று அவர்கள் தந்தையான யாக்கோபு தெளிவுபடுத்திவிட்டார். யோசேப்பு யாக்கோபின் கடைசி மகனான பென்யமீனுக்கு மட்டுமே மூத்தவராயிருந்தும் அவரே அவர்கள் இனப்பிரிவின் தலைவராயிருப்பார் என்று யாக்கோபு காட்டிவிட்டார். இவ்விதம் அவர் தனிச் சலுகைக்கு உரியவராயிருந்ததைக் கண்டு சகோதரர்கள் மனமுடைந்தனர்; ஆத்திரமடைந்தனர். தமக்கு இனியவரான ராகேலின் மூத்த மகன் என்பதால் யோசேப்பை யாக்கோபு அதிகம் நேசித்திருக்கலாம். யோசேப்பு தம் கனவுகளைக் குறித்துப் பெருமையாகப் பேசியதைக் கேட்டு அண்ணன்மார்களின் கோபம் அதிகமாயிற்று. பண்டைக்கால மக்கள் கனவுகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தார்கள். யோசேப்பின் கனவுகள் சிறப்பான பொருள் உள்ளவை என்ற அச்சம் அவர்களைப் பிடித்தாட்டியது.

அண்ணன்மாரைத் தேடிக்கொண்டு யோசேப்பு புறப்பட்டார். சீகேம் ஏபால் மலைக்கும் கெரிசீம் மலைக்கும் ஊடாக அமைந்த ஒரு செழிப்பான பள்ளத்தாக்கில் இருந்தது. கோடைகால வெப்பத்தால் புல் காய்ந்துவிடவே யோசேப்பின் அண்ணன்மார் மேய்ச்சல் நிலம் தேடிக்கொண்டு எஸ்டிரேலோன் சமவெளியின் தென்கோடியில் உள்ள தோத்தானுக்கு வந்துவிட்டார்கள். அந்த ஊர் மதிலிடப்பட்டு, ஒரு மலையின்மேல் இருந்தது.


இரு சமவெளிகளுக்கும் இடையே நடைபெற்ற வணிகப் போக்குவரத்துக்கு இது முக்கிய இடமாயிருந்தது. யோசேப்பைப் போட்ட குழி மழை நீரைச் சேமித்து வைப்பதற்கான ஒரு நீர்த்தொட்டியே ஆகும். அச்சமயத்தில் அதில் நீர் இல்லை. அது குப்பி போன்ற வடிவம் கொண்டது. அதன் 'கழுத்து'ப் பகுதி ஒரு மீட்டர் விட்டமும் அதே அளவு ஆழமுள்ளதுமாக இருக்கும். உள்ளே செல்லச் செல்ல தொட்டியின் கீழ்ப்பகுதி ஆழமாக ஆறு மீட்டர் விட்டம் உள்ளதாக இருக்கும். வெளியே இருந்து கயிறுவிட்டுத் தூக்கி விட்டால் அன்றி அதிலிருந்து வெளியே வருவது என்பது இயலாத காரியம்.

இஸ்மவேலர் (மிதியானியர்) அராபிய வணிகர்கள். இவர்கள் அநேகமாக வாசனைப் பொருட்களையும், வெள்ளைப்போளம், சாம்பிராணி போன்ற பொருட்களையும் சீரியா, கிலியாத் பகுதிகளிலிருந்து எகிப்துக்கு எடுத்துச் செல்வார்கள். கலிலேயாக் கடலுக்கருகில் யோர்தானைக் கடந்து கடற்கரை சமவெளிக்குப் போக தோத்தான் வழியாகச் சென்றிருப்பார்கள். இருபது வெள்ளிக்காசு இருபது ஷெக்கல் நிறையுள்ளதாகும். ஒரு ஷெக்கல் 11·04 கிராம் எடையுள்ளது.

வியாபாரிகள் உடனே யோசேப்பை வாங்கிக்கொண்டார்கள். இவ்வளவு அழகும் வாட்டசாட்டமுமான இளைஞரைக் கொண்டு போய் விற்றால் நல்ல இலாபம் கிடைக்கும் என்று அவர்களுக்குத் தெரியும்.

## விளக்கப் பயிற்சி

1. யோசேப்பை விற்றதுபற்றிய இரண்டு வரலாறுகளையும் சுருக்கிக் கூறவும்.
2. நீல நதி பாயும் பகுதியைப் படம் வரைந்து, திருமறையில் யோசேப்பின் வரலாறு தொடர்பாகச் சொல்லப்பட்டுள்ள இடங்களை அப்படத்தில் குறியுங்கள்.
3. அரசகுலம் என்றால் என்ன? பார்வோன் யார்? ஸ்பிங்ஸ், கூர்ங்கோபுரங்கள் இவற்றை விவரியுங்கள்.
4. எகிப்திய தட்டுமுட்டுப் பொருட்கள், மலர்க் குவளைகள், சூரியப் படகுகள் போன்றவற்றின் மாதிரிகளைத் தயாரியுங்கள். கலைக்களஞ்சியங்களிலிருந்தும் நூல் நிலையங்களில் உள்ள புத்தகங்களிலிருந்தும் விவரங்களைச் சேகரித்துக் கொள்ளுங்கள்.
5. அங்கி உடுத்தியிருக்கும் யோசேப்பைப் படம் வரைந்து காண்பியுங்கள்.
6. யோசேப்பின் கனவுகள் அவர் ஒரு விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவர் என்பதை எங்ஙனம் காட்டுகின்றன?
7. யோசேப்பைப் போட்டு வைத்த அந்தக் குழியைப் படம் வரைந்து காண்பியுங்கள்.
8. யோசேப்பின் அண்ணன்மார் வணிகர்களோடு பேசும் காட்சியை நடியுங்கள்.
9. 'யோசேப்பு தலைக்கர்வம் உள்ளவராய் இருந்தார்.' இதை விவாதித்து, முடிந்தால் யோசேப்பை ஆதரித்துப் பேசுங்கள்.
10. ரூபனின் குணநலன்களை விவரியுங்கள்.
11. அண்ணன்மார் திரும்பி வந்து நடந்ததைத் தந்தையிடம் விவரித்துச் சொல்வதுபோல் சொல்லுங்கள்.
12. 'இதோ, கனவு காண்பவன் வருகிறான்.' இந்தத் தலைப்பை விளக்கும் ஒரு சின்ன கவிதை எழுதுங்கள். அது யோசேப்பைப் பற்றியதாக அல்லாமல் பொதுவானதாகவும் இருக்கலாம்.



பள்ளமான நீர்த்தொட்டி

அத்தியாயம் 6

# எகிப்தில் யோசேப்பு

(ஆதி. 39–44)


போத்திப்பாரின் வீட்டிற்கு அடிமையாக யோசேப்பு வாங்கப்பட்டார். போத்திப்பார் பார்வோனின் அரண்மனைக் காவலர்களின் தலைவர். போத்திப்பார் என்ற இந்தப் பதத்திற்கு 'படுகொலை செய்பவர்களின் தலைவர்' என்று ஓர் அருவருப்பான பொருளும் உண்டு. ஆனால் இவர் ஓர் அரசாங்க அலுவலர்.

இங்குள்ள எகிப்தைப்பற்றிய படங்களைக் கவனமாய்ப் பார்த்தால் புதிதும் கவர்ச்சியூட்டுவதுமான இந்த நாட்டில் காலெடுத்து வைத்தவுடன் யோசேப்பு என்னென்ன பார்த்து வியந்திருப்பார் என்று ஓரளவு அறிந்து கொள்வீர்கள். அரண்மனைகள், கோயில்கள், பிரமிட் எனப்படும் கல்லறைக் கோபுரங்கள், விதவிதமான வீடுகள், பலவிதமான உடையணிந்தவர்கள், ஏழைகள், பணக்காரர், தோட்டங்கள், தட்டுமுட்டுப் பொருட்கள், ஊர்வலங்கள், நீல நதியில் செல்லும் படகுகள் இவற்றை எல்லாம் பார்த்திருப்பார். இவர் துடுக்கான சுபாவம் உள்ளவர் (இது அவர் அண்ணன்மாருக்குப் பிடிக்கவில்லை. ஆனால் இது அறிவுத்திறத்தின் அறிகுறியாகும்). எனவே, அவர் அங்கு கண்டவற்றில் ஆர்வம் காட்டினார். தம்மைச் சுற்றி நிகழ்ந்தவற்றை நன்கு கவனித்துக்கொண்டிருந்தார். தெபிஸ் பட்டணத்தில் அரசர்களின் பள்ளத்தாக்கு என்ற இடத்திற்கருகில் ஹாட்ஷெப்சட் என்ற அரசியின் கோவிலை அடிமைகள் கட்டுவதை அவர் பார்த்திருக்கலாம். ஏனெனில் இந்தக் கோவில் யோசேப்பின் காலத்திலேயே கட்டப்பட்டது என்று சில ஆராய்ச்சியாளர்கள் நம்புகின்றனர்.

யோசேப்பு வெகு விரைவில் அந்நாட்டு மொழியையும் விசித்திரமான பழக்க வழக்கங்களையும் கற்றுக்கொண்டார். போத்திப்பாருக்கும் அவர் மனைவிக்கும் யோசேப்பை அதிகம் பிடித்துவிட்டது. இவர் எல்லாவற்றையும் கற்று அறிந்துகொள்ள இருவரும் ஊக்கம் தந்தனர். யோசேப்பு எண்ணிலும் எழுத்திலும் திறனை விரைவில் கைவரப் பெற்றார். பார்வோனுக்கடியில் ஆளுநராக உயர்த்தப்பட்டபோது இவர் பெற்றிருந்த மொழியாற்றலும் கணித அறிவும் இவருக்கு மிகவும் உதவியாக இருந்தன. நீல நதியில் வளர்ந்து கிடந்த பாப்பைரஸ் நாணல் புல்லிலிருந்து காகிதம் செய்யும் முறையையும் கற்றார். இதன் தண்டு பதினைந்து சென்டி மீட்டர் கனமுடையதாகவும், மூன்று அல்லது நான்கு மீட்டர் உயரமானதாகவும் வளர்ந்து நிற்கும். இந்தத் தண்டைப் பாளம்பாளமாகச் சீவி அவற்றை வேண்டிய அளவுக்கு ஏற்றவாறு நெடுக்காக அடுக்கி வைப்பார்கள். பின் சிறிது பசை தடவி அதன்மேல் சீவின வேறு சில தண்டுகளைக் குறுக்காக அடுக்குவார்கள். அடுக்கி முடித்ததும் இவற்றின்மேல் கனமான கல்லை வைத்து அல்லது சுத்தியலால் அடித்து அழுந்தச் செய்து, காய வைப்பார்கள். பிறகு அதன் மேல்பாகத்தைத் தேய்த்து வழவழப்பாக்குவார்கள். தொடர்பான சுருளாக இருக்கத்தக்கதாக இந்த ஏடுகளை இணைப்பார்கள்.



எகிப்திலுள்ள தெபிஸ் என்னும் பட்டணத்தில் சுவர்களில் செதுக்கப்பட்டிருந்தவை.





1. பாப்பைரஸ் நாணல் புல்
2. பாப்பைரசை வெட்டுகிறார்கள்
3. தண்டைச் சீவி அடுக்கும் விதம்
4. சுருள்
5. மை, எழுதுகோல்களை வைக்கும் தட்டு

இங்கிலாந்தில் உள்ள தொல் பொருட் காட்சி அரங்கில் ஐம்பத்தாறு மீட்டர் நீளமுள்ள ஒரு சுருள் இருக்கிறது. எழுதியவை நெடுங்காலம் இருக்க வேண்டுமென்றால் அவற்றைச் சுவர்களிலும் தூண்களிலும் செதுக்கி வைப்பார்கள். பறவைகள், விலங்குகள், ஆண்கள், பெண்கள், படகுகள் என்று பல உருவங்களைச் செதுக்கி, வண்ணந் தீட்டி வைத்திருப்பது அவ்வரலாற்றுப் பதிவுகளைச் சிறப்பும் கவர்ச்சியும் பொருந்தியவை ஆக்கின.

மேலே உள்ள படங்களைக் கூர்ந்து கவனியுங்கள். எழுதுகோலையும் பாப்பைரஸ் தண்டிலிருந்து வெட்டி எடுத்தார்கள். கட்டைக்கரியையும் பிசினையும் சேர்த்து மை தயாரித்து ஓவியர் பயன்படுத்தும் வண்ணத் தட்டு போல் ஒன்றின் குழியில் ஊற்றி வைத்துக் கொள்வார்கள். பல வண்ண மைகளைத் தனித்தனியே அத்தட்டில் ஊற்றி வைக்க ஆழமற்ற குழிகள் சில உண்டு; எழுதுகோல்களை வைக்கவும் நீளமான பள்ளம் உண்டு. யோசேப்பும் தம் தொழில்பற்றிய விவரங்களை அங்கும் இங்கும் தூக்கிச் செல்வதற்கு எளிதாக இருக்க பாப்பைரஸ் சுருளில்தான் எழுதிவைத்திருக்கலாம். இவை களிமண் ஓடுகள்போல் கனமாக இல்லாமல் பயன்படுத்துவதற்கு எளிதாய் இருந்தன.

தலையையும் முகத்தையும் மழித்தல் அந்நாட்டு ஆண் மக்களின் பழக்கம். இதில் வேடிக்கை என்னவென்றால் முக்கிய சமயங்களில் இவர்கள் தலைமுடியும், மீசை, தாடியும் ஒட்டவைத்துக் கொள்வார்கள். 25ம் பக்கத்திலுள்ள பார்வோனின் தலையின் படத்தைப் பார்த்தால் ஒட்டவைத்த தாடி எடுக்கப்பட்ட இடத்தை உங்களால் கண்டு கொள்ளமுடியும். ஒட்டவைத்தமுடியை முன் பக்கம் நெற்றியின் கீழ்ப்பாகம் வரை நேராக வெட்டி விட்டிருப்பார்கள். அது பின்பக்கம் அடர்த்தியாகச் சுருண்டு கிடக்கும். முக்கிய அரசாங்க அலுவலர்கள் முட்டளவே வரும் சுருக்குவைத்த வெள்ளை ஆடை அணிந்து, அதற்குமேல் பசையிடப்பட்டு விறைப்பாக நிற்கும் ஒரு மேலாடை அணிந்திருப்பார்கள். இடுப்பில் பொன் இழையாலான

அரைக் கச்சை கட்டியிருப்பார்கள். அதிலுள்ள குஞ்சம் முட்டு வரை தொங்கிக் கொண்டிருக்கும்.



வண்டு வடிவத் தாயத்து

ஆற்றல் தம்முடைய கடவுளாகிய யாவேக்கே உரியது என்று யோசேப்பு கூறியிருந்தும், பார்வோன் இரா என்ற சூரிய தெய்வத்தின் பூசாரியின் மகளை யோசேப்புக்குத் திருமணம் செய்ய ஒழுங்கு செய்துவிட்டார். இரா என்ற இந்த சூரிய தெய்வத்தின் கோவில் ஓன் அல்லது கெலியோபோலி என்ற இடத்தில் இருந்தது. இன்று கெய்ரோ பட்டணம் இருக்கும் இடத்திலிருந்து வடகிழக்காகச் சில கிலோமீட்டர் தொலைவில் இது இருந்தது. லண்டனில் தேம்ஸ் நதியின் கரையில் உள்ள கிளியோபத்ராவின் ஊசி எனப்பட்ட தூபி இந்தக் கோவிலின் முன் பக்கத்திலிருந்து எடுக்கப்பட்ட சதுரத் தூபிகளில் ஒன்றாகும்.

யோசேப்பு களஞ்சியங்களைக் கட்டி நாட்டில் விளைந்த தானியங்களை எல்லாம் சேர்த்து வைத்தார். 'யோசேப்பின் பாதாள அறைகள்' எனப்படும் பாழடைந்த இடங்களைக் கோசேன் என்ற இடத்தில் இன்று கூடக் காணலாம். பஞ்சம் வந்தபோது யாருக்கும் குறைவுபடாமல் சீராகத் தானியத்தை

### எதிர்பாராத பதவி உயர்வு

பார்வோனின் அறிஞர்கள் இரா என்ற தெய்வத்தின் பூசாரிகளாய் இருந்திருக்கலாம். இவர்கள் வேலைகளில் ஒன்று கனவுகளுக்குப் பொருள் கூறுவதாகும். பார்வோனின் கனவுக்கு யோசேப்பு கொடுத்த விளக்கம் வியக்கத்தக்க வகையில் அமைந்திருந்ததால், இவரே வரப்போகும் பஞ்ச காலத்திற்கென்று உணவு தானியங்களைச் சேர்த்து வைக்கும் திறமை படைத்தவர் என்று அரசர் தீர்மானித்தார்.

பார்வோன் தம்முடைய முத்திரை மோதிரத்தை யோசேப்புக்குக் கொடுத்திருந்தார். ஆணைகள், உத்தரவுகள் மேல் முத்திரையிட இந்த மோதிரத்தை யோசேப்பு பயன்படுத்துவார். இது தவிர ஒரு நேர்த்தியான அங்கியையும் யோசேப்புக்கு அரசர் கொடுத்திருந்தார். இது நீண்ட கைகளை உடையதும் மடிப்புகளாய்த் தொங்கினதுமான ஒரு மேலாடை. பல வர்ணங்களில் பூ வேலைகள் செய்யப்பட்டிருந்த ஒரு பட்டாடையாக இது இருந்திருக்கலாம். அவர் உத்தியோகத்திற்கேற்ற பொற் சங்கிலி ஒன்றும் அவருக்கு அளிக்கப்பட்டிருந்தது. அதில் வண்டு வடிவமான இரத்தினக்கல் தாயத்து ஒன்று தொங்கிற்று. பார்வோனின் கனவுகளுக்குப் பொருள் கண்டுபிடித்துச் சொல்வதற்கான



பருந்து தலையுடைய இரா என்னும் சூரிய தெய்வம்.

விற்ருர் யோசேப்பு. 'எகிப்தில் தானியம் இருக்கிறது' என்ற செய்தி எல்லா இடங்களி லும் பரவிற்று. அதைக் கேள்வியுற்றுத்தான் யாக்கோபு, யோசேப்பின் அண்ணன்மார் களைத் தானியம் வாங்கி வரச்சொல்லி எகிப்துக்கு அனுப்பிவைத்தார்.

### தம் சகோதரருக்கே அன்னியரானுர்

யோசேப்பு சிறப்பாக நடித்தார்! தம் சொந்த அண்ணன்மார் எகிப்தின் வடகிழக்கி லிருந்து படையெடுத்து வருவதற்கு ஏற்ற இடங்கள் எவையென்று கண்டுபிடிக்க



தலைப்பாகை அணிந்த எகிப்தியர்

வந்துள்ளார்கள் எனத் தாம் கருதுவதுபோல் போலியாக நடித்தார். அப்பகுதியில் இயற் கையான காப்பரண்கள் அநேகம் இல்லை. அங்கிருந்து வரக்கூடிய ஆபத்தை எகிப்தி யர்கள் அறிந்திருந்தார்கள். அங்கு அவர்கள் கட்டியிருந்த அகழி சூழ்ந்த கோட்டையின் பெரும் பகுதிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. மொழிபெயர்ப்பாளர் ஒருவர் துணை கொண்டு யோசேப்பு தம் அண்ணன்மாரோடு உரையாடினர். தாங்கள் பேசின எபிரேய மொழி அவருக்குப் புரியும் என்பது அவர்க ளுக்குத் தெரியாது. கழுதைகளில் தானியம் ஏற்றிக்கொண்டு ஊருக்குப் புறப்பட்டார் கள். ஒரு விடுதியிலாவது வணிகர் கூட்டம் தங்கும் சத்திரத்திலாவது தங்கல் மனையி லாவது அவர்கள் தங்கி இராப் பொழுதைக் கழித்திருக்கலாம்.


தானியம் வாங்க இரண்டாம் முறை வந்த போது எகிப்தில் கிடைக்காத தைலம், தேன், தெரபிந்து கொட்டை, வாதுமைக் கொட்டை போன்ற அருமையான பொருட் களை அன்பளிப்பாக அவர்கள் எடுத்துச்சென் றனர். எகிப்திலுள்ள ஓவியங்களில் இந்தப் பொருட்களை அவர்கள் பார்வோனுக்குக் கொடுத்தது வரையப்பட்டிருக்கிறது. யோசேப்பும் அவர் சகோதரரும் ஒரே மேசை யில் உட்கார்ந்து சாப்பிடவில்லை என்பதைக் கவனியுங்கள். எகிப்தியர்கள் எபிரேயர்க ளோடு சாப்பிடமாட்டார்கள் (ஆதி. 43:32). மேலும் பொதுவாக நண்பகல் நேரத்தில் விருந்தும் வைக்கமாட்டார்கள். சாதாரண மாக அந்தி நேரத்திலேயே விருந்து பரிமாறப் படும். ஆனுல் யோசேப்பு உயர்ந்த அதிகாரி யாக இருந்ததால் அவரால் அவ்விதம் செய்ய முடிந்தது. இதைக் கண்டதும் அவர் சகோத ரர்கள் அசந்துபோனுர்கள். தங்களைப் பற்றி எவ்வளவு செய்திகளை அறிந்து வைத்திருந் தார் என்று கண்டபோது அவரிடம் வியக்கத் தக்க பேராற்றல் இருந்ததை உணர்ந் தார்கள்.

பென்யமீனுக்குச் சிறந்த சலுகைகள் காட் டப்பட்டன. கிழக்கத்திய உபசரிப்பு முறைப் படி அவர் சாப்பிடுவதற்கு அதிகமான உணவு, முக்கியமாக அப்பங்கள் அவருடைய உணவுத் தட்டில் வைக்கப்பட்டன. அப்பம் என்பது ரொட்டி போன்றதன்று. புளிப்பில்லாத கோதுமை மாவால் தயாரிக்கப்பட்டதும் இருபது சென்டிமீட்டர் அகலமானதுமான சப்பாத்திபோன்றது. பென்யமீன் ஓர் இள வட்டம். நன்ருகச் சாப்பிடக்கூடியவர்தாம். ஆனுலும் அவர் அண்ணன்மாரைப்போல் ஐந்து மடங்கு சாப்பிடமுடியுமா? அவருடைய கோணிப் பைக்குள் போடப்பட்ட அந்தக் கிண்ணம் யோசேப்பு நிகழ்ச்சிகளை முன்னறிய

பயன்படுத்திய அவருடைய சொந்தக் கிண்ணம். தண்ணீரை உபயோகித்து மந்திர ஆற்றலால் பின் நேரப்போகும் நிகழ்ச்சிகளை முன்னதாக அறிய இது உபயோகிக்கப் பட்டது. இதில் தண்ணீர் ஊற்றி அதில் தங்கத்தையோ பணத்தையோ ஆபரணத் தையோ போடுவார்கள். அப்படிப் போடும் போது தண்ணீரில் உண்டாகும் உருவத்தி லிருந்து அல்லது இயக்கத்திலிருந்து எதிர் காலத்தில் நிகழக்கூடியவைபற்றிச் சிலர் கண்டுபிடித்துச் சொல்லமுடியும் என்று நம் பினர். யோசேப்புக்கு இதுபோன்ற ஆற்றல் இருந்ததாக எண்ணினுர்கள்.

## விளக்கப் பயிற்சி

1. நீல நதியில் ஒரு நாளைக் கழிப்பதாகக் கற்பனை செய்து எழுதுங்கள்.
2. எகிப்து நாட்டின் காட்சிகளையும் அதன் இயற்கை அழகையும் காட்டும் தொடர் சித்திரங்கள் வரைந்து வகுப்பறையின் சுவர்களில் ஒட்டி வையுங்கள்.
3. காகிதம் எப்படி செய்யப்பட்டது? அதன் மேல் எப்படி எழுதினர்கள்? எகிப்தி யர்களுடைய எழுத்துக்களைப்பற்றியும், எண்களைப்பற்றியும் கூடிய அளவு விவரங்களைக் கண்டுபிடியுங்கள்.
4. ‘ஹைரோகிளிபிக்ஸ்’ எழுத்து முறை என்ருல் என்ன? 27, 41ம் பக்கங் களிலுள்ள படங்களைப் பார்த்து அவற்றில் சிலவற்றை எடுத்து எழுதுங் கள். சதுரத் தூபி ஒன்றின் மாதிரி அமைத்து அல்லது வரைந்து அது முழு வதிலும் இக்குறியீடுகளை எழுதுங்கள்.
5. அரசருக்குத் திராட்சைரசம் பிழிந்து பரிமாறுபவர் கண்ட கனவிலிருந்து திராட்சைரசம் தயாரிக்கும் முறையை விவரியுங்கள்.
6. பார்வோனேடு யோசேப்பு, திராட்சை ரசம் பரிமாறுபவர், பூசாரிகள் வரும் காட்சிகளை நடியுங்கள் (காட்சியில் முக்கிய குறிப்புகளாக ஆதி. 41:16,28, 32ல் கிடைக்கும் குறிப்புகளைப் பயன் படுத்துங்கள்).
7. பார்வோனுக்கும் யோசேப்புக்கும் இடையே நடந்திருக்கக்கூடிய உரை யாடல் ஒன்றைக் கற்பனை செய்து தயாரி யுங்கள். யோசேப்பின் கடவுள் பற்றி அறிய பார்வோன் கொண்டிருந்த ஆவல் பற்றியும், யோசேப்புக்கு யாவேயின் மேல் இருந்த நம்பிக்கையைப்பற்றியும் அதில் தெளிவாகக் காட்டவேண்டும்.
8. முக்கிய ஆளுநராகப் பதவியேற்றதும் யோசேப்பைப் பேட்டி காணுங்கள்.
9. யோசேப்பை முதல் முதல் சந்தித்த பிறகு அவர் சகோதரர் உரையாடலை நாடகமாக நடித்துக் காட்டுங்கள்.
10. அரண்மனையில் சாப்பிட்ட முதல் விருந்து பற்றி பென்யமீன் சொல்வதுபோல் விவரியுங்கள்.
11. நீங்கள்தான் யோசேப்பு. மந்திரக் கிண்ணம் உங்கள் கையில் இருக்கிறது. உங்கள் சகோதரர்களுக்கு நீங்கள் யாரென்று காட்டிக்கொள்ளாமல் அவர் களுடைய வாழ்க்கையின் நல்வாய்ப்பு களைக் குறித்து அறிவியுங்கள்.
12. ரோமர் 8:28ஐ மனப்பாடம் செய்து கொள்ளுங்கள். அழகான எழுத்துக் களில் அந்த வசனத்தை எழுதுங்கள். இது யோசேப்பின் வாழ்க்கைக்குப் பொருந்துமா? எப்படிப் பொருந்தும்?



பென்யமீனின் கோணிப் பையில் கண்டுபிடிக்கப்பட்ட சிறப்பு வாய்ந்த கிண்ணம்

அத்தியாயம் 7

# யோசேப்பு சகோதரரோடு ஒன்றுபடுதல்

*(ஆதி. 45; 46:1–7, 28–34; 47:1–6, 11–19, 27–31; 48:1–20; 50)*

தம் அண்ணன்மாரைப் பலமுறை சோதித்த பிறகு தாம் யாரென்று அவர்களுக்குச் சொன்னார். அவர்கள் தங்கள் ஆடைகளைக் கிழித்துக்கொண்டார்கள். இது கலக்கத்தையும் கவலையையும் வெளிப்படுத்தும் செயலாகும். 'நீர் பார்வோனுக்கு ஒப்பானவர்' என்றார்கள். அப்போது யோசேப்பு தம் கனவுகளை எண்ணிப் பார்த்திருப்பாரா? அவர் கனவுகள் கடைசியில் பலித்துவிட்டனவே!

அதற்குரிய பெருமை யாவேயைச் சாரும் என்றார் யோசேப்பு. எகிப்தில் இருந்த நாட்களில் எல்லாம் அவர் சிலை வணக்க மக்களோடு வாழ்ந்துவந்திருக்கிறார். இரா என்ற தெய்வத்தின் பூசாரியின் மகளை மணந்து கொண்டபோதிலும், யாவேயின்மேல் தம் தந்தை வைத்திருந்த நம்பிக்கையை அவரும் வைத்திருந்தார். யாவே தம்மோடு எப்போதும் இருந்ததாகத் திட்டமாக நம்பினார். 'உங்கள் அத்தனை பேரையும் உயிரோடே காப்பாற்றுவதற்காக உங்களுக்கு முன்னே கடவுள் என்னை அனுப்பினார்.' 'நீங்கள் அல்ல கடவுளே என்னை இவ்விடத்திற்கு அனுப்பினவர்.' 'கடவுள் என்னை எகிப்து தேசம் முழுமைக்கும் அதிபதியாகவும் வைத்தார்' என்றார்.



பெடோயீ மூதாதை

இன்னும் ஐந்து ஆண்டுகள் கழித்தே பஞ்சம் நீங்கும் என்று அறிந்திருந்த யோசேப்பு, தந்தை யாக்கோபை வரவழைத்தார். அவர் ஆடு மாடுகளோடும் மக்களோடும் வந்து அங்கேயே தங்கிவிடும்படிக் கூப்பிட்டு அனுப்பினார். பார்வோனும் இதற்குச் சம்மதித்து 'நான் உங்களுக்கு எகிப்து தேசத்தின் நலமானவற்றைத் தருவேன்' என்று கோசேன் நாட்டைக் கொடுப்பதாகக் கூறினார். இது நீல நதி கழிமுகத்திற்கு வடகிழக்கே இருக்கிறது. இங்கு அவர்கள் எவ்விதத் தொல்லையுமின்றி இருக்க வழி உண்டு. ஏனெனில், எகிப்தியர்களுக்கு மேய்ப்பர்களைக் கண்டால் ஒரே வெறுப்பு. யோசேப்புக்குத் தம் உறவின் முறையார் நாட்டின் நடுவில் இராமல் தூரத்தில் இருப்பது நல்லது என்று இருந்தது. அப்படி இருந்தால் எகிப்தியர்களோடு கலந்துவிடாமல் இருக்கலாம் என்பது இவர் எண்ணம். கோசேன் நாட்டில் அவர்கள் இருந்தது எகிப்து நாட்டுக்கும் ஒருவிதத்தில் நன்மை விளைவித்தது. நாடோடிக் கூட்டத்தினர் எகிப்தின்மீது படையெடுத்து வந்தால் அவர்களைத் தடுத்து நிறுத்த இவர்கள் பயன் படுவார்கள்.

இவர்களை ஏற்றி வர மாட்டுவண்டிகள் அனுப்பப்பட்டன. தம் தந்தையின் நாட்டை

விட்டு யாக்கோபு ஏற்கெனவே பயணம் செய்து பழக்கப்பட்டிருந்தபோதிலும் இங்கே புறப்பட்டு வருவதை எண்ணிச் சற்று கலங்கினுர். இவர் தம் 'சொந்த நாட்டு'க் கடவுள் ஆகிய யாவேயின்மேல் நம்பிக்கை உள்ளவர். தாம் புறப்பட்டுச் செல்லவிருக்கும் இந்தப் புதிய இடத்திற்கும் யாவே தம்மோடு வருவாரா என்பதைக் குறித்து அவருக்கு முழு நிச்சயமில்லே. யோசேப்பு தம் தந்தையைக் காட்டிலும் இந்நம்பிக்கையில் ஒருபடி அதிகமாக வளர்ந்துவிட்டார். கடைசியில் அவர் எப்ரோனை விட்டுப் புறப்பட்டு பெயேர்ஷெபா வந்துசேரவும், யாவே தம்மோடு வருகிருர் என்ற நிச்சயம் அவருக்குக் கிடைத்துவிட்டது. அந்த இடத்திலிருந்து மகிழ்ச்சியாய் எகிப்துக்குப் பயணத்தைத் தொடர்ந்தார். (யாக்கோபுக்கு ஏற்பட்ட இந்தச் சந்தேகம் நமக்கு விநோதமாயிருக்கலாம். ஆனுல், கடவுள் எல்லா இடத்திலும் இருக்கிருர் என்ற உணர்வை மக்கள் மெதுவாகவும் படிப்படியாகவுமே பெற்று வந்தனர்.)

பார்வோனின் இரண்டாவது இரதத்தில் ஏறிக்கொண்டு யோசேப்பு தம் தந்தையை எதிர்கொண்டு வரவேற்கப் புறப்பட்டார். கிழக்கத்திய பண்பாடு இது. ஒருவரை வரவேற்க எவ்வளவு தூரம் எதிர்கொண்டு செல்லுகிருர்களோ அவ்வளவு அவருக்கு மரியாதை கொடுக்கிருர்கள் என்று அர்த்தம். பார்வோனும் யாக்கோபை அழைத்தனுப்பி அதிக அன்பு பாராட்டினுர். யாக்கோபு ஒரு பெரிய பெடோயீக் கூட்டத்தின் தலேவர் என்பதைப் பார்வோன் உணர்ந்ததாகத் தெரிகிறது. யோசேப்பு மெம்பிஸ் என்ற இடத்திலேயே தொடர்ந்து தங்கியிருந்தாலும் அடிக்கடி தந்தையைப் போய்ப் பார்த்து வந்தார்.

இதற்கிடையில் யோசேப்பின் சிறப்பான திட்டங்கள் பெருகி வளர்ந்தன. யோசேப்பின் மூலமாகப் பார்வோன் வலிமை மிக்க அரசராகிவிட்டார். உணவுக்காகத் தங்கள் உடைமைகளையெல்லாம் யோசேப்பிடம் கொண்டு கொடுத்தார்கள் மக்கள். பின் தங்களையே பார்வோனுக்கு விலே பேசிவிட்டனர். ஆயிரக்கணக்கான மக்கள் பார்வோனின் பண்ணையாட்களும் அடிமைகளுமாக உழைத்தார்கள்.

யோசேப்புக்கு எப்பிராயீம், மனுசே என்று இரு குமாரர் இருந்தனர். (இவர்களுடைய இனப்பிரிவு இருந்த இடத்தை 61ம் பக்கத்தில் உள்ள நிலப் படத்தில் கண்டுபிடியுங்கள்.) யோசேப்பின் இளைய மகன் எப்பிராயீமின் மேல் யாக்கோபு ஆசீர்வாதத்தைப் பொழிந்தார். பிற்காலத்தில் எப்பிராயீம் இனப் பிரிவின் புகழ் மனுசே இனப் பிரிவின் புகழை மறைத்துவிட்டது. யோசேப்பின் இந்த இரு பிள்ளைகளும், யாக்கோபின் பத்து பிள்ளைகளோடு சேர்த்தெண்ணப்பட்டு இஸ்ரவேலின் பன்னிரண்டு இனப் பிரிவுகளை உண்டாக்கினுர்கள். இரண்டாம் புத்தகத்தில் எப்பிராயீம் வட அரசு என்று வழங்கப்படுவதைக் காண்போம்.

## தலேவருக்கு மரியாதை

பல ஆண்டுகளுக்குப் பின் யாக்கோபு இறந்து போனுர். அவர் நாடோடி வாழ்க்கை வாழ்ந்தவர். அப்படிப்பட்ட கூட்டத்திற்குத் தலேவராயிருந்தபோதிலும் அவர் இறந்தபோது அவருக்கு எகிப்து நாட்டுச் சிறப்பு மரியாதைகள் செய்யப்பட்டன. ஆனுல், பின்னர் அவர் உடல் கானுன் நாட்டில் அடக்கம்




கி.மு. 1900ம் ஆண்டில் எகிப்துக்குச் சென்ற நாடோடிகள் படம். எகிப்தியக் கல்லறை ஒன்றின் சுவர்களின் மேல் வரையப்பட்டிருந்தது.

பண்ணப்பட்டது. எகிப்து மிக வெப்பமான நாடு. எனவே யாக்கோபின் உடலை நெடுந் தொலைவு எடுத்துச் செல்லவேண்டியிருந்த தால் வாசனைப் பொருட்களால் அதைப் பேண வேண்டியதிருந்தது. அந்த உடலைச் சில நாட்கள் வாசனைப் பொருட்களிலும் நிலக் கீலிலும் தோய்த்து ஊற வைத்தார்கள். பின் பல மீட்டர் நீளமான மெல்லிய துணி யால் நன்றாகச் சுற்றினார்கள். அப்படிச் சுற்றப்பட்ட உடலை, உடல் வடிவமான ஒரு கல் சவப்பெட்டிக்குள் வைத்தார்கள். அது பார்வோனுடைய கல்லறையில் வைக்கப் படுவதாயிருந்தால் அநேகமாக வெண் சலவைக் கல்லாலான நீண்ட சதுரமான பெட்டியில் அதை வைத்திருப்பார்கள். சலவைக் கல்லாலான அப்பெட்டியும் உள்ளே கல்சவப்பெட்டி வடிவத்தில்செய்யப்பட்டிருக் கும். இதுபோன்ற பெட்டிகள் இங்கிலாந்தில் தொல் பொருட்காட்சி அரங்கில் வைக் கப்பட்டுள்ளன. இறந்த அரசரின் வேலைக் காரர்கள் சிலரும் இப்பூவுலகில் தங்கள் அரச ருக்குப் பணிவிடை செய்ததுபோல் எகிப்திய சொர்க்கத்திலும் பணிவிடை செய்யக் கொல்லப்படுவார்கள். இது பெரிய கொடுமை என்ற தெளிவு பிறந்த பிற்காலத்தில் வேலைக் காரர்கள்போல் களிமண் உருவங்கள் செய்து புதைத்தார்கள். இந்த உருவங்களையும் அரசருடைய சவப்பெட்டிக்குள் வைத்துப் புதைப்பார்கள். 'நாணற்புல் வயல்' என்ற சொர்க்கத்தில் அரசர் ஏதாவது வேலைசெய்ய அழைக்கப்பட்டால் இந்த வேலைக்கார பொம்மைகள் எழுந்து அவருக்காக இந்த வேலைகளைச் செய்யும் என்று நம்பினார்கள். யாவேயின் மோட்சத்தில் யாக்கோபுக்குப் பணிவிடை செய்ய ஆட்கள் தேவையாயிருக் கும் என்று நினைத்து, யாக்கோபின் சவப் பெட்டிக்குள்கூட இதுபோன்ற பொம்மைகள் செய்து வைத்திருக்கக்கூடும்.

முறைப்படி எழுபது நாட்கள் துக்கம் கொண்டாடினர். யாக்கோபின் உடல் அடக்கம் செய்யப்படும் எப்ரோனில் உள்ள மக்பேலாவின் கல்லறைக்குச் சவ ஊர்வலம் சென்றது (ஆதி. 49:29,30).

யாவே தம் மக்களுக்கு வாக்குப்பண்ணி யிருந்த அந்தக் கானான் நாட்டிற்கு எப்படியும் அழைத்துச் சென்றுவிடுவார் என்ற நம்பிக்கை யோசேப்புக்கு இருந்தபடியால் இறப்பதற்கு முன் யோசேப்பு கானானிலுள்ள தமக்கு அருமையான சீகேமில் தம்மை அடக்கம் செய்வதாகத் தம் குடும்பத்தினரை வாக்கு கொடுக்கச் செய்தார். பல ஆண்டுகளுக்குப் பின்தான் அவர் உடல் அடங்கிய கல் சவப்பெட்டி அவர் இறுதியாக இளைப்பாற விரும்பிய இடத்துக்கு எடுத்துச் செல்லப் பட்டது (யோசு. 24:32 பார்க்கவும்).




ஒரு பார்வோனை அடக்கம்பண்ண உபயோகித்த தங்கத்திலான கூடு. அவர் தாடி பழுது படாமலிருக்கிறது. அவர் ஆட்சிப் பொறுப்புக்கான அடையாளங்களான சவுக்கும் ஆயரின் கோலும் அவர் கையில் இருக்கின்றன.

### விளக்கப் பயிற்சி

1. யோசேப்பு தம் சகோதரர்களை மன்னிக்க ஆர்வத்துடன் இருந்ததுபற்றி விவாதி யுங்கள்.

2. ரோமர் 12:10–12 வசனங்களை மனப் பாடம் செய்யுங்கள்.

3. யோசேப்பு தம் சகோதரரோடு பேசி யிருப்பதுபோல் பேசுங்கள்.




படத்தில் காணப்படுவதுபோன்ற சித்திர வேலைப் பாடுகள் அமைந்த தூண்கள் மேல்எகிப்தின் தலை நகராயிருந்த தெபிஸ் பட்டணத்து ஆலயங்களில் காணப்பட்டன. பின்னர் இது அம்மோன் என்ற தெய்வத்தின் வணக்கத்திற்கு முக்கிய இடமா யிற்று. மோசே தெபிஸ் பட்டணத்திற்குக் கல்வி கற்கப் போயிருந்திருக்கலாம்.

42ம் பக்கத்தில் நீல நதியிற் சென்ற படகுகளைப் பற்றிய விளக்கம் காணப்படுகிறது.

எபிரேய அடிமைகள் பார்வோனுக்காகப் பித்தோம், இராம்சேஸ் என்னும் பண்டகசாலைப் பட்டணங்களைக் கட்டினதாகத் திருமறையில் சொல்லப் பட்டிருக்கிறது. அவை சிறப்புவாய்ந்த பட்டணங் களாக இருந்திருக்கவேண்டும். ஆனால், அவை இருந்த இடத்தில் இப்போது மணல் மேடுகளும் கட்டிடக் கற்கூளமுமே காணப்படுகின்றன.

4. நீல நதி கழிமுகத்தை வரையுங்கள். கோசேன் நாட்டையும், பலஸ்தீனு நாட்டிற்குச் செல்லும் வழிகளையும் குறிப்பிடுங்கள்.

5. எபிரேயர்கள் எகிப்திலே குடியேற்றப்படாமல் கோசேன் நாட்டில் குடியேற்றப்பட்டதற்கு இரு காரணங்களைக் கூறுங்கள்.

6. எகிப்துக்குச் செல்வதைக் குறித்து யாக்கோபு தயங்கிடக் காரணம் என்ன? இதை விவாதியுங்கள்.

7. நீங்கள்தான் யாக்கோபு என்று நினைத்து எகிப்துக்குச் செல்வதைக் குறித்து நீங்களே பேசிக்கொள்ளுங்கள்.


8. எப்பிராயீமையும், மனுசேயையும் யாக்கோபு ஆசீர்வதித்த பிறகு அவர்கள் சண்டையிட்டுக் கொள்வதுபோல் நடித்துப் பாருங்கள்.

9. அக்காலத்திய மாட்டுவண்டி ஒன்றின் படம் வரையுங்கள் அல்லது அதுபோல் மாதிரி ஒன்று அமையுங்கள்.

10. பெடோயீ வகுப்புத் தலைவர் (ஷேக்) படம் அல்லது பார்வோனின் படம் வரையுங்கள்.

11. எகிப்தியர்கள் இறந்தவர்களைப் புதைக்கும் முறைபற்றிக் கூடிய அளவு கண்டுபிடியுங்கள்.

12. சீகேமில் அடக்கம்பண்ணப்பட வேண்டுமென்று யோசேப்பு விரும்பியது ஏன்? இப்படி அவர் குடும்பத்தினரிடம் கேட்டது சரிதானா?



ஆப்பு வடிவமுள்ள எழுத்துக்கள். இவை மெசொப்பொத்தாமியாவில் படிப்படியாக உருவாக்கப்பட்டன. கி.மு. 3000க்குள்ளாக அவை மெசொப்பொத்தாமியாவில் வழக்கத்திலிருந்தன. தெல்—எல்—அமார்னு கடிதங்களில் இந்த எழுத்துக்களே உபயோகிக்கப்பட்டுள்ளன. இங்கே கொடுக்கப்பட்டுள்ளது எருசலேமை முற்றுகையிட்டதைப்பற்றி சனகரிப் அரசர் எழுதிய வரலாற்றின் ஒரு பகுதியாகும்.

அத்தியாயம் 8

# எகிப்தில் மோசே


*(யாத். 1—2:22; 3:1–18; 4:1–17; 5:1–18; 6:2–8)*

கோசேன் நாட்டில் எபிரேயர்கள் பல்கிப் பெருகினர். அவர்கள் எண்ணிக்கையையும் ஆற்றலையும் கண்டு புதிதாக வந்த பார்வோன் நடுங்கிப்போனுர். அவர்களுக்குச் செங்கல் செய்யும் வேலையைக் கொடுத்து அடிமைகளாக்கினுர்; பின்னர் எபிரேய ஆண் குழந்தைகளைக் கொன்று போடவும் கட்டளையிட்டார்.


### மோசேயின் இளமைப் பருவம்

மோசே ஒரு கூடையில் வைக்கப்பட்டார். அது வளர்ந்த பாப்பைரஸ் நாணலால் (சாதாரண நாணற்புல்லினுல் அல்ல) பின்னப்பட்டு, தண்ணீர் உட்புகாதபடி நிலக்கீல் பூசப்பட்ட ஒரு கூடைபோல இருந்திருக்கலாம். சில ஆராய்ச்சியாளர்கள் கருத்துப்படி அங்கு வந்த இளவரசி ஹாட்ஷெப்சட்டாக இருந்திருக்கலாம். இவர் இரண்டாம் இராம்சேஸ் என்ற பார்வோனின் மகள். வேறுசிலர் இந்த அரசி இதற்கு முற்காலத்தில் வாழ்ந்தவர் என்று நினைக்கிறுர்கள். இந்த இராம்சேஸ் எபிரேய மக்களை ஒடுக்கிய பார்வோன் என்றும் சிலர் நினைக்கின்றனர். பல ஆண்டுகள் கழித்து ஹாட்ஷெப்சட் அரசியான போது, சோமாலிக் குடியரசு என்று இக்காலத்தில் கூறப்படும் ஆப்பிரிக்கப் பகுதியைக் கண்டுபிடிக்க தம் கப்பல்களை அனுப்பினுர். இது பற்றிய செய்திகளை அம்மோன் என்ற தெய்வத்துக்கு அவர் கட்டிய கோவிலின் சுவர்களில் படங்களாகத் தீட்டி வைத்துள்ளார். கர்ஞக் என்னும் இடத்தில் அவர் எழுப்பின பெரிய சதுரத் தூபிகளில் ஒன்று இன்றளவும் நிற்கின்றது.

மோசே என்பது ஓர் எகிப்தியப் பெயர். அமோசே, துத்மோசே என்ற பார்வோன்களின் பெயர் போன்றது. மோசே அந்த அரண்மனையில் நல்ல செல்வச் செழிப்பில் ஓர் எகிப்திய இளவரசராக இன்பப் பெரு வாழ்க்கை நடத்தி வளர்ந்து வந்தார். இயங்கக்கூடிய பொம்மைகள் வைத்து விளையாடினுர். அவற்றில் ஒன்று, ரொட்டி சுடுபவர் பொம்மை; அவர் மாவைப் பலகையில் வைத்துப் பிசைவதைப்போல் இருந்தது. விலங்குகளோடும் விளையாடினுர்; ஒன்பது கட்டைகளை வைத்து, பந்தினுல் அடித்து விழச்செய்யும் விளையாட்டும் விளையாடினுர். அவர் உடல்நலம் இழந்தால் மருத்துவர் வந்து 'இவர் நோயினுல் தாக்கப்படவில்லை;



நாணற் கூடையில் குழந்தையான மோசே




மலை



சூரியன்



தேவன்



தண்ணீர்



மனிதன்



'ஹைரோகிளிபிக்ஸ்'
எனப்படும் எகிப்தியப் பட எழுத்துக்கள்

மந்திரத்தாலே தாக்கப்பட்டுள்ளார். ஆகையால் ஒரு வண்டைப் பிடித்து அதன் தலையையும் சிறகுகளையும் வெட்டி விட்டு அதன் உடலை எண்ணெயில் போட்டுக் காய்ச்சுங்கள். பின் அதன் தலையையும் சிறகுகளையும் பாம்பின் கொழுப்பிலிட்டுக் காய்ச்சி எடுத்து பிறகு இரண்டையும் கலந்து அவருக்குக் கொடுக்கவேண்டும்' என்றார். இந்த மருந்தைச் சாப்பிடுவதற்கு முன்பே மோசேயின் வியாதி பறந்திருக்கும் அல்லவா?

### மோசே பெற்ற கல்வி

மோசே எகிப்து நாட்டினரின் எல்லாக் கலைகளையும் கற்றிருந்ததாக அப்போஸ்தலர் 7:22ல் கூறப்பட்டுள்ளது. நான்கு வயதில் அவர் பள்ளிக்குச் சென்றார். அங்கு அறிஞர்களின் பொன்மொழிகளைப் படிக்கவும் எழுதவும் கற்றுக்கொண்டார். இவைகளை விரைவாகக் கற்றுக்கொள்வதற்காக ஒவ்வொரு நாளும் அவரை வாரால் அடித்தார்கள்! கணக்குப் பாடமும் கொஞ்சம் உண்டு. பழங்காலத்தில் அமெஸ் என்ற எகிப்திய மதக்குரு ஒரு பாப்பைரஸ் சுருள் எழுதினார். இதிலிருந்து அவர் இயற்கணிதமும் வடிவியல் கணிதமும் செய்யக் கூடியவர் என்று நமக்குத் தெரிய வருகிறது. அவர் எண்களைக் கூட்டியும் கழித்துமே பெருக்கல், வகுத்தல் செய்யும் வியத்தகு முறை ஒன்றைக் கண்டுபிடித்திருந்தார். அவரைப்பற்றி மோசே கேள்விப்பட்டிருக்கலாம். ஆனால் மோசே எளிய கூட்டலும் கழித்தலுமே கற்றுக்கொண்டார்.

மோசே எழுதும்போது படங்களையும் குறிகளையுமே பயன்படுத்தி எழுதினார். கரியும் பசையும் சேர்ந்த கலவையில் பேனாவைத் தொட்டு எழுதினார். 'A' என்ற ஆங்கில எழுத்துருவுக்கு ஒரு கழுகையும், 'L' என்ற எழுத்துருவுக்கு சிங்கத்தையும் போட்டார். எகிப்தியர்கள் எழுதியவற்றைப் பார்த்தீர்களானால், அதில் தொடர்ந்து பறவைகள், விலங்குகள், மக்களின் படங்களே வரையப்பட்டிருக்கும். இதுதான் 'ஹைரோகிளிபிக்ஸ்' என்ற பட எழுத்து முறை. காலப்போக்கில் எழுதும் நேரத்தைக் குறைப்பதற்காக இந்த எழுத்துக்களையும் அவற்றின் ஒலிகளையும் குறிப்பிட இப்படங்களின் பகுதிகளையே மக்கள் பயன்படுத்தத் தொடங்கினர். மோசே களிமண் துண்டின்மேல் எழுதியபோது கூர்மையான நாணலை உபயோகித்தார். அதனால் பதமான களிமண்ணில் பதிவுண்டாகக் குத்திக் குத்தி எழுதினார். பிறகு அதை வெயிலில் காய வைத்து விடுவார். இத்துண்டுகள் பெரும்பாலும் பத்து சென்டிமீட்டர் நீளம், எட்டு


சென்டிமீட்டர் அகலம் கொண்டவை; சில கூம்பு வடிவத்தில் இருந்தன. பார்வோன்கள் தங்கள் வீரச்செயல்களைப் பற்றித் தங்கள் அரண்மனைகளின் சுவர்கள், சிலைகள், கோயில்கள், தூபிகள் மேல் பட எழுத்துக்களால் எழுதி வைத்துள்ளார்கள். இவைகளிலிருந்தே இவர்களைப் பற்றிய இவ்வளவு விவரங்களை அறிய வருகிறோம்.

மோசே சற்று பெரியவராக வளர்ந்த பிறகு வேறு ஒரு பள்ளிக்கூடம் சென்றார். அங்கு உயர் கணிதமும் தத்துவமும் கற்றுக்கொண்டதோடு விண்மீன்களைப் பற்றியும் அறிந்துகொண்டார். மந்திர வித்தைகளையும் கற்றுக்கொண்டார்.

### அவர் கண்ட சில காட்சிகள்

அரச அவையினராக எப்படி நடந்து கொள்வதென்றும் மோசே அறிந்துகொண்டார்; எகிப்து நாட்டு மொழியில் பேசவும் கற்றுக்கொண்டார்; அந்நாட்டுப் பழக்கவழக்கங்களையும் கைக்கொள்ளப் பழகிக்கொண்டார். அவர் தாய், அவர் சொந்த இனத்தினர் பற்றியும் அவர்கள் ஒரே மெய்க் கடவுளான யாவேயைத் தொழுதுகொள்வதைக் குறித்தும் அவருக்குச் சொல்லிவைத்திருந்தார். இது அவர் சிந்தனைகளுக்கெல்லாம் பின்னணியாக அமைந்திருந்தது. நீல நதியில் சிறு பாய்மரக் கப்பல்களையும், அடிமைகள் துடுப்புகளால் தள்ளிச் செலுத்திய தாழ்ந்த கப்பல்கள் கடலை நோக்கிச் செல்வதையும் அதற்கு எதிர்முகமாகச் செல்வதையும் கவனித்திருந்தார். மெம்பிஸிலுள்ள பித்தா கோவிலுக்கும், தெபிஸிலுள்ள அம்மோன் கோவிலுக்கும் இரா, ஆஸிரிஸ் கோவில்களுக்கும் மோசே போயிருந்திருக்கலாம். அங்கு நடந்த வழிபாட்டில்கூட அவர் பங்கெடுத்திருந்திருக்கலாம். சிங்கங்களை வேட்டையாடச் சென்றிருக்கலாம்; மீன் பிடித்திருக்கலாம்; சதுப்பு நிலங்களில் சென்று காட்டு வாத்துகளைப் பிடித்திருக்கலாம். வாத்துகள்மேல் வளை தடிபோன்ற தடியை வீசுவார். அதனால் தாக்கப்பட்டு வாத்து கீழே விழுந்தவுடன், இவர் வேட்டையாடக் கூட்டிச் சென்றிருந்த பூனை ஓடிப்போய் வாத்தைத் தூக்கிக்கொண்டு வந்து இவரிடம் சேர்த்து விடும்!

எகிப்திய பாணியில் இவர் அணிந்திருந்த உடை அரசருக்கேற்றதாய் இருந்திருக்கும். அழகிய அணிகலன்களும் அணிந்திருப்பார். எகிப்து வெப்பமான நாடாக இருந்ததால் அவர் தோள்கள் மூடப்படாமல் வெயில் பட்டுப் பழுப்பேறியிருந்திருக்கும். அவர் ஒரு பட்டு மேலாடை மட்டும் மேலே போட்டிருந்திருக்கலாம். அவர் வெளியே பயணம் செய்த போது பாதையின் இரு மருங்கிலும் பல மீட்டர் தொலைவுக்கு கோதுமை, சோளம், கால்நடைத் தீவனமாகப் பயன்படும் ஒரு விதப் பட்டாணி போன்ற தானியங்கள் விளைந்து கிடந்ததைக் கண்டார். இப்பயிர்களை வற்றாத நீல நதியின் வளமான தண்ணீர் உயிரூட்டி வளர்த்து நின்றது. இவற்றை எபிரேய, எகிப்திய அடிமைகள் பாடுபட்டுக் கவனித்து வந்தார்கள். நிர்வாணக் கோலமாய் இங்குமங்கும் சில அடிமைகள் நம் நாட்டில் பயன்படுத்துவது போன்ற ஏற்றத்தினால் தண்ணீர் இறைத்துக் கொண்டிருந்தார்கள். இந்தத் தண்ணீர் ஒட்டகங்கள் குடிக்கவும் கால்வாய்கள் வழியாகத் தண்ணீர் பாயாத பகுதிகளுக்குப் பாய்ச்சவும் பயன்பட்டது. ஏற்றத்தின் ஒரு முனையில் கட்டப்பட்டிருந்த தோல் வாளி சூரிய ஒளியில் மின்னிக்கொண்டு அங்கு மிங்கும் ஆடியது. ஏற்றத்தின் மறுமுனையில் சுடப்பட்ட களிமண்ணால் ஆன ஒரு பளு, பின் பாரமாய் இருந்தது.



இக்காலத்தில் நீல நதியில் காணக்கூடிய பாய்மரக் கப்பல்

### மோசே பெரியவரானார்


இன்னும் சிறிது கல்விப் பயிற்சிக்கு மோசே தெபிஸ் அல்லது முப்பது கிலோமீட்டர் தொலைவிலிருந்த கெலியோபோலி எனப் பட்ட இடத்திலிருந்த பூசாரிகளிடத்துக்கு

அனுப்பப்பட்டிருக்கலாம். இது யோசேப்பின் மனைவிக்குச் சொந்தமான ஓன் பட்டணம். அங்கிருந்த பூசாரிகள் மொட்டையடித்திருந்தார்கள். தங்கள் வெள்ளை நிற ஆடைக்கு மேல் தோள்பட்டை வரை மார்பில் குறுக்காகச் சிறுத்தைப் புலித்தோல் அணிந்திருந்தார்கள். மோசே, முன்னாளில் இருந்த பார்வோன்கள் மண் துண்டுகளில் வரலாறுகளை எழுதி பத்திரப்படுத்தி வைத்திருந்த நூல் நிலையங்களுக்குச் சென்று அவற்றை வாசித்தறிந்தார். தெபிஸ் பட்டணத்துக்கருகில் 'அரசர்களின் பள்ளத்தாக்கு' இருந்தது. அங்குள்ள பாறைக் கல்லறைகளில் ஒவ்வொரு அரசரையும் தெய்வங்கள் வரவேற்ற விதம் வரையப்பட்டும் செதுக்கப்பட்டும் இருந்தது. இவற்றோடு நற்பேற்றுக்குரியவர்கள் இருக்கும் இடத்துக்குப் போய்ச் சேர அரசர் நீண்ட பயணம் செய்தபோது எவ்விதம் சித்திரவதைக்கு உள்ளானார் என்பதைக் காட்டும் பயங்கரமான படங்களும்



ஸ்பிங்ஸ்

வரையப்பட்டிருந்தன. வேறுசில படங்கள் அவ்வரசர்களின் வாழ்க்கையில் நடந்த முக்கிய நிகழ்ச்சிகள், அவர்கள் ஆற்றிய பணி, அவர்கள் விளையாடி மகிழ்ந்த விளையாட்டுகள் ஆகியவற்றை விளக்கின. யோசேப்பைப்போல மோசேயும் 'ஸ்பிங்ஸ்' எனப்பட்ட சிறகுடைய சிங்க உருவச் சிலையைப் பார்த்து பெரு வியப்புக்குள்ளானார். சிம்மம் போன்ற அதன் உடல் இருபது மீட்டர் உயர்ந்து, அறுபது மீட்டர் நீளமாகப் பரவிக் கிடந்தது. பாலைவனத்துப் பாறையிலிருந்து இத்தகைய உருவத்தைச் செதுக்கியது யார்? கற்களால் இதை அமைத்தது யார்? நூற்றைம்பது மீட்டர் உயரமாய் வானை முட்டி நிற்கும் பிரமிட் என்னப்பட்ட கல்லறைக் கோபுரங்களுக்குச் செல்லும் பாதையில் வரிசை வரிசையாக ஆட்டுக்கடா அல்லது நரி போன்ற தலையையுடைய சிறு



இராம்சேஸ் உடைய சிலை அடிமைகளால் இழுக்கப்படுகிறது

சிறு ஸ்பிங்ஸ் உருவங்கள் இருப்பது ஏன்? தொலை தூரத்தில் இராம்சேஸ் அரசரின் பிரமாண்டமான சிலை அந்தக் கொதித்திடும் பாலை மணலில் அடிமைகளால் இழுத்து வரப்பட்டதையும் மோசே கண்டார். அவ்வரசரைப் பெருமைப்படுத்துவதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஓர் இடத்தில் அச்சிலையை நிறுத்தப்போனார்கள். இந்த அடிமைகளின், அதாவது அவர் சொந்த இனத்தைச் சேர்ந்தவர்களின் கதறல், அவர் காதுகளுக்கு எட்டியபோது அவர் நெஞ்சில் கோபத்தீ மூண்டது. சூரிய ஒளி விழிகளைத் தாக்காது கையால் மறைத்துக்கொண்டு நோக்கும்போது அந்த வேலைப்பளுவில் அவர்கள் முதுகு ஒடிவதை அவர் பார்த்தார்.


கோவிலுக்குத் திரும்பும் வழியில் அவர் கடை வீதிகள் வழியாக வந்தார். அங்கு பலஸ்தீனாவிலிருந்து வந்த வியாபாரிகள் வாசனைத்திரவியங்கள், மரப்பிசின், இன்னும் வேறு பல பொருட்களுக்கும் பண்டமாற்று செய்து கொண்டிருந்ததைக் கவனித்திருந்தார். மோசே ஒரு போர் வீரராகவும் இருந்திருக்கலாம். ஏதாவது ஓர் எகிப்தியப் போரில் ஈடுபட்டிருந்திருக்கலாம். ஏனெனில் அவர் 'வாக்கிலும்செய்கையிலும்' வல்லவராக விளங்கி நின்றார் (அப். 7:22). அவர் இரதத்தைத் தொடர்ந்து வந்த தோலாடை உடுத்தியிருந்த ஈட்டி வீரர்களோடும் அதைவிட எளிதான ஆடை அணிந்திருந்த வில் வீரர்களோடும் அவர் நன்கு பழகியிருந்தார். போர்க்கவசம் அணிந்து இருபுறமும் கூர்மையான வாள் வைத்திருந்த சார்டீனியத் தீவினர் படை இவருக்குத் தனியான பாதுகாப்புப் படையாக இருந்திருக்கலாம். இவர் இரதம் பளுக்குறைவானது. அதை இழுத்த இரண்டு குதிரைகளும் தங்கள் முழு பலத்தாலும் இழுத்ததால் அதைக் கட்டுப்படுத்துவது கடினமாயிருந்தது. தேரோட்டும்போது சண்டையில் கலந்துகொள்ள கைகள் கட்டுப்பாடில்லாமல் இருக்குமாறு குதிரைகளின் கடிவாளக் கயிற்றைத் தம் இடுப்பில் வரிந்து கட்டிக்கொண்டார். பின் சீரியா நாட்டின் வட பகுதியில் உள்ள காதேஸில் ஏத்தியர்களுக்கு எதிராக அவர் சண்டையிட்டபோது அவருக்கு நல்ல போர்ப் பயிற்சி கிடைத்தது. பிற்காலத்தில் இஸ்ரவேலர்களின் தலைவராக ஆன காலத்தில் இந்தப் பயிற்சி அவருக்கு மிகவும் உதவியாயிருந்தது.

இராம்சேஸ் தம் ஆட்சிக் காலத்தின் இறுதியில் தம் அன்புக்குரிய மனைவி நெபர்டாரியுடன் கடற்கரையிலிருந்து முப்பத்திரண்டு கிலோமீட்டர் தொலைவில் நீல நதியின் கழிமுகத்திலிருந்த தானிஸ் பட்டணத்தில் வந்து குடியேறினர். இங்கு மோசேயும் கிழக்காப்பிரிக்காவுக்கும் மற்ற நாடுகளுக்கும்செல்லும் வணிகக் கப்பல்களைக் கண்டிருந்தார். இக்கப்பல்கள் சீரியாவில் கட்டப்பட்டு அனுப்பப்பட்டவை. தானிஸ் பட்டணம் அந்தக் காலத்தில் பி—ராம்சேஸ் எனப்பட்டது. ஆனால் எகிப்தியர்கள் இதை ஷேக்கட் டெகா என்றனர்கள். அதற்கு 'அன்னியர்கள் வாழும் பகுதி' என்று அர்த்தம். அன்னியர்கள் என்று குறிப்பிடப்பட்டவர்கள் இஸ்ரவேலரே. இது 'சோவான்வெளி' என்று திருமறையில் குறிப்பிடப்பட்டுள்ளது (சங். 78:12,43). இஸ்ரவேலரே இந்தப் பட்டணத்தைக் கட்டியிருந்தார்கள். பேத்சான் என்ற இடத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதும் இராம்சேஸ் அரசரால் கட்டப்பட்டதுமான நேர் தூண் ஒன்றில் இவ்விவரம் எழுதப்பட்டுள்ளது. பழைய ஹிக்சாஸ் பட்டணமாகிய ஆவாரிஸ் இருந்த இடத்தில் இப்பட்டணத்தைக் கட்டினர்கள்.

களிமண்ணோடு துண்டுகளாக்கப்பட்ட வைக்கோலைச்சேர்த்து, அச்சுகளில் போட்டு வெயிலில் உலரவைத்து செங்கல் செய்தனர். அடிமைகள் எகிப்திய கண்காணிகளின் சவுக்கடியை வாங்கிக்கொண்டு செங்கல் செய்ததையும் ஆலயங்களையும் அரண்மனைகளையும் கல்லறைக் கோபுரங்களையும் கட்டுவதற்கென்று பெரும் பளுவை இழுத்துச் சென்றதையும் எகிப்தியப் படங்கள் காட்டுகின்றன.

## மோசே எகிப்தை விட்டு வெளியேறுகிறார்

கண்காணியைக் கொன்றுவிட்ட செய்தி வெளியாகிவிடும் என்ற பயத்தோடு மோசே எகிப்தை விட்டு ஓடும்போது சூர் வனாந்தரம் செல்லும் வழியில் கிழக்குக் கோட்டையருகில் (பக்கம் 38 பார்க்கவும்) அவரை நிச்சயம் தடுத்து நிறுத்திவிடுவார்கள் என்று அவர் அறிந்திருந்தார். எனவே செங்கடல் கரை ஓரமாக அதற்கு இணைவரையாக இருந்த மலைத்தொடரின் குன்றுகள் வழியாக ஓடினர். அநேகமாக செராபிட் என்னும் இடத்திலுள்ள நீலக்கல் சுரங்கங்களில் வேலை செய்பவர்கள் செல்லும் பாதை வழியாகச் சென்றிருக்கலாம். இந்த இடத்தின் ஒரு பகுதியில் மிதியானியர்கள் குடியிருந்தார்கள். மிதியானின் 'ஆடு மேய்க்கும் பூசாரி' யான எத்திரோ கல்வி கற்றிருந்தவர். மோசேயும் தம்மைப் போன்றவர் என்று அவரை உயர்வாக மதித்தார். இவர் மோசேக்கு நல்ல அறிவுரைகளும் இப்படி இப்படிக் காரியங்களைச் செய்யவேண்டும் என்று வழிவகைகளும் சொல்லிக்கொடுக்க முடிந்தது. யாவேயின் மேல் மோசேக்கிருந்த நம்



பழங்காலத்தில் எகிப்தில் செங்கல் செய்தல். தெபிஸ் என்னும் இடத்திலுள்ள ஒரு கல்லறையின் சுவர்களில் வரையப்பட்டிருந்த படம். கி.மு. 1460போல் வரையப்பட்டிருக்கலாம்.

பிக்கைக்கு அவர் வலுவூட்டி அதில் அவரை ஊக்குவித்தார்.

எத்திரோவின் ஆடுகளை மோசே மேய்த்துக் கொண்டிருந்த போதுதான் 'எரியும் முட் செடி' அனுபவத்தின் வழியாகக் கடவுள் அவருக்குக் கட்டளைகளைக் கொடுத்தார். மோசேயின் இந்த அனுபவம் குறித்து எத்தனையோ விளக்கங்கள் கொடுக்கப்பட் டுள்ளன. லூயி கோல்டிங் என்பவர் கொடுத் துள்ள விளக்கமே மிகப் பொருத்தமானது எனலாம். கோல்டிங் சீனாய் மலைக்கருகில் இருந்த ஒரு வேல மரத்தின்மேல் வானத்தை நோக்கி தூண்போல் மணற் காற்று வீசக் கண்டார். மேகத்திற்குள்ளிருந்து சூரியன் திடீரென்று தோன்றி அதன் சுடரொளியால் அம்மரத்தைப் பிரகாசமாக்கினதால் அதன் ஒவ்வொரு முள்ளும் 'தீ நாவாயிற்று'; மரமும் 'எரிந்தது'; அது உண்மையாகவே செடி எரிவது போல இருந்தது. ஆனால் அது அழிந்து போக வில்லை என்கிறார் அவர். பிறகு இந்தச் சுழல் காற்று அங்கிருந்து கடந்து செல்லவே மீண்டும் அந்தச் செடி உலர்ந்த நிலையில் அங்கு தனித்து விடப்பட்டிருந்ததாகவும் ஒசால்கிறார். இது ஓர் அதிசயமான காட்சியே. மோசேக்கு இது அற்புதமானதாகக் கடவுள் கொடுத்த ஓர் அடையாளமாகவும் இருந் திருக்க வேண்டும். தாம் கடவுளின் முன்னிலை யில் இருப்பதாக மோசே உணர்ந்தார்; கடவுளின் சத்தத்தையும் கேட்டார்.

இக் காட்சியைப் பார்த்து மோசே மதிப் பச்சம் அடைந்ததினால் கிழக்கு நாடுகளில் மரியாதைக்கு அடையாளமாகக் காலணி களைக் கழற்றும் பழக்கத்தைக் கூட மறந்து விட்டார். பிறகு அவருக்குக் கட்டளை கொடுக்கப்பட்டது. தம் மக்களைத் தாம் வாக் குப் பண்ணியிருந்த நாட்டிற்குக் கொண்டு செல்ல வேண்டும் என்னும் நோக்கம் கடவு ளுக்கு இருந்தது. இதைச் செய்வதற்கென்று தாம் அழைக்கப்பட்டிருப்பதாக மோசே உணர்ந்தார். இதனாலேயே தம் சொந்த விருப்பத்திற்கு மாறாக அவர் எகிப்துக்குத் திரும்பிச்சென்றார்.

ஒரேப் மலை எது என்று சரியாகத் தெரிய வில்லை. சிலர் சீனாய் மலைதான் அம்மலை என் கின்றனர். சிலர் அது ஏபேல் மூசா மலை என் கிறார்கள். வேறு சிலர் அகாபா வளைகுடா வுக்கு வடக்கே உள்ள மலைகளில் ஒன்றாக அது இருக்கலாம் என்றெண்ணுகிறார்கள். (49ம் பக்கத்திலுள்ள படத்தைப் பார்க்கவும்.)

### மோசே எகிப்துக்குத் திரும்புகிறார்

மோசே எகிப்துக்குத் திரும்பிய போது ஒரு புதிய பார்வோன் நாட்டை ஆண்டு கொண் டிருந்ததைக் கண்டார். இப்பார்வோன் யார் என்று திட்டமாகத் தெரியவில்லை. எந்தப் பார்வோன் ஆண்டிருந்தாலும் அவர் இஸ்ரவேலரை வனாந்தரத்தில் 'மூன்று நாள் பிரயாணம் செய்ய' அனுமதிப்பதற்குத் தாம் ஆயத்தமாயில்லை என்று மோசேயிடம் திட்ட வட்டமாகக் கூறிவிட்டார். மூன்று நாள்

பிரயாணம் செய்வது என்பது புனித பயண மாக செராபிட் என்ற இடத்துக்குப் போவ தாக இருந்திருக்கலாம். பார்வோன் முன்னை விடக் கடினமாய் இஸ்ரவேல் மக்களை நடத்தப் போவதாகக் கூறினர். முந்தின ஆண்டு அறுத்துப் போரடித்த அரிதாளிலிருந் தும் வைக்கோல் கூளத்தை இனி அவர்களே சேகரித்துக்கொள்ள வேண்டும் என்றும், முன்பு செய்த கணக்குப்படியே செங்கல் செய்யவேண்டும் என்றும் கட்டளையிட்டார். அவ்விதம் செய்யத் தவறினல் தண்டனை என்ன தெரியுமா? அடி உதை மட்டுமல்ல, எத்தனை செங்கற்கள் குறையுமோ அத்தனை குழந்தைகளை அவர்கள் பெற்றோரிடமிருந்து எடுத்து வந்து அவர்களை வைத்து சுவர்கள் எழுப்பவேண்டியது. இன்று புதைபொருள் ஆராய்ச்சி செய்யும்போது பெரிய களிமண் ஜாடிகளில் அடைக்கப்பட்டபடி குழந்தை களின் எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட் டுள்ளன. குழந்தைகளின் நீண்ட இறுதிப் பயணத்திற்காக ஜாடிகளில் உணவும் வைக்கப்பட்டுள்ளதைப் பார்த்து பரிதாபப் பட வேண்டியதாயுள்ளது.

1896ம் ஆண்டு தெபிஸ் பட்டணத்தில் பெரிய கறுப்பு கருங்கல்லொன்று கண்டுபிடிக் கப்பட்டது. இது மெனெப்தா அரசரின் நெடுந்தூணாகும். இதன்மேல் செதுக்கப் பட்டுள்ள பட எழுத்துக்கள் இஸ்ரவேலரின் பாழ் நிலையையும் அழிவையும் பற்றிக் கூறு கின்றன.

## விளக்கப் பயிற்சி

1. மோசே குழந்தையாக நாணலுக் குள்ளே இருந்ததுபோல் படம் வரையுங் கள். நாணல் என்றால் என்ன என்று விளக்குங்கள்.

2. மோசே கண்டுபிடிக்கப்பட்ட விதத்தை நாடகமாக நடியுங்கள். விருப்பமானல் யாத். 2:5—10 வசனங்களைப் பயன்படுத் திக் கொள்ளுங்கள்.

3. 'என் வாழ்க்கையில் ஒருநாள்' என்று இளைஞர் மோசே நாட்குறிப்பு எழுதுவது போல் நீங்களும் எழுதுங்கள்.

4. தக்கை அல்லது அட்டையினல் ஒரு பாய் மரக் கப்பல், துடுப்புகளால் தள்ளிச் செலுத்திய தாழ்ந்த கப்பல், கல்லறைக் கோபுரம், 'ஸ்பிங்ஸ்' என்ற உருவம் முதலியவற்றைத் தயாரியுங்கள்.

5. ஸ்பிங்ஸைப் பார்த்தபோது மோசேயின் மனத்தில் என்னென்ன சிந்தனைகள் எழுந்திருக்கக் கூடும்?

6. எபிரேய அடிமையோடு மோசே பேசிய காட்சியை நாடகமாக அமையுங்கள்.

7. 43ம் பக்கத்திலுள்ள படத்தில் காண்கிற படி நீங்கள் இராம்சேஸ் என்கிற பார்வோனின் தொடைமேல் நிற்கிறீர் கள் என்று கற்பனை செய்துகொண்டு அங்கு இருந்து நீங்கள் எதை உரத்த குரலில் தெரிவிக்கிறீர்கள் என்று எழுதுங்கள்.

8. மோசேயையும் எத்திரோவின் மகள்களை யும் பற்றி சிப்போராள் பின்னர் தம் தந்தையிடம் கூறுவதுபோல் கூறுங்கள்.

9. 'உலகெல்லாம் சொர்க்கத்தின் உரு வேற்றுளது.

அற்பச் செடியெல்லாம் இறைவனல் சுடர் விட்டெரியுது.

இதைக் காண்போர் மட்டுமே காலணி களைக் கழற்றி எறிகிறர்;

காணுதோர் சுற்றி அமர்ந்து பழம் பறிக் கிறர்.'

எதை மனதில் வைத்துக்கொண்டு ஈ.பி. பிரவுனிங் என்ற கவிஞர் இவ்வரிகளை எழுதியிருப்பார்?

10. 'மோசேயின் அழைப்பு' என்பதைத் தலைப்பாகக்கொண்டு காலைக் கூட்டத் திற்கு ஓர் ஆராதனை ஒழுங்கு தயாரியுங் கள்.

11. தம் ஆற்றலைக் குறித்து மோசேக்கு எழுந்த நான்கு ஐயங்கள் யாவை? அதற்கு யாவே கொடுத்த நான்கு பதில் களைக் கூறுங்கள் (யாத். 3:11,13; 4:1, 10; 6:10—13 வசனங்கள் பதில்களைக் கண்டுபிடிக்க உதவும்).

12. சங்கீதம் 46:1,2,3,7 வசனங்களை மனப் பாடம் செய்யுங்கள். 7ம் வசனத்தை அழகான எழுத்துக்களில் எழுதுங்கள்.

அத்தியாயம் 9

# எகிப்திலிருந்து வெளியேறுதல்

*(யாத். 6:2—8; 7:14—25; 8; 9:1—12,22—35; 10:12—29; 13:17—22; 14; 15:22—16:27; 17; 18; 19:1,2; 20:1—17; 25:1—22; 32:1—4,15—24; 33; 34; எண். 11; 13:16—14:9; 20:1—27; உபா. 34:1—9)*

## சிறப்புக் குறிப்பு

### இந்நிகழ்ச்சி எப்பொழுது நடந்தது?

இஸ்ரவேலர் எகிப்திலிருந்து வெளியேறிய நிகழ்ச்சியைப்பற்றி யாத்திராகமத்தில் எழுதப்பட்டிருப்பதுபோல் ஏறத்தாழ கி.மு. 850ல்தான் எழுதப்பட்டது. அதாவது இது நடந்து சுமார் ஐந்நூறு அல்லது அறுநூறு ஆண்டுகள் கழித்தே இவை எழுதப்பட்டன. அப்படி என்ருல் வழி வழியாக மக்கள் இவ்விவரங்களே ஒருவருக்கொருவர் சொல்லியே வந்தனர். அவ்விதம் சொல்லப்பட்டு வந்த மற்ற செய்திகளேப்போலவே இந் நிகழ்ச்சியைப்பற்றி சொல்லப்பட்ட சில விவரங்களும் ஒருவேளே நடந்தபடியே எழுதப்படாமல் இருக்கலாம். இவர்கள் நடந்துசென்ற வழியைப் பற்றியும் பயணத்தின் காலத்தைப் பற்றியும் அறிஞர்களுக்கிடையே கருத்து வேறுபாடுகள் இருக்கின்றன. சுருக்கமாய்ச் சொன்னுல் மூன்று காலக் கணிப்புகள் உண்டு:

(அ) கி.மு. 1580ல் ஹிக்சாஸ் அரசர்கள் முறியடிக்கப்பட்டு எகிப்தைவிட்டு ஓட வேண்டிய நிலே ஏற்பட்டபோது, இஸ்ரவேலர்களும் குறுக்கீடு இன்றி ஓடிப் போவதற்கு இது ஒரு நல்ல வாய்ப்பாக அமைந்திருக்கலாம்.

(ஆ) 'அ' பிரிவில் சொல்லப்பட்ட காலத்திற்குச் சுமார் இருநூறு ஆண்டுகள் பின்னராயிருக்கலாம். ஹபீருகள் (எபிரேயர்கள்) கி.மு. 1380ல் கானுன் நாட்டின்மேல் படையெடுத்துச் சென்றனர். இக்காலத்திலேயே இஸ்ரவேலர்கள் எகிப்தை விட்டு வெளியேறியிருக்கலாம்.

(இ) இதற்கும் எண்பது ஆண்டுகளுக்குப்பின் இது நடந்திருக்கலாம். கி.மு. 1300 போல் பெலிஸ்தியர் பலஸ்தீனுவுக்குள் நுழைந்தனர் என்று சொல்லப்படுகிறது. அதற்குச் சிறிது முன்னரே இஸ்ரவேலர் வெளியேறி இருக்கலாம்.

இம்மூன்றில் கடைசிக் கணிப்பே பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது. இதற்கான எல்லா காரணங்களேயும் விவரிப்பது கடினம். ஆனுல் நாம் புரிந்துகொள்ளக் கூடியவையான தகுதி வாய்ந்த சில காரணங்கள் பின்வருமாறு:

(i) புதை பொருளாராய்ச்சிச் சான்றுகள்—நிலத்தை அகழ்ந்து மக்கள் கண்டுபிடித்த விவரங்கள்.

(ii) யாத். 13:17ல் பெலிஸ்தியர்கள் பற்றிய குறிப்பு வருகிறது. ('இ' பிரிவைப் பாருங்கள்.)

(iii) யோசுவாவைப் பற்றிய நிகழ்ச்சிகளில் இரும்பைப் பற்றிச் சொல்லப்பட்டுள்ளது. பதின்மூன்ரும் நூற்ருண்டின் முற்பாகத்தில் அல்லது அதற்கு முன்புதான் ஏத்தியர்கள் முதல் முதலாக இரும்பை எகிப்திற்குள் கொண்டு வந்தனர்.

(iv) தெபிஸ் என்ற இடத்தில் ஒரு பெரிய கற்றூண் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது மெனெப்தா நிறுத்திய தூண். யாக்கோபு எகிப்துக்குச் சென்றபோது எல்லா இஸ்ரவேல் குடும்பத்தினரும் அவரோடு சென்றிருக்கமாட்டார்கள். பலஸ்தீனுவில் எப்ரோனுக்கு அருகே குடியிருந்தவர்களுக்கான தனி வழி வழிச் செய்திகள் இருந்தன. இவர்களுடைய செய்திகளும் எகிப்திலிருந்து வெளியேறிய இஸ்ரவேலர்களின் விவரங்களும் ஒன்றேடொன்று கலந்திருக்கலாம். மெனெப்தா என்ற பார்வோன் 'கொடுங்கோலனை பார்வோன்' என்று பெயர்பெற்ற இராமசேசை அடுத்து

பட்டத்துக்கு வந்தார். இவர் காலம் கி.மு. 1225 முதல் கி.மு. 1198 வரை. இராம்சேஸ் தமது தொண்ணூறுவது வயதில் இறந்துபோனர். அதற்குள்ளாக ஏறக்குறைய இவர் பிடித்தாண்டஇடங்க ளெல்லாம் இவர் கையை விட்டுப் போய் விட்டன. மெனெப்தா பலஸ்தீனமேல் படையெடுத்து வந்து தம்முடைய சில வெற்றிகளைக் குறித்து இப்பெரிய கல்லில் பதிவு செய்துள்ளார். அதில் 'இஸ்ரவேல் பாழாயிற்று, அதன் வித்து இல்லாமற் போயிற்று' என்றும் எழுதப் பட்டுள்ளது.

### இவர்கள் சென்ற பாதை எது?


இதைப்பற்றிக்கூட திட்டமாக எதுவும் கூற முடியவில்லை. அடுத்து வரும் சில பகுதி களைப் படிக்கும்போது நிலப்படத்தையும் பார்த்துக்கொள்ளுங்கள். எகிப்தியர்கள் பின்னுகத் துரத்தி வந்தார்கள். அவர்கள் கையில் அகப்பட்டு விடாதபடி மக்களை சீனய் அல்லது காதேஸ் வனந்தரத்தை நோக்கி மோசே நடத்திச் சென்றிருக்கலாம். அங்குதான் அவர்களுக்கு உணவும் நீரும் கிடைக்கும். அவர் சீனய்ப் பகுதி வழியாக மக்களைக் கூட்டிக்கொண்டு போவதைத் தவிர்த்திருக்கலாம். ஏனெனில் இப்பகுதியில் இருந்த நீலக்கல் சுரங்கங்களில் எகிப்தியர் வேலை பார்த்துக் கொண்டிருந்தார்கள், அதுவுமல்லாமல் அப்படிப்பட்ட பாழானதும் அன்பற்றதுமான சூழ்நிலையில் பலர் தங்கு வதும் கடினமானதாகும். சில ஆராய்ச்சி யாளர்கள் இந்த இடத்தில் வேலைசெய்த எகிப்தியப் போர்வீரர்களும் எகிப்தியர்களும் குறைந்த எண்ணிக்கையினராகவே இருந் திருக்க வேண்டும் என்கின்றனர். ஏனெனில் சுரங்கங்களில் வேலை செய்தவர்களில் பெரும் பாலோர் நண்பர்களான மிதியானியரே. எகிப்தியரில் அவ்வளவு குறைந்தஎண்ணிக்கை யினரைத்தான் பார்வோன் அவ்வேலைக் கென்று ஒதுக்கியிருக்க முடியும். வேறு சிலர் சீனய் ஓர் எரிமலை என்கின்றனர். அப்படி யென்றால் அது வழிவழியாகச் சொல்லப் பட்டு வரும் இடத்தில் இருக்க முடியாது. ஒரு வேளை ஏதோமின் மலைகளில் பெத்ராவுக்கு அருகாமையில் இருந்திருக்கலாம்.

அப்படியானல் இஸ்ரவேலர் எந்த வழி யாகச் சென்றனர்? கிழக்கு முகமாக ஏரி களில் ஆழமில்லாதிருந்த பகுதிகளைக் கடந்து சென்றிருக்கலாம். இதுவே இன்றும் வணிகர்கள் செல்லும் பாதை அல்லது இன்னும் வடக்கே கடற்கரை வழியாகக் காத்சாவை நோக்கிப் போயிருக்கக்கூடும். திருமறையில் சொல்லப்பட்டுள்ள இடங் களில் சிலவற்றையே இன்று அறிகிறோம். இதனல் எதையும் திட்டமாகச் சொல்வது கடினமாயிருக்கிறது. முக்கியமான பாரம் பரியச் செய்தி சீனய் மலையில் செய்யப்பட்ட ஒப்பந்தத்தை முக்கிய நிகழ்ச்சியாகக் கொண்டு சொல்லப்பட்டிருக்கிறது. ஏனென் றல் அம்மக்கள் வாழ்க்கையில் அதுவே மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இதோடு பல வேறுபட்ட பாரம்பரியங்கள் இணைந் திருப்பதுபோல் தெரிகிறது.

### அந்தப் புனிதமான ஒப்பந்தம் எது?

அந்த ஒப்பந்தம் இவர்களுக்கு எவ்வளவு முக்கியமானதாய் இருந்தது என்று நாம் தெளிவாக அறிந்துகொள்ள வேண்டும். பையன்கள் தாங்களே ஏற்படுத்திக்கொண்ட சில சடங்குகளை நிறைவேற்றி 'உடன் பிறந்த சகோதரர்' ஆகிக் கொள்ளுகிறார்கள். அதன் பின் என்ன கஷ்டம் வந்தாலும் ஒருவரை ஒருவர் தாங்கும் சிறப்பு நண்பர்கள் ஆகிவிடு கிறார்கள். இவர்கள் இணைப்பு இருவரை ஒருவராக்கி விடுகிறது. இந்த 'உடன் பிறந்த பிணைப்புகள்' பழங்குடி மக்களிடம், சிறப்பாக ஆப்பிரிக்காவிலுள்ள பழங்குடி மக்களிடம் இருக்கிறதைக் காண்கிறோம்.

ஆதியாகமம் 15ம் அதிகாரத்தில் ஆபிர காமுக்கும் யாவேக்கும் இவ்விதப் பிணைப்பு ஏற்பட்டது. ஒரு விலங்கு கொல்லப்பட் டது. அது தலைக்கும் வாலுக்கும் இடையில் வெட்டப்பட்டதாகத் தரையில் வைக்கப்பட்டிருந்தது. அந்த இடைவெளி வழியாக ஆபிரகாம் நடந்து போனர். யாவே நெருப்பாக இங்கே உருப்படுத்திக் காட்டப் பட்டிருந்தார். யாவேயும் ஆபிரகாமும் பலியிடப்பட்ட மிருகத்தின் உடல் ஊடாக ஒன்றாக இவ்விதம் ஒருவராகப் பிணைக்கப்பட் டிருந்தனர். யாத்திராகமத்தில் கூறப்பட்ட வரலாற்றில் இதே கருத்துதான் வருகின்றது. பலிபீடங்களால் யாவே உருப்படுத்திக் காட்டப்பட்டிருக்கிறார். தலைவர்கள் மக்கள் சார்பில் நின்றார்கள். விலங்குகளின் இரத் தம் பிடிக்கப்பட்டது; அதில் கொஞ்சம் பலி பீடத்தின்மேல் தெளிக்கப்பட்டது. மக்கள் யாவேயின் கட்டளைகளை ஏற்றுக்கொண்ட பின் அந்த இரத்தத்தில் கொஞ்சம் தலைவர் கள் மேல் தெளிக்கப்பட்டது. இவ்விதமாக யாவேயும் இஸ்ரவேல் மக்களும் ஒன்றாக்கப் பட்டார்கள் (லேவி. 19:2; உபா. 6:4–9 பார்க்கவும்). இந்த ஒப்பந்தங்களில் அல்லது





இஸ்ரவேலர் எகிப்திலிருந்து கானானுக்குச் சென்றிருக்கக்கூடிய மூன்று பாதைகள் நிலப்படத்தில் காட்டப்பட்டிருக்கின்றன. வழி வழியாகச் சொல்லப்பட்டு வரும்ப ாதை – – – – → – – – – → என்று காட்டப்பட்டுள்ளது.

உடன்படிக்கைகளில் எல்லாம் உயிரான இரத்தம் சடங்கின் முக்கிய பொருளாக இருந்தது. நாமும் இயேசுவும், 'இணைந்து ஒன்றுகும்படி' தம்முடைய உயிரான இரத்தத்தை அவர் கொடுத்தார் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

மோசேயின் சட்டங்கள் கவனமாக ஆராயப்பட்டிருக்கின்றன. அவற்றை ஹம்முரபியின் விதிகளோடு ஒப்பிட்டுப் பார்த்திருக்கின்றனர். மோசேக்கும் பல நூற்றுண்டுகளுக்கு முன்னதாகவே அருகிலிருந்த நாடுகளில் இப்படிப்பட்ட சட்டங்களை நன்கு அறிந்திருந்தனர். ஆகவே மோசே தம்முடைய மக்களுக்குக் கொடுத்த சட்டங்களில் சில பகுதி. ள் ஹம்முரபியின் சட்டங்களைப்போல் இருந்ததில் வியப்பு ஒன்றுமில்லை. தெல்—எல்—அமார்னு, இராஷ் ஷாம்ரா பாளங். ளிலிருந்து இக்காலத்தில் எபிரேயர்கள் எழுதும் கலையை அறிந்திருந்தனர் என்று கண்டுகொள்கிறேம்.

**பயணம் சென்றவர்கள் யார்?**

இந்தப் பயணம் குறித்து அடிக்கடி கேட்கப் படும் இன்னெரு கேள்வியும் உண்டு. எகிப்தி



ஹம்முரபியின் சட்டங்கள் பொறிக்கப்பட்ட தூண்


லிருந்து வாக்குப்பண்ணப்பட்ட நாட்டிற்கு எத்தனைபேர் புறப்பட்டுச் சென்றனர்? திரு



தூணின் மேல் பாகத்தில் ஹம்முரபி நின்றுகொண்டு, ஷமாஷ் என்ற சூரிய தேவனும் நீதியின் தேவனுமாகக் கருதப்பட்டவனிடமிருந்து சட்டங்களைப் பெற்றுக் கொண்டிருப்பதைக் காட்டும் படம்.

மறையில் சுமார் இருபது இலட்சம் மக்கள் புறப்பட்டுச் சென்றதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது அவர்கள் கூட்டம் கூட்டமாகப் பயணம் செய்தபோது அக் கூட்டத்தின் நீளம் சுமார் ஆயிரம் கிலோ மீட்டர் இருந்திருக்கவேண்டும்! சில அறிஞர்கள் எபிரேய மொழியிலிருந்து மொழி பெயர்ப்பு செய்ததில் பிழை ஏற்பட்டிருக்கலாம் என்கிருர்கள். அறுநூறு ஆயிரம் ஆண்கள் என்பது அறுநூறு குடும்பங்கள் என்றிருக்கவேண்டும் என்று அவர்கள் கருதுகிருர்கள். அப்படியென்ருல் ஐயாயிரம் அல்லது ஆருயிரம்பேர் புறப்பட்டுச் சென்றிருக்கவேண்டும். அவர்கள் வாழ்ந்த கோசேன் நாட்டில் அவ்வளவு பேர்தான் வாழ இடமிருந்திருக்கும். எகிப்தியர்கள் வரலாறுகளில் இந்நிகழ்ச்சியை முக்கியப்படுத்திக் குறிப்பிடத்தக்கதாக அவர்கள் எண்ணிக்கையும் அவ்வளவு ஏராளமானதல்லபோலும்.

தெரிந்த விவரங்களும் தெரியாத விவரங்களும் எப்படியும் இருந்துவிட்டுப் போகட்டும். இப்பயணம் மோசேயின் தலைமையில் 'அடிமைத்தன வீட்டை' விட்டுத் தப்பி ஓடும் ஒரு முயற்சியாக இருந்தது. அதுதான்



பார்வோன் தம் அரியணையில் வீற்றிருக்கிறார். மோசேயும் ஆரோனும் அவர் முன் நிற்கிறார்கள். யாவேயைத் தொழ தம் மக்களை அனுமதித்து அனுப்புமாறு மோசே பார்வோனைக் கேட்கிறார். படத்தில் வேறு யாரெல்லாம் இருக்கிறார்கள் என்று கண்டுபிடியுங்கள்.

நம் கவனத்தைக் கவருவதாகும். மோசே என்னும் சிறந்த விடுதலை வீரர் யாவே மேல் வைத்திருந்த நம்பிக்கையாலும், யாவே செய்துகொண்ட மேலான ஒப்பந்தத்தாலும் இஸ்ரவேலருக்கு யாவேயைப் புரிந்து கொள்ளும் ஆற்றலை அளித்தார். அதனால் மக்கள் அதற்குப்பின் வரும் நூற்றாண்டுகளிலும் அவர் தங்கள் கடவுள் என்றும், தங்கள் அவரால்தெரிந்து கொள்ளப்பட்ட மக்கள் என்றும் அறிந்துள்ளார்கள்.

## அப்பயணம்

### என் மக்களைப் போகவிடு!


தம் மக்கள் யாவேயைத் தொழும் உரிமைக்காக மோசே விடுத்த வேண்டுதல்கள் யாவும் செவிடன் காதில் ஊதிய சங்காக முடிந்தது. பார்வோன் உள்ளம் அவர்களுக்கு விரோதமாகப் பாறாங்கல்லாக இறுகிக்கொண்டு வந்தது. எகிப்தியர்களுக்கு எத்தனையோ விபத்துகள் (வாதைகள்) வந்தபோதிலும் பார்வோன் முடியவே முடியாது என்று மறுத்துக் கூறிவிட்டார். இந்த நி ழ்ச்சிகளை எழுதிய நூர்லாசிரியர் அவற்றை அற்புதங்கள் என்று கருதி அப்படியே வருணித்துள்ளார்.

ஆனால் தொடர்ந்து வந்த இந்த வாதைகள், இயற்கைக் காரணங்களாலேயும் உண்டாகியிருக்கலாம். சாதாரணமாக நீல நதியில் தண்ணீர் வற்றிப்போனால் அவ்வித வாதைகளை எதிர்பார்ப்பது உண்டு. அதனாலேயே அரசரின் பிடிவாதம் தளராமல் இருந்திருக்கலாம். இவ்வரலாற்றை எழுதியவர் நீல நதியைப்பறறி நன்றாக அறிந்தவராயிருக்கிறார்; அதன் நீர் இருண்ட சிவப்பு நிறமாயும், குடிக்க முடியாததாயும், துர்நாற்றம் வீசுவதாயும் இருந்ததையும், ஆயிரக்கணக்கான தவளைகள் அதில் கத்திக் கொண்டு இருந்ததையும், அதிலிருந்த ஈக்கள்,

கொசுக்கள் படைகளையும், அவற்றினால் ஆடு மாடுகளுக்கு ஏற்பட்ட நோய்களையும் நன்றாய் அறிந்திருக்கிறார்; சிறுவரும் விலங்குகளும் உள்ளங்கால் தொடங்கி உச்சந்தலை வரை உண்டாகிய கொப்பளங்களால் அவதியுறுவது சாதாரணமான நிகழ்ச்சியாகும்; ஆலங் கட்டி மழையால் பயிர்கள் அழிக்கப்படுவதுண்டு; ஆயிரக்கணக்கான வெட்டுக்கிளிகள் பெரும் படையாய் சிறகுகளின் சல சலப்பால் காதுகள் செவிடாகும்படியான பேரிரைச்சலோடு வந்து சூரியனையே மறைத்துவிடும்; அவை வந்து இறங்கி ஓர் இலை, புல்கூட விடாமல் சாப்பிட்டுவிட்டு அப்படியே தரிசு நிலங்களில் கணுக்கால்ஆழத்துக்குச் செத்து, அழுகி நாற்றம் எடுத்துக்கொண்டு கிடக்கும். வெப்பமான மணற்காற்றினால் ஏற்பட்ட தீங்குகளையும் நாம் நினைத்துப் பார்க்கவேண்டும். அது இரண்டு மூன்று நாட்களுக்குத் தொடர்ந்து அடித்து எங்கும் இருள்மயமாகச் செய்துவிடும். இறுதியாக வந்தது மிகப் பயங்கரமான கொள்ளைநோய். இப்படித் தொடர்ந்து வாதைகள் ஒன்றை அடுத்து ஒன்று வந்ததும் கடைசியில் கொடிய கொள்ளைநோய் பரவினதும், பார்வோன் மனதை மாற்றவும் அவர் இஸ்ரவேல் மக்களைப்போக விடவும் ஏதுவாயிருந்தன.

**பஸ்கா**

விடுதலைக்காக அவர்கள் ஒன்பது மாதங்கள் காத்திருந்தனர். அவதியுற்ற இஸ்ரவேல் மக்களுக்கு அடிமைத்தளையில் இருந்த அந்தக் கடைசி இரவு எளிதில் மறக்க முடியாத ஒன்றாக அமைந்தது. பஸ்கா பண்டிகை என்று இதை இஸ்ரவேல் மக்கள் கொண்டாடினார்கள். இந்தப் பண்டிகை இஸ்ரவேலர் எகிப்திலிருந்து வெளியேறியதற்கு முன்னதாகவே கொண்டாடப்பட்ட ஒன்றுதான். நாடோடிகள் இளவேனிற் காலத்தில் கொண்டாடிவந்த பண்டிகை இது. இப் பண்டிகையின்போது தங்கள் தெய்வங்களின் தயவைப் பெறுவதற்காக ஆடுகளின் தலையீற்றைப் பலியிடுவது வழக்கம். ஆட்டுக்குட்டியின் இரத்தத்தைக் கூடார வாசலில் தெளிப்பார்கள். இதன் மூலம் கொள்ளைநோய்கள், பொல்லாத ஆவிகள் உள்ளே வராமல் தடுக்க முடியும் என நம்பினர். அடிமைத்தனத்திலிருந்து வியத்தகு விதத்தில் கிடைத்த விடுதலையினால் இஸ்ரவேலருக்கு இப்பண்டிகை மெய்ம்மை வாய்ந்ததாக மாறிவிட்டது. (கிறிஸ்துவின் பஸ்கா பலி அதை எல்லாருக்கும் மீட்பு அருளும் ஒரு பண்டிகை ஆக்கினது.)



வாதைகளில் மூன்று—தவளைகள், வெட்டுக்கிளிகள், முதற்பேறான ஆண் பிள்ளை மரணம்

பஸ்கா பண்டிகையன்று ஆட்டுக்குட்டியை அடித்துச் சுட்டு, அதைப் புளிப்பற்ற அப்பங்களோடும் கசப்பான கீரையோடும் சாப்பிடுவார்கள் (புளிப்புச் சத்து அப்பத்தை அழுகச் செய்கிறது என்று கருதப்பட்டபடியால் அது பலியிடுவதற்கு உகந்ததல்ல). பயண உடை தரித்து எச்சமயமும் புறப்படத் தயாராக இருக்கும்படி மக்களுக்குக் கட்டளையிட்டிருந்தார் மோசே. விரைவாக நடந்து செல்வதைத் தடுக்காதவாறு மேலாடைகளை இடுப்பில் செருகியபடி காத்துக்கொண்டிருந்து நின்றுகொண்டே சாப்பிட்டார்கள். சாதாரணமாக சப்பணம் போட்டு அமர்ந்து, ஒரே பாத்திரத்தில் விரல்களைவிட்டு உணவை எடுத்துச் சாப்பிடுவது அவர்களின் வழக்கம். அன்று அவர்கள் மிகவும் அவசரமாகப் பயணப்பட்டிருந்ததால் நள்ளிரவில் புறப்படுவதற்கு உத்தரவு கிடைத்தபோது சுடாத ரொட்டிகளை மாப்பிசைகிற தொட்டிகளில் எடுத்துக்கொண்டு அவர்கள் ஓட்டமாய் ஓடவேண்டியதாயிற்று! பல ஆண்டுகள் சென்ற பிறகும் எகிப்தில் சாப்பிட்ட இந்த இறுதி விருந்தை நினைவில் வைத்திருந்து, தங்கள் குழந்தைகளுக்கும் பேரப்பிள்ளைகளுக்கும்கூட இவர்கள் சொல்லிவந்தது ஆச்சரியமில்லை. மூன்றும் புத்தகத்தில் பஸ்கா பண்டிகைபற்றி இன்னும் அதிகம் படிக்க இருக்கிறோம்.



எகிப்தை விட்டுச் செல்லுமுன் அவசரமாகச் சாப்பிடுதல்

## பயணம் தொடங்கிற்று

இத்தகைய பதட்டமான நிலையில் அநேக நாட்கள் காத்திருந்த பிறகு அவசர அவசரமாக எகிப்திலிருந்து வெளியேறிப் பயணப்பட்டார்கள். மோசே ஏற்கெனவே கண்டுபிடித்து வைத்திருந்த பாதை வழியே மக்களை அழைத்துக்கொண்டு போனார். வணிகக் கூட்டத்தினர் உபயோகிக்கும் சூர் வனாந்தர வழியிலும் பெலிஸ்தியர்களின் வழியிலும் செல்லக்கூடாதென்று அவர் விரும்பியிருப்பார் (நிலப்படத்தைப் பாருங்கள்). தலைவர் என்பதற்கு அடையாளமான கோலைப் பிடித்துக்கொண்டு பல ஆண்டுகளுக்குமுன் ஆபிரகாம் சென்றதுபோல இவரும் முன்னாலே நடந்து சென்றார். அவர் கையிலிருந்த கோல் அநேகமாக வாதுமை மரத்தால் செய்யப்பட்டிருந்திருக்கலாம் (எண். 17: 1–10).

மோசேயின் வேண்டுகோள்களோடு இணைந்து ஒன்றன்பின் ஒன்றாக நடந்த நிகழ்ச்சிகளுக்குப்பின் இஸ்ரவேல் மக்கள் தங்களை விட்டுப் போனால் போதும் என்று எகிப்தியர் எண்ணத் தொடங்கினர் என்பது தெளிவாகிறது. அடிமைகளுக்குத் தங்கள் அணிகலன்கள், நகைகள், உடைகளை எல்லாம் கூட மாட்டினார்கள். யோசேப்பின் உடலை வாக்குப் பண்ணப்பட்ட நாட்டில் அடக்கம் பண்ணுவதாக யோசேப்புக்கு அன்று அவர்கள் கொடுத்த வாக்கை மறக்கவில்லை. வாசனைப் பொருட்களில் பொதிந்து பாதுகாக்கப்பட்ட அந்த உடலை வைத்திருந்த கனமான சவப்பெட்டியோடு எடுத்துச் சென்றனர். இப்போது உண்மையாகவே தாங்கள் விடுதலை பெற்றவர்கள் என்ற உணர்வு அவர்களுக்குள் உதயமாயிற்று. மோசேயின் கடவுள் தங்களுடன் இருக்கிறார் என்பதும் அவர்களுக்குத் தெளிவாகத் தெரிந்தது.

அக்கினி ஸ்தம்பத்தையும் மேக ஸ்தம்பத்தையும் நாம் விவரித்துச்சொல்ல இயலாது. இரவில் பயணம் செய்த பயணிகள் வழக்கமாகத் துணிக்கந்தையை அல்லது மரத்துண்டுகளை எண்ணெயில் தோய்த்து இரும்புக் கூண்டுகளுக்குள் வைத்து நீண்ட கோல்கள் நுனியில் கட்டித் தூக்கிப் பிடித்துச் செல்வதுண்டு. இன்னொரு விளக்கம் என்னவென்றால் கருத்த மேகங்களின் ஓரங்களில் உள்ள வெள்ளை மேகங்களிலிருந்து மின்னல் ஒளி வருவதுண்டு. சீனாய் தீபகற்பத்தில் இக்காலத்திலும் இதைக் கண்டிருக்கிறார்கள்.

எதுவாக இருந்தாலும் இஸ்ரவேலர் அதை வரவேற்றனர். ஏனெனில் அவர்கள் இருண்ட பாலைவனத்திலும், பாறைகளில் காணப் பட்ட நிழல்களிலும் இருந்த பொல்லாத ஆவிகளைக் குறித்து மூடப் பயம்கொண்டவர் களாய் இருந்தனர்.

## நாணல் கடலைக் கடத்தல்

செங்கடலோடு ஆழமற்ற ஆறுகளால் இணைக்கப்பட்ட ஏரிகளில் ஒன்றை இஸ்ர வேலர் அடைந்தனர். செங்கடல் ஆரம்பிக்கும் இடம் இன்று இருப்பதைவிட இன்னும் வடக்கே தள்ளி இருந்திருக்கலாம். இந்தக் கடலுக்கு நாணல் ஏரி அல்லது நாணல் கடல் என்பது பெயர். நிலப்படங்களில் செங்கடல் என்று குறிப்பிடப்பட்டுள்ள கடலும் இந்த ஏரியும் ஒன்று என்று நினைத்துவிடக் கூடாது. இஸ்ரவேலர் திட்டமாக எந்த இடத்தில் இந்த ஏரியைக் கடந்தார்கள் என்று தெரியவில்லை. சூயெஸ் வளைகுடாவுக்கு வடக்கே உள்ள கசப்பு ஏரியின் தென் முனையில் கடந்திருக்கலாம். அக்காலத்தில் சங்கிலித் தொடர்போல் இருந்த ஏரிகள் ஊடாக இன்று சூயெஸ் கால்வாய் செல் கின்றது. யாத்திராகமம் 14:21ல் குறிப்பிடப் பட்டுள்ள கீழ்க்காற்று தென்கிழக்குக் காற்றாக இருக்கவேண்டும். இது தண்ணீரை வடமேற் காக அடித்துச்சென்று கடக்கக் கூடியதான ஆழமற்ற இடத்தை உண்டாக்கியிருக்கும். எகிப்திய இரதங்கள் சகதியில் மாட்டிக் கொள்ளவும் திரும்பி வந்த தண்ணீரில் அவை மூழ்கிவிட்டன. பொதுவாக மக்கள் நம்புவது போல் பார்வோன் மூழ்கிவிடவில்லை.



எகிப்தியரின் இரதங்கள் சகதியில் மாட்டிக்கொண்டன

விடுதலை பெற்று விட்டதால் ஏற்பட்ட மட்டற்ற மகிழ்ச்சியைக் கொண்டாட இஸ்ரவேலருக்காகக் களிப்பு நிறைந்த பாட் டொன்று பாடப்பட்டது (யாத். 15:1–21 வசனங்களைத் திருத்திய மொழிபெயர்ப்பில் படியுங்கள்). இங்கு எபிரேயக் கவிதைகளின் நயம் மிளிர்கிறது. பல நூற்றாண்டுகளுக்குப் பின் இது எழுதப்பட்டபோதிலும் இதில் மூலப்பாடலின் பகுதிகளும் இருக்கின்றன.

## இஸ்ரவேல் மக்கள் முறுமுறுக்கின்றனர்

நாணல் கடலைக் கடந்து வந்து விட்டார் கள்; தொடர்ந்து வந்த பகைவர்கள் தொலைந்து விட்டனர். இதற்குப் பின்னர் இஸ்ரவேல் மக்களின் பயணம் கடினமானதா யிருந்தது. இது அப்போது அவர்களுக்குத் தெரியாது. கண்ணுக்கெட்டிய தொலை வெல்லாம் மணற் பரப்பு, தண்ணீர் குறைவு, உணவு பற்றாக்குறை, வழியில் உள்ள மக்கள் தொல்லை வேறு, களைப்பு உண்டாக்கும் கொடிய வெயில், கடும் குளிர். அவர்கள் பயணத்தைத் தொடர்ந்து பார்த்துக் கொண்டு செல்லும்போது இவர்களை விடு வித்தவரான மோசேயின் பின்னணியையும் வளர்ப்பு முறையையும் நாம் மறந்துவிடக் கூடாது. மோசே அறிவுத்திறன் படைத்த வரும் நல்ல கல்வி அறிவு உள்ளவரும் அனுப வம் வாய்ந்தவருமான தலைவர். மக்களைப் புரிந்துகொள்ளும் பண்பும், ஆணையிடும் திற மும் இவருக்கு இருந்தது நல்லதாய்ப் போயிற்று. ஏனெனில் அம்மக்களை வழி நடத்துவதும் நடத்திக்கொண்டு போவதும் எளிதானதல்ல. எகிப்திலிருந்தபோது சில வழிபாட்டைக் கற்றுக்கொண்ட இஸ்ர வேலர் யாவேயோடு தொடர்பற்ற நிலையில் இருந்தார்கள். அவர்களை மீண்டும் யாவே யிடம் அழைத்து வர மோசே விரும்பினர். சங்கடமோ, ஆபத்தோ வந்தபோது அவர்கள் மோசேயைத்தான் குறை கூறினார்கள். ஒரு சமயம் பசுந்தரையும் நீரூற்றுகளும் இருந்த ஏலிமை விட்டுப் புறப்பட்டபோது உணவுத் தட்டுப்பாடு உண்டாயிற்று. உடனே அவர் கள் மோசேயின் மேல் குறை கூறினர். அப் போதே தங்களுக்கு உணவு அளிக்கச் சொன் னார்கள். அவர் பொறுமையாக, அவர்கள் மன்னாவையும் காடைகளையும் அடையத் தக்கதாக அவர்களை வழிநடத்தினர். பாலை நிலத்திலுள்ள தர்பா எனப்பட்ட ஒருவித மரங்கள்மேல் பூச்சிகளின் சுரப்பினால் தேன் போன்றதும் பசைத் தன்மை உள்ளதுமான நீர் காணப்படும். அது வெண்மையான செதிள்போன்ற இனிப்புப்பொருளாக உறை வதுதான் மன்னாவாகும். அதை வேக



தர்பா மரத்தடியில் மன்னு சேகரித்தல்.
வலதுகைப் பக்கத்திலுள்ள படம்
மன்னுவைப் பெரிதாக்கிக் காண்பிக்கிறது.


வைத்து வடிகட்டின பின் புளிப்பில்லாத அப்பங்களோடு சாப்பிடலாம். ஓர் ஓமர் அளவு என்பது ஆறு லிட்டர். காடைகள் மேலோங்கி வீசும் காற்றில் அலைசடிபட்டு களைத்து வந்து வனந்தரத்தில் விழும். அப்போது அவைகளை எளிதில் பிடித்து விடலாம். இன்றும் இடம் மாறிச்செல்லும் இக்காடைகள் சீனுய் வனந்தரம் வழியாய்ப் பறந்துபோகும்போது இவற்றை வலைகளை விரித்து எகிப்தியர்கள் பிடிக்கிருர்கள்.

அவர்கள் நடந்து ரெவிதீமுக்கு வந்தார்கள். இன்று இந்த இடம் எங்கிருக்கிறதென்று நமக்குத் தெரியவில்லை. இங்கு வருமுன் தங்களிடமிருந்த தண்ணீரையெல்லாம் உபயோகித்து விட்டபடியால் அவர்கள் தண்ணீர்த் துருத்திகள் காலியாய் இருந்தன. மீண்டும் அவர்கள் மோசேயிடம் முறையிட்டார்கள். மீண்டும் அவர்கள் தேவையை அவர் நிறைவு செய்தார். அவர் அடித்த அந்தக் கன்மலை தண்ணீரை உறிஞ்சிவைக்கும் சுண்ணும்புப் பாளமாக இருக்கலாம். அவ்விதம் அடித்தவுடன் தண்ணீர் பாய்ந்து வந்தது. மோசே மக்களிடம் யாவே அவர்கள் தேவைகளைக் குறித்து எவ்வளவு அக்கறை உள்ளவராய் இருந்து, அவர்களைப் பராமரித்து வருகிருர் என்பதைத் தெளிவாக்க எவ்விதம் முயற்சி செய்தார் என்பதைக் கவனியுங்கள்.

பாறைகள் அங்குமிங்குமாய்ச் சிதறிக் கிடந்த கொதிக்கும் மணற்பரப்பு சலிப்பூட்டும் அளவுக்கு முடிவற்றதாய்த் தெரிந்திருக்கலாம். வழிநெடுக சீக்கிரம் உதிர்ந்து போகக்கூடிய இளவேனிற்காலக் காட்டு மலர்கள் அழகாக இருந்தாலும் இவை இஸ்ரவேலருக்குக் களிப்பூட்டவில்லை (ஏசா. 35ம் அதிகாரம் பார்க்கவும்). ஆனுல், பாலைப் பசுந்திடல்களும், நிழல் நிறைந்த வறண்ட காட்டாறுகளும், உயர்ந்த மரங்களும் அவர்களுக்குத் தேவையான நீரையும், நிழலையும் கொடுத்து இளைப்பாறச் செய்தன. சீனுய்க்கு அருகில் அவர்கள் தங்கத்தக்க அளவு அகலமானதாக ஒரு பள்ளத்தாக்கு இருந்தது. அங்கு உள்ள கருங்கல் மலைத்தொடர்கள் கவர்ச்சியற்றவையாய் இருப்பதால் அது அவர்கள் தங்கும் இடமாக இருந்திருக்க முடியாது என்று ஆராய்ச்சியாளர் சிலர் நினைக்கிருர்கள். அது ஏதோமில் இருந்திருக்கலாம். ஏனெனில், இங்கு எரிமலைகள் உண்டு. அவை இஸ்ரவேலருக்கு மலைப்பூட்டுபவையாக இருந்திருக்கும். காதேஸ் என்ற இடம் எங்கிருந்தது என்றும் திட்டமாக நமக்குத் தெரியவில்லை. ஏதோமில் உள்ள பெத்ரா என்ற இடமாக இருந்திருக்க



காடைகள்



பயணத்தின்போது இஸ்ரவேலர் பாலைப் பசுந்திடலில் தங்கி இளைப்பாறினார்கள்

லாம் என்கின்றனர். இது 'ரோஜா போன்ற சிவப்புப் பட்டணம்; காலத்தால் மிகவும் பழமையானது' என்றும் சொல்லப்பட்டது. இன்னும் வடக்கே தள்ளிப்போனால் தர்பா எனப்பட்ட மரங்கள் ஏராளமிருக்கின்றன. இந்த மரங்கள்தான் அந்நாட்களில்கூட மன்னாவை அளவில்லாமல் கொடுத்திருக்கலாம். எனவே, நிலப்படத்தில் காட்டப்பட்டிருப்பதைவிட இன்னும் சற்று வடக்கே தள்ளி இந்த இடம் இருந்திருக்கவேண்டும் என்கின்றனர். இது சூர், பாரான், சீன் வனாந்தரங்களுக்கு இடையே வடபாகத்தில் உள்ள பெரிய பாலைப் பசுந்திடல் பகுதியில் இருந்திருக்கலாம். அமாலேக்கியர் ஏற்கெனவே அங்குக் குடியேறியிருந்தார்கள். ஆகவே, அதை அடைய ஒரே வழி போர் செய்து வெற்றிபெறுவதுதான். சண்டையைப்பற்றிய விவரங்களிலிருந்து தெரிய வருவதுபோல் மக்கள் மோசேயையே வெற்றி வாங்கித் தர அதிகமாக நம்பியிருந்தபோதிலும், யோசுவா கண்ட வெற்றி அவரும் போர்த்தலைவர் என்பதை உறுதிப்படுத்திற்று.

'நியாயாதிபதி'யான மோசே

இங்கு இருந்தபோதுதான் எத்திரோ கொடுத்த நல்ல அறிவுரையை எடுத்துக்கொண்டு அதன்படி சிறுசிறு பொறுப்புகளை மற்றவர்களிடம் விட்டுவிட்டு மிக முக்கியமான காரியங்களை மட்டுமே மோசே கவனித்து வந்தார். எத்திரோவின் அறிவுரையை மோசே உடனே ஏற்றுக்கொண்டார் என்பது அவருடைய நல்லறிவையும் தாழ்மையையும் காட்டுகிறது.

இந்த ஏற்பாட்டால் வாக்குப்பண்ணப்பட்ட நாட்டை உளவுபார்க்க ஆட்களை அனுப்ப திட்டமிட அவருக்கு நேரம் கிடைத்தது. இன்னும் முன்னேறிச் செல்வதற்குள், இலக்கை அடைய இன்னும் எவ்வளவு தூரம் இருக்கிறது? அவர்கள் நுழைவதற்கு அது எப்படிப்பட்ட இடம்? என்றெல்லாம் அறிந்துகொள்ள வேண்டியதிருந்தது. எதிர்காலத்தில் அது நன்மை தரக்கூடியதா? அங்கு என்னென்ன ஆபத்துகள் இருக்கலாம்? அவர்களைத் தாக்குவதற்காகப் பதுங்கியிருக்கும் எதிரிகள் எப்படிப்பட்டவர்கள்? அவர்கள்மேல் வெற்றிகொள்ள முடியுமா? என்றெல்லாம் திட்டமிட வேண்டியதிருந்தது. உளவு பார்க்கச் சென்றவர்கள் எப்ரோனுக்கு அருகேயுள்ள எஸ்கோல் என்னும் வறண்ட காட்டாற்றுப் பகுதியிலிருந்து திராட்சைக் குலைகளைக் கொண்டுவந்தனர். கானான் 'பாலும் தேனும் ஓடும் தேசம்' என்று அவர்கள் கானான் நாட்டை வருணித்தது விளக்கு

வது எதையென்றுல், அந்த நாடு வளமான நாடு; தண்ணீர் பாய்ச்சலுள்ள நாடு; வன வளம் நிறைந்த நாடு; குடியிருப்பதற்கு ஏற்ற செழிப்பான நாடு; இவ்வளவு ஆண்டுகள் அலேந்து திரிந்த பிறகு இப்படிப்பட்ட நாட்டில் வாழ்வது மனதுக்கு மகிழ்ச்சியைத் தரும்.

ஆனல், எல்லேகளேக் கடந்து அருகில் செல்ல அவர்கள் இன்னும் எத்தனேயோ ஆண்டுகள் காத்திருக்க வேண்டியதாயிற்று. இன்னும் பல நிகழ்ச்சிகள் அவர்கள் வாழ்க்கையில் நிகழ வேண்டியதிருந்தது.

### கட்டளேகள்


இப்படி அவர்கள் அலேந்து திரிந்த நாட்களில் ஒரு சமயம் மோசே தம் கடவுளோடு பேச தம் மக்களே விட்டுவிட்டு மலேக்கு ஏறிச் சென்றுர். அங்கு தம் கட்டளேகளே உருவாக்க அவர் தெய்வீக ஊக்கம் பெற்றுர் என்பதாக நாம் படிக்கிறேம். அவை சிறிய கற்பலகைகளில் எழுதப்பட்டு எளிதாக எடுத்துச் செல்லும் வகையில் இருந்திருக்கலாம். அவர் எகிப்திய பள்ளிக்கூடங்களில் கற்றுக்கொண்ட விதிகளே நினேப்பூட்டும் வகையில் இந்த விதிகள் இருந்தன. 'இறந்தவர்கள் நூல்' என்ற புத்தகத்தில் கண்ட விதிகளுக்கு ஒத்த விதிகள் இவை. மோசேயின் காலத்திற்குப் பல ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த ஹம்மூரபி அமைத்த சட்டங்களேப் போன்றிருந்தன. ஆனல், முக்கிய வேறுபாடு ஒன்றிருந்தது. அது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. மோசே தம்முடைய கட்டளேகளேச் சமயச் சார்புடையவையாக, யாவேயை வழிபடுவதோடு இணேந்தனவாய் அவர் தம் மக்களேப் பராமரித்து வருவதையும் தம் மக்களிடம் அன்புகூட காட்டுவதையும் ஏற்றுக்கொள்ளும் வகையிலும் அமைத்திருந்தார்.

மக்கள் மோசேக்காகப் பல நாட்கள் காத்திருந்ததில் களேப்படைந்து விட்டனர். எப்போதும்போல் மோசே காலந்தாழ்த்துவதற்கு அவர்மேல் குறை கூறினுர்கள். தங்கள் தலேவர்களிடம் போய் தங்களால் கற்பனே செய்து பார்ப்பதற்குக் கடினமானவராயிருந்த யாவேயின் உருவத்தை ஒரு சிலே வடிவில் சமைத்துத் தரச்சொல்லி வற்புறுத்திக் கேட்டனர். ஆரோன் ஆசாரியராக இருந்தார். எனவே இப் பொறுப்பு அவரைச் சார்ந்ததாயிற்று. ஒருவேளே மோசே இனி திரும்பி வரமாட்டார் என்று அவரும் எண்ணிப் பயந்திருக்கலாம். யோசுவா மோசேயோடு இருந்தார். எனவே ஆரோன் பொன்னுல் ஒரு கன்றுக்குட்டியை அமைத்துக் கொடுத்தார். எருது வடிவான வழிபாட்டுக்கான உருவம் இஸ்ரவேலர் பார்த்துப் பழக்கப்பட்டிருந்த ஒன்றுகும். மோசேக்குக் கடுங்கோபம் வந்தது. தாம் இல்லாத சமயம் இவ்வளவு சீக்கிரமாக மக்கள் தாம் சொன்னவைகளே மறந்துவிட்டார்களே என்று மனமுறிந்து மனக்கசப்படைந்தார். தம் பொறுமையை எவ்வளவு சோதிக்கிறுர்கள் என்று கவலேப்பட்டார். இப்பொழுது ஆரோன் கொடுத்த தெளிவற்ற சாக்குப் போக்கைக் கவனியுங்கள். பொன் காதணிகளேயெல்லாம் நெருப்பில் போட்டேன், 'இந்தக் கன்றுக்குட்டி வந்தது' என்றுர். ஆரோன் இத் தவற்றில் தம் பங்கைக் காணத் தவறிவிட்டார்.

### ஆசரிப்புக் கூடாரம் என்பது என்ன?


மோசே மக்களுக்கென்று இன்னும் சில விவரங்களேக் கொண்டுவந்தார். இப்போது அவரிடம் யாவேயின் கட்டளேகள் இருந்தபடியால் அவற்றை ஓரிடத்தில் வைக்கவேண்டும்; கடவுள் தங்களே விட்டுப் பல காலம் விலகி விட்டார் என்று இஸ்ரவேலர் ஒரு நாளும் சொல்லாதவாறு கடவுள் வந்து தங்கக்கூடிய தான ஓர் இடத்தை அமைக்கவேண்டும். எனவே அவர்கள் கூடி வருவதற்கான ஒரு கூடாரத்தை அமைத்தனர். அது பரிசுத்த இடம் அல்லது ஆசரிப்புக் கூடாரம் என்னும் பெயர்பெற்றது. வனுந்தரத்தில் அமைக்கப்பட்ட கூடாரம் ஒருவேளே திருமறையில் வர்ணிக்கப்பட்டுள்ளவண்ணம் அவ்வளவு நுட்பமாக அமைக்கப்படாமல் இருந்திருக்கலாம். அடுத்த பக்கத்தில் உள்ள படம் அது எப்படிப் பட்டதாய் இருந்திருக்கலாம் என்பதை உங்களுக்குத் தெளிவாக்கும். அதன் உட்பக்கம் மக்கள் கொண்டுவந்து கொடுத்த பொன்னுலும் அணிகலன்களாலும் மெல்லிய துணிகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. வேறு சிலர் நறுமணம் வீசும் தூபவர்க்கத்தையும் எண்ணெயையும் கொண்டுவந்தார்கள். பெசலேலும் ஓகோலியாவும் கைதேர்ந்த வேலேயாட்கள். இவர்கள் கைத்திறம் இவர்களுக்கு யாவே அளித்த ஈவென்று சொல்லப்பட்டது (யாத். 36). வாகை மரத்தை வெட்டி அதனுல் ஒப்பந்தப் பெட்டகத்தைச் செய்தனர் (எகிப்திலிருந்து வெளியேறினதைப் பற்றிய சிறப்புக் குறிப்பைப் பாருங்கள்).

அதில் 'ஊரீம்', 'தும்மீம்' ('ஆம்'. 'இல்லே') என்ற பதில்கள் அடங்கிய பொருட்களும் ஏபோத்து உடையும் வைக்கப்பட்டிருந்தன (அத்தியாயம் 13 பாருங்கள்),



ஆசரிப்புக் கூடாரம்

பின்னர் பத்துத் திருக்கட்டளைகள் அதில் வைக்கப்பட்டது. பெட்டகம் அதிதூய இடத்தில் வைக்கப்பட்டது. பலிபீடத்தில் பன்னிரண்டு அப்பங்களும் ஏழு கிளைகளைக் கொண்ட பொன் குத்துவிளக்கும் இருந்தன. பிரயாணம் செய்யும்போது பெட்டகத்தை முதல் வரிசையில் செல்பவர்கள் எடுத்துச் செல்வார்கள். லேவியர் இனத்திலிருந்து தெரிந்தெடுக்கப்பட்ட ஆசாரியர் அதன்கூடச் செல்வார்கள். இவ்விதமாக மலைகளடர்ந்த நாடு, கொடும் வனாந்தரம் வழியாகயாவே அவர்கள் பார்க்கக்கூடியவாறு அவர்களுக்கு முன்னேபோய் அவர்களை நடத்திச் சென்றார். இஸ்ரவேலரின் சரித்திரத்தில் இப்பெட்டகம் ஒரு முக்கிய இடம் வகித்து வந்தது (1 சாமு. 4–7; 1 இரா. 8:1–9).



ஒப்பந்தப் பெட்டகம்

**பயணத்தின் முடிவு**

பெட்டகம் அவர்களுக்கு முன்னே செல்ல அவர்கள் பயணத்தின் இறுதிக் கட்டங்களில் 'மோசேயின் பள்ளத்தாக்கு' வழியாகச் சென்றார்கள். இன்று வரையில் அப்பெயருள்ள பள்ளத்தாக்கு ஒன்று இருக்கிறது. கீழே பெடோயீக்களால் பயிர் செய்யப்படும் சமவெளிக்குச் செல்லும் கணவாய்களில் இதுதான் வழிவழியாகச் சொல்லப்பட்டுள்ளபடி இஸ்ரவேலர் கடந்து சென்ற கணவாயாக இருக்கலாம். இஸ்ரவேலர் இப்பகுதியிலுள்ள ஓர் என்ற மலையில் தங்கினதாகத் தெரிகிறது. ஒருவேளை அகாபா வளைகுடாவின் வடக்கே தொண்ணூறு கிலோமீட்டர் தொலைவில் சேயீர் மலைத்தொடரில் ஏதோமில் இது இருக்கலாம். இங்குதான் இஸ்ரவேலரின் மூன்று தேசியப் பெருவிழாக்கள் முதல் முதல் கொண்டாடப்பட்டிருக்கலாம். அவை பஸ்கா பண்டிகை, பெந்தெகொஸ்தே பண்டிகை (பஸ்கா முடிந்தபின் ஐம்பது நாட்கள் அதாவது ஏழு வாரங்கள் கழித்து இது கொண்டாடப்படும்) என்ற தானிய அறுப்புக் கால விழா, கூடாரப் பண்டிகை—இதுவும் யூதர்களின் அறுப்புக் கால விழாவாகும். இதைக் கொண்டாடும்போது அவர்கள் தங்கள் பழைய காலப் பயண அலைச்சலை நினைவுகூர மலைகளின் உச்சியில் மரக்கிளைகளால் கூடாரங்கள் அமைத்து ஒரு வாரம் தங்குவார்கள். எபிரேயரின் வரலாற்றில் இப்பண்டிகைகளில் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. ஆனாலும் அவைகளின் தொடக்கக்கால முக்கியத்துவம் இன்னும் மாறவில்லை,

வாக்குப்பண்ணப்பட்ட நாடு அண்மையில் இருக்கிறது. இந்நேரத்தில் மோசே மோவாப் சமவெளியில் தம் மக்களிடம் விடை பெற்றுக் கொண்டு நெபோ மலைமேல் ஏறிவிட்டார். அவர் நுழைய அனுமதிக்கப்படாத நாட்டை இங்கிருந்துஅவரால் பார்க்க முடிந்தது. தென்மேற்கே உப்புக்கடலின் சமவெளிகள் இருந்தன; மேற்கே எரிகோ பட்டணம் இருந்தது; மலைகளிலிருந்து வரும் சிற்றாறுகளின் நீரைப்பெற்று வளைந்து வளைந்து ஓடும் யோர்தான் நதி வடக்கே இருந்தது. இவர் அடக்கம்பண்ணப்பட்ட இடம் யாருக்கும் தெரியாது. பாரம்பரியமாக ஓர் இடத்தைச் சொல்லுகிறார்கள். மோசேயை வரலாற்றுப் புகழ்பெற்ற ஒருவராக அறிகிறோம். அவர் சிறந்த சீர்திருத்தவாதி; ஓர் இனத்தை நிறுவியவர்; சட்டங்களை இயற்றிக் கொடுத்தவர்; கடவுளின் மனிதர்.

## விளக்கப் பயிற்சி

1. சீனாய் தீபகற்பத்தைப் படம் வரைந்து காண்பியுங்கள். இஸ்ரவேலர் பயணம் சென்ற வழியில் இருந்ததாகத் திருமறையில் கூறப்பட்டுள்ள இடங்களை அதில் குறிப்பிடுங்கள். இந்நூலில் சொல்லப்பட்டுள்ள வழியையும் வரையுங்கள்.
2. இஸ்ரவேலரின் பயணத்தைப் பதினைந்து தனிப் படங்கள் கொண்ட ஒரு திரைப் படச் சுருளாகத் தயாரியுங்கள்.
3. யாத்திராகமம் 15:1,2 வசனங்களைத் திருத்திய மொழிபெயர்ப்பில் உள்ளபடி மனப்பாடம் செய்யுங்கள். இது மிரியாமின் பாடலின் ஒரு பகுதியாகும்.
4. நீங்கள் பாலைவனத்தில் நடந்து சென்றதாக வைத்துக்கொண்டு, பயணத்தின் ஒரு பாகத்தையும் ஒரு பாலைப் பசுந்திடலில் வந்து சேருவதையும் விவரியுங்கள். மணலில் பாலைப் பசுந்திடலின் மாதிரி அமைத்துக் காண்பியுங்கள்.
5. மோசேயின் குணநலன்களைக் குறிப்பிடுங்கள். பொறுமையையும் தன்னடக்கத்தையும் எங்ஙனம் அவர் கற்றுக் கொண்டார்?
6. மோசே சண்டை வழக்கைத் தீர்த்து வைக்கும் ஒரு காட்சியைத் தயாரித்து நடியுங்கள்.

   அல்லது

   மோசேயையும் ஆரோனையும் வைத்து ஒரு நாடகக் காட்சி அமைத்து நடியுங்கள்.
7. ஆசரிப்புக் கூடாரத்தின் படம் வரையுங்கள் அல்லது அதன் மாதிரி ஒன்று தயாரியுங்கள். ஒப்பந்தப் பெட்டகம் என்றால் என்ன? அந்த ஒப்பந்தம் எது?
8. உளவு பார்த்து வந்தவர்கள் கூறியதை அந்த இடத்தில் நின்று கேட்டபடியே ஒரு வானொலி செய்தி தயாரியுங்கள். அதில் மோசே, யோசுவா, காலேப், உளவறிந்து வந்த மற்றவர்கள், மக்கள் முதலியவர்களைப் பற்றிக் கூறுங்கள்.
9. கானான் நாடு 'பாலும் தேனும் பாய்ந்தோடுகிற நாடாக'க் காட்சியளிக்கக் காரணம் என்ன?
10. பஸ்கா பண்டிகையைப் பற்றிய செய்திகள் அனைத்தையும் சேகரியுங்கள். பயணத்தோடு அது நெருங்கிய தொடர்புள்ளதாக ஆகக் காரணம் என்ன? இயேசு அதற்குப் புது உட்கருத்து அல்லது பொருள் எப்படிக் கொடுத்தார்?
11. எண்ணாகமம் 6:24—26ஐ எடுத்துக் கொள்ளுங்கள். இது நாம் நன்கு அறிந்த ஓர் ஆசீர்வாத ஜெபமாகும். ஆசீர்வாதம் கூறுதல் என்றால் என்ன? இந்த ஆசீர்வாதத்தை அழகாக எழுதி மனப்பாடம் செய்யுங்கள். நீங்கள் ஆராதனை ஒழுங்கு தயார் செய்யும்போது இதையும் அதில் பயன்படுத்துங்கள். இதை 2 கொரிந்தியர் 13:13ல் வரும் பவுலின் கூற்றோடு ஒப்பிட்டுப் பாருங்கள். நீங்களும் இதைப் போன்ற ஒன்றை எழுதுங்கள்.
12. உங்களுக்குப் பத்துத் திருக்கட்டளைகளைச் சொல்லத் தெரியுமா? அதைச் சுருக்கிக் கூறுவதுபோல நீங்கள் அறிந்திருக்கலாம். இல்லையென்றால் அப்படி எழுதி மனப்பாடம் செய்து கொள்ளுங்கள். இயேசு கூறிய ஆக்கமுறைக் கட்டளைகளையும் மனப்பாடம் செய்யுங்கள். நாம் என்ன செய்யவேண்டாம் என்று சொல்லாமல் என்ன செய்யவேண்டும் என்று அவர் கூறியுள்ளார். (யாத். 20:3—17; மத். 22:37—39 காண்க. இவற்றை ரோமர் 12:9—21; 13:8—10; எபே. 4:25—5:21 வசனங்களோடு ஒப்பிட்டுப் பாருங்கள்.)

அத்தியாயம் 10


# யோசுவா


*(எண். 13:17–33; 21:21–26; 22; 23; 24; நியா. 1:17,18,27–36; யோசு. 1:1–9; 2; 3:1,14–17; 5:10—6:27; 7:2–12,19–26; 8:1–29; 24:2–25; சங். 104:10–35; உன். 2:8–17)*

### கானான் நாட்டில் குடியேறினர்

மோசே இறந்தபின் இஸ்ரவேல் மக்கள் பல பிரிவுகளாகப் பிரிந்துபோக முற்பட்டார்கள். சிலர் முக்கிய இனப்பிரிவுகளை விட்டுத் தனித்துப்போனால் தாங்கள் எளிதில் நிலையான வாழ்க்கையை மேற்கொள்ள முடியும் என்று நினைத்தார்கள். சிலர் சுயநலத்தோடு எவ்வளவு நிலப்பகுதியைப் பறித்துக் கொள்ளமுடியுமோ அவ்வளவைக் கைப்பற்ற ஆவலாயிருந்தனர். வளப்பமான நிலத்தைப் பார்த்த மாத்திரத்தில் சிலர் இனி அலைந்ததுபோதும் என்று அங்கேயே தங்கி விட நினைத்தார்கள். இப்படித்தான் சிமியோன் இனப்பிரிவினரும் யூதா இனப்பிரிவினரும் வடமேற்காக நெகேப் வழியாகப் போய் எப்ரோனுக்கு அருகில் குடியேறச் சென்றார்கள் என்று பார்க்கிறோம். எப்ரோன், மலை அடிவாரத்திலுள்ள குன்றுகள் மேல் இருந்த அரண்காப்புகள் உள்ள ஒரு பட்டணம். மற்றவர்கள் யோர்தானின் கீழ்க் கரையோரமாகவே சென்று உப்புக் கடலுக்கு வடக்கே உள்ள இடத்திலும் கலிலேயாவுக்கு வடக்கே உள்ள பகுதியிலும் அதைக் கடந்தனர். உங்களிடம் உள்ள நிலப்படங்களில் இந்த இடங்களைக் கண்டு பிடியுங்கள். இதற்குள்ளாக அந்தப் பகுதியில் வாழ்ந்த மக்கள் இஸ்ரவேலரின் நடமாட்டமும், ஊடுருவலும் தனிப்பட கவனிப்பதற்கு உரியதாகும் என்றும் ஆபத்தானது என்றும் உணர்ந்து அவர்களை எதிர்ப்பதற்கு ஆயத்தப் படத் தொடங்கினர். மோவாப் நாட்டிலுள்ள எமோரியர்கள் மற்ற நாடுகள் மேல் படையெடுத்துச் செல்பவர்கள். இவர்கள் உடனே சீகோன் என்ற தங்கள் அரசர் தலைமையில் போரிட்டனர். போரில் இஸ்ரவேலர் வெற்றி பெற்றனர். அவர்கள் பாசான் நாட்டு அரசரையும் வென்று வாக்குப் பண்ணப்பட்ட கானான் நாட்டின்மேல் தொடர்ந்து படையெடுத்துச் சென்றனர்.

இவர்கள் பிடித்த கானான் நாடு ஆபிரகாம் காலத்திய கானான் நாட்டிலிருந்து மிகவும் வேறுபட்டதாய் இருந்தது. கடந்த எண்ணூறு ஆண்டுகளாக மற்ற நாட்டினரும் மக்களும் அதன்மேல் படையெடுத்துச் சென்று அங்கு குடியேறி விட்டனர். கூடாரங்கள் அடித்துத் தங்கியிருந்த இடங்கள் கிராமங்களும் நகரங்களுமாகவும், மதிலிடப்பட்ட பட்டணங்கள் இருந்த இடங்கள் அரண் காப்புகளமைந்த பட்டணங்களாகவும் மாறி விட்டன. அடிக்கடி பயங்கரமான போர்கள் நடந்து கொண்டிருந்தன. எகிப்திற்குக் கானான் நாட்டின் பெரும் பகுதிமேல் ஆதிக்கம் இருந்தது. பாபிலோனியரும் அசீரியரும் எகிப்துக்கு நிலவழியாகச் செல்வதற்கு ஒரு பாலம்போல் இருப்பதற்கு பலஸ்தீனாவைக் கைப்பற்றிக்கொள்வது எவ்வளவு முக்கியமானதாகும் என்பதை ஏற்கெனவே உணரத் தொடங்கியிருந்தனர். காத்சா, அஸ்கலோன் போன்ற கடற்கரைப் பட்டினங்களில் கிரேத்தா தீவிலிருந்து வந்த வலிமை வாய்ந்த ஒருபுதிய இனத்தினர் குடியேறியிருந்தனர். இவர்கள்தான் பெலிஸ்தியர்கள் எனப்பட்டவர்கள். இவர்கள் கடல் கொள்ளைக்காரரர். ஏறத்தாழ கி.மு. 1200ல் இவர்கள் நீல நதி கழிமுகத்திலிருந்து இரண்டாம் இராம்சேசால் விரட்டியடிக்கப் பட்டவர்கள். மத்தியதரைக் கடல் ஓரப் பகுதியில் இவர்கள் குடியிருக்க அந்த அரசர் அனுமதித்திருந்தார். அவர்கள் போர்க் கவசம் அணிந்து வட்டவடிவமான சிறுகேடயமும் கனமான வாளும் கையில் வைத்திருப்பார்கள். இறகுகள் சொருகியிருந்த அவர்கள் தலைப்பாகை ‘சிவப்பு இந்தியருடையதைப்போல்’ இருந்தது (62ம் பக்கம் பாருங்கள்). பல ஆண்டுகள் வரை இவர்கள்மேல் இஸ்ரவேலர்கள் வெற்றிகொள்ள முடியாமலிருந்தது. இறுதியாக இவர்கள் பெயரே இந்நாட்டுக்குச் சூட்டப் பட்டிருக்கிறது. இவ்விதமாகக் கானான் நாடு, பலஸ்தீனா நாடு


ஆசேர்
நப்தலி
தாண்
கானானில் இனப்பிரிவுகள்
குடியேறிய விதம்
கிலோமீட்டர்
0 20 40 60
சீதோன்
எர்மோன் மலை
தீரு
பெனிக்கேயா
ஆசேர்
நப்தலி
தாண்
காசோர்
மூன்றாம் குழு
செபுலோன்
கலிலேயாக் கடல்
இசக்கார்
தோர்
மெகித்தோ
தானாக்
பேத்சான்
கிலியாத்
மனாசே
மத்தியதரைக்கடல்
யாபோக்கு ஆறு
சீகேம்
யோர்தான்
எப்பிராயீம்
சீலோ
காத்
பெத்கோரோன்
ஆயி
கேசேர்
எரிகோ
இரண்டாம் குழு
பென்யமீன்
கில்கால்
தாண்
எருசலேம்
அஸ்கலோன்
கத்
லாகீஸ்
எப்ரோன்
ரூபன்
காத்சா
உப்புக்கடல்
பெலிஸ்தியா
யூதா
அர்னோன் ஆறு
பெயேர்ஷெபா
சிமியோன்
மோவாப்
முதற் குழு
செபுலோன்
இசக்கார்
மனாசே
எப்பிராயீம்
பென்யமீன்
யூதா
சிமியோன்
ரூபன்
காத்



பெலிஸ்தியப் போர்வீரர்

ஒரு நாடாக இருந்தது. ஆண்டு முழுவதுக்கும் தேவையான தண்ணீர் கிடைக்கத்தக்கதாக நாட்டில் நல்ல மழை பெய்தது. ஆடு மாடுகளுக்கு எளிதாகச் சரியான மேய்ச்சல் கிடைத்தது. இனி நாடோடி வாழ்க்கை மாறப்போகிறது. ஓர் இடத்தில் தங்கி, பயிர்த்தொழில் செய்து அவர்கள் தங்களுக்குத் தேவையான தானியங்களைப் பயிர்செய்து கொள்ளலாம். கானானியர் கோதுமை, பார்லி, பழங்கள், திராட்சை ஆகியவற்றை மலைச்சரிவுகளில் பயிரிட்டுக் கொண்டிருந்தனர். சமையலுக்கும், விளக்கெரிக்கவும், தேய்த்துக் குளிப்பதற்கும் தேவைப்படும் அருமந்த ஒலிவ எண்ணெயை அளிக்க ஒலிவத் தோப்புகள் இருந்தன. கட்டடங்கள் கட்டவும் கருவிகளும் சாதாரணமான கலப்பைகளும் செய்யவும் தேவையான பலவகை மரங்களும் அங்குண்டு. தட்டையான கூரையுடைய மண்குடிசைகளும் அங்கு இருந்தன. மதில்கள் உள்ள பட்டணங்கள் இருந்தன. ஒவ்வொன்றுக்கும் ஓர் அரசர் இருந்தார் (யோசு. 10:1–3 பாருங்கள்). இஸ்ரவேலர் பாகால் வழிபாடு (அதாவது மூடநம்பிக்கைகளும் பயிர்களுக்கான தெய்வங்கள்மேல் நம்பிக்கையும்) அங்கு இருந்ததைக் கண்டனர். அத்தெய்வங்களை வழிபட சாதாரணமாக மலைகளின் உச்சியில் 'மேடைகள்' எனப்பட்ட சிறப்பான திறந்தவெளி பலிபீடங்களும் தொழுகையிடங்களும் அல்லது தோப்புகளும் இருந்தன. நரபலியும் கொடுக்கப்பட்டு வந்தது. பல கொடுமையான பழக்கங்களும் அவர்களிடையே காணப்பட்டன.

அதாவது பெலிஸ்தியர்களின் நாடு என்றுயிற்று.

கானானியர்கள் சிலை வணக்க மக்கள். இவர்களை இஸ்ரவேலர்கள் வெல்ல முடியாமற்போய், இவர்களிடையே ஊடுருவிக் குடியேறி கலப்பு மணம்கூடச் செய்து கொண்டபோது சிலை வணக்கத்தையும் ஏற்றுக்கொண்டனர். இப்பழக்கத்தினால் இஸ்ரவேல் மக்களின் ஒரே தெய்வ வணக்கமான யாவே வழிபாடு பாதிக்கப்பட்டது.

**கானானியர்கள் என்பவர்கள் யார்?**

இஸ்ரவேலர் தொடர்ந்து போர் தொடுத்து வந்தபோது அவர்கள் கண்டது என்ன? (சங். 104; உன். 2:8–17 பாருங்கள்.) இது அவர்களுக்கு உண்மையாகவே பாலும் தேனும் வழிந்தோடுகிற



தமஸ்குவிலும் பெனிக்கேயாவிலும் கண்டுபிடிக்கப்பட்ட பாகாலின் உருவச் சிலைகள்

தங்கள்மேல் படையெடுத்து வந்தவர்களுக்கு வியாபாரத்தையும், வேளாண்மையையும் குறித்து கானானியர் கற்றுக்கொடுக்கக் கூடியவை பல இருந்தன என்பதை நாம் நினைவிற் கொள்ளவேண்டும். கானானியர்கள் சிறந்த கைவினைஞர்களாகவும், வணிகர்களாகவும் இருந்தனர். வாசனைத் தைலங்களையும், வாசனைப் பொருட்களையும் எகிப்துக்கு விற்று அங்கிருந்து தங்கத்தையும் வெள்ளி ஆபரணங்களையும் மட்பாண்டங்களையும் வண்டு வடிவத் தாயத்துகளையும் வாங்கிக் கொண்டார்கள். கானானிய வணிகக் கூட்டத்தார் படங்கள் எகிப்தியச் சுவர்களில் காணப்படுகின்றன. அவற்றில் கானானியர் பகட்டான சட்டை அணிந்தவர்களாயும் உலோகத்தாலான ஆயுதங்களையும் இசைக் கருவிகளையும் கைகளில் வைத்திருப்பவர்களாயும் காணப்படுகிறார்கள். அவர்களுடைய வணிகப் பொருட்களைக் கழுதைகள் சுமந்து சென்றன. ஆப்பு வடிவமுள்ள எழுத்துக்கள் (39ம் பக்கம் பார்க்கவும்) எழுதிக் காய வைத்த மட்பாளங்கள் மூலம் இவர்கள் பாபிலோனியர்களோடு கடிதத் தொடர்பு கொள்வதுண்டு. 1887ல் நீல நதிக்கரையிலுள்ள தெல்—எல்—அமார்னா என்ற இடத்தில் இப்படிப்பட்ட பாளங்கள் முந்நூறுபோல் கண்டுபிடிக்கப்பட்டன.

### தட்ப வெப்ப நிலை

அவர்கள் பயிர்த்தொழில் செய்து பிழைக்கும் புதிய வாழ்க்கை முறையை மேற்கொண்டபோது தட்ப வெப்ப நிலையும் அவர்கள் வாழ்க்கையையும் தொழில்களையும் பாதித்தது. ஆதி. 8:22ல் விதைப்புக் காலம், அறுப்புக் காலம், சீதள காலம், வெப்பக் காலம், கோடை காலம், மாரி காலம் என ஆறு பருவங்கள் இருந்ததாகக் காண்கிறோம்.

**விதைப்புக் காலம்:** பெப்ருவரி மாதத்தின் நடுவிலிருந்து ஏப்ரல் மாதம் வரையாகும். அப்போது வசந்த கால, முன் கோடை கால விதைப்பு நடைபெறும். இக்காலம் திருமறையில் 'புல்' என்று குறிப்பிடப்படும் காட்டுச் செடிகளும், பல வண்ணப்பூக்களுடைய செடிகளும் எல்லா இடங்களிலும் முளைக்கத் தொடங்கிவிடும்.

**அறுப்புக் காலம்:** மே மாதத்திலிருந்து ஜூன் மாதம் வரை ஆகும்.

**வெப்ப காலப் பழங்கள்:** ஜூன் மாதம் நடுவிலிருந்து ஜூலை, ஆகஸ்டுவரை பழுக்கும்.

**கோடை காலம்:** செப்டெம்பர், அக்டோபர் மாதங்களில் வீசும் சிராக்கோ எனப்பட்ட சூடு மிகுந்ததும் மூர்க்கமானதுமான காற்றால் வெப்பம் அதிகமாயிருக்கும். இக்காற்று அரேபியப் பாலைவனத்திலிருந்து வீசும் போது வறட்சியையும் கொண்டுவரும்.

**ஒன்றுமே விளையாத காலம் (மாரி காலம்):** நவம்பரிலிருந்து டிசம்பர் இறுதிவரையாகும். இக்காலத்தில் ஓர் இடத்திலாவது புல், பூண்டு, இலை காணமுடியாது. பூமி உழுவதற்கு ஆயத்தமாயிருக்கும்.

**குளிர் காலம் (சீதள காலம்):** ஜனுவரி, பெப்ருவரி மாதங்களில் குளிர் கடுமையாய் இருக்கும்.

ஆண்டின் கால வட்டம் இவ்விதம் இருந்தது.

பயிர்களைச் சார்ந்திருக்கும் எந்த நாட்டிலும் மழை மிக மிக அவசியம். கானான் நாட்டில் மே முதல் அக்டோபர் வரை மழையே கிடையாது. நிலம் வெயிலில் காய்ந்து கெட்டியாகி இருக்கும். பிறகு 'முன்மாரி மழை' பெய்யும் (எரே. 5:24). அதை அடுத்து நவம்பர், டிசம்பர் மாதங்களில் உழவு செய்வார்கள். 'பின்மாரி மழை' யூதர்களின் ஆண்டின் முதல் மாதத்தில் பெய்யும். இது நம் கணக்குப்படி மார்ச்சு, ஏப்ரல் மாதங்களாகும். (யூதர்களின் ஆண்டு நம்முடைய மார்ச்சு, ஏப்ரல் மாதத்தில் தொடங்கும்.) துன்பந்தரும் அனுபவங்கள் மூலமே இஸ்ரவேலர் இத்தட்ப வெப்ப நிலையின் இன்னல்கள் பற்றி அறிந்தனர். இதை அறிவதில் அநேகமாக அருகிலிருந்த மக்களின் ஆதரவு இவர்களுக்கு அவ்வளவாய்க் கிடைத்திராது. தாங்கள் தங்கிய நாட்டில் தங்களை உறுதிப்படுத்திக்கொண்டும், எல்லா திசைகளிலிருந்தும் தங்களைப் பலர் தாக்கினாலும் தங்களால் கைப்பற்ற முடிந்த பகுதிகளைப் பாதுகாத்துக் கொண்டும் இருந்த அதே சமயத்தில் இதையும் படிப்படியாகக் கற்றுக்கொள்ள வேண்டியதாயிற்று.

### வெற்றிபெறத் தொடங்குதல்

இது எப்படி இயலும் என்று நீங்கள் வியக்கலாம். அக்காலத்தில் எகிப்தியர்தான் இப்பகுதிகளை ஆண்டு வந்தனர் என்பதை நாம் நினைவுபடுத்திக் கொள்ளவேண்டும். ஆனால், இவர்கள் வலிமை குறையக் குறைய இவர்கள் படை கவனக் குறைவாக இருக்கத் தொடங்கியது. உடனே கானானிய அரசர்கள் ஆட்சியுரிமைக்காக ஒருவரோடொருவர் சண்டைபோடத் தொடங்கிவிட்டனர். இந்த உள்நாட்டுக் குழப்பம்தான் யோசுவாவுக்கும்

அவரோடிருந்த இனப்பிரிவினருக்கும் சில பகுதிகளைப் பிடித்து ஆளும் வாய்ப்பினை அளித்தது. ஆனால், கானான் முழுவதையும் பிடித்தாளப் பல ஆண்டுகளாயிற்று. ஏனெனில், செழிப்பான பள்ளத்தாக்குகளிலிருந்து கானானியரை வெளியேற்றுவது எளிதாயில்லை; அதுவுமல்லாமல் பட்டணங்களாலும் மலைத்தொடர்களாலும் இஸ்ரவேல் இனப்பிரிவினரே ஒருவரிலிருந்து ஒருவர் துண்டிக்கப்பட்டிருந்தனர்.

சில இனப்பிரிவினர் செழிப்பான கிலியாத் பகுதியில் தங்கிவிட்டனர். யோர்தானைக் கடந்து சென்றவர்கள் எஸ்டிரேலோன் சமவெளியினால் பிரித்து வைக்கப்பட்டனர். இதனால் மும்முனைகளில் கானானியர்களைத் தாக்க வேண்டியதாயிருந்தது. சிறுகச் சிறுகவே வெற்றி காணமுடிந்தது. யோசுவாவின் புத்தகத்தைப் படித்தால் இஸ்ரவேல் இனங்கள் எல்லாம் சேர்ந்து சட்டென எதிரிகளைத் தாக்கி வெற்றி பெற்றதுபோல் நமக்குத் தோன்றுகிறது. ஆனால், அப்படி நடக்கவில்லை. நியாயாதிபதிகளின் புத்தகத்தில் சொல்லப்பட்டு இருப்பதுபோல்தான் நடந்திருக்கலாம். அங்கு ஒவ்வொரு இனப்பிரிவும் படிப்படியாக ஆதிக்கம் பெற்றதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. எல்லா இனப்பிரிவுகளும் சேர்ந்து ஒரே தலைவரின்கீழ் ஒற்றுமையாகப் போரிடப் படிக்க அதிக காலம் பிடித்தது என்று காண்கிறோம்.

இக்காலக் கட்டத்தில் பலஸ்தீனாவின்மேல் படையெடுத்தவர்களைப்பற்றி முற்பகுதியில் குறிப்பிடப்பட்டதும் புகழ் பெற்றதுமான தெல்—எல்—அமார்னா 'கடிதங்களில்' சொல்லப்பட்டுள்ளது. எகிப்தை ஆண்ட பார்வோன்களும் பலஸ்தீனா நாட்டிலிருந்த எகிப்திய அரசாங்க அலுவலர்களும் ஒருவருக்கொருவர் எழுதிய கடிதங்களும் அத்தொகுப்பில் இருந்தன. பார்வோனுக்குச் சொந்தமான பட்டணங்களை 'ஹபீருகள்' அல்லது எபிரேயர்கள் பிடித்துவிட்டனர் என்ற புகார்கள் அவைகளில் காணப்படுகின்றன. அவற்றின் மூலம் படிப்படியாக நடைபெற்ற சூழ்ச்சிகள், நாடோடிகளாக வந்தவர்கள் நாட்டில் குடியேறியது, எகிப்தியப் படைகள் எல்லாம் விலகிக்கொண்டது போன்றவை நமக்குத் தெரியவருகின்றன. பலம் வாய்ந்த பட்டணங்களைக் கைப்பற்ற வேண்டியிருந்தது. போர்களைப்பற்றிச் சொல்லும்போது இப்பட்டணங்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இவற்றை நிலப்படத்தில் குறித்து அவற்றை எல்லாம் இணைத்தால் அவை எந்தெந்தப் பகுதிகளுக்கு அரணாக அமைந்திருந்தன என்பது தெளிவாகிறது. அவை கத், லாகீஷ், பேத்ஷெமஷ், சோகோ, அசெக்கா, எப்ரோன், கேரார், பெத்பெலெட், பெயேர்ஷெபா, தோர், தானாக், மெகித்தோ, பேத்சான், கேசேர், எருசலேம், எரிகோ. இவற்றில் சிலவற்றை இஸ்ரவேலர்களால் வெகுகாலம் பிடிக்கமுடியவில்லை. எடுத்துக்காட்டாக, எருசலேம் தாவீதரசரால் பிடிக்கப்பட்டது. எகிப்தின் அரசர் கேசேரைச் சாலொமோனுக்குப் பரிசாகக் கொடுத்தார் (1 இரா. 9:15,16).

யோசுவா பிடித்த அரண் காப்பிருந்த பட்டணங்களில் ஒன்று லாகீஷ். இது இரதங்கள் நிறைந்த பட்டணமாக அல்லது படைவீரர் நிறுத்தப்பட்டிருந்த இடமாக இருந்திருக்கலாம். இங்கு இக்காலத்திலும் நடைபெறும் புதை பொருளாராய்ச்சிகளிலிருந்து இது கி.மு. 5000 ஆண்டுபோல் இருந்த ஒரு பட்டணம் என்றும், வரலாற்றுச் சிறப்புடையது என்றும் தெரியவருகிறது. அடுத்த புத்தகத்தில் இதைப்பற்றிக் குறிப்பிடுவோம். ஆயி பட்டணத்தை யோசுவா நன்றாகத் தகர்த்தெறிந்துவிட்டதனால் இன்று அதன் இடிபாடுகளில் அதிகமாக ஒன்றும் நம்மால் பார்க்க முடியவில்லை. இரண்டாம் உலகப் போரில் 'எதிரிக்குப் பயன்படாதவாறு அழிக்கும் முறை' கையாளப்பட்டது. யோசுவாவும் அம்முறையையே பயன்படுத்தினார்.

## எரிகோவைப் பிடிக்கத் திட்டம்

எரிகோ என்றவுடன் நமக்கு யோசுவாவின் நினைவு வருகிறது. அது 'பேரீச்ச மரங்களின் பட்டணம்'. ஒரு முக்கிய வணிகப் பட்டணம் அது. பலஸ்தீனாவின் மையப் பகுதியைத் தம் கைவசம் கொண்டுவர வேண்டுமானால் எரிகோவைப் பிடிக்கவேண்டும் என்ற உண்மை யோசுவாவுக்குத் தெரியும். நிலப்படத்தைப் பார்த்தால் உங்களுக்கும் இந்த உண்மை புரியும். பட்டணத்தின்மேல் போர் தொடுக்குமுன் யோசுவா இரண்டு உளவாளிகளை அங்கு அனுப்பினார். அவர்கள் ராகாப் என்ற பெண்ணுடைய வீட்டின் தட்டையான கூரையில், சணல் தட்டைகளுக்குள் ஒளிந்திருந்தார்கள். இச்சணலின் நாரிலிருந்துதான் ஒருவிதமான துணி தயாரிக்கப்பட்டு வந்தது. கிறிஸ்து பிறப்பதற்கு ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே இந்த மெல்லிய ஆடைக்குத் திருமறையில் குறிப்பிடப்பட்டிருக்கும் நாடுகளில் அதிக மதிப்பிருந்தது என்று அறிவோம். ஆகையால் ராகாபின் தந்தைஒருநெசவாளராகவோ அல்லதுசாயங்காய்ச்சுபவராகவோ இருந்திருக்கலாம். உளவாளிகளை வீட்டுக் கூரையிலிருந்து இறக்கிவிட உபயோகிக்கப்பட்ட கயிறு சிவப்பு நிறமாயிருந்தது. அதனால் இந்த ராகாபின்

தந்தை சாயங்காய்ச்சுபவராக இருந்திருக்கக் கூடும் என்று நினைக்கத் தோன்றுகிறது. அவர் இரண்டு தொழில்களையும் செய்திருக்க முடியாது. ஏனெனில் அந்நாட்களில் மக்கள் தங்கள் பாரம்பரியத் தொழிலை மட்டுமே செய்துவந்தார்கள்; தொழில் திறமையும் தந்தையிடமிருந்து மகனுக்கு வழி வழியாகச் சென்றுகொண்டிருந்தது. கயிறுக்குக் கொடுக்கப்பட்ட சிவப்புச் சாயம் கர்வாலி மரத்தில் வாழ்ந்த ஒரு சிறு பூச்சியிலிருந்து தயாரிக்கப் பட்டிருக்கலாம்.

### ‘வெட்டாந்தரையில்’

அது ஏப்ரல் மாதம். யோர்தான் சமவெளி வழியாக யோசுவா எரிகோவை நோக்கித் தம் படைகளை நடத்திச் சென்றார். வெயில் கொளுத்தியது; மழை இல்லை. ஆனால் எர்மோன் மலையிலிருந்து உருகும் பனியால் யோர்தான் மட்டும் கரைபுரண்டோடிக் கொண்டிருந்தது. யோர்தான் என்ற சொல்லுக்கு ‘இறங்கி ஓடுகிற ஒன்று’ அல்லது ‘பாய்ந்து செல்லும் ஆறு’ என்பது பொருள். யோர்தானைக் கடப்பது இஸ்ரவேல் மக்களுக்கு இப்போது பெரும் பிரச்சினையாய் இருந்தது. ஏனென்றால் எரிகோவை அடைய வேண்டுமானால் யோர்தானைக் கடந்தாக வேண்டும். அவர்கள் அவ்வாற்றங்கரையை அடைந்துவிட்டார்கள். யோர்தான் கரையிலிருந்த சிறந்த இக்காட்டுப் பகுதி வெப்பம் மிகுந்ததாயும் சிங்கங்கள் நிறைந்ததாயும் இருந்தது. ஆற்றைக் கடப்பதற்கு ஆழமில்லாத ஓர் இடத்தைத் தேடினார்கள். யோர்தானின் படத்தைப் பார்த்தால் அவர்கள் பிரச்சினையும் அது தீர்ந்த விதமும் உங்களுக்குப் புரியும். ‘இஸ்ரவேலர் வெட்டாந்தரை வழியாய் இந்த யோர்தானைக் கடந்து வந்தார்கள்’ என்பதற்கு அடையாளமாக கில்காலில் பன்னிரண்டு கற்கள் நாட்டப்பட்டன. பல ஆண்டுகளுக்கு முன் இஸ்ரவேலர் மிக மிக நீண்ட பயணத்தைத் தொடங்கியபோது, நாணற் கடலைக் கடந்த சமயத்தில் யாவே அற்புதமான வகையில் உதவியதுபோல் இன்று யோர்தானைக் கடக்கவும் உதவினார் என்பதற்கு அவை அடையாளமாகும். ஒருவேளை யோசுவாவும் அவர் வீரர்களும் நின்றுகொண்டிருந்த வடபுறம் நிலச்சரிவு ஏற்பட்டு அந்த இடத்தில் ஆற்று நீரை அணையிட்டதுபோல் தேக்கியிருக்கலாம். இதுபோன்ற நிகழ்ச்சிகள் 1267, 1927 ஆண்டுகளில் நடைபெற்றிருக்கின்றன. அச்சமயம் யோர்தானின் நீர் தெற்கு நோக்கி ஓடி உப்புக்கடலுள் விழுந்துவிட்டது. இவ்விதமாக நடந்த இரு சமயங்களிலும் யோர்தானின் ஆழமற்ற





எரிகோவின் மதிற் சுவர்கள் இவ்விதம் இருந்திருக்கலாம்.

பகுதியின் வழியே பெரிய படை கடந்து சென்றிருக்கலாம்.

### எரிகோ வீழ்ந்தது

ஒப்பந்தப் பெட்டகம் முன்னே செல்ல, யோசுவாவின் ஆட்கள் எரிகோவை நோக்கி நடந்தனர். அவர்கள் வாள், கேடயம், வில், அம்புகளை எடுத்துச் சென்றனர். ஆசாரியர்கள் ஆட்டுக்கடாக்களின் கொம்புகளை மேலே தூக்கிப் பிடித்துக்கொண்டு போனார்கள். முன்னேறிச்செல்ல அறிவிப்புக் குறி கொடுக்கப்பட்டவுடன் இவர்கள் ஊக்கத்துடன் கொம்பை ஊதினார்கள். உடனே எரிகோவின் ‘மதில் இடிந்துவிழுந்தது’ என்று எழுதப்பட்டிருக்கிறது. அதிசயிக்கத்தக்க வண்ணம் மதில்கள் இடிந்து விழுந்திருக்கின்றன என்று புதைபொருளாராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். சிலர் நிலநடுக்கத்தால் அவை விழுந்தன என்கிறார்கள்; மதில் சுவரின் மேல்பாகத்தின் கனம் தாங்காமல் கீழ்ப்பாகம் தகர்ந்து உடைந்து ஒன்றன்மேல் ஒன்றாய் விழுந்திருக்கின்றன. மதிற் சுவர்கள் உட்புறச் சுவர், வெளிப்புறச் சுவர் என்று இரண்டு பாகங்களாகக் கட்டப்பட்டிருந்தன. உட்புறச் சுவர் மூன்றரை மீட்டர் கனமுள்ளது. அதைச் சூழ ஒன்றே முக்கால் மீட்டர் கனமுள்ள வெளிப்புறச் சுவர் இருந்தது. வெளிப்புறச் சுவரில்தான் வீடுகள் கட்டப்பட்டிருந்தன. அச்சுவர் சரிவின் ஓரத்திலுள்ள இடிபாடுகள் மேல் இருந்தபடியால் மேலிருந்த வீடுகளைத் தாங்கமுடியவில்லை.

சுவர்களுக்கிடையே மரக்கிளைகளும், அடி மரங்களும் வைக்கப்பட்டு, குறிப்பிட்ட சமிஞ்ஞை கொடுக்கப்பட்டவுடன் கொளுத்தப்பட்டன என்று ஒருசாரார் நம்புகின்றனர்; இதனால் அவை இடிந்து விழுந்திருக்கலாம்; நகரில் தீயும் மூண்டிருக்கலாம்.

யோசுவா இந்தப் பட்டணத்தை யாவேக்குப் 'படைத்து' விட்டார். முதற்பேற்றைக் கடவுளுக்குப் படைப்பதுபோல் முதலில் வெற்றிபெற்று அடைந்த இப்பட்டணத்தையும் முழுவதுமாக யாவேக்குக் கொடுத்துவிட்டார். பட்டணத்து மக்களைக் கொன்றுவிட்டு, அங்கிருந்த பொற் பாத்திரங்களை யாவேக்காக எடுத்துக்கொண்டு, பட்டணத்தை எரித்துத் தரைமட்டமாக்கினார். இப்படிச் செய்வது யாவேயை மகிழ்ச்சியூட்டும் என்றும், ஒப்பந்தத்தை, நிறைவேற்றுவதற்கு இது முதல்படி என்றும் நினைத்தார். இத்தகைய பலிகள் கடவுளுக்குத் தேவையில்லை என்று உணர இஸ்ரவேலருக்கு வெகு காலம் பிடித்தது.

அதன் பிறகு யோசுவா சீகேம் நோக்கிச் சென்று பெத்கோரோனில் கிபியோனியர்களை முறியடித்து, எப்பிராயீம் மலையில் ஒரு திடமான இடத்தைப் பெற்றார். அவர்களால் நெடுந்தொலைவு சுமந்துவரப்பட்ட யோசேப்பின் எலும்புக்கூடு சீகேமில் அடக்கம் செய்யப்பட்டது. இது இஸ்ரவேல் மக்களின் பொறுப்பான குணத்தைக் காட்டுகிறது. தங்களுக்கு நேரிட்ட துன்பங்கள், தொல்லைகள், அச்சங்கள் மத்தியிலும் அவர்கள் யோசேப்புக்குக் கொடுத்திருந்த வாக்குறுதியை நிறைவேற்றி விட்டனர்.

மோசே கூறிய அதே வார்த்தைகளை யோசுவாவும் கூறி இஸ்ரவேலர் யாவேக்குச் செய்யவேண்டிய கடமையை அவர்களுக்கு நினைவூட்டியதைக் கவனியுங்கள். 'நீங்கள் கர்த்தருக்குப் பயந்து, உத்தமமும் உண்மையுமாய் அவரைச் சேவித்து . . . கர்த்தரைச் சேவியுங்கள்' என்றார். இவ்விதம் செய்வதாக அவர்கள் உறுதி கூறினார்கள். ஆனால் அடுத்த அத்தியாயத்தில் நாம் காணப்போவதுபோல் அவர்கள் சீக்கிரமே இந்த வாக்குறுதியை மறந்து போனார்கள். கானானியர்களின் சிலை வணக்கத்திலிருந்த பரவச உணர்ச்சி அவர்களை மீண்டும் பிடித்தாட்டத் தொடங்கிற்று.

## விளக்கப் பயிற்சி

1. மோசே யோசுவாவுக்கு 'பலங்கொண்டு தைரியமாயிருங்கள்' என்று கூறிய அறிவுரையை அழகான எழுத்துக்களில் எழுதுங்கள் (உபா. 31:6).
2. யோசுவாவிலும் நியாயாதிபதிகளிலும், பலஸ்தீனாவை இஸ்ரவேலர் பிடித்த விவரங்களைப் படித்துப் பாருங்கள். நியாயாதிபதிகளில் எழுதப்பட்டுள்ள விவரங்களில் அதிக உண்மை இருக்கலாம் என்று நாம் நினைக்கத் தோன்றுவதற்கான காரணங்கள் எவை?
3. எரிகோ மதில்களின் குறுக்குவெட்டுப் படம் ஒன்று வரைக. அவை விழுந்ததன் காரணம்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?
4. ராகாபிற்கும் யோசுவாவின் ஆட்களுக்கும் நடந்த உரையாடலை நாடகமாக நடித்துக் காட்டுங்கள்.
5. இஸ்ரவேலர் 'வெட்டாந்தரை வழியாய் இந்த யோர்தானைக் கடந்து' சென்ற நிகழ்ச்சியை விவரியுங்கள்.
6. எரிகோவின்மேல் படையெடுத்துச் செல்லுமுன் யோசுவாவின் போர் வீரர் ஒருவர் எப்படியிருந்திருப்பார் என்று படம் வரைந்து காட்டுங்கள்.
7. இஸ்ரவேலரில் ஒருவர் நிலத்தை உழுவதுபோல் களிமண்ணால் மாதிரி ஒன்று தயாரியுங்கள்.
8. எரிகோவின் மதில்மேல் காவல் புரிந்த இரண்டு காவலர்கள் உரையாடுவது போல் உரையாடுங்கள்.
9. யோசுவா எரிகோவை யாவேக்குப் 'படைத்ததை'ப் பற்றி விவாதியுங்கள்.
10. இஸ்ரவேல் மக்கள் சீகேம் வரை யோசேப்பின் எலும்புகளைச் சுமந்து சென்று புதைத்தது ஏன்?
11. தெல்—எல்—அமார்னா மட்பாளங்களைப் பற்றி உங்களுக்கு என்ன தெரியும்? திருமறையில் சொல்லப்பட்டுள்ள நிகழ்ச்சிகளுக்கும் அவற்றிற்கும் உள்ள தொடர்பு என்ன?
12. பின்வருபவற்றை எழுதி மனப்பாடம் பண்ணுங்கள்: யோசுவாவுக்குக் கடவுளின் வாக்கு; யோசுவா இஸ்ரவேல் மக்களுக்கு முதல் முதல் கூறிய வார்த்தைகள்; இஸ்ரவேலரின் வாக்குறுதி.

அத்தியாயம் 11

# கிதியோன், தெபோராள், ரூத்

*(நியா. 2:11–19; 3:5–11; 4; 5; 6:1–6,11–40; 7; 8:1–27; ரூத்)*

தெபோராளின் தீரச்செயல்கள் பற்றி உரைநடையாகவும் (4ம் அதிகாரம்), கவியாகவும் (5ம் அதிகாரம்) இரு வரலாறுகள் இருக்கின்றன. திருமறையின் பழைய மொழிபெயர்ப்பில் மொழிநடையிலுள்ள இந்த வேறுபாடு தெளிவாகத் தெரியாதபடியால் இவற்றைத் திருத்திய மொழிபெயர்ப்பில் நீங்கள் வாசித்துப் பார்க்கவேண்டும். கிதியோனைப்பற்றியும் இரு வரலாறுகள் இருக்கலாம். அவை பிரிக்க முடியாத அளவுக்கு ஒன்றோடொன்று பிணைந்து நெருங்கிய தொடர்புடையவைகளாய் இருக்கின்றன.



சடாவின் கொம்பாலான எக்காளம். இனப் பிரிவுகளைப் போருக்கழைக்க இது ஊதப்பட்டது.

**எங்கும் பகைவர்கள்!**

எபிரேயர்கள் தங்கள் நிலங்களைக் கொத்தி தங்களுக்குத் தேவைப்பட்ட தானியங்களை எளிய முறையில் உற்பத்திசெய்யக் கற்றுக் கொள்ளும் காலத்தில் மேற்கூறிய நிகழ்ச்சிகள் நடைபெற்றன. அவர்கள் எப்பிராயீம் பீடபூமிப் பகுதியில் கூடாரங்கள் அடித்து சிறு சிறு கிராமங்களில் தங்கியிருந்தனர். திராட்சைரசமும், ஒலிவ எண்ணெயும் தயாரித்து வந்தார்கள். நாடோடி இனமாக் இருந்தவர்கள் விவசாயிகள் ஆகிவிட்டனர். அவர்களுக்கு இன்னும் ஏற்படக்கூடியதாயிருந்த மூன்று ஆபத்துக்களை நாம் மனதில் வைத்துக்கொள்ளவேண்டும்—அவை பாலைவனத்தில் வாழ்ந்த மக்கள் தொடுத்த முறையற்ற போர்களினால் வரக்கூடிய ஆபத்து; கானானியர்கள் தொடர்ந்து ஒன்றுபட்டு எதிர்த்து வந்ததனாலான ஆபத்து; பெலிஸ்தியர்களின் தொல்லைகளினாலான ஆபத்து. இந்த மூன்றாவது ஆபத்துதான் பெலிஸ்தியரை எப்படியாவது முறியடித்துவிட வேண்டும் என்னும் நோக்கத்துடன் சவுல் தலைமையில் எல்லா இஸ்ரவேல் இன மக்களையும் ஒன்றுபடச் செய்தது. ஆனால், தாவீதின் காலத்தில்தான் பெலிஸ்தியரை ‘முற்றிலுமாக முறியடிக்க முடிந்தது. இதற்குமுன் உள்ள காலத்தில் இந்தப் பன்னிரண்டு இனப் பிரிவுகளையும் ‘நியாயாதிபதிகள்’ என்னும் பெயர்பெற்றிருந்த தலைவர்கள் கட்டுப்படுத்தி, வழிநடத்தி, நெறிப்படுத்தி வந்தனர். அந்த நியாயாதிபதிகள் மாவீரர்களாயும், விடுவிப்பவர்களாயும், அறிவுரை கூறுபவர்களாயும் இருந்தனர். கிதியோனும் தெபோராளும் இதுபோன்ற நியாயாதிபதிகள்.

பல ஆண்டுகளாகவே மிதியானியர் இஸ்ரவேலருக்குத் தொல்லைகொடுத்து வந்தனர். இவர்கள் ஆபிரகாமுக்கு கெத்தூராள் பெற்றெடுத்த மக்கள் வழிவந்த இனத்தினர். இஸ்மவேலரோடு இவர்கள் திருமணம் செய்திருந்தனர். இரு இனத்தவரின் தாய்மொழியும் ஒன்றையொன்று ஒத்தவை. இவை இஸ்ரவேலர் பேசிய மொழியையும் ஒத்திருந்தன. மிதியானியர் பாலைவனத்தின் எல்லைப்புறங்களில் வசித்து, தங்களுக்கு விருப்பமான இடங்களில் எல்லாம் சுற்றித் திரிந்தார்கள். வாய்ப்பு கிடைக்கும்போதெல்லாம்

கொள்ளையும் அடித்தனர். விளைந்து கிடக்கும் வயல்களில் அப்படியே வெட்டுக்கிளிகள் விழுந்து அழிப்பதுபோல் மிதியானியர் சூறையாடினார்கள்; தங்கள் ஆடுகளையும், மாடுகளையும், ஒட்டகங்களையும்கூட ஓட்டிக்கொண்டு வந்து இஸ்ரவேலருடைய புல்வெளிகளில் மேயவிட்டார்கள்.

கையறு நிலையில் இஸ்ரவேலர் யாவேயை நோக்கிக் கூக்குரலிட்டார்கள். எல்லாம் நன்றாக நடந்த காலத்தில் இந்த யாவேயின் ஞாபகம் இல்லாமல் இருந்தவர்கள் இப்போது கதறினார்கள். அவர்கள் அன்னிய தெய்வங்களை வழிபட்டது யாவேயைக் கோபமூட்டிவிட்டது என்றும், அவர்கள் உடனே யாவேயிடம் திரும்பவேண்டும் என்றும் இன்னார் என்று தெரியாத தீர்க்கர் ஒருவர் எச்சரித்தார். கிதியோனுடைய தந்தைகூட விளைநிலங்களின் தெய்வம் என்று சொல்லப்பட்ட பாகாலை வழிபட்டார். அத்தெய்வத்துக்கு ஒரு கற்றூணும், பலிபீடமும் சின்னங்களாயிருந்தன. அசேரா என்ற மரத்தூணும் சில வேளைகளில் இருந்தது. அது செழிப்பைக் கொடுக்கும் தேவதையைக் குறித்தது (இடங்களுக்கான பெயர்களில் 'பாகால்' என்ற பெயர் சேர்ந்து வருவதைப் பல இடங்களில் காண்கிறோம். அதற்கு 'ஆண்டவன்' அல்லது 'தலைவன்' என்பது பொருள். எனவே, பாகால்—செபோன் என்றால் இருளின் ஆண்டவன் என்றும், பாகால்—ஆமோன் என்றால் செல்வங்களின் ஆண்டவன் என்றும் பொருள். இதுபோல் 'பாகால்' என்று வரும் இடப் பெயர்களைக் கண்டு பிடியுங்கள்).


ஊர் பேர் தெரியாத அந்தத் தீர்க்கர் பேச்சு எவ்வளவு உண்மையானது என்று உணர்ந்தவர்களில் கிதியோனும் ஒருவர். மிதியானியர்களின் கையில் அகப்படாமல் இரகசியமான ஓர் இடத்தில் கொண்டுபோய் அவர் தம் வயலில் விளைந்த கதிர்களைப் போரடித்துக் கொண்டிருந்தபோது இதைப்பற்றி அதிகமாய் நினைத்தார். காற்று வீசிப் பதரைத் தனிப்படுத்தக்கூடிய உயரமான களத்திற்கு அவர் செல்லப் பயந்து, ஒரு திராட்சைத் தோட்டத்தின் ஆலையின் பின்பக்கம் சென்றிருந்தார். பொதுவாகப் போர் அடிப்பதும், தூற்றிப் புடைப்பதும் களத்திலேயே நடந்துவிடும் (படங்களைப் பாருங்கள்). களம் தட்டையான பகுதியாயும், தடைகள் ஏதும் ஏற்படாமல் வேலை செய்யக்கூடியவாறு உயரமானதாயும் இருக்கும். கதிர்களை ஒரு பெரிய மரத்தடியினால் அல்லது சக்கரமில்லாததும் மரத்தினாலானதுமான வண்டியினால் அடிப்பார்கள். வைக்கோலை எல்லாம் பிரித்தெடுத்து ஓரிடத்தில் சேர்ப்பார்கள். பின் தானியத்தை ஓரிடத்தில் குவித்து வைத்து, பதர் எல்லாம் பறந்து போகும்வரை தூற்றுவார்கள். ஆனால், கிதியோன் திராட்சைரசம் பிழியும் ஆலையின் நீள் சதுரமான பள்ளத்திற்குப் பின் 'களம்' வைத்திருந்தார். இப்பள்ளத்தில் திராட்சைப் பழங்களைப் போட்டு, கால்களால் மிதித்துச் சாறு பிழிவார்கள். போரடிக்கவும் தூற்றவும் இது சரியான இடம் அல்லதான். ஆனால், திறந்தவெளியில் வைத்தால் கொள்ளைக்காரர் வந்து, தாக்கி, தானியத்தையும் எடுத்துப் போய்விடுவார்கள்; ஒருவேளை கிதியோனைக் கொன்றும் விடுவார்கள்.

## தலைவராக அழைக்கப்பட்டார்

களத்தில் வேலை செய்துகொண்டிருந்தபோது சிந்தனையில் ஆழ்ந்துவிட்டார் கிதியோன். அந்த நேரத்தில் ஒரு தேவதூதர் கர்வாலி மரம் ஒன்றின் நிழலில் உட்கார்ந்திருந்ததை அவர் கண்டார். அவர் கவலைகளையெல்லாம் நீக்கக்கூடியதாகச் சொல்லப்பட்ட வழி அவருக்கு அதிர்ச்சியளித்தது. கிதியோனாகிய அவர், மிதியானியர்களோடு போர் செய்யவேண்டும் என்று சொல்லப்பட்டது. பேரதிர்ச்சிக்குள்ளானார் கிதியோன். முதலாவது, வந்திருந்த தேவதூதருக்கு விருந்துபண்ண வேண்டும் என்றும், யாவேக்குப் பலிசெலுத்த வேண்டும் என்றும் அவர் நினைத்து, அவற்றிற்கான ஆயத்தங்



களத்தில் தானியம் தூற்றல்



திராட்சைரசம் பிழியும் ஆலையில் பழங்களை மிதித்து நசுக்குதல்

களைச் செய்யத் தொடங்கினர். பின் தம் கடமையைச் செய்யப் போனர். விரும்பி அழைத்தால் யாவே அவர்கள் பக்கம் இருப்பார் என்று இஸ்ரவேலருக்கு அவர் காட்ட வேண்டியதிருந்தது. தம்மோடு பத்து பேரைச் சேர்த்துக்கொண்டு தம் தகப்பனின் தெய்வங்களையும், பலிபீடத்தையும் தகர்த்து விட்டு அதே இடத்தில் யாவேக்கு ஒரு புதிய பலிபீடத்தை அமைத்தார். இது செயற்கரிய வீரச்செயல். கிதியோனின் தந்தை நல்ல அறிவாளி. 'பாகால் தானே தனக்காக வழக்காடிக் கொள்ளட்டும்' என்று சொல்லிவிட்டார். இதன்மூலம் தம் தெய்வங்கள் ஒன்றுக்கும் உதவாதவை என்றும், தம் மகன் செய்த யாவும் சரி என்றும் அவர் உணர்ந்துகொண்டார் என்பது தெளிவாகிறது. மக்களும் இதை உடனே புரிந்துகொண்டு கிதியோன் அழைத்தவுடன் போருக்குத் தயாராக அணி திரண்டனர். கிதியோன் எக்காளம் ஊதி, போர்க்கழைத்தார். எக்காளத் தொனி எல்லாரும் கேட்குமாறு மலைகளிலும் அவற்றைச் சுற்றிலும் தொனித்தது. கிதியோனுடைய பகைவர்களும் அதைக் கேட்டு போருக்கு ஆயத்தமாகிவிட்டார்கள்.

தம் பெரும் படையின் வீரர்கள் பலர் உள்ளத்தில் அச்சம் உள்ளவர்களாய் இருந்தார்கள் என்று அறிந்த கிதியோன் யாவே முன் நின்று தம்மை நடத்துகிறார் என்று உணர்ந்தார். நெஞ்சில் பயம்கொண்டு அஞ்சி நடுங்கிய கோழைகளான மூன்றில் இரண்டு பங்கு மக்களை வீட்டுக்கு அனுப்பிவிட்டார். இன்னும் பத்தாயிரம் பேர் அவரோடு இருந்தார்கள். அவர்களுக்கு இன்னும் சோதனை நடத்தினர். 'எதிரேயுள்ள புதரைக் கவனித்தபடியே' தண்ணீர் குடித்தவர்களே போருக்கு ஏற்ற வீரர்கள் என்று தம்மோடு நிறுத்திக்கொண்டார். ஆட்டுத்தோலைப் பற்றிய அற்புதத்தை அவர் கண்டிருந்தபடியால் யாவே தம்மோடு இருக்கிறார் என்ற உறுதி அவருக்கு இருந்தது.

**'கடவுளுக்காகவும் கிதியோனுக்காகவும்'**

கிதியோனின் பகைவர்களான மிதியானியர், அமாலேக்கியர்களோடும் கிழக்குப் பகுதிகளில் உள்ள நாடோடி இனங்களோடும் சேர்ந்துகொண்டனர். எஸ்டிரேலோன் சம

வெளியின் தெற்கு முனையில் உள்ள இஸ்ரியேல் பள்ளத்தாக்கில் அவர்கள் பாசறை அமைத்திருந்தனர் (நிலப்படத்தைக் கவனியுங்கள்). கில்போவா மலைச்சரிவில் இஸ்ரவேலர் பதுங்கி தயாராயிருந்தனர். நியாயாதிபதிகள் 7ம் அத்தியாயத்தில் நேர்முகமாகவும், தெளிவாகவும் போர்க் காட்சிகள் வருணிக்கப்பட்டுள்ளன. வடக்கே குடியிருந்த ஆசேர், செபுலோன், நப்தலி, மனாசே இனப் பிரிவுகள் ஒன்றுசேர்ந்து போரிட்டதைக் கவனியுங்கள். ஒரு பொது நோக்குக்காக இஸ்ரவேல் இனங்கள் ஒன்றுபடுவதற்கான அறிகுறியை இப்பொழுதுதான் முதன் முதலாகக் காண்கிறோம். எப்பிராயீம் இன மக்கள் தக்க சமயத்தில் வாக்குவாதம் பண்ணினார்கள். மிதியானியரோடு யுத்தம் பண்ணப்போனபோது தங்களை அழைக்காமல் விட்டுவிட்டதால் அவர்கள் குறைபட்டுக் கொண்டார்கள்.

சூழ்ச்சிகளினாலேயே போரில் வெற்றி கிடைத்தது. இருட்டுநேரத்தில் அமைதியாகப் போனதும், தீவட்டிகளைத் திடீரெனப் பானைகளிலிருந்து எடுத்தபோது அவை பேரொளி வீசியதும், எக்காள சத்தமும் எல்லாமுமாகச் சேர்ந்து பகைவர்களை அலறிக்கொண்டு ஓட வைத்தது. அவர்கள் தப்பியோடுவதற்கு இருந்த ஒரே வழி யோர்தானைக் கடந்து செல்வதுதான். இவ்வழியே இவர்கள் சென்றால் இவர்களைப் பிடித்துவிடுமாறு அங்கு இருந்த எப்பிராயீம் இன மக்கள் எச்சரிக்கப் பட்டிருந்தார்கள். சுக்கோத்திலும் பெனீயேலிலும் நடந்த நிகழ்ச்சிகள் அக்காலத்து முரட்டு பெடோயீக்களின் மூர்க்கத்தனத்தை நமக்கு நினைவூட்டுகின்றன. விரோதிகளின் நிர்வாணமான உடல்களை வனாந்தரத்து முட்கள் மேலும் முட்செடிகள் மேலும் போட்டு இழுப்பதாகக் கிதியோன் அச்சுறுத்தினார்.

ஏராளமான கொள்ளைப் பொருட்கள் இஸ்ரவேலருடைய கைகளில் சிக்கின. அவற்றில் ஒட்டகங்களின் சேணங்களும் பிறை போன்ற ஆபரணங்களும் இருந்தன. கண் திருஷ்டி படாமலிருப்பதற்காக இவை அணியப்பட்டன. கடுக்கன்களும் கிடைத்தன. அவற்றின் எடை சுமார் நாற்பது கிலோ இருந்தது. ஏபோத்து 'ஊரீம்', 'தும்மீம்' வைக்கப்பட்ட பை என்று நாம் நினைத்து வந்திருக்கிறோம். பின்னால் இது ஆடையின் ஒரு பகுதியைக் குறிப்பதைக் காண்போம். இங்கு ஒரு சிலைக்குப் பெயராக இருக்கிறது. கிதியோன் ஒரு சிலையை உண்டுபண்ணி அதை இஸ்ரவேலருக்குக் கொடுத்தார் என்னும் செய்தி நமக்கு வியப்பூட்டுகிறது. யாவேயைச் சிறப்பிக்க எண்ணியே இதை அவர் செய்தார். ஏனெனில், கண்ணுக்குப் புலனாகாத கடவுளை வணங்கும் கருத்துக்கு அவரோ அவருடைய இன மக்களோ இன்னும் பழக்கப்படவில்லை. இஸ்ரவேல் மக்கள் மறுபடியும் சிலைவணக்க மக்களாவதற்கு அதிக ஊக்கம் தேவையாயில்லை. யாவேயின் தயவால் வெற்றியைப் பெற்றது அவர்களுக்கு ஊக்கமளித்தது. சீக்கிரத்தில் அவர்களுக்கு வந்த அழிவுகளைக் கண்டு நாம் வியப்படையவே வேண்டியதில்லைதான்.

### ஒரு வீராங்கனை

தெபோராளின் பாடலைப் படிக்கும்போது இஸ்ரவேல் மக்களிடையே ஒற்றுமை அரும்பி வருவதைக் காண்கிறோம். ஏனெனில், தெபோராளுக்கும் பாராக்குக்கும் கீழே ஆறு அல்லது ஏழு இஸ்ரவேல் இனங்கள் சென்று சிசராவின்கீழ் படையெடுத்து வந்த கானானியர்மேல் வெற்றி கண்டன. இந்நிகழ்ச்சி நியாயாதிபதிகள் நான்காம், ஐந்தாம் அதிகாரங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. பலவேறுபட்ட காரணங்களுக்காக இந்த ஒன்றுபடும் முயற்சியில் இணைந்து செயல்பட முன்வராத மற்ற இனப்பிரிவுகளைக் கடுமையாகத் தாக்கிப் பேசுவதைக் காண்கிறோம்.

எஸ்டிரேலோன் சமவெளியில் மெகித்தோ என்னுமிடத்தில் போர் நடந்தது (நிலப்படத்தைப் பாருங்கள்). சிசராவைக் கீசோன் ஆற்றைக் கடந்து மெகித்தோவுக்கு வரும்படி செய்துவிட்டார் தெபோராள். தாபோர் மலையிலிருந்து பாராக்கு படையெடுத்துச் சென்றார். இரண்டு படைகளும் ஒருமுகப்பட்டு, பகைவர்களை ஆற்றை நோக்கி ஓடச் செய்துவிட்டன. புயல் மழையினால் கீசோன் கொந்தளித்துப் பொங்கிற்று. எகிப்தியர்களுக்கு நேர்ந்ததுபோல் கானானியர்களுடைய இரதங்கள் சகதியில் சிக்கிக்கொண்டன. அவர்களால் ஒன்றும் செய்யமுடியவில்லை. யாவே போரில் வெற்றி கொடுக்கும் வல்லமை மிக்க கடவுள் என்று போற்றப்பட்டார். தலை தப்பினால் போதும் என்று ஓடிவிட்டார் சிசரா.

ஓடி ஒளிவதற்குக் கூடாரத்தில் பெண்கள் தங்கியிருந்த இடமே சிசராவுக்குக் கிடைத்தது. கிழக்கத்திய பண்பாடு, ஒழுக்க நெறிப்படி பெண்கள் தங்குமிடத்திற்கு ஆண்கள் வருவது பெருந்தவறாகும். இப்படிப்பட்ட குற்றத்திற்குத் தண்டனை சாவுதான். சிசராவை யாகேல் கொன்றது சட்டப்படி சரியான செயலே! இதனால் சிசராவைக் கொன்றது சரி என்று நாம் சொல்லிவிட முடியாது. ஆனால் பகைவனைக் கொன்றதற்கான


அவர் நோக்கத்தை இது ஓரளவு விளக்குகிறது.

அவர் சிசராவுக்கு வெள்ளாட்டு மோரைக் கொடுத்தார். அதிலிருந்து வெண்ணெய் எடுக்கப்படாமலிருந்ததால் அது புளித்துப் போயிருந்தது. இது சாதாரணமாகப் பருகும் போதைதரும் பானமாகும். களைப்படைந்து வந்த சிசராவுக்கு இது ஓர் அசல் மயக்கமருந்தாக இருந்தது. கூடாரம் அமைக்கும்போது கூடார முளைகளை நிலத்தில் ஊன்றுவது பெண்களின் வேலையே ஆனபடியால் யாகேலுக்கு அதில் பழக்கம் இருந்தது. எனவே, சிசராவின் நெற்றியிலும் அப்படி ஒன்றை அடிப்பது அவருக்கு எளிதான வேலையாகவே இருந்தது. பாடலில் சிசராவின் தாயைப்பற்றி வரும் கேலிப்பேச்சுகள் வருத்தத்தை அளிக்கின்றன. ஆனால் தெபோராள் சிசராவைக்கொன்ற அக்கொடுஞ் செயலையே எண்ணி எண்ணிக் களிக்கின்றதாகத் தெரிகிறது.

தெபோராளின் பாட்டு திருமறையில் காணப்படும் மிகப் பழைமையான வேதப் பகுதியாய் இருக்கலாம். இந்த நிகழ்ச்சி நடந்தபோதே இப்பாடல் பாடப்பட்டிருந்தாலும் பிற்காலத்தில் அதை எழுதியவர்களிடம் அது பாடப்பட்டபடியே சொல்லப்பட்டதாகத் தெரிகிறது. கி.மு. 1200ம் ஆண்டிலிருந்து மாலை வேளைகளில் போர் வீரர்கள் பாசறைகளின் முன் நெருப்பேற்றிப் பாடல்கள் பாடி மகிழும்போது இதைப் பாடியிருக்கிறார்கள். பல நூற்றாண்டுகளாக இதன் பயங்கரத்தையும் உண்மையான வருணனைகளையும் நினைவுகூர்ந்து வந்திருக்கிறார்கள். இதை அவர்கள் அபிநயத்தோடும், காரி உமிழ்ந்தும், கத்தி வெற்றி முழக்கமிட்டும், வெறுப்புணர்ச்சியையெல்லாம் கொட்டியும் பாடியிருக்கலாம். பாட்டிற்குப் பின்னணியாக அக்காலத்திலிருந்த யாழ் அல்லது வேறு நரம்புக் கருவி வாசிக்கப்பட்டது. அதில் எழுப்பிய இசை மட்டுமே சோகமானதாய் இருந்தது.

### பண்பார்ந்த மங்கை

தெபோராளின் வரலாற்றுக்கு முற்றிலும் மாறுபட்டது ரூத்தின் வரலாறு. நியாயாதிபதிகளின் காலத்தில் ஒரு சமயம் இஸ்ரவேல் மக்கள் அந்த நாட்டின் தட்ப வெப்ப நிலைக்குப் பழகிப்போகாமலும், அது தங்கள் பயிர்த்தொழிலை எப்படியெல்லாம் பாதிக்கலாம் என்று அறியாமலும் இருந்த காலத்தில் உணவுப் பஞ்சம் ஏற்பட்டது. பஞ்சம் கொடியதாயிருந்ததால் இஸ்ரவேலர் தங்கள் ஊர்களை விட்டே வெளியேறினர்




எஸ்டிரேலோன் சமவெளியின் போர்க்களங்களைக் காட்டும் நிலப்படம்

கள். எலிமேலேக்கும் அவர்களைப்போல யூதாவின் பெத்லெகேமை விட்டுப் புறப்பட்டு, யோர்தானைக் கடந்து, லோத்தின் வழித் தோன்றல்கள் வாழ்ந்து வந்த மோவாப் நாட்டில் வந்து குடியேறினர். அங்கு அவர் தம் இரு மக்களையும் இழக்க நேரிட்டது. கடைசியில் அவரும் இறந்துபோகவே அவர் மனைவி நகோமி தம் இரு மருமகள்களான ரூத்தோடும், ஓர்பாளோடும் வசித்து வந்தார். ரூத்தும் ஓர்பாளும் மோவாபியப் பெண்கள்.

பத்து ஆண்டுகள் சென்றன. நகோமி தம் சொந்த ஊரான பெத்லெகேமுக்குத் திரும்பிச் செல்ல எண்ணினர். பெத்லெகேமில் அவர் கணவனுக்குச் சொந்தமான சொத்துக்கள் இருந்தன. ஓர்பாள் தம் இனத்தாரோடு தங்கிவிட நினைத்தார். ஆனால் ரூத்தோ நகோமியோடு செல்ல விழைந்தார். ரூத் 1:16,17 படித்துப் பார்த்தால் நகோமியோடு செல்வதற்காக அவர் எவ்வளவு அழகாக வாதாடிக் கெஞ்சினர் என்பது தெரியவரும்.

நகோமியைத் தமது அன்பால் வென்றுவிட்டார் ரூத். இருவரும் பெத்லெகேமுக்கு வந்து சேர்ந்தார்கள். உடனே நகோமி ரூத்தை எல்லோருக்கும் அறிமுகப்படுத்தி வைத்தார். தம்முடைய தெய்வமான கெமோஷை வேண்டாமென்று உதறித் தள்ளிவிட்டு இஸ்ரவேல் மக்களோடு யாவேயைத் தம் புதுக் கடவுளாக ஏற்றுக்கொண்டு வந்திருந்ததை விவரித்தார். போவாஸ் எலிமேலேக்கின் தூரத்து உறவினர். அவர் ரூத்தைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கவேண்டும். ஆகவே ரூத்தைக் கண்ட மாத்திரத்தில் அவர் 'கடவுள் உன்னேடிருப்பாராக' என்று வாழ்த்துவதைக் கவனியுங்கள். 'Good–bye' என்ற ஆங்கில வாழ்த்துக்கும் 'கடவுள் உன்னேடிருப்பாராக' என்றுதான் பொருள். ரூத் வயலில் தானியம் சேகரிக்கச் சென்றபோது (லேவி. 19:9), அதாவது அறுப்பவர்கள் விட்டுச்செல்லும் கதிர்களையும் தானியங்களையும் சேகரிப்பதற்கு அவர்கள் பின்னுல் நடந்து சென்றபோது போவாஸ் ரூத்திடம் அன்பாதரவாக நடந்துகொண்டார். அவர் சேகரிப்பதற்கு நிறைய தானியம் கிடைக்கும்படி பார்த்துக்கொண்டார்; குடிக்கத் தண்ணீர் கொடுத்தார்; தங்களோடு உட்கார்ந்து தாங்கள் சாப்பிடும் அப்பத்தைப் பகிர்ந்துகொள்ளவும், புளிப்பான திராட்சை ரசத்தில் அப்பத்தை நனைத்துச் சாப்பிடவும் அவரை அனுமதித்தார். இது உணவுக்குத் தனிச்சுவை அளிப்பதாகும். உண்ணுவதற்கு வறுத்த பயிறும் வைக்கப்பட்டிருந்தது. கதிர்களை நெருப்பில் வாட்டி பயற்றை வறுத்திருந்தார்கள். ரூத்தின் முக்காட்டில் அவர் ஒரு மரக்கால் தானியம் அளந்துபோட, அதை அவர் வீட்டுக்கு எடுத்துச்சென்றார். இந்த முக்காடு மெல்லிய துணியால் ஆனது அல்ல, நல்ல உறுதியான துணி. இதனுல் தலையையும் தோள்களையும் மூடலாம். ஒன்றரை மீட்டர் நீளமானது. முக்காட்டில் தானியம் முடிந்துகொண்டதால் ஆடையின் சைப் பாகத்தில் தொங்கும் நீளமான துணியால் முக்காடிட்டுக் கொண்டிருப்பார்.

பார்லி அறுவடையின்போதும், கோதுமை அறுவடையின்போதும் ரூத் இவ்விதமாகத் தானியம் சேகரித்துக் கொண்டிருந்தார். பிற்பகலிலிருந்து சூரிய அஸ்தமனம் வரை குளுமையான கடற்காற்று வீசிய நேரத்தில் களத்தில் ஆண்கள் நின்று வேலை செய்தனர்.

போவாசிடம் தமக்குப் பாதுகாப்பு வேண்டுமென்று உரிமையோடு ரூத் கேட்டார்.

'வேற்று நாடொன்றில் வந்து
வேதனை நெஞ்சில் மிஞ்ச
நலிந்த பேதைப் பெண்ணின்
நெஞ்சில் நுழைந்தார் போவாஸ்'

என்று ஒருவர் பாடியுள்ளார்.

நகோமி தம் சொத்துக்களை விற்க முடிவு செய்தார். கிழக்கத்திய வழக்கப்படி நெருங்கிய உறவினரே சொத்துக்களை வாங்கிக்கொண்டு ரூத்தை மணக்கும் உரிமை பெற்றிருந்தார். போவாஸ் இதைப்பற்றிப் பேச 'ஊர் வாசலுக்கு' சென்றார். நகோமிக்குப் போவாசைவிட மிக நெருங்கிய உறவினர் ஒருவர் இருந்தார். ஆனால் அவர் பொது மனிதர்கள் முன்பாகத் தம்முடைய உரிமையைத் தட்டிக் கழித்துவிட்டார். இதற்கு அடையாளமாக அவர் தம் காலணிகளைக் கழற்றிப் போவாசிடம் கொடுத்தார் (ரூத் 4:7). போவாஸ் அதை எல்லோருடைய கண்களுக்கும் முன்பாக உயர்த்திப் பிடித்தார். எனவே போவாஸ் நகோமியின் சொத்துக்களை வாங்கிக்கொண்டு ரூத்தை மணந்தார். பரிசப்பணமாகப் போவாஸ் நகோமியிடம் ஐம்பது ஷெக்கல் வெள்ளியைக் கொடுத்தார். ஒரு ஷெக்கல் சுமார் 11·04 கிராம் எடையுள்ளது.

ரூத்திற்கு ஓபேத் என்று ஒரு மகன் பிறந்தான். ஓபேத் ஈசாயின் தந்தை. இந்த ஈசாயின் மகன்தான் இஸ்ரவேலை ஆண்ட புகழ்பெற்ற தாவீது அரசர் (அத்தியாயம் 15 பாருங்கள்).

ரூத்தின் வாழ்க்கை வரலாற்றை எளிய வாழ்க்கைபற்றிய ஒரு காப்பியம் எனலாம். போர்க்களம் பல கண்டு புண்பட்டுப்

போயிருந்த கானுன் நாட்டின் அமைதியான கிராம வாழ்க்கையைச் சித்திரிக்கும் ஒரு அருமையான வரலாறு இது. தாம் தெரிந்து கொண்ட தம்முடைய சொந்த மக்களான இஸ்ரவேலரைப்பற்றி மட்டும் கடவுள் கவலேப்படாமல் எல்லோரைக் குறித்தும் அக்கறை உள்ளவராய் இருக்கிருர் என்பது இவ்வரலாற்றின் சிறப்புச் செய்தியாகும். ஏனெனில் தாவீதின் மூதாதைகளில் ஒருவர் இஸ்ரவேலரல்லாத இனத்தைச் சேர்ந்தவராக இருக்கிருர் என்று பார்க்கிறேம். இது எழுதப்பட்ட காலத்துக்கு முன் இதைப் பல முறை வாய்மொழியாக மக்கள் கேட்டு வந்திருக்கலாம். ஏனென்ருல் இதன் காலம் ஏறத்தாழ கி.மு. 1150. சுமார் எண்ணூறு ஆண்டுகள் கழித்தே இது எழுதப்பட்டது. இது மறைந்துவிடாமல் இதை எழுதி நமக்குப் பாதுகாத்துக் கொடுத்த அந்த எழுத்தாளர் ஞானமுள்ளவரென்று நாம் பாராட்ட வேண்டும்.

## விளக்கப் பயிற்சி

1. மிதியானியர்கள் இஸ்ரவேலர் கிராமம் ஒன்றின்மேல் வந்து தாக்கும் காட்சியைத் தயாரித்து நடியுங்கள்.
2. 'கடவுளுக்காகவும் கிதியோனுக்காகவும் எழுவோம்' என்று எழுதி வண்ணம் தீட்டுங்கள்.
3. ஒரு போர்வீரர் போருக்கான எக்காளம் ஊதுவதை மாதிரி செய்து காண்பியுங்கள். ஆசாரியர்களும் எக்காளம் ஊதுவதுண்டு. எரிகோவுக்குச் செல்லும் வழியில் ஒப்பந்தப் பெட்டகத்துக்குமுன் நடந்து சென்ற ஏழு ஆசாரியர்களில் ஒருவர் எக்காளம் ஊதுவதுபோல் படம் வரைந்து காண்பியுங்கள் (அத்தியாயம் 10).
4. கிதியோன் தோலேப்பற்றிய 'சான்றுக் குறி' கேட்டதன் முக்கியம் என்ன?
5. யுத்தத்துக்குச் செல்லுமுன் கிதியோன் செய்யக்கூடிய ஒரு ஜெபம் எழுதுங்கள்.
6. கிதியோனுடைய தகப்பன் பாகாலேயும், கிதியோன் யாவேயையும் தொழுது வந்ததெப்படி? தம்முடைய தெய்வத்தின் சிலேகள் உடைக்கப்பட்டுக் கிடந்த போது கிதியோனின் தந்தை பேசிய ஞானமுள்ள வார்த்தைகளேக் கூறுங்கள். அவை ஞானமுள்ள வார்த்தைகள் என்று நாம் கூறக் காரணம் என்ன?
7. ஒரு சிலேயை அமைத்ததில் கிதியோன் தவறு செய்துவிட்டார். இதை விவாதியுங்கள்.
8. இரவில் பாசறையின் முன் நெருப்பு மூட்டிப் போர் வீரர் சொல்லுவது போல கிதியோனின் வீரச்செயல்களே விவரித்துச் சொல்லுங்கள். ஒருவர்பின் ஒருவராக, முறைவைத்து, கேட்பவர்கள் மகிழக்கூடிய வகையில், தெளிவாகவும் விளக்கமாகவும் அதைக் கூறுங்கள்.
9. மெகித்தோவில் நடந்த சண்டையைத் தெபோராள் அல்லது வெற்றிகொண்ட போர்வீரர் ஒருவர் அல்லது தோற்றுப் போன ஒரு வீரர் அல்லது தெபோராளுக்குத் துணைபுரியாத ஒருவர் கூறுவதுபோல் கூறுங்கள்.
10. நகோமி, ஓர்பாள், ரூத் இவர்களேக் கொண்ட ஒரு காட்சி அமைத்து நடியுங்கள்.
11. ரூத்தின் உணர்ச்சிகளே வெளிப்படுத்தும் பாடலொன்று எழுதுங்கள்.
12. தெபோராளேயும் ரூத்தையும் அல்லது கிதியோனேயும் போவாசையும் ஒப்பிட்டுப் பாருங்கள்.



பெலிஸ்தியரோடு போரிடுதல்

அத்தியாயம் 12

# யெப்தாவும் சிம்சோனும்

*(நியா. 10:17,18; 11; 13; 14; 15; 16)*

யெப்தாவும் சிம்சோனும் இஸ்ரவேலர்களின் இரு 'நியாயாதிபதிகள்.' நியாயாதிபதிகளுடைய வேலை மக்களுக்கிடையே உள்ள சச்சரவுகளைத் தீர்ப்பதும், போர்க் காலங்களில் தளபதிகளாக இருந்து படைகளை நடத்துவதும், பொதுவாக மக்களுக்காக உழைப்பதும் ஆகும். மாலை வேளைகளில் கூடாரங்களுக்கு முன் தீ மூட்டி, அதைச் சுற்றியமர்ந்து, கதைகள் பேசும்போது, பலருடைய தீரச்செயல்களையும் பெயர் பெற்று விளங்கிய சிலரோடு தொடர்பு படுத்தியே பேசிவந்திருக்கலாம்.

### எண்ணாது கொடுக்கப்பட்ட வாக்கு

யெப்தாவின் வரலாறு, அவர் யோசிக்காமல் கொடுத்த வாக்கையும் அதன் துன்ப மிக்க விளைவுகளையுமே மையமாகக்கொண்டு பொதுவாகக் கூறப்பட்டு வருகிறது. ஆனால், தலைவராக அவர் ஆற்றிய பணியையும் நாம் கவனிக்க வேண்டும். அம்மோனியர்கள் லோத்தின் வழித் தோன்றல்கள். இவர்கள் அர்னோன் ஆற்றுக்கும், யாபோக்கு என்னும் சிற்றாற்றுக்கும் இடைப்பட்ட பகுதியில் யோர்தான் நதியின் கிழக்குக் கரையில் வசித்தனர். இவர்கள் யோர்தானைக் கடந்து யூதாவின் எல்லைகளுக்குள் நுழைந்து இஸ்ரவேலரைப் பின்னாகப் போகச் செய்தபின் கிலியாத் பகுதியில் இஸ்ரவேல் மக்களுக்கு எதிராக முகாமிட்டிருந்தனர். இஸ்ரவேல் மக்கள் தலைவர் இல்லாமல் என்ன செய்வதென்று அறியாது தவித்து நின்றனர். தலைமை ஏற்கத் தயங்கியிருந்த யெப்தா சிறிது வற்புறுத்தப் பட்டபின், இறுதியில் அம்மோனியரை எதிர்க்க ஒப்புக்கொண்டார்.

இவர் கடவுளுக்குக் கொடுத்திருந்த வாக்கைப் பாருங்கள். சில ஆண்டுகளுக்கு முன் யாக்கோபு செய்த பொருத்தனையைப்போல, இது ஒருவகையான பேரம். அக்காலத்தில் பொருத்தனை பண்ணிக்கொள்வது வழக்கமாயிருந்தது; கட்டுப்படுத்துகிறதாயும் இருந்தது. யெப்தாவின் மகள் வெற்றிவாகை சூடிவரும் தன் தந்தையை ஆடிப்பாடி வரவேற்க எதிர்கொண்டு சென்றாள். பாவம்! அறியாமலே அவள் தன் சாவுக்கு வரவேற்பு அளித்துவிட்டாள்.

யெப்தாவின் மகள் கொல்லப்பட்டதாகப் பொதுவாக ஊகிக்கப்படுகிறது. ஒருவேளை இது உண்மையல்லாமலும் இருக்கலாம். நரபலிகொடுப்பது பல இனத்தவரின், முக்கியமாகக் கானானியரின் பழக்கமாய் இருந்த போதிலும், மோசே அதற்குத் தடை விதித்திருந்தார். கிழக்கத்திய நாடுகளில் ஒரு பெண்ணுக்குத் திருமணமாகாவிட்டால் அது அவளுக்குப் பெரும் அவமானமாகும். எனவே திருமணமாகாமலேயே இருக்கவேண்டுமென முடிவானது அவளுக்குப் பயங்கரமான முடிவாகும். இதை இன்று நம்மால் புரிந்துகொள்ள முடியாமல் இருக்கலாம். ஆனால் அக்காலத்தில் அது அவளுக்குப் பெருத்த அவமானமாயிருந்தது. அவளுடைய தனிமையைப் போக்கி, அவளுக்கு ஆறுதல் சொல்ல அவளுடைய சிநேகிதிகள் வந்தனர். ஏனெனில் அந்த வாழ்க்கை அவளுக்கு உயிரோடு செத்த வாழ்க்கையைப்போல இருந்தது.


யெப்தாவின் மகளுடைய முடிவு எப்படிப் பட்டதாக இருந்தாலும், ஆராயாமல், திடீரென்று வாக்குக் கொடுப்பதிலும், பொருத்தனை செய்வதிலும் உள்ள அபாயத்தையும், பயனற்ற தன்மையையும் அது நமக்குக் காட்டுகிறது. அம்மோனியர்கள் அந்த இடத்தில் வணங்கி வந்த தெய்வம் கெமோஷ் என்பதையும் கவனித்திருப்பீர்கள். நகோமியோடு புறப்படுமுன், மோவாபில் இருந்தபோது, ரூத் இந்தத் தெய்வத்தையே வணங்கிக் கொண்டிருந்தார்.

### வலிமை மிக்க மனிதர்

சிம்சோன் 'தாண்' இனப் பிரிவைச் சேர்ந்தவர். இவர் பெலிஸ்தியரின் கையிலிருந்து

இஸ்ரவேல் இனப்பிரிவுகளை மீட்பதற்கு என்று நசீரராக நேர்ந்தளிக்கப்பட்டிருந்தார். நசீரராக இருப்பவர் திராட்சைரசம் குடிக்கமாட்டார்; மற்றும் சில உணவு வகைகளையும் உண்ணமாட்டார்; கத்தியால் முகத்தையோ தலையையோ மழிக்கமாட்டார் (எண். 6:1–8 படியுங்கள்). சிம்சோன் என்ற பெயருக்கு 'சூரியனின் மனிதன்' என்பது பொருள்.

இஸ்ரவேலரின் எல்லையோரமாக கத், எக்ரோன், அஸ்தோத், காத்சா, அஸ்கலோன் என்ற பட்டணங்களில், பெலிஸ்தியர் குடியிருந்தார்கள். இவ்விதம் இவர்கள் வணிகப் பாதைகளையும், கிழக்கு–மேற்குத் திசையாக உள்ள கணவாய்களையும், தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தனர். அவர்கள் போர்க்கருவிகள் இரும்பாலானவை. அருகிலுள்ள பிற இனத்தவர்களை அடக்கி ஆளும் ஆற்றல் பெற்றிருந்தனர். பெலிஸ்தியர்களைப்பற்றிய பயம் மற்றவர்களுக்கு எப்பொழுதும் இருந்து வந்தது. சிம்சோனைப் பற்றிய பல்வேறு நிகழ்ச்சிகளை மரபுக் கதைகளாக மக்கள் பேசிவந்தனர். சிம்சோன் தனிப்பட்ட முறையில் சோரேக் பள்ளத்தாக்கில் உள்ள சோரேக், சொரா, பேத்ஷெமஷ், திம்னா என்ற இடங்களில் பெலிஸ்தியரோடு போரிட்டதைப்பற்றி இவை கூறுகின்றன (நிலப்படத்தைப் பார்க்கவும்). சோரேக், கேசேர் கோட்டையால் பாதுகாக்கப்பட்டு வந்தது. திம்னாவில் சிம்சோன் தனித்து நின்று போரிட்டு ஒரு சிங்கத்தைக் கொன்றார். கழுகுகள் இச்சிங்கத்தின் உடலைக் கொத்தித் தின்ற பிறகு, அதன் எலும்புக்கூட்டில் தேனீக்கள் கூடுகட்டின. இந்த நிகழ்ச்சியை சிம்சோன் விடுகதையாகப் பயன்படுத்திவிட்டார். அக்காலத்தில் விடுகதைகளை மக்கள் விரும்பிக் கேட்டு மகிழ்ந்தனர். 'பட்சிப்போனிலிருந்து பட்சணம் வந்தது; கொடியவனிலிருந்து இனிமை வந்தது' என்ற விடுகதையைக்கூறி, சரியாகப் பதில் சொல்பவருக்கு முப்பது பட்டுச் சட்டைகளையும், முப்பது மாற்று உடைகளையும் கொடுப்பதாகச் சவால் விட்டார். மாற்று உடைகள் என்பவை மெல்லிய துணியாலான உடைகள். பொதுவாக, அவற்றில் பல வண்ணப் பூவேலைகளும் செய்யப்பட்டிருந்தன.





பெலிஸ்தியரின் சிறப்புவாய்ந்த நகரங்கள்

சிம்சோன் திருமணம் செய்துகொள்ள எண்ணியிருந்த பெலிஸ்தியப் பெண் அவரிடம் அந்த விடுகதையின் விடையைக்கேட்டு, மற்றவர்களிடம் சொல்லி, அவரை ஏய்த்துவிட்டார். பந்தயத்தை நிறைவேற்ற சிம்சோன் முப்பது பெலிஸ்தியரைக் கொன்று அவர்களுடைய மாற்றுடைகளைக் கொண்டு வந்து கொடுத்தார். பெலிஸ்தியர்களின் கோபத்துக்குக் கேட்கவேண்டுமா? பெண் கொடுப்பேன் என்று சொன்ன அந்தப் பெண்ணின் தகப்பன் அவரை ஏமாற்றிப் பழிவாங்கிவிட்டார். அவர்களைப் பழிவாங்க சிம்சோன் முந்நூறு நரிகளைப் பிடித்து, இரண்டிரண்டாக வாலோடு வால் சேர்த்துக் கட்டி, இரண்டு வால்களுக்கிடையே கொளுத்தின தீப்பந்தங்களை வைத்து, அப்பகுதியிலுள்ள பயிர்களுக்குத் தீ வைத்துவிட்டார். வயல்கள், திராட்சைத் தோட்டங்கள், ஒலிவத்தோப்புகள் எல்லாம் அழிந்தன. அருகிலிருந்த மக்கள் கோபங்கொண்டு அந்தப் பெண்ணின் தகப்பன் வீட்டிற்குத் தீ வைத்து, வீட்டையும் வீட்டிலுள்ளவர்களையும் தீக்கிரையாக்கிவிட்டு சிம்சோனைப் பிடிக்கப் புறப்பட்டனர்.

## சிம்சோனைத் தேடினர்

சிம்சோனை அவருடைய சொந்த மக்களே காட்டிக் கொடுத்தனர். இவர் இப்படி அத்துமீறி காரியங்களைச் செய்து கொண்டிருந்ததால், தங்களுக்கு என்ன நடக்குமோ என்று அஞ்சினார்கள். அவரோ தப்பி ஓடி, பாறைகள் நிறைந்த ஈத்தாம் பகுதியில்

தங்கியிருந்தார். ஒருநாள் அவர் காத்சாவின் வாசல்வரை சென்று, வாசல் கதவுகளையும், அதன் இரண்டு நிலைகளையும் பெயர்த்து எடுத்துக்கொண்டு, எப்ரோனுக்கு அருகிலிருந்த குன்றுக்குச் சென்று விட்டார். அடுத்தாற்போல், பெலிஸ்தியர்கள் தங்கள் பெண்களில் ஒருவரான தெலீலாளை, சிம்சோனை ஏமாற்றச் செய்து அவரைப் பிடிக்கப் பார்த்தார்கள். அவர் எவ்வித வெற்றி அடைந்தார் என்று நாம் அறிவோம். இதற்காக அவர் பெலிஸ்தியரிடம் ஆயிரத்து நூறு வெள்ளிக்காசு பெற்றுக்கொண்டார். அது கிட்டத்தட்ட இலட்சம் ரூபாய். சிம்சோனுடைய பலத்தின் இரகசியம் நசீரரான அவர் பொருத்தனையில் அடங்கியிருந்தது. அவருடைய வலிமைக்கு, அவருடைய தலைமுடி புற அடையாளமாய் மட்டும் இருந்தது. தாம் ஏமாற்றப்பட்டதை அறிந்ததும், தாம் யாவேக்கு உண்மையாய் இருக்கவில்லை என்ற உணர்வு அவருக்கு ஏற்பட்டது. இந்த அதிர்ச்சியிலிருந்து சிறிது சிறிதாக சுகமடைந்து கொண்டிருந்தபோது, அவரைப் பெலிஸ்தியர்கள் பிடித்துக்கொண்டு போய் விட்டார்கள். அவர்கள் அவர் கண்களைப் பிடுங்கிக் குருடராக்கினார்கள். அந்நாட்களில் இக்கொடுமையான செயல் மிகச் சாதாரணமான ஒன்றாகும். இறுதியில் பெலிஸ்தியர்கள் கையில் சிம்சோன் அகப்பட்டுக் கொண்டார்!



பெலிஸ்தியரின் இரதம். நான்கு எருதுகள் பூட்டப்பட்டிருப்பதைக் கவனிக்கவும்.

சிம்சோன், எருதுபோல் கனமான மாவரைக்கும் இயந்திரத்தை இழுத்துக் கொண்டிருப்பதைப் படங்களில் நாம் பார்த்திருக்கலாம். அநேகமாக இது தவறாயிருக்கலாம். பெலிஸ்தியர்கள் அவரைத் தண்டிப்பதோடு, இழிவுபடுத்தவும் விரும்பினார்கள். ஆகவே, அவ்வளவு வலிமை வாய்ந்தவரைப்



மாவரைக்கும் பெண்கள்

பெண்கள் செய்யும் வேலையைச் செய்யச் சொல்வதல்லாமல் வேறே எப்படி இழிவுபடுத்தியிருப்பார்கள்? அவர் ஏந்திரத்தில் மாவுதிரிக்க வேண்டியதாயிருந்தது. பொதுவாக இரண்டு பெண்கள் அவ்வேலையைச் செய்வார்கள். அவரைக் குருடராக்கியது மட்டுமன்றி, குறைவும் படுத்தினார்கள்.

சிம்சோனைப் பிடித்துவிட்டதைப் பெலிஸ்தியர் பெரிய விழாவாகக் கொண்டாடியது இயல்பானதே. அவர்கள் தாகோனை வழிபட்டார்கள். இந்தத் தாகோனின் உருவம் பாதி மனிதனும், பாதி மீனுமானது. அநேகமாக, தாகோன் என்பது பயிர்த்தொழிலுக்குத் துணை செய்யும் தெய்வத்தைக் குறிக்கும் சொல்லாக இருக்கலாம். ஏனெனில், எபிரேய மொழியில் 'தாகான்' என்பதற்கு தானியம் என்பது பொருள். பேத்சானில் தாகோனின் ஆலயம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இத்தகைய ஆலயம் ஒன்றில் அவர்கள் விழா நடத்தி விருந்துண்டிருக்கலாம். இதற்குள் சிம்சோனுடைய தலைமயிர் வளரத்தொடங்கியது; அதோடுகூட யாவேமேல் அவருக்கிருந்த நம்பிக்கையும் புதுப்பிக்கப்பட்டது. அவரைப் பெலிஸ்தியர்கள் இழுத்து வந்து விழாவிற்கு வந்திருந்தவர்களை மகிழ்விக்குமாறு அவர் வலிமையைக் காட்டும் வித்தைகளைச் செய்து காண்பிக்கச் சொன்னார்கள். அவருடைய முழு ஆற்றலும் அவருக்குத் திரும்பக் கிடைத்திருந்ததென்பது அவர்களுக்குத் தெரியாது. அவர்கள் மண்டபத்திலும் தட்டையான கூரையின் மேலும் நின்றுகொண்டிருந்தார்கள். சிம்சோன், மண்டபத்தின் கூரையைத் தாங்கி நின்ற மரத் தூண்களை அசைத்தார். அது இடிந்து விழுந்ததினாலும், அதனால் ஏற்பட்ட குழப்பத்தினாலும் உள்ளேயும் வெளியேயும் இருந்தவர்கள் அழிந்தனர்,

## விளக்கப் பயிற்சி

1. கடவுளோடு 'பேரம்' பேசுவது நமக்கு வியப்பாகத் தோன்றலாம். ஆனால் அது இஸ்ரவேலருக்கு இயல்பாக இருந்தது. இதற்குமுன் படித்த நிகழ்ச்சிகளில் இது போல் நடந்தது உங்களுக்கு நினைவு இருக்கிறதா? யெப்தாவின் பொருத்தனையை விவாதியுங்கள். நாம் கடவுளோடு எப்போதாவது பேரம் பேசியிருக்கிறோமா?

2. யெப்தா திரும்பி வரும் காட்சியை நடியுங்கள். இது ஒரு சோகக் காட்சி. விளையாட்டுத்தனமாக அல்லாமல் சிந்தனையோடு நடியுங்கள்.

3. யெப்தா அல்லது அவர் மகள் இறைவனுக்கு ஏறெடுக்கும் ஒரு மன்றாட்டைத் தயாரியுங்கள். அவர்கள் கடவுளைப் பற்றிச் சரியாக அறிந்திருக்கவில்லை. அவர் ஆற்றலுள்ள தெய்வம் என்பது மட்டுமே அவர்கள் கருத்து.

4. 'மரபுக் கதைகள்' என்றால் என்ன? சிம்சோனைப்பற்றிய நிகழ்ச்சிகளுக்கும் இவ்விதக் கதைகளுக்கும் தொடர்பு உண்டா?

5. சிம்சோன் நசீரர் எனப்படக் காரணம் என்ன?

6. சிம்சோனின் தீரச்செயல்களைத் தொடர் சித்திரங்களாகத் தயாரியுங்கள்.

7. நீங்கள் காத்சா பட்டணத்து நகர்க் காவலரென்று வைத்துக்கொள்ளுங்கள். சிம்சோன் வாசல் கதவுகளின் நிலைக்கால்களைப் பெயர்த்து எடுத்துச்சென்றதை உங்கள் மேல் அதிகாரியிடம் அறிவியுங்கள் (உங்கள் வேலையையும், நீங்கள் எடுத்துச் செல்லும் செய்தியின் தன்மையையும் குறித்து கவனம் உள்ளவர்களாய் இருங்கள்).

8. சிம்சோனைத் தாங்கள் எவ்விதம் மேற்கொள்ளலாம் என்று கண்டுபிடித்துச் சொல்வதற்காகப் பெலிஸ்தியர் தெலீலாளைப் பார்த்து, கைக்கூலி பேசும் காட்சியை ஆயத்தம் செய்து நடித்துக் காண்பியுங்கள்.

9. மண்டபம் இடிந்து விழுந்தபோது உயிர் இழக்காமல் தப்பின ஒருவர் அந்நிகழ்ச்சியை விவரிக்கிறாற்போல விவரியுங்கள்.

10. பெலிஸ்தியர், செமித்தியர், மிதியானியர், ஏத்தியர், அமாலேக்கியர், அம்மோனியர் ஆகிய இவர்கள் யார்? இந்நிகழ்ச்சிகளில் அவர்கள் எப்படி இடம் பெறுகிறார்கள்?

11. சிம்சோன் மாவரைப்பதுபோல் மாதிரி ஒன்று செய்யுங்கள்.



புதை பொருளாராய்ச்சியாளர் கண்டுபிடித்து எடுத்துள்ள பெலிஸ்தியரின் சாடி. அதில் பொருத்தப்பட்டிருந்த சல்லடையைக் கவனிக்கவும். அதன் பெரிதாக்கப்பட்ட படம் தனியாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

அத்தியாயம் 13

# சாமுவேலும் சவுலும்

*(1 சாமு. 1; 2:11–21; 3; 4:1–18; 5; 6:1–18; 8; 9; 10:1–24; 11; 14:1–46; 15)*

### சாமுவேலின் பணி

**சா**முவேலின் பணி குறித்து இரண்டு வரலாறுகள் உண்டு. அவற்றுள் ஒன்றில் சவுல் வரலாற்றுத் தலைவராகவும் மற்றொன்றில் சாமுவேல் வரலாற்றுத் தலைவராகவும் இருப்பதைக் காண்கிறோம். ஒன்றில் சாமுவேல் சாதாரண தீர்க்கராக இருக்கிறார். மற்றொன்றில் அவர் ஒரு நியாயாதிபதியாகவும், இஸ்ரவேலரை ஆளுபவராகவும் இருக்கிறார். இந்த வரலாறுகள் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்து பிரிக்க முடியாதபடி இருக்கின்றன. இவற்றில் காணப்படும் குழப்பங்கள் சவுல், தாவீது பற்றிய வரலாறுகளிலும் அப்படியே இருப்பதைக் காண்கிறோம்.


பலஸ்தீனா நிலப்படத்தை மீண்டும் ஒருமுறை பாருங்கள். அது மிகச் சிறிய பரப்புடையது என்பதை மறுபடியும் கவனியுங்கள். இதிலிருந்து அது ஒரே நாடாக எளிதில் இணையக்கூடும் என்பதுபோல் தோன்றுகிறது அல்லவா? ஆனால் கர்மேல் மலையிலிருந்து கில்போவா மலைவரை நெடுகக் குன்றுகளாக இருப்பதையும், குன்றுகள் அடர்ந்த எருசலேம் பகுதி தாழ்ந்த யூதா பகுதியை யோர்தானிலிருந்து பிரிக்கிறதையும், மேற்கே உள்ள செழிப்பான பெலிஸ்திய சமவெளிகளையும் கவனியுங்கள் (புத்தகம் 3, முன் அட்டையின் உள்பக்கத்தில் இருக்கிற நிலப்படத்தைப் பாருங்கள்). கானானியர்கள் இன்னும் தங்கள் அரணான பட்டணங்களில் குடியிருந்துவந்தார்கள்; எல்லையோரங்களில் பெலிஸ்தியர்கள் தொல்லை கொடுத்துக் கொண்டிருந்தார்கள்; மலைகளும் நாட்டைப் பல பகுதிகளாகப் பிரிக்கத் துணை புரிந்தன. ஆகவே பல்வேறு இன மக்களைச் சரிவர ஒரே தலைவரின்கீழ் கொண்டுவருமுன் ஆற்றல் வாய்ந்த தலைவர் ஒருவர் கடுமையாய் உழைக்க வேண்டியிருந்தது. அத்தகைய தலைவரைக் கண்டுபிடிக்கும் பணி சாமுவேல் உடையதாயிற்று.

### இஸ்ரவேலரின் அறுப்பின் பண்டிகை

சாமுவேல் இன்னும் பிறக்கவில்லை. அவர் தந்தை எல்க்கானாவும் அன்னை அன்னாளும் எருசலேமிலிருந்து பதினைந்து கிலோமீட்டர் தொலைவிலுள்ள தங்கள் ஊரான ராமாவை விட்டு சீலோவிலுள்ள ஆலயத்தில் ஆண்டுதோறும் செலுத்தும் பலியைச் செலுத்த வந்திருந்தனர். 'யாவேயின் இந்த வீடு' களிமண்ணாலான செங்கல் அல்லது வெட்டியெடுக்கப்பட்ட கல்வைத்துக் கட்டப்பட்ட கட்டடமாயிருந்திருக்கலாம். ஏலி என்ற லேவியர் கூடாரப் பண்டிகையில் செலுத்தப்பட்ட பலிகளைக் கவனித்துக்கொண்ட பிரதான ஆசாரியர். இதற்கு சேர்ப்புப் பண்டிகை என்றும் வேறு பெயர் உண்டு. இது அக்டோபர் திங்களில் நடைபெறும். ஒலிவப் பழங்களைச் சேகரிப்பதே ஆண்டின் கடைசி பருவ விளைவு சேகரிப்பாகும். ஒலிவப் பழங்கள் அவர்களின் முக்கியமான உணவாகும். ஒலிவ எண்ணெயை உணவு தயாரிக்கவும் விளக்கெரிக்கவும் விலங்குகளின் புண்களுக்கு மருந்தாகவும் தேய்த்துக் குளிக்கவும் என்று பலவிதங்களில் மக்கள் பயன்படுத்தினர். குடத்தில் அல்லது கலயத்தில் உள்ள எண்ணெய் ஒவ்வொரு வீட்டுக்கும் இன்றியமையாததாகும் (1 இரா. 17:12; 5:11; 2 இரா. 4:2).



முண்டு முடிச்சுகளையுடைய ஒலிவ மரம்



ஒலிவ எண்ணெய் பிழிந்தெடுத்தல்

ஒலிவ மரத்தின் அடிமரம் முண்டு முடிச்சுகள் உடையதாயிருக்கும்; அதன் இலைகள் வெள்ளி நிறத்தில் பளபளக்கும்; இது காடுகளிலும் வளரும்; நன்கு பாதுகாக்கப்பட்ட பழத்தோட்டங்களிலும் வளர்க்கப்படும். கிராமத்திலுள்ள பெரியவர்கள் பழம் சேகரிப்பதற்கேற்ற சமயம் வந்துவிட்டது என்று சொன்னவுடன் மக்கள் பழங்களைத்தட்ட கம்புகளையும் சேர்க்கும் பானைகளையும் எடுத்துக்கொண்டு ஒன்றாகக் கிளம்புவார்கள். பழங்கள் கீழே விழ பெண்களும் பையன்களும் மரத்தை அடிப்பார்கள். கிளைகளையும் குலுக்குவார்கள். ஒரு மரத்திலிருந்து அறுபத்தைந்து லிட்டர் எண்ணெய் தரக்கூடிய பழங்கள் கிடைத்தால் அது நல்ல விளைச்சலாகும். ஒலிவப் பழங்களை ஆலைகளில் அரைப்பார்கள். பின் இந்த அறவையைச் சில வேளைகளில் குதிரை மயிராலான சாக்குகளில் கொட்டிப் பெண்கள் மிதிப்பார்கள். சாதாரணமாக இதைப் பிரம்பு அல்லது நாணலினாலான கூடைகளில் கொட்டி, ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கி இன்னொரு ஆலையில் இட்டு அரைப்பார்கள். எண்ணெயை ஜாடிகளில் அடைத்து ஆண்டு முழுவதுக்குமான தேவைக்காகப் பத்திரப்படுத்தி வைத்துக் கொள்வார்கள்.

இந்தப் பண்டிகை அறுப்பின் பண்டிகையாக இருந்ததோடு இஸ்ரவேலர் வனாந்தரத்தில் அலைந்து திரிந்ததையும் இது நினைப்பூட்டியது. மரக்கிளைகளையும் கொப்புகளையும் கொண்டு அமைத்த சிறு குடில்களில் அவர்கள் ஒரு வார காலம் தங்கியிருந்து பண்டிகை கொண்டாடினர். பொதுவாக இக்குடில்கள் தட்டையான கூரைகள்மீது அமைக்கப்பட்டிருக்கும். ஆகையால், ஆலயத்தைச் சுற்றிப் பசுங்கடல்போல் இவை காட்சியளிக்கும். பழைய சீகேம் இருந்த இடத்திலுள்ள நப்லுஸ் என்ற இடத்தில் இன்றும்கூட சமாரியர்கள் இப் பண்டிகையைக் கொண்டாடி வருகிறார்கள். கடைகளையும் வீடுகளையும் பூட்டிவிட்டு மலை உச்சியில் அவர்கள் அமைக்கும் பந்தல்களில் தங்கிக் கொள்வார்கள்.

விருந்தின்போது பல சடங்குகளை அனுசரித்து ஒரு காளையையோ அல்லது செம்மறியாட்டையோ வெட்டுவார்கள். அதன் சிறப்பான பாகங்கள் பலிபீடத்தில் தகனிக்கப்பட்டன; சிறிதளவு ஆசாரியருக்குக் கொடுக்கப்பட்டது; மீதி உள்ளதை பலியிட்டவரும் அவர் குடும்பத்தினரும் எடுத்துக் கொள்வார்கள். இது ஆடிப்பாடி மகிழும் காலமாகும். எனவே அன்னாள் அதிகம் குடித்திருந்தார்

என்று ஏலி நினைத்ததில் தவறில்லை. பழைய திருப்புதலில் 1 சாமு. 1:5ல் இருப்பது சரியான மொழிபெயர்ப்பாய் இல்லாமல் இருக்கலாம். புதிய திருப்புதலில் இருப்பதுபோல் அது 'ஒரே பங்கை' என இருந்திருக்கலாம்.

### சாமுவேலைக் கடவுளுக்கு வாக்குப்பண்ணினர்


அன்னாளுக்கு ஒரு மகன் பிறக்கப் போவதாக ஏலி கூறினர். அன்னாளின் மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. மகன் சற்று வளர்ந்தவுடன் அவனை யாவேக்குத் திருப்பணிவிடை செய்ய கொடுத்துவிடுவதாக அங்கேயே, அப்போதே அர்ப்பணித்து விட்டார். அன்னாளின் நன்றிப் பாடலை லூ. 1:46,55ல் உள்ள மரியாளின் நன்றிப் பாடலோடும், சங். 113:7,8ம் வசனங்களோடும் ஒப்பிட்டுப் பார்ப்பது நல்லது.

சாமுவேலுக்கு ஆறு அல்லது ஏழு வயதிருக்கலாம். அன்னாள் தம் வாக்குறுதியை நிறைவேற்றி ஆலயத்திற்கு அருகே ஏலியோடு தங்கியிருக்கும்படி சாமுவேலைக் கொண்டு வந்து விட்டு விட்டார். சாமுவேலுக்குக் கோவில் விளக்கைத் துடைத்து, ஏற்றி வைக்கும் வேலை கொடுக்கப்பட்டது. அவ்விளக்கு துணித்திரி உடையதாய் அகல் விளக்குகளைப் போல் பல வடிவங்களில் இருந்த ஒலிவ எண்ணெய் விளக்காய் இருந்திருக்கலாம். அது மறுநாள் காலைவரை மங்கலாய் எரிந்து கொண்டேயிருக்கும்.

யாவேக்குப் பணிவிடை செய்ய சாமுவேல் அழைக்கப்பட்டது நாமெல்லாரும் விரும்புவதும் நன்கறிந்ததுமான ஒரு நிகழ்ச்சிதான். ஏலிக்கு உதவி செய்யும்போது அவர் ஒரு வெள்ளை ஏபோத்தை உடுத்தியிருப்பார். அது சாதாரணமான சின்னஅங்கிபோல் இருக்கும். அதைப்போட்டு இடுப்பில் கச்சை ஒன்றைக் கட்டியிருப்பார். அவர் தாய் ஆண்டுதோறும் ஒரு புதிய அங்கி கொண்டுவந்து கொடுப்பார். பிற்காலத்தில் ஏபோத்து இடுப்பளவே நீளமானதாயிருந்தது. அது சிவப்பு, கருஞ்சிவப்பு, நீல, பொன் நிற வண்ணப் பட்டிகளால் பின் புறத்தில் கட்டப்பட்டிருக்கும். ஒவ்வொரு தோள்பட்டையிலும் ஒரு மதிப்பு மிக்க கல் பதிக்கப்பட்டிருக்கும். அவற்றில் இஸ்ரவேலரின் பன்னிரண்டு இனப் பிரிவுகளின் பெயர்களும் ஒன்றில் ஆறும், மற்றொன்றில் ஆறுமாக எழுதப்பட்டிருந்தன. கவசம் போன்ற ஒன்றின் ஒரு பையில் புனிதப் பொருட்கள் வைக்கப்பட்டிருந்தன (யாத். 28:29,30). இதைப் பிரதான ஆசாரியர் அணிந்திருப்பார். காலப்போக்கில் அவருடைய விசேஷ காலத்திற்கான உடைகள் மிக பகட்டணிவாய்ந்தவையாக மாறியிருக்க வேண்டும். அவருடைய மிகச் சிறப்புவாய்ந்த உடைமைகளில் ஒன்று மூன்று கூருள்ள ஒரு முள்ளாகும். அது 'முக்கூர் ஆயுதம்' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது (1 சாமு. 2:13). இதைக்கொண்டு பலியிடப்பட்டு வேகிற இறைச்சியைக் குத்திஎடுப்பார். அவர் ஏலியின் மகன்களைப்போல் இருந்தால் சிறந்த துண்டங்களைத் தமக்கென்று எடுத்துக்கொண்டிருக்கலாம். ஏலியின் மக்கள் பலியிடுவதற்கு முன்பே சிறந்த பாகங்களைத் தங்களுக்கென்று தேர்ந்தெடுத்துக்கொண்டனர். லாகீஷில் ஆராய்ச்சியாளர் தோண்டி எடுத்தபோது இதுபோன்ற ஒரு முள் ஆயுதத்தைக் கண்டு எடுத்திருக்கிறார்கள். கீழே உள்ள படத்திலிருந்து இது எப்படி இருந்திருக்கலாம் என்று நீங்கள் ஓரளவு கண்டுகொள்ள முடியும்.

### பெலிஸ்தியர்கள் தந்த பெருந்தொல்லை

இஸ்ரவேலருக்கும் பெலிஸ்தியருக்கும் நெடுநாள் போர் நடந்துவந்தது. இந்தச் சூழ்நிலையில்தான் சாமுவேல் வளர்ந்துவந்தார். எதிரிகளை முற்றிலும் அழிக்கமுடியாதோ என்று இஸ்ரவேலர் நம்பிக்கை இழக்காமல்



முக்கூர் ஆயுதம்

இருப்பதும், அதைவிட யாவேயின்மேலுள்ள நம்பிக்கையை விட்டுவிடாமலிருப்பதும் எவ்வளவு முக்கியமானது என்று அவர் உணர்ந்தார். அவர்கள் போட்ட பல சண்டைகளில் ஒன்று 'எபநேசர்' என்னும் இடத்தில் நடந்தது. அதற்கு 'உதவியின் கல்' என்பது பொருள். இச்சந்தர்ப்பத்தில் எதிர்பார்த்த உதவி கிடைக்கவில்லை. சண்டைக்குச் சென்றபோது ஒப்பந்தப் பெட்டகம் அவர்களுக்கு முன்னதாகத் தூக்கிக்கொண்டு போகப்பட்டது. ஆனுல் அது கைப்பற்றப்பட்டது! இஸ்ரவேலருக்கு இது பயங்கரமான அடி. யாவேயும் தங்களைக் கைவிட்டு விட்டதாக அவர்கள் நினைத்தனர். அக்காலத்தில் துக்கத்தைக் காட்டுவதற்காக உடைகளைக் கிழித்து தலையில் புழுதியை அள்ளிப்போட்டுக் கொள்வார்கள். இஸ்ரவேலரும் இப்போது இப்படிச்செய்தனர்.

பெலிஸ்தியர்கள் அப்பெட்டகத்தை வெற்றிப் பெருமுழக்கத்துடன் அஸ்தோத்துக்கு எடுத்துச்சென்று தங்கள் தெய்வத்தின் கோயிலில் கொண்டுபோய் வைத்தனர். ஆனுல் அதற்குப்பின் தாகோன் சிலை விழுந்து உடைந்து சிதறிப்போயிற்று. பெலிஸ்தியர்களுக்கு நோய்கள், கட்டிகள், கொப்புளங்கள் போன்ற வாதைகளும் வந்தன. பெட்டகத்தை அஸ்தோத், கத், எக்ரோன் என்னும் பட்டணங்களில் எல்லாம் வைத்துப் பார்த்தார்கள். அதுதான் தங்கள் தொல்லைகளுக்கெல்லாம் காரணம் என்று நம்பி அதை இஸ்ரவேலரிடம் திரும்ப அனுப்பிவிட வேண்டும் என்று தீர்மானித்தனர். அவர்கள் அதை எடுத்துக்கொண்டு தங்கள் நாட்டுக்கும் இஸ்ரவேல் நாட்டுக்கும் எல்லையாக உள்ள பேத்ஷெமஷ்வரை மட்டுமே வந்தனர். கோதுமை அறுவடைக் காலம் அது. வயல்களில் ஆட்கள் அறுவடை செய்து கொண்டிருந்தனர். பெட்டகத்தோடு வேறு ஒருவர் உடைமையைத் திருடினதற்கான குற்ற நிவாரண காணிக்கையையும் பெலிஸ்தியர் கொண்டுவந்திருந்தனர். அது பொன்னுலான எலிகள், கொள்ளைநோய்க் கட்டிகளின் உருவங்கள் ஆகும். ஏனெனில் இவற்றினுலேயே அவர்கள் அதிகம் தொல்லை அடைந்தனர். பெட்டகம் கிரியத்யெயாரீமுக்குக் கொண்டுபோகப்பட்டு அங்கு லேவியரான அபீனுதாபின் வீட்டில் வைக்கப்பட்டது. பின்னர் எபநேசர் என்ற அதே இடத்தில் பெலிஸ்தியர்கள் முறியடிக்கப்பட்டனர்.

இப்போது நியாயாதிபதியாய் இருந்த சாமுவேல் பேதேல், கில்கால், மிஸ்பா என்ற இடங்களுக்குப் போய் நியாயம் விசாரித்துவிட்டுக் கடைசியாக அவர் தங்கியிருந்த




ராமாவுக்கே வந்து சேர்ந்தார். மிஸ்பா குன்றுகளின்மேல் போர்த்திற முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் இருந்தது. ஒருநாள் சாமுவேல் இஸ்ரவேலர்களை இங்கு கூட்டிச் சேர்த்து அவர்கள் யாவேயை மட்டுமே வழிபடவேண்டும் என்று நினைவூட்டிக் கொண்டிருந்தபோது பெலிஸ்தியர் அவர்களைத் தாக்கினர். சாமுவேல் தொடர்ந்து பலி செலுத்தும் வேலையில் ஈடுபட்டிருந்தார். பகைவர்கள் எளிதாகத் தோற்கடிக்கப்பட்டனர்.

**'எங்களுக்கு அரசரைக் கொடும்'**

இதற்குள்ளாகப் படைவீரர்களின் தலைவர்களில் பலர் சாமுவேலிடம் வந்து பெலிஸ்தியருக்கு எதிராகத் தங்களை நடத்திக்கொண்டு போகவும் அவர்களை முழுவதுமாக ஒழித்துக்கட்ட தங்களை ஊக்குவிக்கவும் ஓர் அரசர் தங்களுக்கு வேண்டும் என்று கேட்டார்கள். அரசர் கொடுங்கோலராக இருந்துவிட்டால் மக்கள் அல்லல்படுவார்கள் என்று சாமுவேல் விளக்கிச் சொன்னுர். ஆனுலும் கண்டிப்பாகத் தங்களுக்கு ஓர் அரசர் வேண்டும் என்று பிடிவாதமாகச் சொன்னுர்கள். எனவே அதுபற்றி யாவேயை நோக்கி சாமுவேல் விண்ணப்பம் பண்ணினுர். தம் மக்களுக்காக ஓர் அரசரைத் தேர்ந்தெடுத்துக் கொடுக்க கடவுள் தம்மை வழிநடத்தியதாக உணர்ந்தார்.

தற்செயலாக சவுல் அவரிடம் வந்தார். அவர் தம் தகப்பனின் கழுதைகளைத் தேடிக் கொண்டு நாற்பத்தெட்டு கிலோமீட்டர் பயணம்செய்து எப்பிராயீம், பென்யமீன் நாடு வழியாக சூப்பு என்னும் இடம்வரை வந்துவிட்டார். அந்த இடம் எங்கு இருந்தது என்று இன்று யாருக்கும் தெரியாது. சாமுவேல் பலியிடுவதை மேற்பார்த்துக் கொண்டிருந்தபோது சவுல் அவரைக் கண்டுபிடித்து உதவிகோருமாறு தம் வேலைக்காரரை அனுப்பிவைத்தார். குறிசொல்லி கழுதைகளைக் கண்டுபிடிக்க உதவுவதற்காகக் கால் ஷெக்கல் வெள்ளியும் அனுப்பிவைத்தார். சாமுவேல் சவுலோடு பேசிக்கொண்டிருந்தபோது சவுல் பணக்காரராகவும், வீரராகவும் இருந்தபோதிலும் 'பென்யமீன் குடும்பங்களில் என் குடும்பம் மிகச் சிறிய குடும்பம்' என்று மிகத் தாழ்மையாகக் கூறிக் கொண்டார். இஸ்ரவேலின் இனப்பிரிவுகளிலும் பென்யமீன் மிகச் சிறியது. சவுல் விருந்துக்கழைக்கப்பட்டார். இறைச்சியில் சிறந்த துண்டம் அவர்முன் வைக்கப்பட்டது. ஒருவேளை இது சாமுவேலின் முக்கூர் ஆயுதத்தில் கொடுக்கப்பட்டிருக்கலாம். அநேகமாக




சாமுவேல் பணி செய்த இடங்கள்

ஆசாரியரைச் சேரவேண்டிய பலியின் தொடைச்சந்தாகவும் இருக்கலாம். சாப்பிட்டபின் சாமுவேலும் சவுலும் வீட்டின் மேல் தளத்தில் உட்கார்ந்து தனித்துப் பேசினார்கள். பிறகு சாமுவேல் சவுலோடு நகர் வாசல்வரை சென்று அவரை விட்டுப் பிரியுமுன் தம் தைலக்குப்பியை எடுத்தார். அதன் கழுத்துப் பாகம் குறுகலாயிருக்கும். அதிலிருந்து நறுமணம் மிக்க எண்ணெய் துளி துளியாக விழும். சாமுவேல் அந்த எண்ணெயைச் சவுலின் தலையின்மேல் வார்த்து அவரை அரசராக அபிஷேகம் பண்ணினார்.

வீடு திரும்பும் வழியில் சவுல் ஒரு தீர்க்கர் கூட்டத்தோடு சேர்ந்துகொண்டார். அந்நாட்களில் இருவகை தீர்க்கர்கள் இருந்தனர். ஒன்று ஞானப்பார்வை என்ற 'இரண்டாம் பார்வை உடைய ஞானதிருஷ்டிகர்'. மற்றொரு வகையினர் பரவசமடைகிற தீர்க்கர். இவர்கள் சமய உணர்ச்சியாலான வெறியோடு தாங்களாகவேயும் மற்றவர்கள் கேட்கவும் உரக்கக் கத்துவார்கள். இவர்களை இக்காலத்திலுள்ள சில துறவிகளுக்கு ஒப்பிடலாம். இப்படிப்பட்ட தீர்க்கர்கள் அடங்கிய ஒரு கூட்டத்தோடு சவுல் சேர்ந்துகொண்டார்.

**'கடவுள் அரசரைக் காப்பாராக!'**

சீக்கிரத்தில் மிஸ்பாவில் சீட்டுப்போட்டு சவுலை அரசராக்கினார்கள். பின் அம்மோனியரின் அரசர் யாபேஷ்கிலியாத் என்ற பட்டணத்தை முற்றுகையிட்டார். இது மனாசே இனப்பிரிவின் பாதுகாப்பான பட்டணம்; இதைச் சுற்றி பலமான மதிற்சுவர் இருந்தது. இது யோர்தானுக்குக் கிழக்கே சுமார் பதினொரு கிலோமீட்டர் தூரத்தில் ஒரு கணவாயில் இருந்தது. சவுல் தம் போர்வீரர்களை யோர்தானுக்கு மேற்கே முப்பத்திரண்டு கிலோமீட்டர் தூரத்திலுள்ள பேசேக் என்ற இடத்தில் சேர்த்து அப்பட்டணத்தை விடுவித்தார். யாபேஷ்கிலியாத்தில் உள்ளவர்கள் பின்வந்த ஆண்டுகளிலும் இதை நினைவில் வைத்திருந்தனர். இந்த வெற்றிக்குப் பிறகு கில்காலில் சவுல் எல்லோருடைய முன்னிலையிலும் முடிசூட்டு விழாவில் அரசராக்கப்பட்டார். முன்பு

சாமுவேல் ராமாவில் அபிஷேகம் பண்ணின தற்கும், மிஸ்பாவில் சீட்டுப்போட்டு அவர் தெரிந்தெடுக்கப்பட்டதற்கும் இது உறுதிச் சின்னம்போல் ஆயிற்று.


### சவுலும் யோனத்தானும்

சவுல் தம் முழுக் கவனத்தையும் பெலிஸ்தி யர்களை முறியடிப்பதில் செலுத்தினர். அவர் களை முறியடிக்காவிட்டால் ஒரே நாடாக அவர்கள் நாடு இணையுமென்று சாமுவேல் எதிர்பார்க்க முடியாது. கிபியாவில் சவுலின் சொந்த இடத்தில் எதிரிகளின் காவற்படை இருந்தது. யோனத்தான் அவர்களை முத லாவது தாக்கினர். பெலிஸ்தியர் மிக்மாசை நோக்கிப் படைதிரண்டு வந்தனர். சவுல் மூன்று கிலோமீட்டர் தென்கிழக்கே கேபா வில் யோனத்தானேடு சேர்ந்துகொள்வதற் காகக் கணவாய்க்கு அப்பால் பின்வாங்கினர். (படைகள் சென்ற பாதையை இப்புத்தகத்தி லுள்ள நிலப்படங்களில் கண்டுபிடியுங்கள்.) இஸ்ரவேல் மக்களில் பலர் அச்சமிகுதியால் பாறைகளாலான குன்றுகளின் குகைகளுக் கும், குழிகளுக்கும், பள்ளங்களுக்கும் ஓடிவிட்டனர். மிக்மாசுக்கு வடக்கே போசேஸ் (ஒளிவீசும்) குன்று உள்ளது. வெயில் கொளுத்தும்போது இதன் சுண்ணும்பு பளிச்சிடும். தெற்கே சேனே (முள்ளார்ந்த) என்னும் பாறையின் கூர்முனை இருந்தது. இதில் இங்கும் அங்கும் முள் நிறைந்த வேலமரங்கள் உண்டு. பெலிஸ்தி யர்கள் நன்கு தோற்கடிக்கப்பட்டார்கள். இஸ்ரவேல் மக்கள் அவர்களை பெத்கோரோ னிலிருந்து பெலிஸ்தியா வரை பரந்திருந்த செழிப்பான பள்ளத்தாக்கில் பல கிலோ மீட்டர் விரட்டிச் சென்றனர். அகதிகளாக இருந்த இஸ்ரவேலரும் இப்போது பெத்கோ ரோனில் மறுபடியும் படையில் சேர்ந்து விட்டனர். பெலிஸ்தியா ஷெபேலா என்றும் குறிப்பிடப்படும்.

### சவுல் என்ன 'குறி' கேட்டார்?

பகைவர்களை மேலும் தொடர்ந்து போக லாமா என்று சவுல் குறி கேட்டார். ஏதோ சரியாக இல்லாததுபோல் தோன்றிற்று. யாவேக்குக் குறிப்புணர்த்தும் அடையாள மாக அன்று யாரும் உணவே உட்கொள்ளக் கூடாது என்று சவுல் கண்மூடித்தனமான கட்டளை கொடுத்திருந்தார். அக்கட்டளையை மீறியவர்கள் யார் என்று அவர் கண்டுபிடிக்க விரும்பினர். மீண்டும் குறி கேட்டார். சீட்டு யோனத்தான் பேருக்கு விழுந்தது. தகப்பன் விதித்த கட்டளையை அறியாத காரணத்தால் தாம் சிறிதளவு தேன்மட்டும் சாப்பிட்டதாக அவர் சொன்னர். யோனத்தானுடைய வீரச்செயல்கள் அவரோடிருந்த போர் வீரர்களுக்கு நன்கு தெரியும். எனவே சவுல் எச்சரித்ததுபோல் குற்றம்செய்த யோனத் தானைக் கொன்றுபோடாதபடி பார்த்துக் கொண்டார்கள். சவுலுக்கும்கூட தம் மகனைப்பற்றிய பெருமிதம் இருந்திருக்கும். பெலிஸ்தியர்களைத் தைரியமாக எதிர்த்துப் போரிடக்கூடிய ஒரு வீரரை மகனுகப் பெற் றிருப்பதை அவர் கண்டார். தாவீதுபற்றி அந்நாட்களில் சவுலுக்கு ஒன்றும் தெரியாது!

இந்நிகழ்ச்சியை விவரிக்கையில் குறிசொல் லும் பொருள் ஏபோத்து எனப்படுகிறது. அது ஆசாரியருடைய மார்க்கச்சையிலுள்ள பையில் வைக்கப்பட்டிருக்கும். அதில் இரண்டு புனிதக் கற்கள் உண்டு. ஊரீம், தும்மீம் என்று அவைகளுக்குப் பெயர். இவற்றைப் புனித சீட்டுப்போட பயன்படுத் தினர். சிலர் இவை கறுப்பு, வெள்ளை என்ற இரு பக்கங்கள் உடையவை என்று நினைக் கிருர்கள். குலுக்கிப்போடும்போது இரண்டு வெள்ளை வந்தால் 'ஆம்' என்றும், இரண்டு கறுப்பு வந்தால் 'இல்லை' என்றும், ஒரு வெள்ளை, ஒரு கறுப்பு வந்தால் தீர்ப்பளிக்கப் படவில்லை என்றும் பொருள் ஆகும். சவுல் முதல் முதல் கேட்டபோது தீர்ப்பளிக்கப் படவில்லை என்ற பதில்தான் அவருக்குக் கிடைத்தது. யாவேதான் அவர் விருப்பம் போல் இந்த முடிவுகளைத் தருபவர் என்று எண்ணப்பட்டது. இது நாம் ஒரு காசைச் சுண்டி எறிந்து பார்ப்பதுபோன்றது. இது அதிகமாகத் தற்செயலாகக் கிடைக்கும் முடிவே. ஆனல் பழக்கத்தினல் நாம் நினைத்தபடியே நாணயத்தை விழ வைக்க லாம். அதுபோல் ஆசாரியர்கள் அவ்வப் போது தங்கள் முடிவுகளையும் அறிவுரைகளை யும் ஏபோத்தைக் கொண்டே சொல்ல வைத்துவிடலாம்.



ஒலிவப் பழங்கள்

## விளக்கப் பயிற்சி

1. பலஸ்தீனுவின் படம் வரைந்து இக் காலத்தில் இஸ்ரவேல் இனப் பிரிவுகள் இருந்த பகுதிகளை வண்ணமிட்டுக் காட்டுங்கள். கானுனியர், பெலிஸ்தியர், மற்ற இனங்களின் வசமிருந்த பகுதிகளுக்கு வேறு வண்ணந்தீட்டுங்கள். படத்திலிருந்து நீங்கள் என்ன தெரிந்து கொள்ளுகிறீர்கள்?

2. உங்கள் பெற்றேருடன் கூடாரப் பண்டிகை கொண்டாடுவதாகக் கற்பனை செய்துகொண்டு அந்த ஏழு நாட்களில் ஒரு நாளை நீங்கள் கழித்த விதத்தைப் பற்றி எழுதுங்கள்.

3. அன்னுளின் பாடலின் ஒரு பகுதியை மனப்பாடம் செய்யுங்கள். இது எவ்வெவ்விதங்களில் மரியாளின் பாடலை ஒத்திருக்கிறது? இதைப் பாடியவர் யார்? ஏன்? எப்பொழுது பாடினுர்?

4. சாமுவேலாகக் கற்பனை செய்துகொண்டு ஆலயத்தில் நீங்கள் செய்யவேண்டிய வேலைகளை உங்கள் நண்பர் ஒருவருக்கு விவரியுங்கள்.

5. சாமுவேலுக்கு அழைப்பு வந்த விதத்தை நடித்துக் காண்பியுங்கள். இதில் சாமுவேலும் ஏலியும் பாத்திரங்களாக வரவேண்டும். கடவுளின் குரலை மேடையில் அசரீரியாக அமைத்துக்கொள்ளவேண்டியதிருக்கும்.

6. ஒப்பந்தப் பெட்டகம் பிடிபட்ட செய்தியை விவாதியுங்கள். நீங்கள் சீலோவிலுள்ள ஆலயத்திற்கு வெளியே நிற்கிற இஸ்ரவேலர் என்று வைத்துக்கொண்டு இதைச் செய்யுங்கள்.

7. எல்லைப் புறத்தில் பேத்ஷெமஷுக்கு ஒப்பந்தப் பெட்டகம் கொண்டுவரப்பட்ட காட்சியை நடியுங்கள். அக் காட்சியைப் படமாகவும் வரையுங்கள்.

8. சவுல், சாமுவேலைச் சந்தித்ததை சவுலின் வேலையாள் சொல்லுவதுபோல் சொல்லுங்கள்.

9. வீட்டின் மேல் தளத்தில் உட்கார்ந்து சவுல் சாமுவேலோடு பேசிக்கொண்டிருந்ததுபோல் படம் வரையுங்கள் அல்லது பட்டண வாசலில் சவுலை சாமுவேல் அபிஷேகம் பண்ணுவதை வரையுங்கள்.

10. நீங்கள்தாம் இஸ்ரவேலர். சிலர் அரசர் வேண்டும் என்றும், சிலர் அரசர் வேண்டாம் என்றும் பேசித் தர்க்கியுங்கள்.

11. சவுல் காலத்தில் சங்கீதங்கள் எழுதப்பட்டிருந்தால் அவற்றில் உள்ள எந்த வசனங்கள் தமக்குப் பயன்படுபவை என்று அவர் கண்டிருப்பார். நீதிமொழிகளிலிருந்து சவுலுக்கு அறிவுரை கூற சாமுவேல் எந்தெந்த வசனங்களைப் பயன்படுத்தி இருக்கக்கூடும் என்று கண்டுபிடியுங்கள்.

12. 'சவுல் அரசராகத் தெரிந்துகொள்ளப்பட்டார்.' இது நாடகப் பாடமாகப் படிக்கச் சிறந்த பகுதியாகும். இதைக் கவனமாகப் படித்து, இதைப்பற்றி விவாதித்துக்கொள்ளுங்கள். நாடக பாத்திரங்களையும், அவர்கள் பேசாத பகுதிகளை வாசிக்க நன்ருக வாசிக்கக் கூடியவர் ஒருவரையும் தெரிந்துகொள்ளுங்கள். நன்கு வாசிக்கப் பயிற்சி செய்யுங்கள். இதை மற்ருெரு வகுப்பில் நடித்துப்பாருங்கள் அல்லது காலைக் கூட்டத்தில் நடியுங்கள். (1 சாமு. 8:4–22; 10:17–24 வசனங்களைப் பார்த்துக்கொள்ளுங்கள். சில வசனங்களை விட்டுவிடலாம்.)



கில்காலில் சவுல் அரசராக ஏற்றுக்கொள்ளப்படுதல்

அத்தியாயம் 14

# சவுலும் தாவீதும்

*(1 சாமு. 15; 16:14–23; 17; 18:1–16; 19:1–17; 20:1–30; 22:1,2; 27–31; 2 சாமு. 1)*

### சவுல் கீழ்ப்படியவில்லை

சில ஆண்டுகள் கழித்து அமாலேக்கியர்களை நன்ருகத் தோற்கடித்தார் சவுல். இவர்கள் சீனய் தீபகற்பத்தில் வாழ்ந்து வந்த ஒரு நாடோடி இனத்தினர். பல ஆண்டுகளுக்கு முன்பு வனந்தரத்தில் இஸ்ரவேலரை இவர்கள் தாக்கினர். காதேஸ் பர்னேயா என்ற பாலைப் பசுந்திடலுக்காக ஏற்பட்ட போரில் யோசுவா இவர்களை மடங்கடித்திருந்தார். அமாலேக்கியர்களைப் பழிவாங்க வேண்டும்; பழிவாங்குவதற்காக அவர்கள் அனைவரும் அழிக்கப்படவேண்டும் என்பது யாவேயின் விருப்பம் என்று அக்காலத்தில் மக்கள் விளக்கினர். ஆனல் இது அவருடைய விருப்பமாய் இருக்க முடியாது என்று நாம் அறிவோம். யோசுவா எரிகோவை யாவேக்கு 'ஒப்படைத்தது'போல் அமாலேக்கியரையும் ஒப்படைக்கவேண்டும் என்று நினைத்தார்கள். அகாக் அரசரையும் கொள்ளைப் பொருளில் கொஞ்சத்தையும் அழிக்காமல் விட்டு வைத்ததால் சாமுவேலின் உத்தரவைச் சவுல் மீறிவிட்டார். எனவே சவுல் தாம் எதிர்பார்த்ததுபோல் சிறந்த அரசராய் ஒருபோதும் இருக்கமாட்டார் என்று சாமுவேல் முடிவு செய்தார்; அவர் வேறொருவரை அரசராகத் தெரிந்து கொள்ள வேண்டும். யாவே அவரை பெத்லெகேமுக்கு வழிநடத்தினர்.

### புது அரசர்

சாமுவேல் சுற்றுப் பயணம் செய்யும் பாதையில் பெத்லெகேம் இல்லை. எனவே அவர் பெத்லெகேம் சென்றவுடன் ஊரில் ஒரு பரபரப்பு ஏற்பட்டது. மக்களுக்கு அச்சம் ஏற்பட்டது என்றே கூறலாம். அதனல் தம் வரவு 'சமாதானமானதே' என்று சாமுவேல் ஈசாயிடம் உறுதி கூறுகிருர். தாவீது வாட்டசாட்டமான இளைஞராயிருந்தார். ஆயர்கள் உடை அணிந்திருந்தார். ஒருவேளை ஆடுகளை அடைக்கும் பட்டியிலிருந்து நேராக வந்ததால் தம் கவணையும் கையோடு கொண்டு வந்திருக்கலாம். அவரை இஸ்ரவேலின் புது அரசராகச் சாமுவேல் அபிஷேகம் பண்ணினர். சுகமளிக்கும் எண்ணெயை ஆட்டுக்கடாவின் கொம்பிலிருந்து அவர்கள் பயன்படுத்தி இருப்பார்கள் ('என் தலையை எண்ணெயால் அபிஷேகம்பண்ணினீர்'). அதிலிருந்து தாவீதின் தலையின்மேல் சொட்டு சொட்டாகப் புனித எண்ணெய் ஊற்றப்பட்டதைப் பார்த்து, ஏன் அப்படி ஊற்றப்பட்டது என்று புரியாமல் அவர்கள் விழித்திருக்கலாம். பல ஆண்டுகளுக்குப்பின் அவர் அரசர் என்று அறிவிக்கப்பட்டபோது இதை அவர்கள் நினைவுகூர்ந்திருப்பார்கள்.

தாவீது சவுலுக்கு அறிமுகப்படுத்தப்பட்டதைப்பற்றி இரு வரலாறுகள் இருக்கின்றன.



அபிஷேகம்பண்ணப் பயன்படுத்தப்பட்ட ஆட்டுக்கடாவின் கொம்பு

இவற்றில் பலர் ஏற்றுக்கொள்வது, சவுலுக்கு மனக்கலக்கம் ஏற்பட்டபோது அதை நீக்கி மகிழ்விக்க தாவீது சுரமண்டலம் வாசித்த பின் அவர் சவுலுக்கு ஆயுதம் சுமக்கும் வேலை யில் அமர்த்தப்பட்டார் என்பதே.

### அனைவரும் விரும்பும் திருமறை வரலாறு

தாவீது கோலியாத்தைப்பற்றிய வரலாறு நம்மனைவருக்கும் தெரிந்ததே. ஏலா பள்ளத் தாக்கு வழியாய் அமைந்த குன்றின்மேல் இஸ்ரவேலர் முகாமிட்டிருந்தனர். ஏலா பள்ளத்தாக்கு கர்வாலி மரங்களடர்ந்த பள்ளத்தாக்கு. அதன் வழியாக எப்ரோனி லிருந்து கத்துக்குச் செல்லும் சாலை செல் கிறது. கோலியாத் ஆறு முழமும் ஒரு சாணும் உயரமுள்ளவர். ஒரு முழம் என்பது முழங்கையிலிருந்து நடுவிரலின் நுனிவரை உள்ள அளவு. அதாவது சுமார் நாற்பத் தைந்து சென்டிமீட்டர் நீளமாகும். சாண் என்பது சுமார் இருபது அல்லது இருபத் தைந்து சென்டிமீட்டர் நீளமாகும். ஆகவே கோலியாத்தின் உயரம் சுமார் இரண்டே முக்கால் மீட்டர் இருந்திருக்க வேண்டும்! அவர் பயன்படுத்திய போர்க் கவசங்கள் அனைத்தும் வெண்கலத்தால் ஆனவை. ஐயா யிரம் ஷெக்கல் என்பது கிட்டத்தட்ட எழுபத் திரண்டு கிலோகிராம் எடையாகும். அவர் ஈட்டியின் தாங்கு மட்டும் சுமார் எட்டு கிலோகிராம் எடையாகும். பார்வைக்கு, அவர் போர்க் கவசங்கள் கிரேக்கர் உபயோகித்தவைபோல் காட்சியளித்தன. வரலாற்று நூல்களில் இவற்றின் படங்களை நாம் பார்த்திருக்கலாம்.

பளுவான போர்க் கவசங்களைத் தூக்கிப் பழக்கமில்லாத காரணத்தால் தாவீது அவற் றைப் போட்டுக்கொள்ள முடியாது என்று சொல்லிவிட்டு ஒரு தடியையும் கவணையும் மட்டும் கையில் எடுத்துக்கொண்டு கோலி யாத்தை நோக்கி வீர நடைபோட்டார். அக்கவண் பதனிடப்படாத் தோல் அல்லது பதனிடப்பட்ட மெல்லிய தோலினுலா னது. தந்தையின் ஆட்டு மந்தையைக் காவல் காத்து வந்த நாட்களில் ஏற்பட்ட பயிற்சி யால் தாவீது குறி தவருது கவண் எறிவதில் வல்லவராய் விளங்கினர். மந்தையை விட்டு அலைந்து திரியும் செம்மறியாட்டின் முன்னுகக் கல்லை வீசி அதை மந்தைக்குத் திரும்பச் செய் யும் அளவுக்குக் கவண் வீசக் கற்றிருந்தார் அவர். அரையில் கட்டியிருந்த பையில் பசியாற்றுவதற்கான புளிப்பற்ற அப்பமும், விசித்திரமான சில விளையாட்டுப் பொருட் களும், அவரே நாணலிலிருந்து செய்திருந்த குழல்களும், கவணில் வைத்து வீசும் கூழாங் கற்களும் வைத்திருந்தார். ஆயினும், கோலியாத் ஏளனம் செய்தபோது ஐந்து சிறப்பு வாய்ந்த கற்களைப் பொறுக்கியெடுத் துக் கொண்டார். தாவீதுக்குக் கொஞ்சம் அச்சமிருந்திருக்கலாம். ஆனால் யாவேயின் மேலும் தம் திறமையின் மேலும் நம்பிக்கை உள்ளவராய் இருந்தார். தாவீது இப்படித் தாக்குவார் என்று கோலியாத் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லைபோலும். மலை போன்ற உருவமும் மாபெரும் ஆற்றலும் அவருக்கு இருந்தபோதும் தாவீதின் கவண்கல் அண்மையிலிருந்து ஆற்றலோடு வீசப்பட்ட தால், கோலியாத் அப்படியே தரையில் சாய்ந்துவிட்டார். உடனே தாவீது கோலி யாத்தின் கையிலிருந்த வாளை எடுத்து அவரைக் கொன்றுபோட்டார்.

நியாயாதிபதிகள் *20:16*ல் பென்யமீன் இனப்பிரிவைச் சேர்ந்த இடது கைப்பழக்க முள்ள கவண் கல் எறியும் படையினரைப் பற்றி வாசிக்கிறோம். இவர்கள் குறி தவருது கவண் எறியும் திறமை வாய்ந்தவர்களாய் இருந்தபடியால் மயிரிழையும் தப்பாதபடி கவண் எறியக்கூடியவர்களாய் இருந்தார் கள். தாவீது இஸ்ரவேலின் அரசராயிருந்த போது அவர் படையிலும் கவண் எறியும் படைப்பிரிவினர் இருந்திருப்பார்கள் என்று நாம் திட்டமாய்க் கூறலாம்.

### சவுலின் பொருமை

சவுல் மன நலங்கெட்டு தீய குணம் காட்டும்போது அவருக்கு இசை மீட்டி உதவ தாவீது அரச அவைக்கு மீண்டும் சென்றார். தாவீதின் சுரமண்டலத்தைப்பற்றிய விவரங் கள் நமக்குக் கொடுக்கப்படவில்லை. சிலர் இது கையில் எடுத்துச் செல்வதற்கு ஏற்ற வகையில் இருந்த ஒருவிதமான யாழ் போன் றது என்று நினைக்கிறார்கள். சிலர் இது தட்டையாயும் நீளமாயும் இருந்த நரம்பு இசைக் கருவி என்றும், இதைத் தொடை மீது வைத்துக்கொண்டு கம்பிகளைத் தட்டி இசை மீட்டினுர்கள் என்றும் கருதுகிறார்கள். கருவி எப்படிப்பட்டதாக இருந்தாலும் அது சவுலைக் குணப்படுத்துவதற்குப் பயன் பட்டது என்பது தெளிவாகிறது. தாவீது இப்பணியைத் தொடர்ந்து செய்துவந்தார். ஆனால் நாளாவட்டத்தில் அவர் சிறந்த படைவீரராகவும், தளபதியாகவும் சிறந்து விளங்கலானார். இதை அறிந்த சவுலுக்குத் தாவீதின்மேல் பொருமை உண்டாயிற்று. தம் மகன் யோனத்தான் தாவீதோடு அதிக உறவு வைத்திருப்பதைக் கண்டு சவுல் ஆத்



தாவீது சவுலுக்காக சுரமண்டலம் வாசிக்கிறார்

திரமடைந்தார். சவுலின் பொறாமை அளவு கடந்து தாவீதைக் கொல்லுமாறு அவர் மேல ஈட்டியை எறியுமளவுக்கு வளர்ந்து விட்டது. குறி தவறி தாவீது பிழைத்துக் கொண்டார் என்று கண்ட சவுல் அவர் வீட்டிற்கு ஆட்களை அனுப்பி அவரைக் கொன்று தீர்த்துவிடத் திட்டமிட்டார். ஆனால் சவுலின் மகளும் தாவீதின் மனைவியுமான மீகாள் தாவீது தப்பி ஓட உதவினார். சவுல் அனுப்பின மனிதரை ஏமாற்ற தம் குலதெய்வத்தின் சிலையை எடுத்து தாவீதின் படுக்கையில் கிடத்தி அவருடைய போர்வையால் மூடிவிட்டார். தாவீதின் தலைமயிரைப்போல் இருக்க வெள்ளாட்டு மயிரை உபயோகித்தார்.

யோனத்தானால் எச்சரிக்கப்பட்டதால் தாவீது மிகவும் விழிப்புடன் முன்னெச்சரிக்கையாய் இருந்தார் சவுலை நோட்டம் இடுவதற்காக முக்கியமான விருந்து ஒன்றிற்குக்கூடச் செல்லவில்லை. தாவீது மெய்யாகவே அபாய நிலையில் இருந்தார் என்று யோனத்தான் தம்முடைய அம்புகளால் தெளிவாகக் காட்டிவிட்டார். யோனத்தானை அவர் மிகவும் நேசித்தார்; எப்போதும் அவருடைய நண்பராய் இருப்பதாக ஆணையிட்டு உறுதி கூறியிருந்தார். ஆகையால் அவரை விட்டுப் பிரிவதைக் குறித்து மிகுந்த துக்கம் அடைந்தார்.

### தாவீது உயிர் தப்ப ஓடுகிறார்

தாவீது சட்டத்தின் காப்பிழந்தவராகத் தம் நம்பிக்கைக்குகந்த சில வேலையாட்களை அழைத்துக்கொண்டு மலைகளுக்கு ஓடி ஒளிந்துகொண்டார். அங்கு நோப் என்ற இடத்தில் தங்கினார் தாவீது. சீலோ பெலிஸ்தியர்களால் அழிக்கப்பட்ட பின்பு நோப்தான் ஒரு பரிசுத்த இடமாயிற்று. ஒப்பந்தப் பெட்டகம் இன்னும் கிரியாத்யெயாரீமில்தான் இருந்தது. 'கடவுளுக்குப் படைக்கப்பட்டு' புனிதமாக்கப்பட்டிருந்த தேவ சமுகத்து அப்பங்கள் தாவீதுக்குக் கொடுக்கப்பட்டன. ஒவ்வொரு ஓய்வு நாளிலும் தூய இடத்தில் புதிது புதிதாக வைக்கப்படும் தட்டையான சப்பாத்தி போன்ற தூய அப்பங்கள் இவை. சாதாரணமாக இந்த அப்பங்களைப் பிரதான ஆசாரியர்கள் என்ற குருக்கள் தலைவர்கள் மட்டுமே சாப்பிடுவார்கள். தாவீதின் உபயோகத்திற்காக கோலியாத்தின் பட்டயத்தைக் கொடுத்த அகீமேலக்கு காட்டிக் கொடுக்கப்பட்டு, சவுலின் கட்டளையின் பேரில் தோவேக்கு என்னும் ஏதோமியரால் கொல்லப்பட்டார். இவர் மகனாகிய எப்யாதார் ஏபோத்தை எடுத்துக்கொண்டு தலைமறைவாகி, பிறகு தாவீதோடு போய்ச் சேர்ந்துகொண்டார். யாவேயின் ஆசாரியர்கள் இவ்விதம் வெளிப்படையாகத் தாவீதை ஆதரிப்பதாசக் காட்டியது தாவீதின் பக்கம் நியாயம் இருந்ததென்று மக்களை நம்பச் செய்தது. இதுமுதல் தாவீதுக்கும் சவுலுக்கும் இடையே ஏற்பட்ட பிளவு அதிகமாகி, சவுலின் இறுதி நாட்கள் வரை அப்படியே நீடித்தது.

### தாவீதின் வீரச்செயல்கள்

சவுல் தம் பெற்றோர்மேல் பழி வாங்குவார் என்று தாவீது நினைத்தபடியால், தம் பெற்றோர்களை மோவாப் நாட்டு அரசருடைய பாதுகாப்பில் இருக்கும்படி அனுப்பி வைத்துவிட்டார். அவரோ பெத்லெகேமிலிருந்து தென்மேற்காகச் சுமார் இருபது கிலோமீட்டர் தொலைவிலிருந்த அதுல்லாம் குகையில் தங்கியிருந்தார். தம் சிறு வயதில் ஆடுகளை மேய்த்து வந்ததிலிருந்து, இந்தக் குன்றுகளை நன்கு அறிந்திருக்கலாம். சவுல் எந்தச் சமயமும் வந்து தம்மைத் தாக்கக்கூடும்என்று இடையறு விழிப்புடன் இருந்ததோடு பெலிஸ்தியர்களுக்குத் தொல்லை கொடுத்துக் கொண்டுமிருந்தார். தெற்கில் ஐந்து கிலோமீட்டருக்கப்பால் எல்லைப்புறத்திலிருந்த கெகீலா என்பது பெலிஸ்தியர் கையிலிருந்து அவர் மீட்ட பட்டணங்களில் ஒன்றாகும். குறுங்காடான மாகோன் வழியாகச் சென்று காட்டுக் கொள்ளை வீரரைப்போல், அங்குள்ள மேய்ப்பர்களுக்கு நாடோடி கொள்ளைக்

கூட்டத்தினரால் தீங்கு ஏற்படாதவாறு பாதுகாத்தார். தமிழ் நாட்டுச் செம்புலிங்கம் வாழ்க்கைபோல் இந்நாட்களில் தாவீதின் வாழ்க்கை இருந்தது. சீப் ஊரார் இவரைக் காட்டிக் கொடுத்தபோது உப்புக்கடலுக்கு மேற்காக நீண்டிருந்த என்கேதி என்ற பாலைப் பசுந்திடலுக்கு ஓடிப்போய் தலை மறைவானார். இப்போது இவர் அலைந்து திரிந்த இடங்கள்பற்றி இவருடைய சங்கீதங்களில் திரும்பவும் நினைத்துப் பார்க்கிறார் (சங். 23:4). குறுகிய மலையிடுக்கு தவறாகப் பள்ளத்தாக்கு எனப்படுகிறது. அது இருண்ட பாறைகளுக்கிடையேயுள்ள நீண்ட ஒடுக்கமான வழியாகும். இரு பக்கங்களிலும் செங்குத்தான பாறைகள் உயர்ந்து நிற்கும்; விரோதிகளும் அவர் அறிந்திராத அச்சம் தருபவைகளும் மறைந்துள்ள இடம் அது. 'மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடப்பது' என்றால் என்ன என்று தாவீதுக்கு நன்றாகத் தெரியும்.

ஒருநாள் சீப் வனாந்தரத்தில் அரண் காப்பு வாய்ந்த மலையில் சவுலைக் கொல்லக்கூடிய வாய்ப்பு தாவீதுக்குக் கிடைத்தது. சவுல் தனியே படுத்து உறங்கிக்கொண்டிருந்தார். முகாமின் தலைவர் அங்கிருந்தார் என்பதன் சிறப்படையாளமாகச் சவுலின் ஈட்டி தரையில் குத்தப்பட்டு நேராக நின்றது. எப்பொழுதும் தேவைப்படும் தண்ணீர்க் கலசம் அருகில் இருந்தது. தாவீது சவுலைக் கொல்லாமல் விட்டுவிட்டார். ஆனால், சவுல் மென்மையான சொற்கள் பேசினாலும் அவரை இனி நம்பமுடியாது என்று அறிந்துகொண்டார்.

தாவீது ஒரு விநோதமான நடவடிக்கையில் இறங்கினார். 'அன்னிய தேவர்களை'ச் சேவிக்க முடிவு செய்தார். அதாவது அன்னிய நாட்டிற்குச் சென்று தங்கத் திட்டமிட்டார். இதில் ஆச்சரியமென்னவென்றால் இதற்கு அவர் பெலிஸ்தியர்களின் நாட்டைத் தெரிந்துகொண்டார். அவர் யாவேயையும் விட்டுச் செல்ல விரும்பினார் என்பதை மறைமுகமாக இது குறிப்பிட்டது. ஏனெனில், யாவேயை அவர் நாட்டில்தான் வணங்க முடியும். பெலிஸ்தியர்கள் தாவீதையும் வலிமை வாய்ந்த அவர் படையையும் வரவேற்று, போர்களில் தங்கள் பக்கமாய் போரிடப் பயன்படுத்திக் கொண்டனர். தாவீது பெலிஸ்தியர்களோடு இரண்டு ஆண்டு தங்கியிருந்தார். சிக்லாக் அவர் தலைமை இடமாயிருந்தது. இங்கு சவுலின் கைக்குத் தப்பி பத்திரமாக இருந்தார். தம்முடைய இன மக்களுக்குத் தொல்லை கொடுத்து வந்த கொள்ளைக் கூட்டத்தினரையும் விரட்டியடிக்க அவரால் முடிந்தது. தம் சொந்த நாட்டின்மீது போருக்குச் செல்வதை அவர்



வயதுசென்ற ஆயர். ஆயரின் வாழ்க்கையின் துன்பங்களையும் இன்னல்களையும் பற்றி இவரும் அறிந்திருப்பார்.


தக்க சமயத்தில் தவிர்க்க முடிந்தது! அவர் இல்லாத சமயம் சிக்லாக்கின்மீது படையெடுத்துச் சென்ற அமாலேக்கியரை அடித்து நொறுக்கினார்.

## சவுல் முறியடிக்கப்பட்டார்

இதற்குள்ளாக பெலிஸ்தியர் அனைவரும் திரண்டு இஸ்ரவேல் நாட்டின்மேல் படையெடுக்கத் தயாராகிவிட்டனர். தோல்வி நிச்சயம் என்று நம்பிக்கையிழந்த நிலையிலிருந்த சவுல், ஏன்தோர் என்ற இடத்தில் இறந்தவர்களோடு பேசும் கலையில் கைதேர்ந்த ஒரு பெண் மந்திரவாதியிடம் சென்று ஆலோசனை கேட்க முனைந்தார். சாமுவேலோடு மந்திர சக்தியின் மூலம் பேசி அவர் அறிவுரையைக் கேட்டுச் சொல்லுமாறு அவளை வற்புறுத்திக் கேட்டார். (பிரபஞ்சம் எப்படி இருந்ததென்று எபிரேயர் கற்பனை செய்திருந்தார்கள் என்பதை 91ம் பக்கத்திலுள்ள படம் ஓரளவு விளக்கும். இறந்தவர்களின் ஆவிகள் சீயோல் என்ற இடத்தில் போய்ச் சேருவதாக அவர்கள் நினைத்திருந்தார்கள். இவ்விதமாகச் சாமுவேலை அழைத்தால் அவர் அங்கிருந்து வரக்கூடும் என்று சவுல் நம்பினார்.)

சவுலின் படை எஸ்டிரேலோனுக்கு எதிராக இருந்த கில்போவா மலையின்மேல்

இருந்தது. சூனேம் என்ற இடத்தில் பெலிஸ்தியர்கள் முகாமிட்டு இருந்தனர். இடையிலிருந்த பள்ளத்தாக்கில் இஸ்ரவேலின் படை முற்றிலுமாகத் தோற்கடிக்கப்பட்டது. கில்போவா மலையில் சவுலும் யோனத்தானும் வெட்டிக் கொல்லப்பட்டார்கள். அவர்கள் உடல்கள்யோர்தானுக்குமேற்கேஆறுகிலோ மீட்டர் தூரத்திலுள்ள இஸ்ரியேல் சமவெளியில் இருந்த பேத்சானுக்கு எடுத்துச் செல்லப்பட்டு அவமானத்திற்கும் அவமதிப்புக்கும் உள்ளாக்கப்பட்டு நகரவாசல் கதவுகளில் வைக்கப்பட்டன. யாபேஷ் கிலியாத்தின் ஆட்கள் சவுலின் வீரச்செயல்களை நினைவில் கொண்டவர்களாய் தங்கள் உயிரைத் துச்சமாய் மதித்து மலையிலிருந்து இறங்கி வந்து அந்த உடல்களை எடுத்துச்சென்று ஒரு கர்வாலி மரத்தடியில் அடக்கம் செய்தனர்.




பெலிஸ்தியர்கள் வெற்றி பெறுவது உறுதியாயிற்று. 'யுத்த ஆயுதங்கள் அனைத்தும் அழிந்தனவே' என்று தாவீது புலம்பினர். இஸ்ரவேலரின் போர்க்கருவிகள் உண்மையாகவே அழிந்துபட்டன. ஆனால் சவுல், யோனத்தானை நினைவுகூர்ந்து தாவீது ஒரு இரங்கற்பா பாடினபோது ஆயுதங்களைக் குறித்தல்லாமல் வேறு எண்ணங்கள் அவர் மனதிலிருந்தன. அதற்கு 'வில்லின் பாட்டு' என்று பெயரிட்டார். ஏனெனில், சவுலும் யோனத்தானும் வில் வித்தையில் கைதேர்ந்தவர்கள் (2 சாமு. 1:19—27).

## விளக்கப் பயிற்சி

1. மிக்மாஸில் யோனத்தானுக்கும் அவருடைய படைக்கவசங்களைத் தூக்கிச் சென்றவருக்கும் இடையே நடந்த நிகழ்ச்சியை எழுதி நடியுங்கள்.
2. யோனத்தானையும் அவருடைய படைக்கவசங்களைத் தூக்கிச் சென்றவரையும் படம் வரைந்து வண்ணந்தீட்டி அல்லது மாதிரி செய்து காண்பியுங்கள். அவர் என்னென்ன படைக்கவசங்களும் ஆயுதங்களும் வைத்திருந்தார் என்று முதலில் சரியாகத் தெரிந்துகொள்ளுங்கள்.
3. சாமுவேலுக்குச் சவுல் கீழ்ப்படியாமற்போனதைக் குறித்து விவரியுங்கள்.
4. தாவீதும் கோலியாத்தும் வருகிற காட்சியை வில்லுப்பாட்டாகப் பாடுங்கள்.


   அல்லது

   இவர்கள் சண்டையிடும் காட்சியை வானொலி வர்ணனையாக எழுதுங்கள். இருதரப்பிலும் ஓவ்வோர் அறிவிப்பாளர் இருக்கட்டும். போர்க்களத்திலும் ஓர் அறிவிப்பாளர் இருக்க வேண்டும்.
5. மீகாள் தாவீதின் பகைவர்களை ஏமாற்றிய விதம் குறித்து தம் சிநேகிதிகளிடம் சொல்வதுபோல் பேசுங்கள்.
6. தாவீதின் கவண்போல் ஒன்று தயார் செய்யுங்கள்.
7. ஈசாவாகக் கற்பனை செய்துகொண்டு பழைய நண்பர் ஒருவரிடம் சாமுவேல் உங்கள் வீட்டுக்கு வந்ததுபற்றிக் கூறுங்கள்.
8. தாவீதைச் சவுல் பகைப்பதைக் குறித்தும், தாவீது பிரிந்துபோய்விட முடிவு செய்ததைக் குறித்தும் யோனத்தானும் தாவீதும் பேசும் உரையாடலை எழுதுங்கள்.
9. நட்பைக் குறித்த ஜெபம் ஒன்று எழுதி காலைக் கூட்டத்தில் அதைப் பயன்படுத்துங்கள். 'நட்புக்கான விதிகள்' ஆறு உங்களால் குறிப்பிடக்கூடுமா?

10. நீங்கள் தாவீதின் படைக்கவசங்களைத் தூக்கிச் செல்பவர். அநேகமாக யோனத்தானின் படைக்கவசங்களைத் தூக்கிச் செல்பவரை உங்களுக்கு நன்றாகத் தெரியும். அவரிடம் சவுல் அரசரைத் தாவீது கொல்லாமல் விட்ட நிகழ்ச்சியை விவரியுங்கள்.

11. 'வல்லவர்கள் வீழ்ந்தார்கள்' என்ற வரிகளை அழகான எழுத்துக்களாக எழுதுங்கள்.

12. தாவீதின் புலம்பலை நன்றாகப் படித்து ஆராயுங்கள். அது ஓர் அழகான கவிதை என்று அறிந்துகொள்வீர்கள். (புதிய திருப்புதல் வேதாகமத்தில் அது ஒரு கவிதையாகவே எழுதப்பட்டிருக்கிறது.) அதில் ஓர் அடி திரும்பத் திரும்ப வருகிறது. அது தாவீதின் சோகத்தை எவ்வாறு காண்பிக்கிறது என்று உணர்ந்து பாருங்கள். இக்கவிதையைக் குழுப் பாடமாகப் படிக்கவேண்டும். காலைக் கூட்டத்தில் பொருத்தமான சமயம் இதைப் படியுங்கள்.




பிரபஞ்சம் எப்படி இருந்ததென்று இஸ்ரவேலர் கற்பனை செய்திருந்தார்கள் என்பதை இப்படம் காட்டுகிறது. பூமியைத் தூண்கள் தாங்கியிருந்தன என்றும், பளபளப்பான பெரிய குவிமாடம் ஒன்றன் குறுக்காகச் சூரியனும் நிலவும் நட்சத்திரங்களும் சென்றன என்றும், பலகணிகள் வழியாக மழை பெய்தது என்றும் நம்பினார்கள். சீயோல் என்ற இடத்தில் ஆவிகள் தங்கியிருந்தன என்றும் அவர்கள் நினைத்தார்கள். திருமறையில் சீயோல் என்பது பாதாளம் என்று மொழிபெயர்க்கப் பட்டுள்ளது.

பின்வரும் வசனங்களை வாசித்து, திருமறையில் மேற்கூறிய கருத்துக்கள் எங்கெங்கு காணப்படுகின்றன என்று கண்டுபிடியுங்கள்:—

ஆதி. 1:6–8,14–18; 7:11,12; மல்கியா 3:10; யோபு 9:6; 1 சாமு. 2:8; சங். 19:6; யோபு 14:13; ஏசா. 14:9,15.

அத்தியாயம் 15

# தாவீது அரசர்

*(2 சாமு. 2:1–4அ,8–11; 3:17–27; 4; 5:1–5,17–25; 23:13–17; 5:4–12; 6:1–19; 8—11:3,14–17; 12:1–14;15—16:4,15–19; 17—19:30; 1 இரா. 1; 2:1–4,10,11)*

### தாவீதுக்கு வெற்றி கிட்டுமா?

சவுல் இறப்பதற்குமுன் சாமுவேல் இறந்து விட்டார். எனவே ஏமாற்றத்தின் அவமானத்தையும் கசப்புத் தன்மையையும் அவர் அனுபவிக்கவில்லை. உயிரோடிருந்தால் தாவீதின் தலைமையில் நாடு பிற்காலத்தில் வெகுவாக முன்னேறியதைக்கண்டு அவர் மகிழ்ந்திருப்பார். அவருடைய நோக்கம் இஸ்ரவேலின் எல்லா இனப்பிரிவுகளையும் போராற்றல் மிக்கவரும் நேர்மையானவருமான ஓர் அரசரின்கீழ் ஒன்றுபடுத்தவேண்டும்; அவ்வரசர் தம் மக்கள், தங்களுக்குள் சண்டை, பூசல், பேராசையில்லாமல் உண்மையாகவே யாவேயின்மீது பற்றுடையவர்களாய், தெரிந்தெடுக்கப்பட்ட மக்களாய் வாழ வழி நடத்தக்கூடியவராய் இருக்கவேண்டும் என்பதே. தாவீதரசர் இந்த இலட்சியத்தை ஏறத்தாழ நிறைவேற்றி வைத்து விட்டார். 2 சாமுவேலிலும் 1 இராஜாக்கள் 1, 2லும் இவர் வரலாற்றைக் காண்கிறோம்.

தாவீது எப்ரோனிலே யூதாவின் அரசராக முடிசூட்டப்பட்டார். எருசலேமிலிருந்து முப்பத்திரண்டு கிலோமீட்டர் தெற்கே எப்ரோன் இருந்தது. அவர் இன்னும் பெலிஸ்தியரோடு நட்புறவுடன் இருந்தார். ஒருவேளை அவர்களுக்கு அடங்கிய நிலையில் நாட்டை ஆண்டுவந்திருக்கலாம். அவர் அந்தச் சிறிய நாடான யூதாவுக்குத் தலைவராயிருந்ததை அவர்கள் பொருட்படுத்தவில்லை. மக்பேலா குகையிருந்த இடத்தில்தான் எப்ரோன் இருந்தது என்பது உங்களுக்கு ஞாபகம் இருக்கலாம். இந்த நிகழ்ச்சிகளில் அதைப் பற்றி அடிக்கடி கேள்விப்பட்டிருக்கிறோம். வடக்கே இருந்த இனப்பிரிவினரில் மீதியாய் இருந்தவர்கள் இஸ்ரவேல் எனப்பட்டவர்கள். இவர்கள் அதிகமாய் பென்யமீன் இனப்பிரிவினர். சவுலுக்கு உண்மையுள்ளவர்களாய் இருந்து இவர்கள் மகனயிமில் சவுலின் மகன் ஈஸ்போசத்தை அரசராக்கினார்கள். இரு தரப்பினருக்கிடையே பூசல் முற்றி இஸ்ரவேல் பகுதியில் எருசலேமுக்கு வடமேற்கே எட்டு கிலோமீட்டர் தொலைவில் இருந்த கிபியோனில் போர் செய்தனர். ஈஸ்போசத் கொல்லப்பட்டார். போரிட்டுக் கொண்டிருந்த இரு தரப்பினரும் இப்போது தாவீதின் தலைமையில் ஒன்றுகூட முடிவு செய்தனர். இவ்விதம் நாடு முழுமைக்கும் தாவீது அரசரானார். இதைக் கண்டு தாங்கள் இதுவரை கவனிக்காது இருந்த ஆபத்து குறித்து பெலிஸ்தியர் விழிப்படைந்து தாவீதுக்குஎதிராகப்படையெடுத்துச்சென்றனர். அதுல்லாம் பகுதியைத் தாவீது நன்றாக அறிந்திருந்தார். எனவே அவர் பெலிஸ்தியரை அச்சமவெளியிலிருந்தும் ஷெபேலாவிலிருந்தும் கடற்கரை வரை துரத்தியடித்துவிட்டார். ஊடுருவ இடம் தராத தங்கள் ஐந்து பட்டணங்களில் வாழ்ந்தால்போதும் என்று பெலிஸ்தியர் மனநிறைவு அடைந்தனர். (இப்பட்டணங்களை 75ம் பக்கத்திலுள்ள நிலப்படத்தில் கண்டுபிடியுங்கள்.)

### எருசலேம் பிடிபட்டது


எருசலேம் தாவீதுக்குத் தொல்லை கொடுக்கும் ஒரு பட்டணமாகவே இருந்துவந்தது. அது எபூசியர்களின் பலமான கோட்டை. அது எவ்விதத் தாக்குதலுக்கும் அசையாதது என்று கருதப்பட்டபடியால், தேவை ஏற்பட்டால் 'குருடரும் முடவரும்கூட' அதைப் பாதுகாக்க முடியும் என்று சொல்வது உண்டு. இது பிடிபட்ட வரலாறு மிகவும் சுவையான ஒன்றாகும். புதைபொருள் ஆராய்ச்சியாளர் தோண்டிப் பார்த்தபொழுது பட்டணத்திற்கு அப்பால் கெதரோன் பள்ளத்தாக்கிலிருந்த நீரூற்றிலிருந்துமட்டுமே இதற்குத் தண்ணீர் கிடைத்துவந்தது என்று தெரியவந்தது. அதிலிருந்து பூமிக்கடியில் நிலத்தைக் குடைந்து அமைக்கப்பட்டிருந்த சுரங்க வழிக்கால்வாய்கள் நகரின் நடுமையத்

தில் செங்குத்தாக மேலே எழும்பி நின்ற சுரங்க வழியோடு இணைக்கப்பட்டிருந்தன. இச்சுரங்க வழியாக வந்து, மேலே ஏறி, வெளியே பட்டணத்தை முற்றுகையிட்டு நிற்கும் ஆட்கள் உள்ளே நுழைவதற்கு வசதியாக ஆயத்தங்களைச் செய்துவிட முடியும் என்பதைத் தாவீது விளக்கினார். முதலாவது உள்ளே நுழைபவர்களுக்குப் பெரிய வெகுமதி கிடைக்கும் என்னும் ஆசையால் உந்தப்பட்டு யோவாபும் அவர் ஆட்களும் சுரங்கச் செல்குழாய் வழியாக மேலே வந்தனர். (சுரங்கச் செல்குழாயைக் கண்டுபிடித்த வாரன் என்பவரின் பெயரால் இன்று அது வாரன் சுரங்கச் செல்குழாய் எனப்படுகிறது.) அங்கு கூடியிருந்த பெண்கள் அவர்களைக் கண்டு திகைத்து மருண்டு நிற்கவே அவர்களை விலக்கிக்கொண்டு நகரவாயிலுக்கு ஓடிச் சென்று, வாயிற்கதவுகளைத் திறந்துவிடவும், 'திமு திமு' என்று படை உள்ளே நுழைந்து விட்டது! வேறொரு புதிதான சுரங்க வழிக் கால்வாயும் இருந்தது. இது தெற்காகச் சீலோவாம் குளத்திற்குச் சென்றது. நகரின் அப்பகுதிக்குத் தேவையான தண்ணீர் இதன்மூலமாகக் கிடைத்தது.


வெகுநாட்களாகத் தாவீது ஆவலோடு பிடிக்க எண்ணியிருந்த பட்டணம் இப்போது அவர் கைக்குள் வந்தது. அது இரண்டு மலைகள்மேல் கட்டப்பட்டிருந்தது; வடக்குப் பக்கம் தவிர மற்றமூன்று பக்கங்களிலும் செங்குத்தான பாறைகளால் பாதுகாக்கப்பட்டிருந்தது. அது நாட்டின்மையத்தில் தனி நிலையானதாய் இருந்தது. அது மிகப் பழைமையான பட்டணம். ஆகவே சிறப்புவாய்ந்த புதிய தலைநகராயிற்று. பட்டணத்தைப் பிடித்தவுடன் அதன் பாதுகாப்பற்ற பகுதியைப் பலமுள்ளதாக ஆக்குவதையே தமது முதல் வேலையாகக்கொண்டார் தாவீது. அப்பகுதியில் அரணைத் தொடர்ந்து கட்டினார். அது மில்லோ எனப்பட்டது. பட்டணத்தின் இப்பகுதி தாவீதின் பட்டணம் எனப்பட்டது. இங்குதான் தாவீது தம் அரண்மனையைக் கட்டினார்.

### வளமான வாழ்வின் தொடக்கம்

இதற்குள்ளாகவே அக்கம் பக்கத்திலிருந்த நாடுகள், இனங்கள், அரசர்கள், தாவீது சாதாரண இனத்தலைவரல்ல என்று உணரத் தொடங்கியிருந்தார்கள். அவர் அரசராய் இருக்கத் தகுந்தவர்; அவரைப்பற்றி அறிந்து வைத்திருப்பது அவசியம்; அவரை உயர்வாக மதிக்கவேண்டும்; ஒருவேளை அவரைக் குறித்து அச்சம் கொள்ளவேண்டியதாயும் இருக்கும் என்று உணர்ந்தார்கள். இவ்விதமாகவே பெனிக்கேயாவோடு வணிகத் தொடர்பு தொடங்கிற்று. முக்கியமாகத் தாவீது அரண்மனை கட்டுவதற்குத் தேவை



சுரங்க வழி



பெனிக்கேய பாய்மரக் கப்பல்

யான பொருட்களை அங்கிருந்து வாங்க பேச்சு வார்த்தை நடத்தினார். தீரு நாட்டு மக்கள் பெரும் வணிகர்களாக இருந்தனர். தீருவின் அரசர் கேதுரு மரங்களையும், கற்களையும், பொன்னையும், மற்ற உலோகங்களையும், சிறப்பான தீருவின் சாயம் (அவர்கள் கடற்கரையில் காணப்பட்ட சிப்பி மீன்களிலிருந்து அவர்கள் மட்டுமே தயாரித்த கருஞ்சிவப்பு சாயம்) தோய்த்த மெல்லிய துணிகளையும் எபிரேய உழவரின் தானியங்களுக்கும், திராட்சைரசத்திற்கும், எண்ணெய்க்கும் பண்டமாற்றாகக் கொடுத்தார். இது பிற்காலத்தில் சாலொமோன், ஓம்ரி அரசர்கள் காலத்தில்கூட தொடர்ந்து நடந்த வாணிகத்திற்கு அஸ்திவாரமாய் அமைந்தது.

### ஒப்பந்தப் பெட்டகம் மீண்டும் வந்து சேர்ந்தது

தம்முடைய தலைநகர் யாவேக்கும், அவர் ஒப்பந்தப் பெட்டகத்துக்கும் உறைவிடமாயிருக்கவேண்டும் என்று தாவீது உணர்ந்தார். கிரியத்யெயாரீமிலிருந்து மேள தாளங்களோடும், குழல் யாழின் இசையோடும், ஆடல் பாடலோடும் அதைக் கொண்டுவர ஏற்பாடு செய்தார். தாவீது அதற்குமுன் தம் உயர் நிலைக்குப் பொருத்தமற்ற முறையில் ஏன் நடனமாடினார் என்று அவர் சொந்த மனைவி மீகாளுக்குக்கூட விளங்கவில்லை. கிழக்கு நாடுகளில் ஒரு பெரிய மனிதருக்காக ஊர்வலம் ஒழுங்கு செய்யப்பட்டால் அவரைப் பெருமைப்படுத்துவதற்காக ஓர் அடிமையைத் தன்னிலை மறந்து ஆடவும் மனம்போன போக்கில் துள்ளிக்குதிக்கவும் கோமாளிபோல் கிண்டல்செய்யவும் ஏற்பாடு செய்வார்கள். அதே விதமாகத் தாவீதும் தம் கடவுளை மேன்மைப்படுத்துவதற்காக 'ஆண்டவருக்கு முன் ஆடிக்கொண்டு சென்றார்' (பிலி. 2:7 பாருங்கள்). பெட்டகம் எருசலேமை அடைந்தபோது தாவீது ஆசாரிய உடையில் நின்றபடி அதை ஏற்று, கூடாரத்திலே வைத்தார். சில நாட்களுக்குள்ளாக, யாவே கூடாரத்தில் தங்கும்போது தாம் மட்டும் ஓர் அழகிய அரண்மனையில் வாழ்வது சரியல்ல என்று நினைத்தார். எனவே இஸ்ரவேலின் கடவுளுக்கு ஒரு சிறப்புவாய்ந்த ஆலயத்தைக் கட்டிமுடிக்கத் திட்டமிட்டார்.

### மீண்டும் அகதி ஆகிறார்

இதைச் செய்யத் தொடங்குமுன் மீண்டும் அவர் உயிர்க்கு ஆபத்து வந்தது. அவர் மகன் அப்சலோம் புரட்சி செய்துவிட்டு சீரியா நாட்டில் கலிலேயாக் கடலுக்கு வட கிழக்காக உள்ள கெசூரிலுள்ள தம் பாட்டன் வீட்டுக்கு ஓடிப்போனார். பின்னர் அவர் மன்னிப்பு பெற்றுத் திரும்பிவந்தார். ஆனால் தொடர்ந்து இரகசியமாகத் தம் தந்தைக்கு எதிராகச் செயல்படத் தொடங்கினார். கடைசியில் ஒருநாள் வெளிப்படையாகவே தாவீதை எதிர்த்தார். தாவீது தம் உயிர் தப்ப யோர்தானைக் கடந்து ஓடினார். தலைநகர் இரத்தக்களமாக மாறிவிடக்கூடாது என்ற எண்ணத்திலேயே அவர் இப்படி ஓடியிருக்கலாம். அவர்மேல் பற்று உள்ளவர்களாய் இருந்த அவருடைய போர்வீரர்கள் அவரோடு சென்றார்கள். தவறான அறிவுரை கேட்டு அப்சலோம் தம் தந்தையை எதிர்த்தபோது மக்கள் தாவீதின் பக்கம் திரும்பிவிட்டனர். கர்வாலி மரத்தில் அல்லது முட்புதரில் தலைமுடி சிக்குண்ட நிலையில் எப்பிராயீம் காட்டில் அப்சலோம் வெட்டிக் கொல்லப்பட்டார். அச்செய்தி கேட்ட தாவீது மனமுடைந்துபோனார். (அவர் எப்படிக் கலங்கிப்போனார் என்பதைத் திருமறையில் மறுபடியும் படித்துப் பாருங்கள்.) ஆனால் யோவாபோ தாவீதிடம் பேசி அவர் ஓர் அரசரைப்போல் நடந்துகொள்ளும்படிச் செய்துவிட்டார்.

### தாவீதின் புகழ்


தாவீதின் வாழ்க்கை அப்பழுக்கற்றது என்று நாம் சொல்லமுடியாது. நம் அறவொழுக்கத்தின்படி ஏத்தியரான உரியாவைக் கொன்று தீர்த்தது அவக்கேடான செயல்தான். ஆனால் அந்நாட்களில் அது மிகச் சாதாரணமாய் நடந்துவந்த ஒரு

செயலாகும். இந்நிகழ்ச்சியில் நாம் கவனிக்க வேண்டிய முக்கிய குறிப்பு என்னவென்றால் நாத்தான் என்ற ‘கடவுளின் மனிதர்’ ஆற்றல் மிக்க ஓர் அரசர் தம் குற்றத்தை ஒப்புக்கொள்ளத்தக்கதாகக் கடிந்து பேச முடிந்தது என்பதே. பண்பிற்குறைந்தவர்கள் தம் குற்றத்தை ஒப்புக்கொள்ள மறுத்திருப் பார்கள். ஆனால் குற்றத்தை ஒப்புக்கொண்ட தால் தாவீது தாம் எவ்வளவு பண்பட்ட ஒழுக்கமுடையவர் என்பதைக் காட்டி விட்டார்.

தம் பழைய பகைவர்களை எல்லாம் மன்னித்துவிட்டார். மெபிபோஷேத், சீபா, சிமயீ இவர்களையும் மன்னித்துவிட்டார். ஏறத்தாழ கி.மு. 1000ல் தாவீதின் ஆட்சி முடிவடைந்தது. அவர் ஒரு பெரிய இராச்சியத்தைத் தம் மகன் சாலொமோனுக்கு விட்டுச்சென்றார். தாவீதின் ஆற்றல் பலஸ்தீனா முழுவதிலும் மட்டும் அல்லாமல் அதற்கு அப்பால் செங்கடலுக்கும், மத்திய தரைக் கடலுக்கும், தைகிரிஸ்—ஐப்பிராத்து ஆறுகள் பாயும் நாடுகள்வரையிலும் பரவியிருந்தது. அவருக்கு அடியிலிருந்த அமாலேக்கியர், மோவாபியர், ஏதோமியர், அம்மோனியர், சீரியர் ஆகியோர் அவருக்குக் கப்பம் கட்டினர். வாக்குப்பண்ணப்பட்ட நாடான பலஸ்தீனாவில் குடியேறியவர்களுக்குச் செழும்பிறை பகுதியில் நடந்த வியாபாரத்தினால் வாழ்க்கை வளம்பெற்றது. தாண் முதல் பெயேர்ஷெபா வரையிலும், அதற்கப்பாலும் தாவீதின் மகனான சாலொமோன் ஆண்ட பகுதி பரவியிருந்தது. (நிலப்படங்களைப் பார்த்து சவுல், தாவீது, சாலொமோன் இவர்கள் ஒவ்வொருவரும் ஆண்ட பகுதிகளை ஒப்பிட்டுப் பாருங்கள்.)

தாவீது சிறந்த ஆயர்; நாடு கடத்தப் பட்டவர்; இசை வல்லுநர்; போர்வீரர்; அரசியல் மதிநுட்பம் படைத்தவர்; யாவேயிடம் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டவர். எனவே அவர் புகழ் சிறந்து விளங்கிற்று. அவருக்குப் பின் தலைமுறைகளில் வாழ்ந்தவர்கள் தாவீதின் ஆட்சியே எல்லாருடைய ஆட்சியையும்விட அதிசயமானது என்று எப்போதும் கருதி வந்துள்ளார்கள். அவர்கள் மேசியாவும் நீதிவழுவாத நியாயாதிபதியாகவும் மன்னிக்கும் குணமும் பெருந்தன்மையும்கொண்ட ‘சமாதானப் பிரபுவாகவும்’ இருப்பார் என்று நம்பினார்கள்.

* * *




**விளக்கப் பயிற்சி**

1. தாவீதின்கீழ் இஸ்ரவேலின் பன்னிரண்டு இனப் பிரிவுகளும் ஒன்றுபடும்வரை நடந்த நிகழ்ச்சிகளை எடுத்துக் கூறுங்கள்.

2. எருசலேமின் முற்றுகைக்கான தாவீதின் திட்டத்தை விவாதியுங்கள். இதில் தாவீதும் யோவாபும் மற்றவர்களும் பங்கெடுக்கவேண்டும்.

3. தம் அரண்மனை கட்ட உதவிகேட்டு தாவீது தீருவின் அரசரான ஈராமுக்கு எழுதுவதுபோல் எழுதுங்கள்.

4. ஈராமின் தூதுவராக உங்களைக் கற்பனை செய்துகொண்டு ஈராம் கூறிய பதிலைத் தாவீதிடம் வாய்மொழியாகக் கூறுங்கள்.

5. குன்றுகள் நிறைந்த ஒரு பகுதியின் மாதிரி ஒன்று தயாரித்து அதில் குகைகள், கணவாய்கள் அமைத்துக் காட்டுங்கள்.

6. ஒப்பந்தப் பெட்டகம் கொண்டுவரப் பட்டதை மீகாள் கண்டு வருணிப்பது போல் வருணியுங்கள்.

அல்லது

அச்சமயத்தில் தாவீது மகிழ்ந்து பாடியிருக்கக்கூடிய ஒருபாட்டை எழுதுங்கள்.

7. யோவாப் எப்படிப்பட்டவர்? திருமறையில் நீங்கள் படித்த ஆதாரங்களை வைத்து விளக்குங்கள்.

அல்லது

தெக்கோவா ஊரைச்சேர்ந்த யுக்திசாலியான பெண் தாவீதிடம் என்ன கூறினர்?


8. பின்வந்த யூதத் தலைமுறையினர் தாவீதின் ஆட்சியை 'மிகச் சிறப்பு வாய்ந்த ஆட்சியாக'க் கருதியது ஏன்? இதே மனப்பான்மையோடு மேசியாவின் வருகையையும் தொடர்புபடுத்திப் பேசக் காரணம் என்ன?

9. சவுல் ஆண்ட பகுதிகளைக்காட்டும் பலஸ்தீனவின் நிலப்படம் ஒன்று வரைக. அதில் தாவீது ஆண்ட பகுதிகளையும், சாலொமோன் ஆண்ட பகுதிகளையும் வெவ்வேறு வண்ணமிட்டுக் காட்டுங்கள். இதிலிருந்து நீங்கள் என்ன தெரிந்து கொள்கிறீர்கள்?

10. ஒரு சாதாரண மனிதராகவும், அரசராகவும் தாவீதிடம் காணப்பட்ட பண்புகளைக் குறிப்பிடுங்கள். இரண்டும் இணைந்து காணப்படுகின்றனவா? அல்லது ஒன்றில் உள்ள குறைபாடு, மற்றொன்றில் உள்ள தோல்விக்குக் காரணமாக உள்ளதா?

11. தாவீது சங்கீதங்கள் என்ற இசைப் பாடல்கள் பலவற்றை எழுதியதாகக் கூறப்படுகிறது. அவற்றில் நாம் மிகச் சிறந்ததாக மதிப்பது 23ம் சங்கீதம் தான். அது எவ்விதத்தில் தாவீதின் வாழ்க்கையோடு தொடர்புடையதாய் இருக்கிறது? அது நமக்குச் சொல்லக் கூடிய செய்தி ஏதாவது இருக்கிறதா? அது நன்கு அறியப்பட்டிருக்கக் காரணம் என்ன? அதில் ஏழு 'புனிதமான உரிமைகள்' பற்றிக் கூறப்பட்டுள்ளது. அவை எவை? 23ம் சங்கீதத்தை அடிப்படையாகக்கொண்டு எழுதப்பட்ட 2 பாட்டுகள் அல்லது கீர்த்தனைகளைக் கண்டுபிடியுங்கள்.

12. ஆபிரகாமைவிட எந்தவிதத்தில் தாவீது கடவுளோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்ததாகக் கருதுகிறீர்கள்? தாவீதுக்கு இப்பேறு எவ்விதம் வாய்த்தது?



தாவீதின் நட்சத்திரம். அவர் கேடகமும் இவ்வடிவத்தில் இருந்திருக்கலாம். கிறிஸ்தவர்கள் சிலுவையைத் தங்கள் சின்னமாக உபயோகிப்பதுபோல் உலகம் எங்கும் உள்ள யூதர்கள் இதைத் தங்கள் சின்னமாக உபயோகிக்கிறுர்கள்.

அத்தியாயம் 16

# சாலொமோன்

*(1 இரா. 2:12–46; 3:1,4–28; 4:7,20–34; 5; 8:12–21; 9:10–19,26–28; 10; 11:1-8,14–43; சங். 45—இது சாலொமோனின் திருமணத்திற்காக எழுதப்பட்ட ஒரு பாடலாக இருக்கலாம்)*

## அமைதியும் வலிமையும் வளமும்

தாவீது ஏற்படுத்திக் கொடுத்திருந்த வாய்ப்புக்களைச் சாலொமோன் நன்கு பயன் படுத்திக் கொண்டார். விரிவாகப் போர் செய்யத் தேவை எதுவுமில்லாமல் போகவே நாட்டை வளப்படுத்தி அதன் வாணிகத்தை யும்ஆற்றலையும் வலுப்படுத்தினர். 'யூதாவும் இஸ்ரவேலும் பெருக்கம் கடற்கரை மண லத்தனை ஏராளமாயிருந்து, புசித்துக் குடித்து வாழ்ந்து வந்தனர். தாண் துவக்கிப் பெயேர் ஷெபா மட்டும் யூதாவிலும் இஸ்ரவேலிலும் ஒவ்வொருவரும் தம் தம் திராட்சச்செடியின் நிழலிலும் தம் தம் அத்திமரத்தின் நிழலிலும் சுகமாய்க் குடியிருந்தார்கள். . . நதிக்கு இப் புறத்திலுள்ள திப்சா முதற்கொண்டு காத்சா மட்டுமுள்ள தேசங்கள் எல்லாவற்றை யும் . . . ஆண்டு வந்தார்; அவருக்கு எப்புறத் திலும் சமாதானம் இருந்தது' (1 இரா. 4:20–25).


சாலொமோன் ஓர் எகிப்திய இளவரசியை மணந்து கொண்டார் (சங். 45 பார்க்க வும்). இளவரசியின் தந்தை கானனியரின் அரண்காப்பு வாய்ந்த பட்டணமான கேச ரைப் பிடித்து, அழித்து, சாலொமோனுக்கு அதைப் பரிசமாகக் கொடுத்தார். பின்னர் சாலொமோன் அதை மீண்டும் எழுப்பி இரதங்கள் நிறைந்த பட்டணங்களாகிய மெகித்தோ, தானக், எக்லோன், காசோர் என்பவைபோல் ஒரு சிறந்த பட்டணமாக் கினர். தம் நாடு ஆசியாவிலிருந்து ஆப்பி ரிக்கா, தமஸ்கு, மத்தியதரைக் கடல், செங் கடல்,அரேபியா முதலியவற்றிற்குச்செல்லும் வணிகப் பாதைகளைக் கட்டுப்படுத்தக்கூடிய நிலையில் இருந்தபடியால் போர்த்திற முக்கி யத்துவம் வாய்ந்தது என்று அவர் உணர்ந் தார். (இவ்வணிகப் பாதைகளை நிலப்படத் தில் கண்டுபிடியுங்கள்.)

## சாலொமோனின் வணிகக் கப்பல்கள்

கடற்பயண வாழ்வில் ஈடுபட்ட பெனிக் கேயர்களோடு மீண்டும் ஒப்பந்தம் செய்து கொண்டால் மேற்கு நோக்கிச் செல்லும் வணிகக் கப்பல்கள் கிடைக்கும் எனக் கண் டார் சாலொமோன். அதாவது, கனிப் பொருளை உலோகக்கரு உருவிலாவது அல்லது உருக்கிப் பிரித்து எடுக்கப்பட்ட உருவிலாவது ஏற்றிக்கொண்டு தர்ஷீஸ் செல்லும் கப்பல் களைத் தாம் பயன்படுத்த முடியும் என்று கண்டார். பின், தீரு அரசரிடம் உதவிபெற்று, லீபனோனின் கேதுரு மரங்களைக்கொண்டு சொந்தமாகவே வணிகக் கப்பல்களைக் கட்டிக் கொண்டார். இக்கப்பல்களில் பெனிக்கே யர்கள் மாலுமிகளாக வைக்கப்பட்டனர். ஏனெனில் யூதர்கள் கடற்பயணம் செய்வதில் சிறந்தவர்களல்லர். சாலொமோனின் கப்பல் கள் வாசனைப் பொருட்களையும், விலையுயர்ந்த அணிகலன்களையும், தங்கத்தையும், தந்தத் தையும் வாங்கி விற்று வாணிபம் செய்ய தெற்கே அரேபியாவுக்கும், இந்தியாவுக்கும் சென்றன. 'கப்பலில் ஏற்றியிருந்த சரக்கு கள்' (Cargoes) என்ற கவிதையில் மேஸ்பீல்டு என்னும் ஆங்கிலக் கவிஞர் பின்வருமாறு எழுதியுள்ளார்:

"Quinquireme of Nineveh from distant Ophir,
Rowing home to haven in sunny Palestine,
With a cargo of ivory,
And apes and peacocks,
Sandalwood, cedarwood, and sweet white wine."

ஐந்து வரிசை துடுப்புகளால் தள்ளப்படும் ஒரே தளமுள்ள நினிவேயின் கப்பல்கள் (Quinquireme) தொலை தூரத்திலிருந்த ஒப்பீரிலிருந்து ஒளிபடர்ந்த பலஸ்தீனவுக்குத் தந்தம், குரங்கு, மயில், சந்தனக்கட்டை, கேதுருமரம், இனிப்பான வெள்ளை திராட்சை


வணிகச் சரக்குக் கப்பல்கள்
மயில்
குரங்குகள்
நினிவே
எசியோன்-கேபர்
ஒட்டகப் பரிவாரம் சென்ற பாதை
2000 கிலோமீட்டர்
வணிகச் சரக்குக் கப்பல்கள் சென்ற வழி
ஷேபா
மரீப்
ஓப்பீர்
நீல நதி
தங்கம்
யானைத்தந்தம்
ஒட்டகப் பரிவாரம்

வணிகரான சாலொமோன்

ரசம் முதலியவற்றை ஏற்றிக்கொண்டு திரும்பின என்று அவர் கூறுகிறுர். இக் கப்பல்கள் அநேகமாய் அடிமைகளாலேயே இயக்கப்பட்டிருக்கும். ஒப்பீர், இன்று ஏமன் எனப்படும் தென்மேற்கு அரேபியாவில் இருந்ததாக நம்பப்படுகிறது. தமிழ் நாட்டின் தென்கோடியிலுள்ள உவரி என்ற பழங்காலத்துத் துறைமுகம் இது என்று சிலர் கூறுகிறுர்கள். எங்கே இருந்திருந்தாலும் இது தரத்தில் உயர்ந்த தங்கத்திற்குப் பெயர் பெற்ற இடம் என்பது தெளிவாகிறது (1 இரா. 9:28). தேவாலயத்திலும் அரண்மனையிலும் மற்ற கட்டடங்களிலும் உள்ள தூண்களை மூடுவதற்கு இங்கிருந்து கொண்டு வந்த தங்கத்தைச்சாலொமோன் பயன்படுத்தினர். மேலும், சாப்பிடுவதற்கு அவர் பயன்படுத்திய தட்டுகள் தங்கத்தாலானவை (1 இரா. 10:21,22). அகாபா வளைகுடாவின் தலைப்பில் உள்ள எசியோன்—கேபர்தான் முக்கிய துறைமுகமாய் விளங்கிற்று. சாலொமோனின் நாட்டு எல்லைக்குள் மத்தியதரைக் கடற்கரையில் இருந்த எந்தத் துறைமுகமும் பயன்படுத்த ஏற்றதாயில்லை. ஏனெனில் துறைமுகங்களில் வண்டல் சேறு படிந்துவிடும் அபாயம் இருந்தது. அதுவுமல்லாமல் அகாபாவுக்கு வடக்கிலிருந்த பள்ளத்தாக்கில் செம்பைச் சுத்தப்படுத்தும் இடங்கள் இருந்தன. ஆகையால் எசியோன்—கேபர் முக்கிய துறைமுகமாயிருப்பதற்கு ஏற்றது. இங்கிருந்து பொருட்களை ஒட்டகங்களில் ஏற்றிக் கூட்டமாக எருசலேமுக்கு எடுத்துச் செல்வார்கள். மத்தியதரைக் கடல் வழியாக மேற்கு நாடுகளோடு வாணிபம் செய்வதற்காக இப்பொருட்கள் எருசலேமிலிருந்து பெனிக்கேய துறைமுகங்களுக்கு எடுத்துச் செல்லப்படும். வணிகக் கப்பல்கள் சரக்கேற்றிக் கொண்டு புறப்பட்டால், அவை திரும்பிவர மூன்று ஆண்டுகள் பிடிக்கும்.

### சாலொமோனின் குதிரைகள்

சாலொமோன் சிலிசியா நாட்டிலிருந்து குதிரைகளை வாங்கி, அவற்றை எகிப்து நாட்டுக்கு விற்று அங்கிருந்து இரதங்களை வாங்கிக்கொண்டார். இவற்றை மெகித்தோ போன்ற பட்டணங்களில் அவர் வைத்திருந்தார். இங்கு அவர் குதிரைகளுக்கு நாற்பதாயிரம் லாயங்கள் இருந்ததாக ஒரு மதிப்பீட்டில் சொல்லப்பட்டுள்ளது. புதைபொருள் ஆராய்ச்சியில் கற்றூண்கள் வரிசை வரிசையாக இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. குதிரையின் வாரைத் தூணேடு சேர்த்துக் கட்டுவதற்காக ஒவ்வொரு தூணின் மேற்பாகத்திலும் ஒரு துளை இருக்கிறது. கற்களாலான தொட்டிகள் வரிசையாகக் காணப்படுகின்றன. அவற்றிற்கு ஊடாகக் கற்கள் பாவப்பட்ட இடைவெளி இருக்கிறது. இங்குதான் இரதங்கள் பயன்படுத்தப்படாமலிருக்கும்போது நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன போலும்! குதிரைகளுக்கு வைக்கோல் கூளமும் பார்லியும் உணவாகக் கொடுக்கப்பட்டு வந்தன. இதற்கெல்லாம் ஏழைகள் கொடுத்த வரிப்பொருள்தான் செலவு செய்யப்பட்டது.

### கொடுங்கோலராகிய சாலொமோன்

சாலொமோன் பலரோடு நட்புத்தொடர்பு கொண்டிருந்தார். சில தொடர்புகள் பல பெண்களை மணந்துகொண்டதாலும் ஏற்பட்டன. ஆயினும், இவ்வித சிறப்பு வாய்ந்த ஆடம்பரமான வாழ்க்கையை நிலைநிறுத்த இன்னும் அதிகமான பணம் தேவை என்னும் நிலை ஏற்பட்டது. எனவே நாடு பன்னிரண்டு மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டது. ஒவ்வொன்றும் அதற்கான வரியும் கப்பமும் கட்ட வேண்டியதாயிற்று. சாலொமோன் பலவிதமான வரிகளை வசூலித்தார். அவற்றைப் பணமாக மட்டுமல்ல, உணவுப் பொருட்களாகவும், தானியமாகவும், ஆட்டு உரோமமாகவும், எண்ணெயாகவும் மக்கள் செலுத்த வேண்டியதாயிற்று. இவ்வரிகளைச் செலுத்த விவசாயிகள் தங்கள் நிலங்களை விற்றனர்; பணம் படைத்தவர்களிடம் அதிகமான வட்டிக்குக் கடன் வாங்கினர். அந்த வட்டியைக் கட்ட முடியவில்லை. நாளடைவில் இவர்கள் அடிமைகள் நிலைக்குத் தாழ்த்தப்பட்டனர். ஏனெனில் ஆட்சி செய்தவர்கள் நீதி வழங்குவார்கள் என்றே, துயர் துடைப்பார்கள் என்றே எதிர்பார்க்க இடமில்லாமற் போயிற்று. அதுவுமல்லாமல் யூதா இன மக்கள் தவிர தகுதிவாய்ந்த மற்ற ஆண்கள் எல்லாரும் ஆண்டுக்கு மூன்று மாதங்கள் சம்பளமின்றிக் கல் உடைக்கவும், கட்டடங்கள் கட்டவும் கட்டாயப்படுத்தப்பட்டனர். வரிகளையும், கட்டாய வேலையையும் மக்கள் வெறுக்கத் தலைப்பட்டனர். கலகஞ் செய்யவும், சாலொமோனின் கொடுங்கோன்மையை ஒழிக்கவும் மக்கள் சமயம் பார்த்திருந்தனர்.

### கட்டடங்கள் கட்டத் திட்டமிட்டார்

இந்தத் தீமைகளினுல் நன்மை ஏதும் ஏற்பட்டிருக்குமா என்று நினைக்கத் தோன்றுகிறது. ஒருவேளை ஏற்பட்டிருக்கலாம்.

ஏனெனில் எருசலேமின் கிழக்குக் குன்றில் சீயோன் என்ற இடத்தில் சிறப்பான கட்டடங்கள் வரிசையாகக் கட்டப்பட்டன. தீருவின் அரசர் ஊசியிலை மரங்களும் சைப்ரஸ் மரங்களும் கேதுரு மரங்களும் அனுப்பி வைத்தார். இவை பெரிய தெப்பங்களாகக் கட்டப்பட்டுக் கடல் வழியே யோப்பா பட்டினத்திற்கு அனுப்பப்பட்டன. அங்கிருந்து நில வழியாக எருசலேமுக்கும் அனுப்பப்பட்டன. கைதேர்ந்த தொழிலாளர்களும், கல் தச்சர்களும், சாயம் ஏற்றுபவர்களும் அங்கு வந்தனர். உலோகத் தொழில் நிபுணரான ஊராம்—அபியும் வந்து யோர்தானின் கடவுத் துறையில் அதாமா என்னும் இடத்தில் வார்ப்படக்களம் அமைத்தார் (1 இரா. 5:1—14; 2 நாளா. 2:13,14 பார்க்கவும்).


இவைகளுக்குப் பதிலாக ஒவ்வொரு ஆண்டும் இருபதாயிரம் மரக்கால் கோதுமையும், இருபது மரக்கால் சுத்தமான ஒலிவ எண்ணெயும் சாலொமோன் தீருவின் அரசருக்கு அனுப்பினார். பின் கலிலேயா என்று அழைக்கப்பட்ட பகுதியில் உள்ள சில பட்டணங்களையும் கிராமங்களையும் பண்டமாற்றாக அவருக்குக் கொடுத்துவிட்டார். இவ்வளவு எண்ணெய் அனுப்பப்பட்டது, ஒலிவ எண்ணெய் அன்றும் இன்றும் முக்கிய உணவுப் பொருளாகும் என்பதை நினைவுபடுத்துகிறது. பஞ்சம் வந்த காலத்தில் அந்த ஏழை விதவையிடம் ஒரு குடம் எண்ணெய் மட்டுமே இருந்ததாக எலியா கண்டுபிடித்ததைப்பற்றிப் பின்னால் நாம் படிக்க இருக்கிறோம்.

## சாலொமோனின் தேவாலயம்

பின்னர் சாலொமோன் சிறப்பு வாய்ந்த தேவாலயத்தைக் கட்டினார். அவர் புகழுக்குக் காரணமாயிருந்த அரிய சாதனை இதுதான். அது நீண்ட சதுர வடிவத்தில் அமைக்கப்பட்டு நுழைவு மண்டபம், தூய இடம், ஒப்பந்தப் பெட்டகம் வைக்கப்பட்டிருந்த அதிதூய இடம் என்ற மூன்று முக்கிய பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது (1 இரா. 6,7 பார்க்கவும்). அதிதூய இடம் ஒன்பது மீட்டர் அகலமான சுவர்களோடு கன சதுர வடிவத்தில் அமைக்கப்பட்டது; அது 'காரிருள்' நிறைந்த இடமாக இருந்தது. பெட்டகத்துக்குமுன் மட்டும் ஒரு சிறு விளக்கு எரிந்துகொண்டிருந்தது. (இந்த விளக்கு எரியும்படி பார்த்துக்கொள்வது சிறு சாமுவேலின் கடமை என்பது உங்களுக்கு நினைவிருக்கலாம்.) அதிதூய இடத்திற்கு முன்னால் கனமான திரை ஒன்று தொங்க விடப்பட்டிருந்தது. ஒலிவ மரத்தால் செய்யப்பட்டு பொன் தகட்டால் மூடப்பட்ட இரு கேருபுகள் பெட்டகத்தின் மேல் வைக்கப்பட்டிருந்தன. அவைகளின் சிறகு ஒவ்வொன்றும் நாலரை மீட்டர் அகலமானது. ஏழாண்டுக் கால கடின உழைப்பினால் இவ்வாலயம் கட்டி முடிக்கப்பட்டது. இது அளவில் பெரியதாய்க் கட்டப்படவில்லை. சுமார் முப்பத்தைந்து மீட்டர் நீளத்தில் அமைந்த ஒரு கட்டடமே இது. ஆனால் மிக அழகாகக் கட்டப்பட்டிருந்தது; பல பாகங்கள் பொன் தகட்டால் மூடப்பட்டிருந்தன. முன் பக்கம் பத்து மீட்டருக்கும் உயரமான வெண்கலத் தூண்கள் இரண்டு இருந்தன. அவற்றில் மாதுளம் பழ உருவங்கள் பொறிக்கப்பட்டிருந்தன. பன்னிரண்டு வெண்கல எருதுகள் தண்ணீர்த் தொட்டியைத் தாங்கி நின்றன. பலியிடக் கொண்டு வரும் விலங்குகளைக் கழுவுவதற்கென்று அத்தொட்டி அங்கு வைக்கப்பட்டிருந்தது. அது இரண்டரை மீட்டர் உயரமும் ஐந்து மீட்டர் விட்டமும் கொண்டதாய் இருந்தது. சுற்றியுள்ள கூடத்தில் மக்கள் பண்டிகைகள் கொண்டாடுவார்கள். சாலொமோன் தாமே ஆலயத்தைப் பிரதிஷ்டை பண்ணினார். அப்போது அவர் பாடிய கவிதையை 1 இரா. 8:12,13 வசனங்களில் நீங்கள் காணலாம். யாவே அகில உலகையும் படைத்த பரம் பொருள் என்று எபிரேயர்கள் கருதினாலும் அவர் ஆலயத்தில் மட்டுமே தங்குவதாக அவர்கள் இன்னும் நம்பி வந்தார்கள் என்பதை அக்கவிதை விளக்கிக் காட்டுவதைப் பாருங்கள். (தேவாலயத்தின் படத்தைக் கூர்ந்து கவனியுங்கள். திருமறையில் அது கட்டுவதைப் பற்றிய வருணனைகளைப் படிக்கும்போது படத்தையும் பார்த்துக்கொள்ளுங்கள்.)

மகிழ்ச்சி வெள்ளத்தில் மக்கள் மிதந்தனர். சிறு முரசுகளும், கைத்தாளங்களும், நரம்பிசைக் கருவிகளும், பலவிதசுரமண்டலங்களும், எக்காளங்களும் ஒலிக்க, மங்கலமான 136ம் சங்கீதத்தை அவர்கள் பாடியிருக்கலாம். இந்த தேவாலயம் இதுவரை அகழ்ந்தெடுக்கப்படவில்லை. முஸ்லீம்களுக்குப் புனித இடமாக இன்று இருக்கும் நிலத்தின் அடியில் ஒருவேளை இது புதையுண்டு இருக்கலாம்.

தேவாலயத்தின் கீழ்ப்புறமாகத் தம்முடைய அரண்மனையைச் சாலொமோன் கட்டியிருந்தார். இதைக் கட்டி முடிக்க பதிமூன்று ஆண்டுகள் பிடித்தது. அரச அவையின் பகட்டைப்பற்றி வாசிக்கும்போது ஒவ்வொரு நாளும் முப்பது மரக்கால் மெல்லிய மாவு, அறுபது மரக்கால் மாவு; முப்பது காளைகள், நூறு செம்மறியாடுகள், வெளிமான்கள், கலைமான்கள், வரையாடுகள் மற்றும் பறவை



சாலொமோனின் தேவாலயம்

கள், அங்குள்ளவர்களின் உணவுக்காகத் தேவையாயிருந்தது என்று பார்க்கிறோம் (1 இரா. 4:22,23). இவ்வித ஆடம்பர வாழ்க்கைக்காக அவர் மக்களைக் கொடுமைப் படுத்தியபோது அவர்கள் வேதனையுற்றார்கள் என்பது நமக்கு ஆச்சரியமாயில்லை. அவர் தொடர்ந்து தூண்களின் மண்டபம், நியாய விசாரணை மண்டபம் (ஆயினும் அவர் கீழ் இருந்தசாதாரணமக்களுக்குஎப்படிநியாயம் கிடைத்திருக்கும் என்று நம்மை நினைக்கத் தூண்டுகிறது!), லீபனோன் மாளிகை என்று கட்டிக்கொண்டேயிருந்தார். லீபனோன்மாளிகையில் தந்தத்தால் செய்யப்பட்டு மாற்றுக் குறையாத தங்கத்தால் மூடப்பட்ட சிம்மாசனம் இருந்தது. அதன் மேல்பாகம் பின்புறம் வட்டவடிவாய் இருந்தது. அதை அடுத்து பொன்னாலான இரு சிங்கங்கள் நின்றன. ஆறு படிகளின் மேலும்கூட இரண்டு பக்கங்களிலும் பொன் சிங்கங்கள் இருந்தன (1 இரா. 10:19,20).



சாலொமோனின் அரியணை இதைப்போல் இருந்திருக்கலாம்

## சாலொமோனின் ஞானம்


சாலொமோனைப்பற்றி நாம் நினைக்கும் போது அவர் ஞானத்தையும் நினைவுகூருகிறோம். ஒரு பேரரசராக, பல்வேறு செல்வங்களும் படைத்து அறிவின் சிகரமாக விளங்கிய அவர் புகழ் எல்லா இடங்களிலும் பரவிற்று. அவர் கூரறிவும் மதியும் படைத்திருந்தவரென்று புகழ் பெற்றிருந்ததால், அவரைச் சந்திக்கவும் அவருடைய அளவு கடந்த ஆடம்பரத்தைக் கண்டு களிக்கவும் அவரோடு பேசவும் அவர் பேசுவதைக் கேட்கவும் வெளிநாட்டு மன்னர் பலர் வந்து போனார்கள். (நீதிமொழிகள் யாவும் அவர் கூறியவை என்று சொல்லுவது மரபு. ஆனால் அனைத்தும் அவருடையவை என்று சொல்ல முடியாது. சிற்சில சமயங்களில் அவருடைய அவையினரும், அவருக்கு ஆலோசனை கூறின வர்களும் கூட புத்திசாலித்தனமான வார்த்தைகளைப் பேசினார்கள்!)

## ஷேபா நாட்டு அரசி

வெளிநாடுகளிலிருந்து வந்தவர்களில் ஷேபாவின் அரசியும் ஒருவர். இவர் ஆண்ட நாடு தென்மேற்கு அரேபியாவில் ஒப்பீருக்கு அருகே இருந்திருக்கலாம். அநேகமாக இன்று எத்தியோப்பியா நாடு இருக்குமிடத்தில் அந்த நாடு இருந்திருக்கலாம். இவர் வந்து பார்த்தபோது 'வாயடைத்துப்போன நிலையில்' நின்றார். சாலொமோனின் பெருஞ் சிறப்பையும் புகழையும்பற்றித் தாம் கேள்விப் பட்ட யாவும் உண்மையென்று அறிந்து கொண்டார். தம் நாட்டில் உள்ள மந்திரவாதிகள், குறிகாரர் ஆகிய எல்லோரைக் காட்டிலும் சாலொமோன் அறிவிற் சிறந்து விளங்குவதை அவர் கண்டார். உலகில் வாழும் உயிர்களைப்பற்றிய எல்லையில்லா அறிவு உடையவராயிருந்தார் என்றும், எந்த விடுகதையையும் விடுவிக்கும் ஞானமும் பெற்றிருந்தார் (விடுகதைகள் விடுவிப்பது அந்நாட்களில் பலருடைய பொழுதுபோக்கு என்பது உங்களுக்கு நினைவிருக்கலாம்.) என்றும், அத்துடன் அவர் நீதிமொழிகளைப் பேசினார் என்றும், கவிதைகளையும், பாடல்களையும் எழுதும் திறன் உடையவராய் இருந்தார் என்றும் கண்டார். அவர் பரிசுப் பொருட்களாக ஒட்டகங்கள், நறுமணப் பொருட்கள், தங்கம், விலையுயர்ந்த இரத்தினக் கற்கள் இவற்றைக் கொண்டு வந்திருந்தார். ஆனால் அரசருடைய பகட்டொளியின் முன் அவை அற்பமானவை என்று உணர்ந்திருக்கலாம். இவர் சாலொமோனோடு அரசியல் ஒப்பந்தங்கள் செய்ய முயன்றிருக்கலாம். பொருட்களைப்பற்றியும், அவற்றின் விலைகள் குறித்தும், அவற்றைப் பண்டமாற்று செய்துகொள்ளும் முறைகள் குறித்தும், இருவரும் அதிக நேரம் உரையாடியிருக்கலாம்.

## புரட்சி

தானியமாகவும், கம்பளங்களாகவும், கட்டாய வரிகளையும், கப்பங்களையும் கட்டிக் கட்டி அலுத்துப்போனவர்கள் சிலர் இறுதியாக சாலொமோனை எதிர்த்துக் கலகம் செய்யத் தலைப்பட்டனர். இதில் குறிப்பாக இருவர் இளவரசர்கள். ஒருவர்



மெகித்தோவில் இருந்த சாலொமோனின் குதிரை லாயங்கள்—இவை அவர் ஆடம்பரமான வாழ்க்கையின் ஓர் அடையாளமாகும்

ஏதோமைச் சேர்ந்த ஆதாத். இங்கிருந்து தான் சாலொமோனுக்குத் தேவையான கனிப்பொருள் கிடைத்து வந்தது. அடுத்தவர் சீரியாவைச் சேர்ந்த ரேசோன். இவர்கள் இருவரும் சாலொமோனை எதிர்த்துத் தனியாகப் பிரிந்து சென்றுவிட்டனர். இதன் விளைவாக சாலொமோன் எசியோன்—கேபர் என்ற வணிகத் துறைமுகத்தை இழந்து விட்டார். இதனுல் அவருடைய வணிகக் கப்பல்கள் செல்லமுடியாமல் வாணிபம் பாதிக்கப்பட்டது. மற்றும் சீரியாவில் உள்ள முக்கிய வணிக நகரான தமஸ்குவையும் அவர் இழந்துவிட்டார். இந்தக் கலகங்கள் நாட்டில் வளர்ந்து வந்த அதிருப்தி நிலையைக் காட்டி நின்றன. சாலொமோன் இறப்பதற்குச் சில நாட்களுக்கு முன் இஸ்ரவேல் நாடெங்கும் புரட்சிக்கான அறிகுறிகள் காணப்பட்டன.

### புரட்சியாளர்களின் தலைவர்


தாவீது கட்டத் தொடங்கிய மில்லோ அரணை அவர் மகனுகிய சாலொமோன் பலப்படுத்தினபோது, யெரொபெயாமைக் கவனித்திருந்தார். யெரொபெயாம் தலைவராயிருப்பதற்கு ஏற்றவராகக் காணப்பட்டபடியால் தொழிலாளர்களைக் கண்காணிக்கும் பொறுப்பைப் பெற்ருர். வலிமை அடைந்து வந்த இவர் அகியாவினுல் தூண்டப்பட்டு, கலகம் செய்தார். ஆனுல் சாலொமோனை எதிர்க்கக்கூடிய வலிமை அவருக்கு இல்லாமற் போகவே தோற்றுப் பின் எகிப்து நாட்டிற்கு ஓடிவிட்டார். எகிப்தில் இருந்த புதிய பார்வோன் சீஷாக் இஸ்ரவேல் நாட்டில் உள்நாட்டுக் குழப்பத்திற்கும் கலகத்திற்குமான அறிகுறிகள் காணப்பட்டதைக் கண்டு உள்ளம் மகிழ்ந்தார். செழிப்பாக இருந்த பலஸ்தீனுவைத் தான் பிடித்துச் சொந்தமாக்கிக்கொள்ள வேண்டுமென்று எகிப்து அதன்மேல் மறுபடியும் கண் வைத்தது. இதோ ஒரு கலகக்காரர் தோன்றி விட்டார். அவரைக் கொண்டு எகிப்து தன் ஆசையை நிறைவேற்றலாம்.

### புகழ் எது?

கி.மு. 930ல் சாலொமோன் இறந்தார். அவர் தம் விருப்பப்படி ஆண்ட அரசராக,

ஒரு சர்வாதிகாரியைப்போலவே திகழ்ந்தார். பதவி வெறியும் அடக்கி ஆளும் ஆற்றலும் கொண்டிருந்த இவர், தம் முயற்சிகளினால் மக்கள் பாதிக்கப்படுவதைக் குறித்து சிறிதும் அக்கறை கொள்ளவில்லை. அவர்கள் சமுதாய வளர்ச்சி பற்றி அவர் எண்ணவே யில்லை. தம் செல்வத்தையும், புகழையும் குறித்தே பெருமைப்பட்டார். 'ஓங்கி நின்ற அவர் புகழ்' ஒன்றையே இப்போது நினைவு கூருகிறோம். ஆனால் 'காட்டு மலர்களை'ப் பற்றி இயேசு ஆராய்ந்து, தம் தந்தையால் அவை எவ்வளவு சிறப்பாகப் படைக்கப்பட்டுள்ளன என்று கண்டபோது இந்தப் புகழ் வெறுமையானது என்று சொல்லி விட்டார் (மத். 6:28,29).

யெரொபெயாம் சரேதா என்ற தம் சொந்த ஊருக்குத் திரும்பினார். அதே சமயம் அடுத்து அரசராக வேண்டிய சாலொமோனின் மகன் ரெகாபெயாம் அரசராகத் தெரிந்துகொள்ளப்படுவதற்காக சீகேமுக்குப் போனார். இந்த இரு பட்டணங்களும் எப்பிராயீமாகிய வட அரசில் (இஸ்ரவேலில்) இருந்தன. போட்டி போட்ட இந்த இரு அரசர்கள், அவர்கள் நாடுகளின் வரலாற்றையே அடுத்த புத்தகத்தில் காணப் போகிறோம்.




## விளக்கப் பயிற்சி

1. தீரு அரசரின் அரசவைக்குத் தூதுவராகச் சென்று சாலொமோனின் சார்பில் அவரோடு பேசி அதிகமான வணிகத்திற்கும் கப்பல்களுக்கும் ஏற்பாடு செய்து வருவதுபோல் நடித்துக் காட்டுங்கள்.
2. சாலொமோனின் ஆட்சியில் இருந்த கடல் வணிகப் பாதைகளையும், நில வணிகப் பாதைகளையும் காட்டும் நிலப் படம் ஒன்று வரையுங்கள்.
3. சாலொமோன் மேல் வெறுப்படைந்து திருப்தியற்றிருந்த வேலையாட்கள் போல் நடியுங்கள்.
4. பலஸ்தீனாவில் கிடைக்கும் ஒலிவ எண்ணெய் பற்றி சேகரிக்கக்கூடிய விவரங்களையெல்லாம் திரட்டுங்கள். இதைப் பற்றிப் படங்கள் உதவிகொண்டு சுருக்கமான சொற்பொழிவு ஒன்று நிகழ்த்துங்கள்.
5. அட்டையில் அல்லது களிமண்ணில் சாலொமோன் கட்டின தேவாலயத்தின் மாதிரி செய்து காண்பியுங்கள். தேவாலயப் பிரதிஷ்டை செய்தபோது பாடிய கவிதையை எழுதி மனப்பாடம் செய்யுங்கள்.


   அல்லது

   ஊராம்—அபி என்று கற்பனை செய்துகொண்டு உங்கள் பணி குறித்து விளக்கமாகச் சொல்லுங்கள்.
6. ஷேபா நாட்டரசியின் வருகைபற்றி வானொலி நேர்முக வருணனை ஒன்று தயாரியுங்கள். அவரோடு வந்தவர்களில் சிலரையும் சாலொமோனின் அரசவையில் இருந்த சிலரையும் பேட்டி கண்டு அவர்கள் கூறுவதையும் சேர்த்துக் கொள்ளுங்கள்.
7. எசியோன்—கேபரை இழந்ததால் சாலொமோனின் வணிகத்திற்கு ஏற்பட்ட நிலையைக் குறித்து விவாதியுங்கள்.
8. யெரொபெயாமுக்கும் சீஷாக்குக்கும் நடந்திருக்கக்கூடிய உரையாடலை ஆயத்தம் செய்யுங்கள்.
9. சாலொமோனின் பேர்பெற்ற பொன்மொழிகள் (நீதிமொழிகள்) சிலவற்றை அழகாக எழுதி மனப்பாடம் செய்யுங்கள்.


10. 'சாலொமோனின் ஆட்சி மாசுபடிந்த நல்லாட்சி.' இதன் பொருள் என்ன? இக்கூற்று எந்த அளவுக்குச் சரி அல்லது தவறு என்று விவாதியுங்கள்.

11. இஸ்ரவேலின் பல்வேறு இனப் பிரிவுகளைச் சேர்ந்தவர்களின் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து ஒரு கூட்டம் நடத்தி அதில் வருங்காலத்தில் நாட்டின் அமைப்பு எப்படி இருக்கவேண்டும் என்பது குறித்து விவாதியுங்கள். புதிய அரசர் என்ன செய்யவேண்டும் என்று நீங்கள் கேட்கப் போகிறீர்கள் என்பதையும் அவர் அதற்கு உடன்பட்டால் அல்லது உடன்பட மறுத்தால் நீங்கள் செய்யவேண்டியது என்ன என்பதையும் பற்றிச் சிந்தித்துக்கொள்ளுங்கள்.

12. மேஸ்பீல்டு என்னும் கவிஞர் எழுதிய கவியை மனப்பாடம் பண்ணுங்கள். திருமறையிலிருந்து அதுபோன்ற வசனங்களைக் கண்டுபிடியுங்கள்.



தேவாலயத் தண்ணீர் தொட்டி



சாலொமோன் எருசலேமில் கட்டின தேவாலயத்துக்குத் தேவையான மரத்தைத் திருவின் அரசரான ஈராம் கொடுத்து உதவினர். அசிரியாவில் கண்டெடுக்கப்பட்ட இச்சிற்பம் திருவின் மாலுமிகள் கேதுரு மரக்கட்டைகளை எவ்விதம் கட்டி நீரின்மீது இழுத்துச் சென்றிருப்பார்கள் என்பதைக் காட்டுகிறது.


*   *   *

## குறிப்புகள்

1. 36ம் பக்கத்தில் இஸ்ரவேலில் பன்னிரண்டு இனப்பிரிவுகள் இருந்தன என்று சொல்லப்பட்டுள்ளது. ஆனால் கொடுக்கப்பட்டுள்ள பெயர்களை நீங்கள் கூட்டிப்பார்த்தால் பதினாலு இனப்பிரிவுகள் இருந்தது போல் தோன்றும். 61ம் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள நாட்டுப்படத்தில் கானானில் குடியேறிய பன்னிரண்டு இனப்பிரிவுகளைக் காண்பீர்கள். யோசேப்பு எந்த இனப்பிரிவுக்கும் தலைவராகவில்லை. அவர் குமாரர்களான எப்பிராயீமும் மனாசேயுமே தலைவர்களானார்கள். லேவி இனப்பிரிவினர் எந்த இடத்திலும் தனியாகக் குடியேறவில்லை. அவர்கள் ஆசாரியர்களானபடியால் மற்ற இனப்பிரிவினரால் பராமரிக்கப்பட்டார்கள்.

2. பண்டைக்கால நிகழ்ச்சிகளின் திட்டவட்டமான காலத்தைக் கணிப்பது எளிதல்ல. வெவ்வேறு ஆராய்ச்சியாளர் வெவ்வேறு ஆண்டுகளைக் கூறுகிறார்கள். ஆகவே இந்நூலில் கூறப்பட்டுள்ளவை ஒருவேளை மற்ற நூல்களில் கூறப்பட்டுள்ளவற்றிலிருந்து சிறிது வேறுபடலாம்.

| ஆண்டு கி.மு. | கானனும் அதற்கு அருகிலிருந்த நாடுகளும் | எபிரேயர் | எகிப்து | கிழக்கு நாடுகள் |
|---|---|---|---|---|
| 4000 | | | நீலநதி, 'தைகிரிஸ்—ஐப்பிராத்து' நதிகளின் படுகைகளில் பண்டைய பண்பாடுகள் | |
| | | | | சுமேரிய நகராட்சிப் பகுதிகள் |
| 3000 | செழும் பிறை பகுதியில் எகிப்துக்கும் பண்டைய கிழக்கு நாடுகளுக்கும் இடையே மக்கள் போக்குவரத்துக்குக் கானன் நெடுஞ்சாலையாக அமைந்திருந்தது | மெசொப்பொத்தாமியாவில் நாடோடி வாழ்க்கை | பாப்பைரஸ், சுவர்கள்மேல் ஹைரோகிளிபிக்ஸ் என்னும் பட எழுத்துக்கள் | மெசொப்பொத்தாமியா—களிமண்ணில் ஆப்புவடிவ எழுத்துக்கள்<br>ஊர் என்னும் நகரில் சிக்குராத் |
| 2500 | | | கேசேரில் பெரிய பிரமிட் எனப்பட்ட கூர்ங் கோபுரங்கள் கட்டப்பட்டன<br>கெலியோபோலி சதுரத்தூபி | |
| 2000 | எகிப்து கானன்மேல் ஆதிக்கம் செலுத்தியது | கானனுக்குச் செல்ல ஊர் என்னும் நகரிலிருந்து வெளியேறுதல் (2100 அல்லது 1700)<br>மூதாதையர் ஆபிரகாம்<br>ஈசாக்கு<br>யாக்கோபு<br>யோசேப்பு | 1780 ஆசியாவிலிருந்து படையெடுத்து வந்த ஹிக்சாஸ் இனத்தினர் போர் இரதங்களைப் பழக்கத்திற்குக் கொண்டு வந்தனர்<br>1700 எகிப்தில் எபிரேயர்கள் | பாபிலோன் ஆற்றல்மிக்க நாடாயிற்று<br>1700 ஹம்முரபி<br>சின்னஆசியாவிலிருந்து ஏத்தியர்கள் படையெடுத்து வந்தனர் |
| 1500 | 1380 ஹபீருகள் (எபிரேயர்) கானன்மேல் படையெடுத்துச் சென்றனர் | (மூதாதையரின் வாய்மொழி மரபுகள்) | 1580 ஹிக்சாஸ் இனத்தினர் தோற்கடிக் கப்பட்டனர் | சுரங்கப்பொருளை உருக்கி இரும்பு பிரித் தெடுக்கப்பட்டது |
| 1300 | பெலிஸ்தியர் கானனில் குடியேறினர் | எகிப்திலிருந்து வெளியேறுதல்—மோசே பத்து திருக்கட்டளைகள்<br>வனாந்தரத்தில் அலைந்து திரிதல் | 1370 தெல்—எல்—அமார்னு கடிதங்கள் பெலிஸ்தியர் இராம்சேசால் தோற் கடிக்கப்பட்டனர். அவர்கள் கானனில் குடியேறினர் | ஏத்தியர்கள் ஆற்றல்மிக்கவர்களாய் இருந்தனர்; இரும்பால் செய்த ஆயுதங்களைப் பழக்கத்திற்குக் கொண்டு வந்தனர் |
| 1200 | **எபிரேயர்கள் கானனை வென்று அடிப்படுத்தினர்**—யோசுவா | | | 1250 பாபிலோனின் ஆற்றல் குறையத் தொடங்கியது |
| | நியாயாதிபதிகள் (1200—1020) | தெபோராள், கிதியோன், சிம்சோன், சாமுவேல் (வாய்மொழி மரபுகள்) | | அசீரியா வலிமையடையத் தொடங்கியது (1250—1000) |
| 1000 | இனப்பிரிவுகள் ஒருங்கிணைக்கப்படுதல்<br>அரசர்கள்—1020 சவுல்<br>1000 தாவீது<br>962 சாலொமோன் | பழைய ஏற்பாடு எழுதப்படத் தொடங்குதல்:— | | அசீரியப் பேரரசு (1000—612) |
| | முதல் தேவாலயம் கட்டப்பட்டது<br>பெனிக்கேயா முக்கியத்துவம் பெற்றிருந்தது | —அரசவை வரலாறுகள்,<br>—தேவாலயத்தில் பதிவுக் குறிப்புகள்,<br>—வாய்மொழி மரபுகள் எழுதப்பட்டன | | |
| 930 | புரட்சி | | | |




கிராமிய கல்வி துறை
நெல்லை திருமண்டலம்.

*Copies can be had from*

**C. L. S. BOOK SHOPS**

**at**

Park Town, Madras-600 003
15-D West Veli Street, Madurai-625 001
Kodaikanal-624 101, Madurai Dt.
110 Avanashi Road, Coimbatore-641 018
Boulevard Road, Teppakulam, Tiruchirapalli-620 002

**Price: Rs. 150/-**